தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

திங்கள்கிழமை, 1979 மார்ச் 26.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

(1) ஒழுங்குப் பிரச்சினை.

குறுகிய கால வினா எடுத்துக்கொள்ளப்பெறாதது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குறுகிய கால வினா. 24.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, உங்களுடைய மேலான அனுமதியை மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொண்டு, ஓரிரு வார்த்தைகளைப் பேச அனுமதிக்க மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். எந்த விதியின் கீழ் வருகிறது என்று சொல்வதற்கு எனக்குத் தெரியாது. ஏனென்றால் நான் எந்த விதியையும் நம்புவது இல்லை. தலைவிதியையும் நம்புவது இல்லை, இந்த விதிகளையும் நம்புவது இல்லை. உங்களைப் போலவே நானும் தலைவிதியை நம்பாதவன்.........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கிட்டப்பா அவர்கள் கொஞ்சம் பொறுமையாகப் பேச வேண்டும். நான் அனுமதிக்கிறேன். கேள்வி நேரத்திலே இந்தப் பிரச்சினையை அனுமதிக்கக் கூடாது. ஆனாலும் திரு. கிட்டப்பா அவர்கள் கேட்டதற்காக அனுமதிக்கிறேன். கொஞ்சம் அமைதியோடு பேசுங்கள். உங்கள் உடல் நலத்தைக் கருதித்தான் சொல்கிறேன்.

திரு. என். கிட்டப்பா: நன்றி தலைவர் அவர்களே, விதி எண்கள் 41, 42 ஆகியவை மானியக் கோரிக்கைகள் நடைபெறும் போது எடுத்துக் கொள்ளப்படாது என்று சொல்லி முறைகளை சுட்டிக்காட்டி அந்த வகையிலே கேட்க முடியாமல் என்னுடைய தொகுதிப் பிரச்னை மிக முக்கியமான பாசன வசதி தேவை என்ற கேள்வி. அதைப் போலவே மேலநல்லூரில் நந்தனார் பிறந்த ஊரில் கட்டிடங்கள் தாழ்த்தப்பட்டோருக்கு கட்டுவது சம்பந்தமாக, இந்த ஆட்சிக் காலத்திலே கட்டப்பட்டதல்ல, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே கட்ட ஆரம்பித்து, கட்டப்படாமல் இருப்பது பற்றி இரண்டு ஆண்டுகள் காலமாக உடுக்குறியிட்ட கேள்விகள், குறுகிய கால வினாக்கள் எல்லாம் போட்டேன். அனுமதிக்கப்படவில்லை.

[திரு. என். கிட்டப்பா] [1979 மார்ச் 26

இன்றைக்குக் கூட குறுகிய கால வினாக்கள் எடுத்துக் கொள்ளப்பட்டன. வேண்டாம் என்று சொல்லவில்லை. அப்படிச் சொல்லவும் எனக்கு அதிகாரம் கிடையாது. அந்த எண்ணமும் கிடையாது. நான் இதை உங்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நான் அங்கே போய் கேட்கும்போது சம்பந்தப் பட்ட அதிகாரிகள் சொல்கிறார்கள் தகவல்கள் அனுப்பப்பட்டு விட்டன.—அந்த இரண்டு குறுகிய கால வினாக்களுக்கும் தொடர்புள்ள அதிகாரிகளைச் சந்தித்து கேட்கும்போது தகவல்கள் அனுப்பப்பட்டு விட்டன என்று சொல்கிறார்கள். ஆனால் இங்கே அவைகள் எடுத்துக்கொள்ளப்படவில்லை. நான் உங்களிடம் மிகுந்த மரியாதையுள்ளவன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட ஒரு முறை வேடிக்கையாகச் சொன்னார்கள், நான் உங்களை காக்காய் பிடிக்கிறேன் என்று, காக்காய் பிடிக்க வேண்டிய அவசியம் எனக்கில்லை என்று அவர்களுக்கும் தெரியும். நீங்கள் இந்த அவையிலே எதிர்க் கட்சியிலும் இருந்திருக்கிறீர்கள், ஆளும் கட்சியிலும் இருந்திருக்கிறீர்கள், இப்பொழுது அவைத் தலைவராகவும் இருக்கிறீர்கள்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: (மணியடித்து) கொஞ்சம் சீக்கிரமாக முடியுங்கள்.

திரு. என். கிட்டப்பா: முடித்து விடுகிறேன். நான் இங்கே இருக்கப்போவதே இல்லை. எதற்குச் சொல்கிறேன் என்றால், எதிர்க்கட்சிக் காரர்களுக்கு ஏற்படும் தொல்லைகளைப் பற்றி நீங்கள் நன்றாக அறிவீர்கள். இந்த குறுகிய கால வினாக்கள் எடுத்துக்கொள்வதினால் என்ன குடிமுழுகிப்போய் விடும் என்று கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: (மணியடித்து) திரு. கிட்டப்பா அவர்கள் சுருக்கமாக முடிக்கவேண்டும்.

திரு. என். கிட்டப்பா: மன்னிக்க வேண்டும், முடித்துக் கொள்கிறேன். 41-ல் எடுத்துக்கொள்ளவில்லை என்று நீங்கள் சொன்னீர்கள், நான் ஏற்றுக் கொண்டேன். ஆனால் 41 விதியின்கீழ் இப்பொழுது வருகிறது. எதிர்க்கட்சிக்காரர்களுக்கு கூட அனுமதித்திருக்கிறீர்கள். ஆனால் இந்த என்னுடைய குறுகிய கால வினாக்கள் எடுத்துக்கொள்ளப்படவில்லை. 41-வது விதியின்கீழும் அனுமதிக்கப்படவில்லை. ''சமன் செய்து சீர் தூக்கும் கோல்போல் அமைந்து ஒருபால் கோடாமை சான்றோர்க்கு அணி'' என்று வள்ளுவர் சொன்னார். தாங்கள் சான்றோர் என்பதில் எந்தவிதமான ஆட்சேபணையும் எனக்குக் கிடையாது. ஆனால் என்னுடைய தொகுதி மக்கள்

*சார்பாக நான் கடமையாற்றுவதற்கு என்னை அனுமதிக்காத காரணத்தினால், இந்தக் கேள்வித் தாள்களை ** நான் இங்கே வீண் பொழுதுபோக்குவதற்காக வரவில்லை என்று கூறிக் கொண்டு நான் வெளியேறுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னுடைய பதிலைக் கேட்டுவிட்டு பிறகு வெளியேறுங்கள். இங்கே வாருங்கள் என்று அழைக்கிறேன்.

(திரு. என். கிட்டப்பா அவர்கள் அவையை விட்டு வெளி யேறினார்.)

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, இந்தக் குறுகிய கால வினாவில் எனக்குக்கூட ஒரு குறை பாடு உள்ளது. மின்சார பாசனம் சம்பந்தமான பிரச்னையில் நான் கேள்வி போட்டேன். நான் கேட்டு 10 நாட்கள் ஆகிறது. அதற்குப் பிறகு.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கிட்டப்பா அவர்களுக்கு தனியாக கேள்வி நேரத்தில் இதை நான் அனு மதித்தேன். காரணம் அவர் மிகவும் மனவேதனையோடு என்னிடம் என்னுடைய அறையிலும் வந்து சொன்னார். அவர் மனம் புண்படக் கூடாது என்றுதான் நானும் அனு மதித்தேன். அதனால் நீங்கள் சொல்ல வேண்டியதை பின்னால் சொல்லுங்கள். கேள்வி நேரத்தில் இதையெல்லாம் அனுமதிக்கக் கூடாது.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றத் துறை உறுப்பினர்களுக்காக இயங்க வேண்டுமே தவிர அரசாங்கத்திற்காக இயங்கக் கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுகுறித்து மானியக் கோரிக்கை மீது பேசுங்கள்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நான் கொடுத்த கேள் விக்குக் கூட முதலமைச்சர் இல்லை என்று எழுதிவிட்டார். முதலமைச்சர் தேவையில்லை என்று சொல்ல முதலமைச்சர் வரை போகிற அளவிற்கு விவரம் இருக்கிறது. நான் கொடுத்த வினாக்கள் எடுத்துக்கொள்ளப்படவில்லையென்றால் இங்கே நாங்கள் வந்து என்ன பிரயோசனம். திரு. கிட்டப்பா அவர்களின் உணர்வுகளை மதிக்கவேண்டும் என்று சபாநாயகர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.*

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நிச்சயமாக அவருடைய உணர்வுகளை நான் மதிக்கிறேன். உடனடியாக அது குறித்து நடவடிக்கை எடுக்கிறேன், ஆனால் இப்படிப்பட்ட பிரச்னை களைப் பற்றி கேட்க நான் கேள்வி நேரத்தில் அனுமதிப்பது கிடையாது. அவர் கேள்வி நேரத்திற்குப் பிறகு இதை கிளப்பி இருக்கலாம். அவருடைய உணர்வுகளை மதித்துத்தான் அவரை அனுமதித்தேனே தவிர இந்த முறையை எப்போதுமே இந்த அவை கடைப்பிடித்தது இல்லை. இருந்தாலும் அவர் எழுப்பிய பிரச்னையை நான் கவனிக்கிறேன். உறுப்பினர் வெளியே இருந்தால், உள்ளே வரும்படி அன்புடன் அழைக்கிறேன்.

(2) வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

குடிநீர் வழங்கு திட்டங்கள்.

*குறுகிய கால வினா எண் 24—திரு. பி. ராமதாஸ் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியாற்றிலிருந்து நீரேற்று நிலையம் அமைத்து கடாம்புச்சேரி, நாகலாபுரம், குந்தலச்சேரி, இலமலை, இல்ல மரத்துப்பட்டி, சங்கராபுரம் ஆகிய வறண்ட பகுதிகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அவை எப்பொழுது நடைமுறைப் படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

திரு. பி. ராமதாஸ் : தலைவர் அவர்களே, மேற்கூறிய கிராமங்கள் எல்லாம் மிகவும் வறட்சியால் கடந்த 10—15 ஆண்டு காலமாகப் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. குடிக்கக்கூட நீர் இல்லாத நிலையிலே அங்கே உள்ள மக்கள் அவதியுறும் நிலை இருக்கிறது. அதை நானே கண்ணால் கண்டு இருக்கிறேன். மேலும் அங்கே நமது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் குடிநீர் வழங்கும் திட்டங்கள் ஏற் படுத்தப்பட்டு இருந்தாலும் கோடை காலங்களில் அவைகள் எல்லாம் பயன் அற்று இருக்கிற நிலையில் தாங்கள் இப்படி ஒரு திட்டத்தை அங்கே ஏற்படுத்தினால் அங்கே இருக்கும் மக்களுக்கு மிகவும் சௌகரியமாக இருக்கும் என்பதை அரசு பரிசீலித்து ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1979 மார்ச் 26]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கொடுத்த ஊர்களில் நாகலாபுரம் கிராமம் பிரிவு 2-ல் சேர்க்கப்பட்டிருக்கிறது. பிரிவு இரண்டு என்று சொன்னால் தண்ணீர் இருக்கும், குடிக்க முடியாது, சலைன் வாட்டர், பிராக்கிஷ் வாட்டர் ஒரு கிலோ மீட்டருக்குள் இருக்கும், குடிக்க முடியாது, இதற்கு தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஆழ் துளைக் கிணறு அமைத்து, மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி, நல்ல முறையில் குடிநீர் வழங்கப்பட்டு இருக்கிறது. எஞ்சியுள்ள கிராமங்களான கடாம்புச்சேரி, குந்தலச்சேரி, இலமலை, இல்லமரத்துப்பட்டி, சங்கராபுரம் ஆகிய கிராமங்களுக்கு நீர் வழங்கும் திட்டம், பெரியாற்றிலிருந்து நீரேற்று நிலையம் அமைக்க, 6 வகையாகப் பிரித்து இருக்கிறோம். இந்த கிராமங்கள் 6-வது வகையைச் சேர்ந்தது. நீர் ஆதாரங்கள் கொண்ட சிறு கிராமங்கள் என்ற காரணத்தால் அவைகளுக்கு கொடுக்க இயலாது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் கோடை காலத்தில் தண்ணீர் இல்லை என்று சொல்கிறார்கள். இப்போது இந்த அரசு இந்த ஆண்டு தண்ணீர் இருந்து கோடை காலத்தில் வற்றிப் போய்விட்டது, குடிக்கக் கூட நீர் கிடைக்கவில்லையென்றால், அப்படிக் கிடைக்காத சிற்றூர்களுக்கு தண்ணீர் கொடுப்பதற்கு டைப் 3 என்ற ஸ்கீம் எடுத்துக்கொண்டு இருப்பதால், நான் சொல்வதற்கு மாறாக நீங்கள் குறிப்பிட்ட ஊர்களில் குடிக்கக் கூட தண்ணீர் கிடைப்பது இல்லை என்று எழுதிக் கொடுத்தால், அதற்கான அதிகாரிகளை அனுப்பி, பரிசீலனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கனம் உறுப்பினர் திரு. கிட்டப்பா அவர்களுடைய கருத்துக்கள், அவருடைய உணர்வுகள் ஆகியவற்றை அரசுத் தரப்பில் கவனத்தில் எடுத்துக் கொண்டு, உடனடியாக பதில் அளிக்கவேண்டும். வேகத்தில் அவர் ** என்று அவர் கடைசியில் சொன்னதை நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. ஆ. நடராசன் : திரு. கூத்தக்குடி சண்முகம் அவர்கள் எத்தனையோ தடவை ** இருக்கிறார். அதை அனுமதித்து இருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படிப்பட்ட நிகழ்ச்சி கேள்வி நேரத்தின் முன்பு அனுமதிப்பதே இல்லை. அவர் வருத்தப்பட்டுக் கொண்டார். ஆகவே, சொல்லட்டும் என்று அனுமதித்தேன். அவர் கடைசியில் ** மட்டும்தான் இந்த அவையின் நடவடிக்கைக் குறிப்பில் இருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன். திரு. கிட்டப்பா அவர்கள் பேசியது அத்தனையும் நீக்கவேண்டும் என்று சொல்லவில்லை.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : திரு. கிட்டப்பா சொன்னது எந்தவிதத்திலும் அன்-பார்லிமெண்டரி கிடையாது. இந்த அவை எப்படி நடைபெறுகிறது என்பது நாட்டு மக்களுக்குத் தெரியவேண்டும் என்பதற்காகத்தான் அவர் அப்படிச் செய்தார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் கடைசியில் ** என்று சொன்னதைத்தான் நீக்கவேண்டும் என்று சொன்னேன். மற்ற விஷயங்களை வைத்து இருக்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இதே சட்டமன்றத்தில் ** அது அப்படியே பதிவேட்டில் வந்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னுடைய முடிவு அது. கேள்வி நேரத்தின்போது இப்படிப்பட்ட பிரச்னைகள் அனுமதிப்பது இல்லை. என்னுடைய முடிவு ** தேவை இல்லை. அவைக்குறிப்பில் இருப்பது சரியல்ல. நீக்கவேண்டும் என்பதாகும்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : எதிர்க்கட்சிகளின் உரிமைகளை நீங்கள் காக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவர்களால் கொடுக்கப்பட்டவைகளை இங்கே எடுத்துக் கொள்ளவில்லை என்பதற்கு தன்னுடைய எதிர்ப்பைக் காட்டுவதற்காக இப்படி ** இருக்கிறார்கள். அதை அனுமதிக்கவேண்டும்.

[முற்பகல் 9.10]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படிப்பட்ட நிகழ்ச்சிகளை அவையில் அனுமதிக்க முடியாது. ** என்று சொன்னதை நீக்கிவிட உத்தரவிடுகிறேன். மற்றவை எல்லாம் அப்படியே இருக்கலாம்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, எங்களுடைய நியாயமான கோரிக்கைகள்கூட ஏற்றுக்கொள்ளப் படாமல் இருக்கின்றன. சபாநாயகருக்கு களங்கம் உண்டாக்க வேண்டுமென்பது எங்களுடைய எண்ணம் அல்ல. தங்களுக்குக் கட்டுப்படுகிறோம். ஆனால் அதேநேரத்தில் அரசாங்கத்தினுடைய நடவடிக்கையின் காரணமாக இந்தச் சட்டசபை இயங்குவது எங்களுக்குத் திருப்திகரமாக இல்லை என்பதால் எங்களுடைய அதிருப்தியைத் தெரிவிக்கும் வகையில் கேள்வி

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1979 மார்ச் 26] *[திரு. எஸ். ஜேசாதிக்பாட்சா]*

நேரம் முடியும் வரையில் நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம். (திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தார்கள்.)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இந்தச் சட்டமன்றம் தொடங்கிய பிறகு எவ்வளவு ஒத்திவைப்புத் தீர்மானங்கள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன ; எவ்வளவு கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்கு விடை சொல்லப்பட்டிருக்கின்றன; எந்த அளவுக்கு ஒழுங்குப் பிரச்சனைகளுக்கு உரிமை தரப்பட்டிருக்கிறது என்பதையும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் எந்த அளவுக்குத் தரப்பட்டிருக்கிறது என்பதையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இந்த அரசு எந்த அளவுக்கு நியாயமாக நடந்து கொண்டிருக்கிறது என்பதை உணர்ந்து, திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் வந்து சபையில் அமர்ந்து, இந்த நடவடிக்கைகளில் பங்குகொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாளை மறுநாள் அல்லது வியாழக்கிழமை அன்று கடந்த கால நிகழ்ச்சிகளையும், இந்தச் சட்டமன்றத்தில் நான் எந்த அளவுக்கு நடந்துகொண்டிருக்கிறேன் என்பதையும் காட்டுகின்ற வகையில் புள்ளிவிவரங்களைத் தயாரித்துத் தருகிறேன். இந்தச் சட்டமன்றத்தில் எந்த அளவுக்கு எதிர்க்கட்சிக்காரர்களுக்கும் மற்றவர்களுக்கும் உரிமை வழங்கப்பட்டிருக்கிறது என்பது அவைக் குறிப்பில் இருக்கிறது. அதை எடுத்துக் காட்டும்போது ஏற்றுக்கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : தலைவரவர்களே, ஏற்கனவே ** என்று சொன்னதை நீக்க வேண்டும் என்று சொன்னீர்கள். அதற்குப் பிறகு மாண்புமிகு சாதிக்பாட்சா அவர்கள் ** என்ற முறையில் சொன்னது இருக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அது அவைக் குறிப்பில் இருக்கலாமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை எடுத்துக்காட்டி உதவியதற்கு நன்றி. அதை ஒட்டி, சாதிக் பாட்சா அவர்கள் குறிப்பிட்டதையும் நீக்கிவிட வேண்டுமென்று உத்தரவிடுகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

*குறுகிய கால வினா எண் 25—திரு. பி. ராமதாஸ்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) போடி நகராட்சியில் போடி நகருக்கு குடிநீர் பற்றாக் குறையைப் போக்க குடிநீர் அபிவிருத்தித் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதை உடனடியாக நிறைவேற்ற நட வடிக்கை எடுக்கப்பெற்றுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:

(அ) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் இதற் கொரு திட்டம் வடிவமைக்கப்பட்டு வருகிறது.

(ஆ) வடிவமைப்பு வேலை முடிவடைந்தபின், போடி நகராட்சியின் ஒப்புதல் பெற்று செயல்படுத்தப்படும்.

திரு. பி. ராமதாஸ்: தலைவரவர்களே, இத்திட்டத்தை விரைவாகச் செயல்படுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர் களே, நகராட்சியின் நிதிநிலைமைக்கேற்ப தகுந்த முறையில் செயல்படுத்துவதற்காக திட்டங்கள் தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியத்தால் வடிவமைக்கப்பட்டு வருகின்றன. வடிவமைப்பு முடிந்த பிறகு குடிநீர்-வடிகால் வாரியத்தின் ஒப்புதலும், நக ராட்சியின் ஒப்புதலும், அரசின் ஒப்புதலும் பெறப்பட்டு, பின்னர் செயல்படுத்தப்படும்.

பள்ளிப் பதிவேடுகளில் சாதிக் குறிப்புகள்.

*வினா எண் 528—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பள்ளிகளில் மாணவர்களைச் சேர்க்கும்போது சாதியை சொல்ல வேண்டும் என்று பள்ளி நிர்வாகம் வற் புறுத்துவது அரசு அறியுமா?

(ஆ) சாதி சொல்லாப் பகுத்தறிவாளர்களின் பிள்ளை களைச் சேர்க்கும்போது சிரமம் ஏற்படுவதைத் தடுக்க அரசு திட்டவட்டமாக சாதி கேட்காமல் இருக்க பள்ளி நிர்வாகத்தை தடுக்குமா?

1979 மார்ச் 26]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) & (ஆ) பள்ளிகளில் மாணவ/மாணவியர்களைச் சேர்க்கும்பொழுது, சேர்க்கை மனுக்களில் சாதிப்பெயர் குறிக்குமாறு எவரையும் வற்புறுத்தக்கூடாது என்று பள்ளிக் கல்வி இயக்குநரால் ஆய்வு அலுவலர்கள் மூலம் எல்லாப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

டாக்டர் கே. சமரசம் : தலைவரவர்களே, பள்ளிக்கூடத்தில பிள்ளைகளைச் சேர்க்கும்போது தங்களுடைய ஜாதிப் பெயரைச் சொல்லாவிட்டால் பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட, அல்லது முற் போக்கானவர்கள் என்பதை எப்படித் தெரிந்துகொள்ள முடியும்? எப்படி சலுகைகள் அளிக்கப்படும்? என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அரசு அல்லது தலைமையாசிரியர்கள் ஜாதிப் பெயரைக் கேட்டு வற்புறுத்தக் கூடாது என்பதுதான் இங்கே அளிக்கப்படும் பதில்.

திரு. சி. கோவிந்தராசன்: தலைவரவர்களே, ஜாதிப்பெயரை அவர்கள் வற்புறுத்திக் கேட்பது என்பது இன்றைக்கு இருக்கக் கூடிய நிலைமையில் மாண்புமிகு உறுப்பினர் சமரசம் அவர்கள் தெரிவித்ததைப்போல பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவரா அல்லது மோஸ்ட் பாக்வேர்டா என்பதைத் தெரிந்து கொள் வதற்காக இருக்கலாம். நம்முடைய நாடு செக்குலர் ஸ்டேட் என்று சொல்கிறோம். அப்படியானால் ஜாதிப் பெயரைச் சொல்ல வேண்டுமென்று கேட்பது முறையல்ல. என்னைப் போன்றவர்கள் ஏராளமானவர்கள் இருக்கிறார்கள். மதம், ஜாதி பற்றி நாங்கள் சொல்ல முடியாது என்று சொன்னாலும் கூட வற்புறுத்திக் கேட்கக்கூடிய சூழ்நிலை இன்றைக்கு இருக் கிறது. இந்த நிலையை மாற்றுவதற்கும், ஜாதி மதப் பெயரைச் சொல்லாமலேயே சலுகைகளைப் பெறுவதற்கும் தகுந்த நடவடிக்கையை அரசு எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, கேள்வி, பள்ளிக்கூடத்திலே பிள்ளைகளைச் சேர்க்கும்போது ஜாதிப் பெயரைக் கேட்டு வற்புறுத்தக் கூடாது என்ற அடிப் படையில் கேட்கப்பட்டது. அதைத்தான் நாங்கள் வற்புறுத்தக் கூடாது என்று சொல்லி அதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறோம். வேறுபல சலுகைகள் வேண்டுமானால் அதைப் பெற விரும்பு கின்றவர்கள் சொல்லிக்கொள்கிறார்கள்.

திரு. க. மருதாசலம் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் தன்னுடைய பதிலில் வற்புறுத்தக்கூடாது என்று சொன்னார்கள். நானே என்னுடைய பிள்ளையைச் சேர்க்கும்போது பள்ளிக்

கூடத்திலே ஆசிரியர் என்னிடத்திலேயே உங்களுடைய ஜாதி என்ன என்று கேட்டார். அப்படிப்பட்டவர்கள் **மீது** புகார் கொடுத்தால் நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. என். வரதராஜன்: தலைவரவர்களே, இந்தக் கேள்வியின் பதிலை தமிழ்நாட்டின் மிக முக்கியமான ஒன்றாகக் கருதவேண்டும். சாதாரணமாக பள்ளிகளிலே மட்டுமல்ல, அரசு ஊழியர்களிடத்திலே நற்சான்றிதழ் வாங்குகிறபோது கூட ஜாதிப் பெயர்கள் போடவேண்டும் என்று வற்புறுத்தப்படுகிறது. அதிலும் குறிப்பாக பள்ளர் என்று கூட போடக்கூடாது என்றும் பள்ளன் என்றுதான் போடவேண்டும் என்று அந்த ''ன்'' வற்புறுத்தப்படுகிறது. அதுமட்டுமல்ல கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு இதைவிட அதிகமான சிரமங்கள் ஏற்படுவதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, கல்விக்கூடங்கள் மட்டுமல்லாது வேறு எந்தத் துறையிலேயும் அரசு உதவி என்று வருகிறபோது இப்படிப்பட்ட தவறான, மிக மோசமான காரியங்கள் இடம் பெறாமல் செய்வதற்கு அரசு தக்க உத்தரவைப் பிறப்பிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, தாழ்த்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்டவர்கள் போன்றவர்களுக்கு சில சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆகவே அதனைப் பெறுகின்றவர்கள் தேவையான சான்றுகளைத் தெரிவிக்கவேண்டும். அவற்றைத் தந்தால்தான் அந்தச் சலுகைகளை அவர்கள் பெற முடியும். ஆனால் அதனை யாரும் வற்புறுத்திக் கேட்கக்கூடாது, அதாவது பள்ளிகளில் அட்மிஷன் செய்யப்படும் காலங்களில் அவ்வாறு ஜாதியைக் குறிப்பிடவேண்டும் என்று வற்புறுத்தக்கூடாது என்பதுதான் இங்கே வைக்கப்பட்டிருக்கின்ற பதிலாகும். ஆனால் சலுகைகளைப் பெற வேண்டிய நேரத்தில் தேவையான சான்றுகளைக் கொடுத்து தங்கள் ஜாதி பற்றிக் குறிப்பிடவில்லை என்றால் அவர்கள் அந்தச் சலுகைகளைப் பெற முடியாமல் போய்விடும். அதாவது யாருக்கு அந்தச் சலுகைகள் கொடுக்கப்படவேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றதோ அவர்களுக்குக் கிடைக்காமல் போய்விடக்கூடும். மேலும் எந்த குறிப்பிட்ட பிரிவினருக்கு கொடுக்கப்படவேண்டும் என்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறதோ அந்தப் பெயரை மற்றவர்களும் எழுதிக் கொடுத்து அதற்குரிய சலுகைகளை அவர்கள் பெற்றுவிடுகிறார்கள் என்கின்ற நிலைமைகள் எல்லாம் ஏற்பட்டுவிடுகின்றன. ஆகவே அரசு அவற்றைக் கவனமாகப் பார்த்து தரவேண்டி இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

1979 மார்ச் 26]

விருத்தாசலம் பெண்கள் உயர்நிலைப் பள்ளி கட்டிடம்.

*வினா எண் 529—திரு. ரா. மார்க்கபந்து : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) விருத்தாசலத்தில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி கட்ட சுடுகாட்டிற்கு அருகில் இடம் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது உண்மையா?

(ஆ) அதனை வேறு இடத்திற்கு மாற்றும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) ஆம்.

(ஆ) சுடுகாட்டை வேறு இடத்திற்கு மாற்ற முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

முதியோர் கல்வித் திட்டம்.

*வினா எண் 530—திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இந்த ஆண்டு (1978) அக்டோபர் மாதம் முதல் மத்திய அரசின் முதியோர் கல்வித் திட்டம் நமது மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறதா ?

(ஆ) ஆம் எனில் அதற்கு விசேஷ உதவி ஏதேனும் மத்திய அரசு அளித்துள்ளதா ?

(இ) அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) & (ஆ) ஆம்.

(இ) முதியோர் கல்வி மையங்களைத் துவக்கும் தொண்டு நிறுவனங்களுக்கு (Voluntary Agencies) மைய அரசு மான்யம் அளிக்கின்றது. அந்த அடிப்படையில் எந்த ஒரு தொண்டு நிறுவனம் இத்திட்டத்தினைச் செயல்படுத்த விழைகின்றதோ, அதற்கு திட்டச் செலவு அனைத்தினையும், நிர்வாகச் செலவில் 75 விழுக்காடுகளையும் மான்யமாகக் கொடுக்க மைய அரசு முன்வந்துள்ளது. இதுபோன்று 1978-79 ஆம் ஆண்டில் 16 தொண்டு நிறுவனங்களுக்கு மைய அரசு மான்யம் அளித்துள்ளது.

[1979 மார்ச் 26

*வினா எண் 531—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் 60 முதியோர் எழுத்தறிவிப்பு நிலையங்களைத் துவக்கிட அரசு ஆ வன செய்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) & (ஆ) தமிழ்நாட்டில் குறிப்பாக 60 முதியோர் எழுத்தறிவிப்பு நிலையங்களைத் துவக்கிட அரசுக்கு செயற்குறிப்பு ஏதும் இல்லை. ஆயினும் தமிழ்நாட்டில், ஏற்கனவே 60 உழவர் செயல்முறை எழுத்தறிவுத் திட்ட மையங்கள் மதுரை, செங்கல்பட்டு மற்றும் திருச்சி ஆகிய மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும், வட ஆற்காடு, தென்னாற்காடு, தஞ்சாவூர், கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் 90 மையங்களும் திறந்து நடத்தப்பட்டு வருகின்றன.

திரு. எச். ஜி. ஆறுமுகம் : பேரவைத் தலைவரவர்களே, ஒவ்வொரு யூனியன்களிலும் ஆங்காங்கே உள்ள கட்சிக்காரர்கள் ஒவ்வொரு தலைவரைப் போட்டுக் கொண்டு அவர்களைக் கொண்டு இப்படிப்பட்ட முதியோர் எழுத்தறிவிப்பு நிலையங்கள் ஆரம்பிக்கப்படுகின்றன என்று சொல்லப்படுகிறது. அவர்களே ஒவ்வொரு ஆசிரியரையும் நியமிக்கிறார்கள். இந்த நிலைமை அரசுக்குத் தெரியுமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, முதியோர் கல்வித் திட்டத்திற்கென்று தரப்படுகின்ற உதவி கட்சி அடிப்படையிலே தரப்படுவதில்லை. கட்சி அடிப்படையிலே இது செயல்படுத்தப்படுவதை இந்த அரசு விரும்பவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, முதியோர் கல்வித் திட்டத்திற்காக மத்திய அரசிடமிருந்து தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு? அதில் தமிழ்நாடு அரசு செலவழித்த தொகை எவ்வளவு என்பதை அறிவிக்கஇயலுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இந்த முதியோர் கல்வித் திட்டத்தில் மத்திய அரசு இங்கே இருந்து விண்ணப்பங்களைப் பெற்று அவர்களே நேரடியாக உதவியினைத் தந்துகொண்டிருந்தார்கள். ஆனால் இப்போது

REPORTING SECTION

1979 மார்ச் 26] [திரு. செ. அரங்கநாயகம்]

விண்ணப்பங்களை நம் மூலமாக பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆனாலும் ஏறக்குறைய அவர்களேதான் நேரடியாகத் தந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் மாநில அரசும் இந்தத் துறையிலே மத்திய அரசுக்கு நல்ல ஒத்துழைப்பைத் தந்து இதனைச் சிறப்பான முறையிலே நடத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 9.20.]

திரு. செ. மெ. ராஜு : தலைவர் அவர்களே, இந்த முதியோர் கல்வித் திட்டத்திற்கு மத்திய அரசு நிதி ஒதுக்கம் செய்துள்ள காரணத்தால் முதியோர் கல்வித் திட்டத்தில் ஆசிரியர்களை மத்திய சர்க்கார் நேரடியாக நியமிக்கிறதா? அல்லது மாநில சர்க்கார் நியமிக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ, அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசுத் துறையின் மூலமாகவும் இந்த மையங்களை ஏற்படுத்துகிறோம், அத்துடன் என். எஸ். எஸ். திட்டத்தின் கீழ் மாணவர்களைக் கொண்டும் இந்தத் திட்டத்தை தொடங்கியிருக்கிறார்கள். இளைஞர் மையங்களும் இதில் பங்கு கொள்கின்றன. அது தவிர பல தொண்டு நிறுவனங்கள் (வாலண்டரி ஏஜென்ஸீஸ்) இவைகளும் பங்கு கொள்கின்றன. ஆசிரியர்களை நியமிக்கின்ற விஷயத்தில் அவரவர்கள் நியமித்துக் கொள்கிறார்கள். பொதுவாக அரசைப் பொறுத்தவரையில் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களைக் கொண்டு பகுதி நேர ஆசிரியர்களைப் போல் பயன்படுத்திக்கொள்கிறது.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, முதியோர் கல்வித்திட்டத்தை திறமையாக நடத்துவதற்கு கிராமப்புறங்களில் மாலை நேரத்தில் பள்ளிகளில் நடததுவதற்கு பள்ளிக் கூடங்களில் லைட்டுகள் போடப்படுமா? மேலும் கவர்ச்சிகரமான முறையில் இதை நடத்த ஒரு டீ கொடுக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, லைட்டுகள் போடுவது என்பது இப்போது தொ க்கப் பள்ளிகளை நாம் பயன்படுத்திக் கொண்டு இருக்கிறோம். அதற்கு ஏற்ப மின்சார வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு லைட் வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். மேலும் டீ கொடுப்பது என்பது அது வேடிக்கையாக சொல்லப்பட்டாலும், நல்லதொரு யோசனை தான். இந்தத் திட்டத்தை நடத்துகின்ற இதில் சம்பந்தப்பட்டவர்கள் இதை பரிசீலிக்க கடமைப்பட்டிருக்கிறார்கள். அரசு தரப்பிலிருந்து நடத்தப்படுகின்ற மையங்களில் இப்போது அப்படி கொடுப்ப

தில்லை. என்றாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனையின் அடிப்படையில் பலருடைய ஒத்துழைப்பைக் கொண்டு இது போன்ற கவர்ச்சிகரமான அளவுக்கு செய்து தருவார்களேயானால் இந்தத் திட்டத்திற்கு முழு ஒத்துழைப்பு தருவதாகக் கருதி நன்றி கூற கடமைப் பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்கள் 532, 533 மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப் பெறுகின்றன.

செங்கம் வட்டத்திலுள்ள நெல்லிக்குப்பம் ஏரி.

*வினா எண் 534—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு வேளாண்மைபாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கம் வட்டம் காரப்பட்டு மதுரா நெல்லிக் குப்பம் ஏரி கடந்த ஐந்தாண்டுகளாக தண்ணீர் நிரம்பாமல் இருந்து வருவது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதற்கு கோறை ஆற்றில் இருந்து கால்வாய் வெட்டி தண்ணீர் திருப்பிவிட அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) கோரையாற்றிலிருந்து இந்த ஏரிக்கு ஒரு வரத்துக் கால்வாய் உள்ளது. இதனை மேம்படுத்தும் திட்டத்திற்கான ஆய்வு 1979-80-ல் எடுத்துக் கொள்ளப்படும்.

பரம்பிக்குளம்-ஆளியாறு விஸ்தரிப்புத் திட்டம்.

*வினா எண் 535—திரு. டி. ஆர். இராஜாராம் ரெட்டி : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவை மாவட்டம் பரம்பிக்குளம்-ஆளியாறு புதிய விஸ்தரிப்புத் திட்டத்திற்கு சர்வே செய்வதற்காக அரசு எத்தனை லட்ச ரூபாய் செலவு செய்துள்ளது.

(ஆ) அந்த விஸ்தரிப்புக்காக அரசு தற்போது என்ன நடவடிக்கை எடுத்து வருகிறது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) பரம்பிக்குளம்-ஆளியாறு திட்ட ஆயக்கட்டு விரிவாக்க திட்டத்திற்காக, ஆய்வு பணிகள் செய்வதற்காக இதுவரை ரூ. 18,04,242 (ரூபாய் பதினெட்டு லட்சத்து நாலாயிரத்து இருநூற்று நாற்பத்தி இரண்டு) செலவு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) பரம்பிக்குளம்-ஆளியாறு திட்ட ஆயக்கட்டை மேலும் 1,15,000 ஏக்கர் நிலங்களுக்கு விஸ்தரிக்க ஆணை வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் குறித்து மீதமுள்ள ஆய்வு பணிகளை முடிக்கவும் இத்திட்ட பணிகளை மேற்கொள்ளவும் வேண்டிய மேல் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

திரு. செ. சதாசிவம் : தலைவர் அவர்களே, இத்திட்டத்தை பரிசிலிக்கின்ற பொழுது இது கோவை மாவட்டத்தில்தான் அமுலாக்கப்படுகிறது. திருச்சி மாவட்டம் கரூர் தாலூகாவுக்கும் இந்தத் திட்டத்தில் ஒரு பகுதியை விஸ்தரிக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தற்பொழுதுள்ள விஸ்தரிப்பில் கரூர் தாலூகாவில் உள்ள பகுதிகள் சேர்க்கப்படவில்லை. ஏற்கனவே நொய்யல் ஆற்றின் குறுக்கே அணை கட்டுவதின் மூலம் கரூர் தாலூகாவில் உள்ள பகுதிகள் பயன் பெறும்.

திரு. ரா. க. சு. தண்டபாணி : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை 3.4 கோடி ரூபாய் அளவில் நடைபெற விருப்பதாக இரண்டு வருடங்களுக்கு முன்னாலேயே அறிவிக்கப்பட்டிருந்தது. இருந்தும் இன்னும் வேலை ஆரம்பிக்கப்படவில்லை. ஏன் இந்த தாமதம் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே், கடந்த 76-வது ஆண்டில் பரம்பிக்குளம்-ஆளியாறு விஸ்தரிப்புத் திட்டத்தின் மூலம் ஒரு லட்சத்து 15 ஆயிரம் ஏக்கர் பயன்பெறும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்ட நேரத்தில் அதை ஆதரித்தும் எதிர்த்தும் பல முறையீடுகள் வரப்பெற்றன. அவை குறித்து அரசு பரிசீலனை செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. மேலும் இந்தப் பணிகளுக்கான அலுவலாளர்களையும் அலுவலகங்களையும் கேட்டு தலைமைப் பொறியாளர் அரசுக்கு செயற்குறிப்பு ஒன்று அனுப்பியிருக்கிறார். அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. பரிசீலனை முடிந்தவுடன் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. க. மருதாசலம் ; தலைவர் அவர்களே, இந்த பரம்பிக்குளம் ஆளியாறுத் திட்டத்திற்கு பல லட்சக்கணக்கான ரூபாய்களை செலவிட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், அதற்காக அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்த பரம்பிக்குளம்–ஆளியாறு விஸ்தரிப்புத் திட்டத்தின் மூலமாக எத்தனை லட்சம் மக்களுக்கு பயன் படுகிறது, எந்தெந்த தாலூகாக்கள் பயன்பெறப் போகிறது என்பதையும் அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் மூலமாக ஏற்கனவே 2,50,000 ஏக்கர்கள் பாசன வசதி பெற்றுக் கொண்டிருக்கிறது. இனி மேலும் 1,15,000 ஏக்கர்கள் பாசன வசதி விஸ்தரிப்பதற்காக இருக்கிறது. அப்படி பாசனம் பெறுகின்ற நேரத்தில் ஒரே தடவை அதாவது ஒரு ஆண்டுக்கு 3,60,000 ஏக்கர்கள் நீர்ப்பாசன வசதி செய்ய முடியாது. ஆகவே, ஆண்டுக்கு ஒரு முறை என்ற அளவில் 1,80,000 ஏக்கர்களுக்கு மட்டுமே ஒவ்வொரு ஆண்டும் முறைப்படுத்தி, பாசன வசதி செய்வதற்கான திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. இதன் மூலமாக பொள்ளாச்சி வட்டத்திலே 20,450 ஏக்கர்களும் உடுமலை வட்டத்திலே 29,700 ஏக்கர்களும், பல்லடம் வட்டத்திலே 26,700 ஏக்கர்களும், தாராபுரம் வட்டத்திலே 38,150 ஏக்கர்களும் பாசன வசதி பெறும்.

திரு. செ. சதாசிவம் : தலைவர் அவர்களே, இப்போது இந்தத் திட்டத்துடன் ஆனைமலை ஆற்றுத் தண்ணீரைக் கொண்டு வருவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகின்ற இந்த நேரத்திலே நொய்யலாற்றுத் திட்டத்தின் மூலமாக கரூர் தாலூகாவில் 10,000 ஏக்கர்கள்தான் பாசன வசதி பெற இருப்பதை மனதில் வைத்து, அப்படி அந்த ஆனைமலை ஆற்றுத் தண்ணீர் கிடைக்கும்போது, கரூர் தாலூகாவிலே வறண்ட ஒரு பெரும் பகுதிக்கும் தண்ணீர் வழங்க இந்த அரசு ஆவன செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தின் ஒரு பகுதியாக ஆனைமலை ஆறு திட்டத்தின் பேச்சுவார்த்தை கேரள அரசுடன் நடந்து கொண்டிருக்கிறது. அவர்கள் இந்த இடைமலை ஆறு திட்டத்தை, இந்த ஆனைமலை ஆறு திட்டம் முடிந்த பிறகு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்.

இந்த இடைமலை ஆறுத் திட்டம் ஏறத்தாழ 6, 7 ஆண்டுகளாக கேரள அரசு தொடங்காமலும், அதைத் தொடாமலும் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, ஏற்கனவே

1979 மார்ச் 26]

சொன்னோம், இந்தத் திட்டத்தை முடிவடையும் வரையில் தமிழகம் பொறுத்து கொண்டிருந்தது, அதுவரையில் பாசன வசதி விஸ்தரிப்பதற்கு, வறண்ட நிலங்களை வளமாக்குவதற்கு முடியாமல் போய்விடும்.

ஆகவே, ஆனமலைத் திட்டத்தை உடனடியாக எடுத்துக் கொண்டு, எந்த அளவுக்குப் பணிகளைத் தொடங்குவதற்கு உண்டான ஒத்துழைப்பைக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ளோம். அவர்கள் அடுத்தக் கூட்டத்திலே பரிசீலிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அந்த பரிசீலனை முடிந்தவுடன் உடனடியாக இந்தத் திட்டம் ஏற்றுக் கொள்ளப்படும்.

மேலும், கரூர் பகுதிக்கு பாசன வசதி கொடுக்க வேண்டுமென்று சொன்னால், பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தின் மூலம் முடியாது என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரியும். நொய்யாற்று நதியின் குறுக்கே அணை கட்டினால், 10,000 ஏக்கர்களுக்கு பாசன வசதி பெற்றாலும் கூட, மீண்டும் அதிகப்படுத்துவதற்கு, இன்று மேற்கு நோக்கி ஓடிக்கொண்டிருக்கின்ற நதிகளை கிழக்கே திருப்பி விட வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில் புரட்சித் தலைவர் அவர்கள் இன்று பிரதமர் தேசாய் அவர்களிடம் பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறார். இதற்கான ஒரு குழு நியமிக்கப்பட்டிருக்கிறது. கேரள அரசும், தமிழக அரசும் அந்தக் குழுவின் மூலமாக பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. இந்தத் திட்டங்கள் எல்லாம் நிறைவேறினால், கண்டிப்பாக கரூர் பகுதிக்கும், மற்றும் வறண்ட பிரதேசத்திற்கும் வளமுள்ள பகுதிகளாக ஆக்குவதற்கு இந்த அரசு வழிவகை செய்யும்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, பரம்பிக்குளம்–ஆளியாறு திட்டத்தின் ஆரம்பகாலத்திலே நிர்ணயித்தது 2,50,000 ஏக்கர்கள். அது மேலும் 1,30,000 ஏக்கர்களுக்கு விஸ்தரிக்கப்படும் என்று பலமுறை இந்த சட்டமன்றத்திலே எடுத்து எடுத்து சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இந்தத் திட்டம் சீக்கிரம் அமுலுக்கு வரமாட்டேன் என்கிறது. இதனால் திருப்பூர் வட்டத்திற்கு தண்ணீர் பாசனம் கஷ்டமாக இருக்கிறது. எனவே, கேரள அரசாங்கத்தோடு பேச்சுவார்த்தைகள் நடத்தக்கூடிய நேரத்திலே, உறுதியாக எவ்வளவு தண்ணீர் தமிழகத்திற்குக் கிடைக்கும் என்பதை முடிவு செய்திருக்கிறார்கள்? இன்னும் முடிவு செய்யாமல், பாக்கி இருக்கிறதா? அப்படி பாக்கி இருந்தால் எப்படி அவர்கள் இதை விஸ்தரிக்கப் போகிறார்கள்? 2,50,000 ஏக்கர்கள் பாசன....................

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியாகப் போடுங்கள்.

திரு. கு. ரமணி : மூலக் கேள்வியை ஒட்டித்தான் சொல்கிறேன். எனவே, இந்தத் திட்டம் எப்படி நிறைவேற்ற முடியும் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டம், ஏற்கனவே நாம் கேரள அரசாங்கத்துடன் ஒப்புதல் பெற்று, அதற்குப் பின்னாலே 2,50,000 ஏக்கராக்கள் பாசன வசதி அளிப்பதற்காக உருவாக்கப்பட்ட திட்டம். அதிலே, 32 மில்லியன் கன அடி தண்ணீர் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

[முற்பகல் 9-30.]

ஆனால் 32,000 மிலியன் கன அடி நீர் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்பட்டதில் கொஞ்சம் குறைவு ஏற்பட்டிருக்கிறது. அதன் மூலமாக 2,50,000 ஏக்கராவுக்கும் ஒரு ஆண்டில் முழு பாசன வசதி கொடுக்க முடியாத நிலைமையில் இருக்கிறோம். ஒரு ஆண்டில் 1,80,000 ஏக்கராவுக்கு பாசன வசதி கொடுத்துக் கொண்டிருக்கிறோம். மேலும் விஸ்தரிப்பு செய்வதன் மூலமாக மொத்த பரப்பளவு 3,65,000 ஏக்கர் வரும். அப்படி வருகிற போது ஒரு ஆண்டில் 1,80,000 ஏக்கர் என்று முறை வைத்துக் கொண்டு ஆல்டர்நேட்டிவ் இயர்ஸ் என்ற முறையில் பாசன வசதி கொடுக்க முடியும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. கந்தசாமி : சென்ற நிதிநிலை அறிக்கையின்போது தென் பகுதியிலுள்ள வறட்சியைப் போக்க கேரளத்தில் மேற்கே நோக்கி ஓடுகிற நதிகளைத் தமிழகத்திற்கு திருப்பி விடுவதன் மூலம் வறட்சி நிலைமை நீங்கும் என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால் அந்த மலையை உடைப்பது முடியாது என்ற வகையில் பொறியியல் நிபுணர்கள் கூறியிருப்பதாகத் தெரிகிறது. அணுகுண்டு போன்றவற்றை இதுபோன்ற ஆக்க வேலைக்குப் பயன்படுத்தும் முறையில் அந்த மலையைத் தகர்த்தெறிந்து அந்த நதிகளைக் கிழக்கே திருப்பிவிட முயற்சி எடுக்க வேண்டும். பாராளுமன்றத்தில் விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது கூட அது சாத்தியமென்று கூறியிருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடர்ந்து முயற்சி செய்து அப்படி சிறிய அளவில் அணு சக்தியைப் பயன்படுத்தி மலையைத் தகர்த்து அந்தத் தண்ணீரைக் கொண்டு வர அரசு முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய நல்ல ஆலோசனையை புரட்சித் தலைவர் அவர்களுக்கு நான் எடுத்துச் சொல்லி அந்தப் பிரச்சினையைப் பற்றிப் பரிசீலித்து தேவையான நடவடிக்கைகள் டுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

1979 மார்ச் 26]

திரு. ஜே. ஜேம்ஸ் : மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளைத் தமிழ்நாட்டுக்குத் திருப்பி விடுவதன் மூலம் சில பகுதிகள் பயனடையும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எந்தெந்த நதிகளை அவ்வாறு திருப்பிவிடும் வாய்ப்பு இருக்கிறது? அப்படித் திருப்பி விடப் பெறுவதால் எவ்வளவு லட்சம் ஏக்கர் நிலங்கள் பயன்பெறும்? கேரள அரசு அந்தத் தண்ணீரைத் தமிழ் நாட்டுக்குத் தருவதற்கு என்னென்ன கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அந்தப் பிரச்சினை இன்று பரிசீலனையில் இருந்து வருகிறது. இன்று மைய அரசு அதற்காக ஒரு குழுவை அமைத்து குழுவில் கேரளாவும் தமிழக அரசும் அவர்களுடைய பிரதிநிதிகளை நியமித்து பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. எந்தெந்த நதிகளிலிருந்து தண்ணீர் எவ்வளவு கிடைக்கும். எவ்வளவு பாசன வசதி பெறும் என்பதையெல்லாம் குழு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அந்தப் பரிசீலனைக்குப் பிறகு அவை பற்றி அறிவிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 536, 537 மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்பெறுகின்றன.

நீலகிரி மாவட்டத்தில் குடியேறியுள்ள தாயகம் திரும்பிய அகதிகள்

*வினா எண். 538—திரு க. அரங்கசாமி : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தாயகம் திரும்பிய அகதிகள் தாங்கள் குடியமர்த்தப்பட்ட மாவட்டத்தின் சீதோஷ்ண நிலை பிடிக்காத காரணத்தால் நீலகிரி மாவட்டத்தில் குடியேறி அரசு நிலங்களில் குடியமைப்பதும், அக்குடிசைகளுக்கு ஊராட்சி மன்றத்தால் எண்கள் இடப்படுவதில்லை என்பதும் இவ்வரசிற்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில் அது குறித்து எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :

(அ) & (ஆ) ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பி வருபவர்கள் பல மாவட்டங்களில் குடியமர்த்தப்படுகிறார்கள். அவர்களில் சிலர் தங்களது சொந்த சௌகரியங்களை முன்னிட்டு அம் மாவட்டங்களிலிருந்து இடம் பெயர்ந்து நீலகிரி மாவட்டத்திற்கு சென்றுள்ளனர். அவ்வாறு இடம் பெயர்ந்துள்ளவர்களில் சிலர்

ஒப்படை செய்யப்பட்ட அரசு நிலங்களிலும், ஆக்கிரமிப்பு செய்த நிலங்களிலும் வீடுகள் கட்டியுள்ளனர். குடியேறிய வீடுகளுக்கு வீட்டிலக்கமிடப்பட்டுள்ளது. கட்டி முடிக்கப்படாததும், குடியேறாததுமான வீடுகளுக்கு வீட்டிலக்கம் இடப்படவில்லை. இத்தகைய வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு குடியேறி பின் வீட்டிலக்கம் கொடுக்கும்படி அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட சில நிலங்களில் முன்பாக கட்டிய சிறிய குடிசைகளுக்கு வீட்டிலக்கம் கொடுக்கப்படவில்லை. அவைகளுக்கு வீட்டிலக்கமிட மாவட்ட ஆட்சித் தலைவரால் நடவடிக்கை எடுத்துவரப்படுகிறது.

திரு. மு. அம்பிகாபதி : நீலகிரி மலை நமக்கு வளம் கொழிக்கும் மலை. அங்கிருக்கும் மரங்களை எல்லாம் வெட்டியதன் காரணமாக அங்கு மலைச்சரிவு ஏற்பட்டு பாதகங்கள் ஏற்பட்டன. தமிழக அரசு இனிமேல் அங்கு மரங்கள் வெட்டப்படாமல் பாதுகாக்கவும் அதன் மூலம் அங்கிருக்கும் மக்களைப் பாதுகாக்கவும் முன்வருமா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : கேள்வி இடம் மாறி வந்திருக்கிறது. எனது இலாகா சம்பந்தப்பட்ட கேள்வி அல்ல.

திரு. க. மருதாசலம் : தலைவர் அவர்களே, தாயகம் திரும்பிய அகதிகளைப்பற்றிக் குறிப்பிடும்போழுது பல்வேறு மாவட்டங்களில் அவர்கள் குடியமர்த்தப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள் ஆனால் அதை மொத்தமாகச் சொன்னார்கள். தனித்தனியாக ஒவ்வொரு மாவட்டத்திலும் எவ்வளவு பேர்கள் என்று குறிப்பிடுவார்களா? அதிலே நீலகிரி மாவட்டத்திலே அகதிகளைப் பொறுத்தவரையில் தனி கவனம் செலுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு செல்வி. பி. டி. சரஸ்வதி : தலைவர் அவர்களே அரசு கவனித்துப் பரிசீலிக்கும்.

டாக்டர் கே. சமரசம் : தலைவர் அவர்களே, ஸ்ரீலங்காவிலிருந்து வந்தவர்களுக்கு எந்த எந்தத் திட்டங்களின் கீழ் உதவிகள் செய்யப்படுகின்றன? குன்னூர் உதகமண்டலம் வட்டங்களிலே எத்தனை பேர்களுக்கு வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன? நீலகிரி மாவட்டத்திலே குடியேறியுள்ள அகதிகளைப் பொறுத்தவரையில் எத்தனை குடும்பங்களுக்கு தேயிலைத் தோட்டங்களில் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : தலைவர் அவர்களே ஸ்ரீலங்காவிலிருந்து தமிழர்கள் தமிழ்நாட்டிற்கு வந்தவுடன் அவர்களுக்குப் பல்வேறு திட்டங்கள் மூலமாக வேலைவாய்ப்புக் கொடுக்கப்படுகிறது.

1979 மார்ச் 26]

1. சிறு வியாபாரங்களில் குடியமர்த்துதல் மற்றும் வணிகக் கடன் வழங்குதல்.

2. நிலக் காலனித் திட்டங்களில் குடியமர்த்துதல்.

3. தோட்டப் பயிர்ச் செயற்கைத் திட்டங்களில் குடியமர்த்து தல்.

4. தொழிற் துறைத் திட்டங்களில் குடியமர்த்துதல் (கூட்டுறவு நூற்பு ஆலைகள்).

5. அரசு வேளாண்மைப் பண்ணைத் திட்டங்களில் குடியமர்த்துதல்.

6. வேளாண்மைக்குரிய தனியார் நிலங்களை வாங்கித் தருதல்.

7. வேலை வாய்ப்பு உதவிகள் அளித்தல் ஆகிய திட்டங்களின் மூலம் வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறது.

குன்னூர் வட்டத்தில் ஸ்ரீலங்காவிலிருந்து இடம்பெயர்ந்தோருக்கு 146 வீட்டுமனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளது. அதில் 16 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. உதகமண்டலம் வட்டத்தில் 74 வீட்டுமனைப்பட்டாக்கள் ஸ்ரீலங்கா அகதிகளுக்கு வழங்கப் பட்டுள்ளது. அதில் 18 பேர்கள் வீடுகள் கட்டி முடித்துள்ளனர். இதைத்தவிர, டாண்டி நிறுவனத்தின் மூலமாக நீலகிரியில் தாயகம் திரும்பியவர்களுக்கு குன்னூரில் 211 வீடுகளும், கோத்தகிரியில் 240 வீடுகளும் நெல்லியாளத்தில் 278 வீடுகளும், சேரன்கோடில் 245 வீடுகளும், சேரன்பாடியில் 255 வீடுகளும் தேவாலாவில் 55 வீடுகளும், கூடலூரில் 95 வீடுகளும் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : தலைவர் அவர்களே, தாயகம் திரும்பிய அகதிகளுக்கு நீலகிரி ஜில்லாவிலே பல்வேறு இடங்களிலே குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது. குறிப்பாக கூடலூர் தாலூகாவில் குடியமர்த் தப்பட்ட அகதிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் கூட செய்யப்படவில்லை. அவர்களுக்கு போதிய வீட்டு வசதி கள் இன்னும் பல நூற்றுக்கணக்கான குடும்பங்களுக்கு செய்து கொடுக்கப்படவில்லை, அதன் காரணமாக அவர்கள் மலங் காட்டுக்குள்ளே, சாதாரணக் குடிசைகளிலே குடியமர்த்தப்பட்டி ருக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? யானைக்காட்டுப் பகுதியிலே வசிக்கிற மக்கள் யானைகள் போன்ற பயங்கரமான மிருகங்களிலிருந்து காப்பற்றப்பட என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன? அடுத்து, மலேரியா போன்ற வியாதிகள் கொசுக்களால்...............................

(மணியடிக்கப்பட்டது.)

[1979 மார்ச் 26

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 2 கேள்விகள் கேட்டிருப்பதே அதிகம் தான். தாங்கள் 3வது கேள்வி கேட்டுக் கொண்டிருந்தால் என்ன அர்த்தம்?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : தலைவர் அவர்களே, கூடலூரிலே 95 வீடுகள் தேயிலை தோட்ட வளர்ச்சிக் கழகத்தால் கட்டிக்கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஓவேலி கிராமத்தினை தவிர மற்ற எல்லா வீடுகளுக்கும், வீட்டு எண்கள் கொடுக்கப்பட்டுள்ளன. சமீபத்தில் ஓவேலி கிராமத்தில் 300 இலங்கை அகதிகள் எஸ்டேட் நிலத்தில் ஆக்கிரமிப்பு செய்து வீடுகள் கட்டியுள்ளனர். இந்த வீடுகளுக்கு எண்கள் கொடுக்கப்படவில்லை. இந்த வீடுகளுக்கும் எண்கள் கொடுக்கும்படி பஞ்சாயத்து நிர்வாக அதிகாரி பணிக்கப்பட்டுள்ளார்.

ஸ்ரீலங்காவிலிருந்து வருகிற அகதிகள் ஸ்ரீலங்கா அரசாங்கத்திடமிருந்து எந்த எந்த இடங்களில் சென்று இருக்க வேண்டுமென்று அனுமதிப்பெற்று வருகிறார்கள். ஆனால் இங்கே வந்து வேலை பார்க்கிறபோது சீதோஷ்ணம் ஸ்ரீலங்காவிலிருந்தபோது என்ன இருந்ததோ அதைப்போன்று இருக்கிற இடமாக நீலகிரி மாவட்டத்தைத்தான் தேர்ந்தெடுத்து அங்கே செல்கிறார்கள், தாமாகவே, அவர்கள் சென்று குடியமர்ந்துவிடுவதும் உண்டு. அப்படிப்பட்டவர்களுக்கும் பாதுகாப்பு அளிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப்போன்ற புகார் எதுவும் அரசுக்கு வரவில்லை. வந்தால் அரசு நடவடிக்கை எடுக்கும்.

தாயகம் திரும்புவோருக்கு கடன் வசதிகள்.

வினா எண். 539—திரு. என் கிட்டப்பா : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அகதிகள் அரசினரின் கடனுதவி பெறுவதில் தரகர்கள் மோசடியைத் தவிர்க்க தனி போலீஸ் படை அமைக்கக் கோரி மாநில அரசு மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விபரம் யாது?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :

(அ) & (ஆ): தனி போலீஸ் படை அமைப்பது பற்றி மத்திய அரசுக்கு மாநில அரசு எழுதியது. அதற்கு மத்திய அரசு தனி போலீஸ் படை தேவையில்லையென்றும், மாநில அரசு

1979 மார்ச் 26]

போலீஸ் படைகளை வைத்து இந்த பிரச்சனையை சமாளிக்கும் படி யோசனை கூறியது. அதன்படி தனி போலீஸ் படை அமைப்பது கைவிடப்பட்டது.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, அகதிகளுக்கு தரகர்கள் மூலமாகப்போனால்தான் லோன்கள் கிடைக்கின்றன. அவர்கள் அப்ளை செய்தால் கிடைப்பதில்லை, இதுபற்றி மத்திய அரசுக்கு தமிழக அரசு எழுதியிருக்கிறதா? என்ன விண்ணப்பம் செய்தது? மத்திய அரசிடமிருந்து என்ன பதில் வந்தது? இடைத் தரகர்கள்மேல் நடவடிக்கை எடுக்கிற முறையிலே எத்தனை பேர்கள் மீது வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன?

[முற்பகல் 9-40]

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீலங்காவிலிருந்து தயாகம் திரும்பி வருகின்ற தமிழர்கள், மண்டபம் இடைத்தங்கல் முகாமில் தங்கியிருக்கின்ற போது அவர்களுக்கு வழங்கப்பட்ட குடும்ப அட்டைகள், பாஸ் போர்ட்டுகள், வங்கி கேட்பு வரைவுக் காசோலைகள் (டிமான்ட் டிராப்ட்ஸ்) ஆகியவற்றை அவர்களிடமிருந்து சட்டத்துக்குப் புறம்பான வகையில் பெற்றுக் கொண்டு அவர்களுக்கு ஆலைகள், மலைத் தோட்டங்கள் முதலியவற்றில் நல்ல வேலையைப் பெற்றுத் தருவதாகவும், வீடுகள் கட்டித் தருவதாகவும் பொய் வாக்குறுதிகளைக் கூறி அவர்களைப் பெருமளவில் ஏமாற்றி வருகின்ற அதிகார பூர்வமற்ற தரகர்கள் பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு மத்திய அரசின் தகவலுக்காகவும் அனுப்பப்பட்டது. மத்திய அரசு அது குறித்துத் தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டு அதனை மாநில அரசுக்கு அனுப்பி வைத்துள்ளது.

மாநிலக் காவல்துறையின் குற்றப்புலனாய்வுப் பிரிவு இந்தப் பொருள் குறித்து விசாரணை செய்து தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. மத்திய அரசுக்குக் கடிதம் எழுதிய மூன்று வகையான பணிகளைக் கவனிக்கும் பொருட்டு கண்காணிப்புக் குழு ஒன்றை நியமிப்பதற்கு இந்திய அரசுக்கு எழுதப்பட்டுள்ளது. (1) இடைத்தரகராக உள்ள அமைப்பின்மூலம் தமிழர்கள் சுரண்டப்படுவதை ஒழித்தல்; (2) கடன்களைத் தமிழர்களுக்கு வழங்கும் அமைப்பிலும் அது தொடர்பான ஏனைய அமைப்புகளிலும் நிலவக்கூடிய லஞ்ச நடைமுறைகளைத் தடுப்பதற்குக் கடுமையான கண்காணிப்பை மேற்கொள்ளுதல் (3) ஸ்ரீலங்காவிலிருந்தும் பர்மாவிலிருந்தும் தாயகம் திரும்புகின்ற தமிழர்களிடையே விரும்பத்தகாத தீய சக்திகள் புகுந்து விடாமல் கண்காணித்து வருதல் ஆகியன. இந்திய அரசு இந்தப் பணிக்கென தனி காவல்துறை பிரிவு ஒன்றை ஏற்படுத்தும் செயற் குறிப்புக்கு இசைவு அளிக்கவில்லை. மேற்சொன்ன குறிக்கோள்

[1979 மார்ச் 26

களை எய்தும் பொருட்டு, தற்போதுள்ள நிர்வாக அமைப்பையே சிறப்பாகப் பயன்படுத்தலாம் என்றும், மாநிலச் சட்டங்களைப் பயன்படுத்தியே தாயகம் திரும்பிய தமிழர்களிடையே விரும்பத் தகாத தீய சக்திகள் புகுவதைத் திறம்படத் தடுக்கலாம் என்றும் மத்திய அரசு இவ்வரசுக்குத் தெரிவித்துள்ளது. அதன் படி இப்பொழுது மாநில அரசு செயல்பட்டுக் கொண்டிருக் கிறது.

அண்மையில் புதுக்கோட்டையில் ஸ்ரீலங்காவிலிருந்து வந் துள்ள தமிழர்களிடமிருந்து சங்கத்தின் பெயரைக்கூறி அவர் களை மோசடி செய்ததாகவும், ஏமாற்றியதாகவும் நான்கு இடைத் தரகர்கள் மீது வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது.

தவிர, திருச்சி மாவட்டத்தில் திருச்சி ஜுடிஷியல் ஃபர்ஸ்ட் கிளாஸ் மாஜிஸ்ரேட் கோர்ட்டில் எட்டு வழக்குகள் மேலும் ஒன்பது தரகர்கள் மீது பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: தலைவரவர்களே, இலங் கை, பர்மா அகதிகளைப்பற்றி அமைச்சரவர்கள் குறிப்பிட் டார்கள். வியட்நாம் அகதிகளுக்கும் இதிலே ஏற்பாடு உண்டா! அல்லது அது விடுபட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: பேரவைத் தலைவர் அவர்களே, வியட்நாம் தமிழகர்ளைப்பற்றி அதிகமான குறை பாடுகள் எங்களுக்கு இல்லை. ஏறக்குறைய 400 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் வந்திருக்கிறார்கள். அவர்கள் தொழிற் பயிற் சிக் கூடத்தில் பயிற்சி பெற்று வேலை பார்க்க வேண்டுமென்ற எண்ணத்தோடு இருக்கிறார்கள். அவர்களுக்குப் பயிற்சி அளிக் கப்படுகிறது. அவர்களுக்கும் வீட்டு வசதிக் கடன் கொடுக்கப் படுகிறது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவரவர்களே, அகதிகளுக்கு கொடுக்கும் உதவி சரியானபடி அவர்களுக்குப் போய்ச்சேரவில்லை என்பது உண்மை. இரண்டு மூன்று கட்டங்களாக அந்த உதவித் தொகை கொடுக்கப்படுகிறது. முதல் கட்டத்தில் கொடுத்த பிறகு, அடுத்த கட்டத்தில் அடுத்த தவணையை வழங்குவதற் கான காலதாமதத்தைத் தவிர்ப்பதற்காக காலவரையறை வைக்கப்படுமா? இத்தனை காலத்திற்குள் கொடுக்க வேண்டு மென்று வைத்துவிட்டால் இப்படிப்பட்ட தவறுகள் ஏற்படு வதற்கு வாய்ப்புகள் இருக்காது. அவர்கள் அலைந்து அலைந்து பெறுகின்ற பணத்தைவிட அதிகமாகச் செலவழிக்கின்ற நிலைமை ஏற்பட்டு விடுகிறது. இந்தக் குறையைப் போக்கு வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

1979 மார்ச் 26]

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: பேரவைத் தலைவரவர்களே, இதுகுறித்து ஏற்கனவே அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. உதாரணமாக, வியாபாரக் கடனாக 5,000 ரூபாயைக் கொடுக்கிறபொழுது முதல் தவணையாக, 3,000 ரூபாயையும், அதற்கடுத்த தவணையில் 2,000 ரூபாயையும் கொடுக்கப்படுகிறது. முதல் தவணைக் கடனைக் கொடுத்த பிறகு அவர்கள் எந்தக்காரியத்திற்காக அந்த உதவியைப் பெற்றார்களோ அந்த காரியங்களுக்கு அந்தப் பணத்தைச் சரியான வழியில் செலவழித்திருக்கிறார்களா என்று பார்த்தபிறகு, மத்திய அரசு மீண்டும் 2,000 ரூபாயை மாநில அரசு மூலம் கொடுக்கிறது. சிலயிடங்களில் தருகின்ற பணத்தைவேறு எதற்காவது செலவழித்துவிட்டு எங்களுக்கு வியாபாரம் செய்யத் தெரியவில்லை, மறுபடியும் வேலைவாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுங்கள் என்று சொல்லும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எங்களைப் பொறுத்தவரையில் இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்டதற்குப் பிறகு இப்படிப்பட்ட புகார்களுக்கு இடமில்லாமல், செவ்வையாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, அகதிகளுக்குக் கொடுக்கின்ற கடனுதவியை இடைத்தரகர்கள் மோசடி செய்கின்ற காரணத்தால் அதற்காகத் தனிப் போலீஸ் அமைப்பு வேண்டுமென்று மத்திய அரசை இந்த அரசு கேட்டதாக அமைச்சரவர்கள் கூறினார்கள். தமிழ்நாட்டில் இருக்கின்ற போலீஸ் அமைப்பு இந்த வேலையைச் செய்யத் தகுதி இல்லையா! தனி போலீஸ் அமைப்பு கேட்பதற்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், காவல்துறையில் தனி போலீஸ் படையை அமைக்க வேண்டுமென்று தெரிவித்த பொழுது, மாநிலத்திலே ஒன்றிரண்டு பேர்களை அதிகமாகச் சேர்க்க வேண்டுமென்று சொன்னார்கள். அப்படி, மண்டபத்தில், குறிப்பாக இராமேசுவரத்தில் வந்திறங்கும் பொழுது, அங்கே நடைபெறும் இடைத்தரகர்களின் மோசடியைத் தவிர்க்க வேண்டுமென்று மாநில அரசு மத்திய அரசைக் கேட்டது. ஆனால் தற்சமயம் நான் இப்பொழுது வாசித்தப்படி, இடைத்தரகர்கள் மீது வழக்குகள் பதிவு செய்திருக்கிறோம், இங்கே இப்பொழுது அப்படி அதிகமான புகார்கள் வரவில்லை என்பதையும் மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை, நொச்சிக்குப்பம் பகுதியில் கடலரிப்பு.

*வினா எண். 540—திரு. டி. கே. கபாலி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சென்னை, மயிலை தொகுதியில் நொச்சிக்குப்பத்தில் இருந்து முள்ளிக்குப்பம் வரையுள்ள சாலையினை கடல் அரிப்பிலிருந்து பாதுகாப்பதற்கான மதிற் சுவர் கட்டும் திட்டம் ஏதேனும் உள்ளதா?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலாளர்): ஆம்.

திரு. இரா. அமிர்தராஜ்: பேரவைத் தலைவரவர்களே, இந்த மதிற் சுவர் எவ்வளவு தூரம் கட்டப்படும்? இதற்காக எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது? திருச்செந்தூர் மணப்பாடு புன்னக்காயல் ஆகிய ஊர்களில் கடல் அரிப்பு தொடர்ந்து ஏற்படுவதால் அந்தப்பகுதியிலும் தடுப்பு சுவர் கட்ட அரசு முன்வருமா.

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவரவர்களே, தென் சென்னையில் பட்டினப் பாக்கத்திலிருந்து புதிய கலங்கரை விளக்கம் வரை, மாற்று சாலையில் 300 மற்றும் 200 மீட்டர்கள் நீளத்திற்கு தனித் தனியாக கடலரிக்கப்பட்ட இடங்களில், கடலரிப்பைத் தடுக்க தற்காலிக பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்யும் பொருட்டு. தலைமைப்பொறியாளர் (கட்டிடம்) ரூ. 10.30 இலட்சங் களுக்கான மதிப்பீட்டை அளித்துள்ளார். மேற்கூறிய செயற்குறிப்பு நிதித்துறையின் பரிசீலனையில் உள்ளது. திருச் செந்தூரில் புன்னக்காயல் ஊரில் கடல் அரிப்பைத் தடுக்க பாதுகாப்பு செய்யப்படுமா என்று கேட்கிறார் மாண்புமிகு உறுப்பினர். தேவையைப் பொறுத்து அரசு பரிசீலிக்கும்.

திரு. பொ. சிகாமணி: பேரவைத் தலைவரவர்களே, கடல் அரிப்பால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தடுப்பு சுவர் கட்டுவது பற்றி நிதி அமைச்சரின் பேரவைச் செயலர் குறிப்பிட்டார். ஆனால், சாலைகள் பெரும் அளவு பாதிக்கப்பட்டிருப்பதைச் சீர் செய்ய, அரசு என்ன நடவடிக்கைகள் எடுக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவரவர்களே, ரூ. 1.05 இலட்சத்திற்கு, தலைமை பொறியாளர் (நெடுஞ்சாலை மற்றும் ஊரகப்பணி) இது தொடர்பாக சாலை, நடைபாதை ஆகியவற்றை இச்சாலைப் பகுதியில் செப்பனிட செயற்குறிப்பு ஒன்று அளித்துள்ளார்.

திருச்சி நகரத்தில் வெள்ளத்தால் சேதம்.

*வினா எண். 541—திரு கே. சௌந்திரராசன்: மாண்பு மிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.

1979 மார்ச் 26]

(அ) திருச்சி நகரத்தில் வெள்ளத்தால் வீடிழந்தவர்கள் எவ்வளவு பேர்?

(ஆ) எவ்வளவு பேருக்கு உதவித்தெகை வழங்கப்பட்டது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) & (ஆ): 1977-ம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தால் திருச்சிராப்பள்ளி நகரில் 8,854 குடும்பங்கள் வீடிழந்தன. 8,643 குடும்பங்களுக்கு நிவாரணத்தொகை கொடுக்கப்பட்டது.

திரு. கே. சௌந்திரராசன் : பேரவைத் தலைவரவர்களே, திருச்சி காவிரி நதியினுடைய பக்கத்திலே அமைந்திருக்கிற காரணத்தால், அங்கு அடிக்கடி வெள்ளம் வருவதாலும், அதனால் அங்கு ஓரப் பகுதியில் இருப்பவர்கள் குடிசைகளை இழப்பது என்பது தொடர்ந்து நடைபெறுகிற நிலைமையாக இருக்கிறது. ஆகவே, அப்படி தாழ்வான பகுதிகளிலிருப்பவர்களை, பக்கத்திலே மேட்டுப் பாங்கான பகுதிகளிலும் குடியமர்த்துவதற்கும், அதன் மூலம் வெள்ளம் வரும்போது அவர்களுக்குத் தொல்லை ஏற்படாமலிருக்க இந்த அரசு என்ன செய்ய இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, இது அரசினுடைய கவனத்திற்கு வந்திருக்கிறது. அப்படிப்பட்டவர்களெல்லாம் தாழ்வான பகுதிகளில் இருக்கக்கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களுக்காக வேறு நிலம் பார்த்துக் கொடுக்கவும் அரசு ஆவன செய்து வருகிறது.

திரு. கே. சௌந்திரராசன் : பேரவைத் தலைவரவர்களே, குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்று அப்பொழுது வெள்ளம் வந்த நேரத்திலே கூறப்பட்டு அத்திட்டம் செயல்பட இருந்தது. ஆனால், அந்தச் செயல் திட்டம் இப்பொழுது எந்த அளவில் இருக்கிறது என்பது தெரியவில்லை. இருந்தாலும் இரண்டு ஆண்டுகளாகியும் அந்த பகுதியிலிருப்பவர்கள் இன்னமும் வீடில்லாமல் தவிக்கிறார்கள். எவ்வளவு காலத்திற்குள் வீடற்ற நிலைமையைச் சீர்திருத்தி, அவர்களுக்குக் குடியிருப்பு வசதி செய்து தரப்படும் என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, குடிசை மாற்று வாரியம் அதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறது என்பதுதான் எனக்கிருக்கிற தகவல். அதுபற்றி மேலும் விவரம் வேண்டுமானால் சம்பந்தப்பட்ட இலாகாவை கேள்வி கேட்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பாலாற்றில் வெள்ளம்.

*வினா எண். 542—திரு என். கிட்டப்பா : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1978-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் பாலாற்றில் வெள்ளம் ஏற்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், அதனால் விளைவிக்கப்பட்ட சேத விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) ஆம்.

(ஆ) பொருள் சேதம் ரூ. 11,95,000; உயிர்ச்சேதம் 11 என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. மருதாசலம் : தலைவரவர்களே, 1978 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் தொகை எவ்வளவு? அதில் இறந்தவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்று அறிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாடு பூராவும் பாதிக்கப்பட்ட மக்கள் தொகை ஏறக்குறைய 20,64,000 என்று தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களில் இறந்தவர்கள் 221.

[முற்பகல் 9-50]

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதிலும் உள்ள விவரங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். சென்னையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 50 கிலோ அரிசி கொடுக்கப்பட்டது. அதுபோல திருச்சி மற்றும் பாலாற்றின் கரையிலுள்ள வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 50 கிலோ அரிசி கொடுக்கப்பட்டதா? அங்கே தேர்தல் உடனடியாக வராது என்ற காரணத்தினால் கொடுக்கப்படவில்லையா? அல்லது வேறு ஏதாவது காரணங்கள் உண்டா என்று அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசினுடைய ஆணைப்படி வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 5 கிலோ அரிசி என்றுதான் இருக்கிறது. ஆனால் சில நேரங்களில் மக்கள் அதிகமாகப் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டபோது முதல் அமைச்சர் அவர்கள் 50 கிலோ

1979 மார்ச் 26]

அரிசி என்று அறிவித்தார்கள். சென்னை மாநகரில் மட்டும் அல்ல எல்லா மாவட்டங்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. கொடுக்கப்பட்ட மாவட்டங்கள் : சென்னை, செங்கற்பட்டு, தஞ்சாவூர், தர்மபுரி, புதுக்கோட்டை, இராமநாதபுரம், மதுரை ஆகிய மாவட்டங்களில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

மொத்தமாக கொடுக்கப்பட்ட அரிசி எவ்வளவு என்றால், திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கு மட்டும் கொடுக்கப்பட்ட அரிசி 12,000 கிலோ என்று சொல்லிக்கொள்கிறேன். மொத்தமாக தமிழ்நாடு பூராவும் கொடுக்கப்பட்ட அரிசி ஒரு கோடியே ஐந்து லட்சத்து நாற்பத்தி நான்காயிரத்து ஐநூறு கிலோ கொடுக்கப்பட்டிருக்கிறது.

தெலுங்கு செட்டியார் இனத்தவர்.

*வினா. எண் 543—திரு. சி. மாணிக்கம்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பிற்பட்டோர் வகுப்பைச் சார்ந்த 24 மனை தெலுங்கு செட்டியார் இனத்தவர்களை மிகவும் பிற்பட்டோர் வகுப்பினராக ஆக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எச். ஜி. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 24 மனை தெலுங்குச் செட்டியார் இனத்தவர்கள், குறிப்பாக தமிழ்நாட்டிலே மிகவும் பின்தங்கியவர்கள் என்பது அரசுக்கு தெரியும். பிற்பட்டோர் வகுப்பைச் சார்ந்த 24 மனை தெலுங்கு செட்டியார் பிரிவைச் சேர்ந்தவர்களை மிகவும் பிற்பட்டோர் வகுப்பினர் பிரிவில் சேர்க்கவேண்டும் என்று நான் அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 24மனை தெலுங்கு செட்டியார் இனத்தைச் சேர்ந்தவர்கள் தமிழ் நாட்டில் தர்மபுரி, திருநெல்வேலி, மதுரை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் ஏறத்தாழ 1,08,262 பேர்கள் இருக்கிறார்கள். 1969ஆம் ஆண்டு

திரு. சட்டநாதன் அவர்கள் தலைமையில் நியமிக்கப்பட்ட குழு இந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் மிகவும் பின்தங்கிய வகுப்பினருக்கான பட்டியலில் சேர்க்கப்படுவதற்கான வாய்ப்புகள் இல்லை என்பதற்கான காரணங்களை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அவர்கள் ஏற்கெனவே பின் தங்கிய வகுப்பினர்கள் பட்டியலில் இருக்கிறார்கள். பின்தங்கிய வகுப்பினருக்கான சலுகைகளையும் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சீ. மு. வாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 24 மனை தெலுங்கு செட்டியார் தமிழகத்தில் கிட்டத்தட்ட 5 இலட்சம் பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள் கல்வி அறிவில் குறைந்தவர்களாக இருக்கிறார்கள். ஆகவே அரசு சலுகைகளைப்பெற மிகவும் பிற்பட்டோர் வகுப்பினராக அவர்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, 24 மனை தெலுங்குச் செட்டியார் இனத்தவர்கள் கல்வியறிவிலே மிகவும் பின் தங்கிய நிலைமையில் நிச்சயமாக இல்லை. அவர்களில் வைத்தியக் கல்லூரியில் பயிலும் மாணவர்கள் இருக்கிறார்கள். பொறியியல் கல்லூரியில் பயிலும் மாணவர்கள் இருக்கிறார்கள். அதற்காக நியமிக்கப்பட்ட குழு அவர்களை மிகவும் பின்தங்கிய வகுப்பினராக கருதவில்லை. ஆனால் அவர்கள் ஏற்கெனவே பின் தங்கிய வகுப்பினராக சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

திரு. கே. சௌந்திரராசன்: பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் இந்த நாட்டில் வகுப்பு வாரி பிரதிநிதித்துவம் அடிப்படையில் பிற்பட்டோருக்கு சலுகைகள் வழங்க மிகவும் பாடுபட்டார்கள். அதன்படி அவர்களுக்கு கல்வித் துறையிலும் வேலை வாய்ப்புத் துறைகளிலும் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் இப்பொழுது மேல்வகுப்பில் இருக்கிறவர்கள் எல்லாம் தங்களை பிற்பட்டோர் சமூகத்தில் சேர்க்க கோரிக்கைகள் எழுப்பி பிற்பட்டோர் சமூகத்தினருக்கு கிடைக்க வேண்டிய பலன்களை பெறுகிறார்கள். இதனால், உண்மையிலேயே பிற்பட்டோர் பிரிவினருக்கு அந்தச் சலுகைகள் கிடைக்காமல் போய்விடுகிறது. கடந்த ஆண்டு தேர்வு கல்லூரிகளிலே நடைபெற்றபோது

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; தயவு செய்து சுருக்கமாக முடித்துக் கொள்ளுங்கள்.

1979 மார்ச் 26]

திரு. கே. சௌந்திரராசன் : பிற்பட்டோர்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த சலுகைகளை இவர்கள் பெற்றிருக்கிறார்கள். இதுபற்றி அரசு ஆராய்ந்து பிற்பட்டோர் நலனுக்குரிய இடத்தை தனியாக ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் அதற்கு அரசு முன்வருமா என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசால் நியமிக்கப்பட்ட சில குழுக்களின் பரிந்துரைகளின் பெயரால்தான் மேற்பிரிவில் இருப்பவர்களின் கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு, அவர்கள் பின் தங்கிய வகுப்பினர், மிகவும் பின் தங்கிய வகுப்பினர்களின் பிரிவில் சேர்க்கப்படுகின்றனர்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, அண்மையில் டெல்லியில் ஒரு பிற்பட்டோர் மாநாடு நடந்ததாகவும், அதில் பிற்பட்டோர் நலக் கமிஷன் ஒன்று நியமிக்கப்பட்டதாகவும், அந்த மாநாட்டில் நமது மாண்புமிகு பிற்பட்டோர் நல அமைச்சர் அவர்கள் கூட கலந்து கொண்டதாகவும் செய்தி வந்தது. அந்த மாநாட்டில் தமிழ்நாடு சார்பில் என்னென்ன கோரிக்கைகள் அனுப்பப்பட்டு உள்ளன என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிடுவாரா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாதம் 21-ம் நாள் டெல்லியில் நடைபெற்ற பிற்பட்டோர் நலக்குழுவில் தமிழ்நாட்டின் சார்பில் இரண்டு முக்கியமான கருத்துக்கள் வலியுறுத்தப்பட்டன. ஒன்று, எப்படி மாநிலங்களில் பிற்பட்ட சமுதாயத்திற்கும், மிகவும் பிற்பட்ட சமுதாயத்திற்கும் அரசு அலுவலகங்களில் உத்தியோகங்கள், அதே போல் சர்வீஸ் கமிஷன் போன்ற நிறுவனங்கள் ஆகியவற்றில் ஒதுக்கீடு அளிக்கப்படுகிறதோ அதைப்போல, யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன், மற்றும் மத்திய அரசு அலுவலகங்களிலும் இந்த பிற்பட்ட சமுதாயத்தினருக்கு தனிப் பிரதிநிதித்துவம் கொடுக்கவேண்டும். இதை தமிழக அரசு வலியுறுத்தியிருக்கிறது. இன்னொன்று, தமிழகத்தில் நிறுவப்படவிருக்கும் பிற்பட்டோர் நல நிதிக் கழகத்திற்கு மத்திய அரசு 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்ய வேண்டும் என்று மாநில அரசு வற்புறுத்தியிருக்கிறது. பிற்பட்டோர் நலத்துறைக்கு மாநில அரசு செய்யும் எந்தக் காரியத்திற்கும் மத்திய அரசு எந்தவிதமான உதவியும் அளிக்கவில்லை. ஆகவே, அந்த அடிப்படையில் அந்தக் கோரிக்கை வலியுறுத்தப்படுகிறது. இதை ஒரு நியாயமான கோரிக்கை என்று ஏற்றுக்கொண்டு மாண்புமிகு ஜனதா கட்சி உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்கள் மத்திய அரசிடம் வற்புறுத்தவேண்டும், வற்புறுத்துவார் என்று எதிர்பார்க்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொண்டுள்ள பிற்பட்டோர் பட்டியல் மத்திய அரசு பட்டியலில் இடம் பெறவில்லை. ஆகவே, மத்திய அரசிடம் தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொண்டுள்ள பட்டியலை மத்திய அரசிலும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வலியுறுத்தப்பட வேண்டிய அவசியம் நிச்சயமாக இந்த அரசுக்கு இல்லை. இந்திய அரசியல் சட்டம் ஆர்டிகிள் 15 கிளாஸ் 4, அதைப்போல ஆர்டிகிள் 16 கிளாஸ் 4, ஆகியவைகளின்படி மாநில அரசுக்கு அந்த அதிகாரம் அரசியல் சட்ட ரீதியாக மத்திய அரசே கொடுத்து இருக்கிறது. அப்படிப் பட்ட அதிகாரம் மத்திய அரசு கொடுத்து இருக்கிறபோது அதை அமல்படுத்தும் கடமையும் மத்திய அரசுக்கு இருக்கிறது.

மீன்வள அபிவிருத்திக் கழக பொது மேலாளர்.

*வினா எண் 544—திரு. தி. சு. நல்லதம்பி : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மீன்வள அபிவிருத்திக் கழகப் பொது மேலாளர் பதவிக்கு புதியதாக அதிகாரியை அரசு நியமித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரங்கள் என்ன ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு மீன் அபிவிருத்திக் கழகம் பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதாலும், அதன் மீன் விற்பனைத் திட்டத்தை திறம்பட செயல்படுத்தும் பொருட்டும் பொது மேலாளர் பதவிக்கு பொறுப்புள்ள வியாபாரத் திறமைமிக்க ஒருவர் நியமிக்கப்பட வேண்டியது அத்தியாவசியமாயிற்று. அதன் பொது மேலாளராக இந்திய அரசின் கடல் பொருட்கள் ஏற்றுமதி அபிவிருத்திக் கழகத்தின் துணை இயக்குநர் ஒருவர் நியமிக்கப் பட்டுள்ளார். அவர் 1978ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 8ஆம் நாள் முதல் பணியாற்றி வருகிறார்.

திரு. டி. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் இரால் வளர்ப்பை ஊக்குவிக்க அந்தப் பணியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு அரசாங்கப் புறம்போக்கு நிலம் கொடுக்கப்பட்டு இருக்கிறதா ? அதற்கு என்று பொது மேலாளர் நியமிக்கப்பட்டுள்ளாரா ?

1979 மார்ச் 26]

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் கடலோரப் பகுதிகளில் ஒரு சில இடங்களில் இரால் மீன்கள் வளர்க்கும் சாத்தியக் கூறுகள் இருப்பதை நல்ல முறையில் பரிசீலித்து அந்தத் திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்று பல்வேறு திட்டங்களை அரசு கொண்டுவந்து இருக்கிறது. அதைப்பற்றிய திட்டங்களை அமல் படுத்த எங்கெங்கே நடவடிக்கை எடுக்கப்படவில்லையோ அங் கெல்லாம் எடுக்கப்படும். அதுவும் கடலோரப் பகுதியில் நிச்சய மாக செயல்படுத்தப்படும். அதற்காக தனி மேலாளர் நியமிக் கும் உத்தேசம் இந்த அரசிடம் இல்லை.

திரு. மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே, தமிழகத்தின் கடற்கரை ஓரங்களில் டாட்டா, பிர்லா போன்றவர்களுக்கு இரால் மீன் வளர்க்க இடம் கொடுக்கப் போவதாக பேச்சு அடிபடுகிறது. அது நிராகரிக்கப்பட வேண்டும். மீனவர்களின் கூட்டுறவு சங்கங் கள் மூலம் இரால் மீன் வளர்ப்பை ஊக்குவிக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். ஏகபோக முதலாளிகளான டாட்டா, பிர்லா போன்றவர்களுக்குக் கொடுக்க இருப்பது தடுக்கப்படவேண்டும். தவிர்க்கப்பட வேண்டும், அப்படி செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவர் அவர் களே, இந்த மாமன்றத்தில் பலமுறை அரசின் சார்பில் வலியுறுத் திச் சொல்லியிருக்கிறேன். மீன் வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக பல்லாயிரக்கணக்கான மீனவர்கள் பயன்பெறும் திட்டத்தை இந்த அரசு நிறைவேற்றும் என்று பல்வேறு சந்தர்ப்பங்களில் சொல்லியிருக்கிறேன் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள் கிறேன். உருவாக்கபட்டு இருக்கிற புதிய திட்டத்தின் கீழ் மீனவர்கள் கூட்டுறவு சங்கங்களுக்குத்தான் முன்னுரிமை அளிக் கப்பட வேண்டும் என்று அரசு ஏற்கெனவே உத்தரவு பிறப்பித்து இருக்கிறது. சில இடங்களில் கூட்டுறவு சங்கங்கள் இல்லையென் றால், கூட்டுறவு சங்கங்களைச் சேர்ந்தவர்கள் அந்தத் திட்டத்தை அமல்படுத்துவதற்கு முன்வர அவர்களுக்கு வசதி இல்லையென் றால் அந்த நேரத்தில் தனியார் பற்றி யோசிக்கலாம் என்பதே இந்த அரசின் நோக்கமாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மற்ற வினாக்கள் நாளைக்கு எடுத்துக் கொள்ளப்பெறும்.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற் றது என்பதைக் குறிக்கும்.]

[முற்பகல் 10.00]

(3) உரிமைப் பிரச்னைகள்.

அ. தொழிலாளர் நலத்துறை அமைச்சர் மீது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 184-வது விதியின்கீழ் திரு. ஆர். உமாநாத் அவர்கள் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் மீது ஓர் அவை உரிமை மீறல் பிரச்சனையைக் கொடுத்திருக்கிறார்கள். அதை அவையில் எழுப்புவதற்கு அவருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

திரு. அ. ரகுமான்கான்: சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். நான் ஏற்கெனவே ஒரு உரிமைப் பிரச்சனையைக் கொடுத்திருக்கிறேன். அதை 26-ந் தேதி எடுத்துக் கொள்கிறேன் என்று தெரிவித்தீர்கள். ஆகவே, அருள்கூர்ந்து அதையும் இன்றைக்கு எடுத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். இன்றைக்கு வரவில்லை என்றால் பின்னால், இது முடிந்த பிறகு கேளுங்கள்.

திரு. அ. ரகுமான்கான்: தாங்களே ஒரு வாரத்திற்கு முன்னால் 26-ந் தேதி எடுத்துக்கொள்கிறேன் என்று சொல்லியிருக்கிறீர்கள். இன்றைக்கு சம்பந்தப்பட்ட அமைச்சரும் இருக்கிறார், நானும் இருக்கிறேன். ஆகவே, அருள்கூர்ந்து அதை இன்றைக்கு எடுத்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: தலைவரவர்களே, 1979 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 8 ஆம் நாளன்று ஒரு கால் அட்டன்ஷன் நோட்டீஸுக்கு டி.வி.எஸ். டிஸ்பியூட் சம்பந்தமாக முதலமைச்சர் முன்னால் ஏற்பட்டிருக்கக்கூடிய 'அக்கார்டு' அமல்படுத்தப்படவில்லை என்பது சம்பந்தமாக தொழிலாளர் நல அமைச்சரின் பதிலிலிருந்து எழக்கூடிய பிரிவிலேஜ் மோஷன் இது. அது சம்பந்தமாக பதில் கூறும் போது. இருசாராரும் ஒத்துழைக்காததன் காரணமாக ஏற்பட்ட ஒப்பந்தத்தை மேற்கொண்டு நிறைவேற்றவில்லை என்று சொன்னார். அவர் அப்போது பேசும்போது, ஏற்கெனவே முதலமைச்சர் அவர்களுடன் பேசி ஒரு அண்டர்ஸ்ஸ்டாண்டிங் ஏற்பட்டிருக்கிறது. அதை அந்தத் தொழிலாளர்கள் பிரதிநிதிகளும் கையாளவில்லை. முதலாளிகளும் கையாளவில்லை. அவரவர்கள் அவரவர்கள் பாதையில் சென்று விட்டார்கள். உற்பத்தி கொடுக்க வேண்டுமென்று சொன்னதை தொழிலாளர்கள் செய்யவில்லை என்று சொன்னார்கள்.

இந்த போர்ஷன் மூலமாக தந்த இந்த அறிக்கையில் உண்மைக்குப் புறம்பானவற்றைத் தந்திருக்கிறார்கள். இது ஏற்கெனவே இந்த அவையில் தெரிவித்த கருத்திற்கு முற்றிலும் மாறானது. இந்த அவையை திசைத் திருப்புவதற்கு கொடுக்கப்பட்ட

1979 மார்ச் 26] *[திரு. ரா. உமாநாத்]*

பதில் இது. டி.வி.எஸ், தொழிலாளர்களை பழிப்பதற்காகவே இந்த முறையில் மாற்றிக் கூறியிருக்கிறார். முதலமைச்சர் முன்னால் ஏற்பட்டிருக்கக்கூடிய ஒப்பந்தம். அதை இருசாராரும் மீறினார்கள் என்று சொல்வது உண்மையல்ல. ஏனென்றால் அந்த ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகு தொழிலாளர்கள் வேலைக்குப் போகும்போது வன்முறை என்று சாக்குப் போக்குச் சொல்லி, உடன்பாட்டை மீறிவிட்டு 'லாக் அவுட்' செய்தார் முதலாளி. அந்த உண்மையை 1978 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 20 ஆம் நாளன்று ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும்போது ஊர்ஜிதம் செய்துள்ளார் அமைச்சர். முதலமைச்சர் அவர்களிடம் ஒப்பந்தம் செய்து கொடுக்கிறோம் என்று சொன்னது உண்மைதான். முதல் அமைச்சர் அவர்களிடம் யாரும் கையெழுத்துப் போட்டுக் கொடுக்கவில்லை. முதலமைச்சருக்கு என்று எழுதி, என்னிடத்தில்தான் கொடுத்தார்கள். அப்படி 716 பேர்கள் கொடுத்தார்கள். அதை ஏற்றுக்கொள்ளலாம் என்று சொல்லி, சுந்தரம்-கிளேட்டன் டி.வி.எஸ்.—லூகாஸ் சார்பில் திரு. பாலாஜி என்பவரும் திரு. ரத்னம் என்பவரும் கையெழுத்துப் போட்டது உண்மை. ஆனால் அதற்குப் பின்னால் சிலர் வயலென்ஸ் என்ற முறையில் இடுபட்டார்கள் என்ற காரணத்தைக் கூறி அவர்கள் இதை ஏற்றுக்கொள்ள முடியாது தாங்கள் கையெழுத்துப் போட்டதை ஏற்றுக்கொள்ள முடியாது. அதைத் திரும்ப வாங்குகிறோம் என்று சொன்னார்கள். இதை இல்லீகல் என்று சொல்ல முடியாது. இது ஒரு ஏற்பாடே தவிர, தொழிற் தகராறு சட்டம் *18 (1), 12 (3)*-ன்படி செய்த ஒப்பந்தம் அல்ல.

It is immoral but it is not illegal.

என்று பதில் சொல்லியிருக்கிறீர்கள். ஆகவே இருவரும் மீறியதாக பதில் சொல்லவில்லை. முதலாளி மீறியதாகக் கூறியிருக்கிறார்.

ஆனால் இப்போது முதலாளி மீறவில்லை; தொழிலாளர்களும் மீறினார்கள் என்றால் அதற்கு இடமில்லை. இன்னொன்றையும் சொன்னார்கள். ஐ.என்.டி.யு.சி. தொழிலாளர்களுக்கும், சி.ஐ.டி.யு. தொழிலாளர்களுக்கும் கிளாஷ் ஏற்பட்டு, ஐ.என்.டி.யு.சி. ஊழியரை கொலை செய்ததாக முதலாளி கூறியது கூட உண்மை அல்ல; எங்களுடைய ஏ.ஐ.ஏ.டி.எம்.கே. மெம்பர்தான் கொலை செய்யப்பட்டார் என்று கூறியிருக்கிறார்கள். அத்தனைக்கும் பிறகு தொழிலாளியும் மீறினார், முதலாளியும் மீறினார் என்று பின்னால் கூறியதற்கு காரணம் என்ன? செய்துகொண்ட ஒப்பந்தத்தை மீறுவதன் மூலம் டி.வி.எஸ். முதலாளி சட்டப்படி இல்லாவிட்டாலும் தார்மீகமாக ஒரு குற்றத்தைச் செய்துள்ளார். அதிலிருந்து டி.வி.எஸ். முதலாளியைக் கரையேற்றவேண்டுமென்றே இருவரும் மீறியதாக உண்மைக்கு புறம்பாக பேசுகிறார். டி.வி.எஸ். முதலாளிக்கு முன்னால் இந்த அமைச்சர் தனது 'இம்பொட்டன்சியை' காட்டியிருக்கிறார் என்று நான் குற்றஞ் சாட்டுகிறேன்.

டி.வி.எஸ். முதலாளிகளை, ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தை அமல்படுத்துவதற்காக நிர்ப்பந்திக்கத் திராணியற்ற தனது நிலை மையை மறைப்பதற்காகவே மாண்புமிகு அமைச்சரவர்கள் சட்ட மன்றத்தில் இந்த மாதிரி கூறி இருக்கிறார் என்று சொல்ல விரும்பு கிறேன். அதுமட்டுமல்ல, நமது மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரவர்களுக்கு சமீப காலமாக டி.வி.எஸ். தொழி லாளர்கள் என்ற பிரச்சினை வந்தாலே ஒரு அலர்ஜி

He takes sadistic pleasure in worker baiting

என்பதற்காக தொழிலாளர்களும் இதனை நிராகரிக்கிறார்கள் என்ற காரணத்தைச் சொல்லி சிற்றின்பம் அனுபவிக்கிறார். அவர் இன்பத்தை அனுபவிக்கட்டும். அதிலே ஏற்படுகின்ற துர்நாற்றத் தையும் அனுபவிக்கட்டும் அதைப்பற்றி நான் ஒன்றும் சொல்ல வில்லை. ஆனால் இந்த அவைக்கு அவர் தவறான தகவலைத் தருகிறார் என்ற காரணத்தினால் இதனை உரிமைக் கமிட்டிக்கு அனுப்பவேண்டும் என்று கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரவர்கள் ஏதாவது சொல்லவேண்டும் என்றால் சொல்லலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, நாளையதினம் விவரமாக இதற்கான பதில் அறிக்கையைத் தரு கிறேன். நான் சொன்னது சரிதான் என்பதையும் முதலமைச்சர் முன்னால் எற்பட்ட It is only an understanding and not settlement under 12 (3) என்பதையும் விளக்குவதற்குரிய அறிக்கையினை நாளை தருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் நாளை நமது அறிக்கையினை அளிப்பார்கள். பின்னர் எனது தீர்ப்பு அளிக்கப் பெறும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் 184-வது விதியின் கீழ் அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினையை அவை யில் கொண்டுவர மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா, திரு. எம். அரங்கநாதன், மற்றும் திரு. பெ. சு. திருவேங்கடம் ஆகியோர் அறிவிப்புத் கொடுத்துள்ளனர். இதே பொருள் குறித்துக் திரு. பொன்னுரங்கம் அவர்களும் ஒரு அறி விப்புக் கொடுத்துள்ளார். இப்பிரச்சினையை அவையில் எழுப்ப அனுமதி அளிக்கிறேன். திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா அவர்கள் முன்மொழிவார்.

ஆ. உள்ளாட்சித்துறை அமைச்சர் மீது.

*திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை 184-வது விதியின் கீழ் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் மீது கீழ்க்கண்ட உரிமை மீறல் பிரச்சினையை முன்மொழிகிறேன்.

1979 மார்ச் 26] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

'' தமிழ்நாடு சட்டப் பேரவையில் 1979ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 9ஆம் நாளன்று வள்ளுவர் கோட்டத்தின் அருகாமையில் உள்ள அண்ணா சிலை பராமரிப்பு பற்றி சட்டமன்ற உறுப்பினர் திரு. பெ. சு. திருவேங்கடம் அவர்கள் 'சென்னை வள்ளுவர் கோட்டத்திற்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாநகராட்சியால் பராமரிப்பு செய்யப்படாமல் இருக்கிறது' என்ற கேள்விக்கு அமைச்சரவர்கள் அரசு விதித்துள்ள நிபந்தனைப்படி சிலை வைக்க ஆகும் செலவில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் மாநகராட்சிக்கு, சிலையின் பராமரிப்புக்கு சிலை வைக்க அனுமதி கோருபவர்கள் கட்ட வேண்டும் என்றும் அந்தத் தொகை கட்டப்படவில்லை என்றும் விடையளித்திருக்கிறார்.

சென்னை மாநகராட்சியில் அண்ணா சிலை பராமரிப்புக்காக 1978 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 30-ம் தேதி செலான் எண் II/6-ல் ரூ. 2,000 செலுத்தப்பட்டிருக்கிறது. மேற்படி தொகை கட்டப்பட்ட பிறகுதான் அண்ணா சிலை வைக்க அனுமதி கொடுக்கப்பட்டது. அண்ணா சிலை பராமரிப்புக்கு ரூ. 2,000 செலுத்தப்பட்டிருந்தும் அமைச்சர் அவர்கள் சிலை பராமரிப்புக்குத் தொகை செலுத்தவில்லை என்ற உண்மைக்கு மாறான தகவலை அமைச்சரவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அண்ணா சிலை அமைப்புக் குழுவுக்கு களங்கம் உண்டாக்க வேண்டும் என்று வேண்டுமென்றே இந்தத் தவறான தகவல் அவைக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இது அவை உரிமை மீறிய செயலாகும். எனவே இந்த அவை உரிமை மீறல் பிரச்சினையை உரிமைக் குழுவுக்கு அனுப்பி விசாரிக்க வேண்டுகிறேன்.

பராமரிப்புத் தொகையை மாநகராட்சிக்கு செலுத்தியதற்கான அத்தாட்சியையும் இத்துடன் இணைத்திருக்கிறேன்.

மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்ன பதில் பத்திரிகைகளில் எல்லாம் வெளியிடப்பட்டுள்ளன. ஆகவே ஏற்கெனவே தொகை செலுத்தப்பட்டிருக்கிறது.

'This is to certify that Thiru R. D. Seethapathi has remitted a sum of Rs. 2000/- vide chalan 2/6 dated 3-7-78 towards maintenance charges for Anna Statue to be installed at Valluvarkottam—File Account Register Page, 59.'

என்று இரண்டாயிரம் ரூபாய் செலுத்தப்பட்டிருந்தும் தவறான தகவலை கொடுத்திருக்கிறார்கள். ஆகவே அமைச்சருக்கு ஒரு வேளை அதிகாரிகள் தவறான தகவலைத் தந்திருந்தால் அந்த அதிகாரிகள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இந்த உரிமை மீறல் பிரச்சினையை இந்த அவை முன் வைக்கிறேன்.''

<u>மாண்புமிகு திரு. கா. காளிமுத்து</u>: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. திருவேங்கடம் அவர்கள் அவைக்குக் கொடுத்திருந்த ஒரு மூலக் கேள்விக்கு விடையளித்

கும்போது இந்த பதிலை, மாநகராட்சி ஆணையர் தந்ததின் அடிப்படையிலே, அவையிலே குறிப்பிட்டேன். ஆனால் அதற்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் துணைக் கேள்வி கேட்டார்கள். அது குறித்து மாநகராட்சியிடம் முழு விளக்கத்தைக் கேட்டபோது பராமரிப்புக்கு பணம் கட்டப்பட்டது என்கிற விவரம் பணித்துறையிலே இருந்திருக்கிறது. மாநகராட்சி மின்துறையிலே இது குறித்த விவரம் கேட்டபோது அவர்கள் இல்லை என்று சொன்னதை அப்படியே பதிலாகத் தந்திருக்கிறார்கள். ஆகவே இந்த விவரம் தெரிந்த பிறகு இது குறித்து நானே விதி 82-ஏ-யின் கீழ் ஒரு அறிக்கை வைக்க வேண்டும் என்று நினைத்திருந்தேன். ஆனால் அதற்குள் உரிமைப் பிரச்சினை முந்திக்கொண்டுவிட்டதால் இதனை விளக்குவதற்கு ஒரு வாய்ப்பாகக் கருதி விளக்குகிறேன். ஆகவே இந்த மாதிரி தவறுகள் ஏற்படக்கூடாது என்று மாநகராட்சிக்கு அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது. மேலும் தவறான தகவல் தரவேண்டும் என்கின்ற எண்ணத்திலோ அல்லது களங்கம் கற்பிக்கப்பட வேண்டும் என்கின்ற எண்ணத்திலோ அது தரப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 10-10]

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பராமரிப்பு செலவு விவரங்களைக் கேட்கும்போது அந்த அதிகாரி தெரிந்தபிறகு தான் அனுப்ப வேண்டும். அண்ணா சிலை பற்றி கேட்கும்போது தவறாக தகவல் கொடுக்கக் கூடிய அலட்சியப் போக்குடைய அதிகாரி மீது நடவடிக்கை எடுக்கப்படுமா? பராமரிப்பு செலவிற்கு பணம் கட்டவில்லை என்று தவறாக சொன்னதனால் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஒரு இழுக்கு ஏற்பட்டிருக்கிறது. அவர்களுடைய விளக்கத்தை கோரும்போது தவறுக்கு காரணமாக இருந்த அதிகாரி மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அந்த தவறுக்கு யார் காரணமோ நிச்சயமாக அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் விளக்கத்திற்குப் பிறகு அவை உரிமை மீறல் பிரச்சினை இல்லை என்ற காரணதினால் இது தள்ளப்படுகிறது.

திரு. மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, வள்ளுவர் கோட்டத்திற்கு எதிரே இருக்கின்ற அண்ணா சிலை குப்பை கூளங்களுக்கிடையே பராமரிக்கப்படாமல் இருக்கின்றது. ஒளியில்லாத சூழ்நிலையும் அந்த சிலைக்கருகே இருக்கின்றது. அந்த இருண்ட சூழ்நிலையில் இன்றைக்கும் அண்ணா அவர்கள் சிலை வள்ளுவர் கோட்டத்திற்கு எதிரே இருக்கின்றது. இனி மேலாவது அந்தப் பிரச்சினையில் பராமரிப்புச் செலவுக்குப் பணம்

கட்டப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொண்ட பிறகாவது மின் ஒளி விளக்குகளுக்கு ஏற்பாடு செய்யப்படுமா? விரைவில் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: விளக்கு இப்போது எரிந்து கொண்டிருக்கிறது. நான் விசாரித்து பார்த்து விட்டு இதைச் சொல்கிறேன்.

திரு. மு. கருணாநிதி: மூன்று நாட்களுக்கு முன்பு பார்த்து விட்டு வந்து சொல்கிறேன். விளக்குகள் எரியவில்லை என்று சொன்னால் கழகத் தோழர்கள் ஒவ்வொரு நாளும் அண்ணாவின் ஜோதி ஏந்திக் கொண்டு மாலை 6 மணி முதல் 10 மணி வரை நிற்க வேண்டும் என்று முடிவெடுத்திருப்பதனால் அதைப்பார்ப் பதற்காக நான் அங்கே சென்று பார்த்தேன். அங்கு விளக்குகள் எரியவில்லை. இனிமேலாவது விளக்குகள் எரிவதற்கு உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: எதிர்க் கட்சித் தலைவர் வேண்டுமானால் இன்று இரவு போய்ப் பார்க்கலாம்.

(4) தகவல்கள் கோரல்.

(அ) முதலமைச்சர் மீது கொடுத்துள்ள உரிமைப் பிரச்சினையை எடுத்துக் கொள்வது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவை உரிமை மீறல் பிரச்சினை. 184-வது விதியின் கீழ் திரு. ஜேம்ஸ் அவர்களும் பின்னர் திரு எம். ஏ. லத்தீப் அவர்களும் முதலமைச்சர் மீது அவை உரிமை மீறல் பிரச்சினையை எழுப்ப வேண்டும் என்று அனுமதி கேட்டுள்ளார்கள். முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு இல்லாத தினால் இன்றைக்கு எடுத்துக் கொள்வதில் பயன் இல்லை. அவர் கள் வருகின்ற நேரத்தில் எடுத்துக் கொள்ளலாம் என்று தெரிவித் துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: முதலமைச்சர் அவர்கள் எப்போது வருவார் என்பது எங்களுக்குத் தெரியாது. உங்களுக்குத் தான் தெரியும். ஆகவே எப்போது எடுத்துக் கொள்ளப்படும் என்று சொல்லிவிட்டால் உதவிகரமாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வியாழக்கிழமை காலை எடுத்துக் கொள்கிறேன். இல்லையென்றால் அவர்கள் சார்பில் யாராவது ஒரு அமைச்சர் அவர்கள் சொல்லலாம்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீது அவை உரிமை மீறல் பிரச்சினை எழுப்பப்பட்டு அது வியாழக்கிழமை எடுத்துக் கொள்ளப்போவதாகவும் தாங்கள் சொன்னீர்கள். முதலமைச்சர் அவர்கள் 21-ந் தேதி சென்னையில் இல்லை. நெல்லையில் ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொள்ளப் போவதாக இருக்கிறார்கள். வேறு ஒரு நாள் வைத்துக் கொள்ளலாம். அதாவது 31-ந் தேதி வைத்துக் கொண்டால் நலமாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் வியாழக் கிழமை என்று சொன்ன பொழுது முதலமைச்சர் இல்லை, அவர் சார்பில் மற்றொரு அமைச்சர் பொறுப்பேற்று பதில் சொல்லலாம் என்று சொன்னேன். 1979 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 10ஆம் நாள் அன்று மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள்

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, இந்த உரிமை மீறல் பிரச்சினை முதலமைச்சரைப் பற்றியது. ஆகவே இந்தப் பிரச்சினையில் அவர்களே ஒரு விளக்கம் கொடுத்தால் நலமாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் முதலமைச்சர் அவர்களோடு தொடர்பு கொண்டு அவர்கள் என்றைக்கு இருக்கின்றார்களோ அன்றைக்கு எடுத்துக் கொள்கிறேன்.

(3) உரிமைப் பிரச்னைகள்—தொடர்ச்சி.

(இ) மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மீது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1979 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 10ஆம் நாளன்று, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் மீது ஒரு அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினையை எழுப்பினார். இது குறித்து என் தீர்ப்பு பின்னர் வழங்கப்படும் என்று தெரிவித்திருந்தேன்.

1979ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 9ஆம் நாளன்று பேரவையில் ஒரு சட்ட முன்வடிவின் மீது பேசுகையில் திரு. துரை கலியமூர்த்தி அவர்கள் ''நேற்று எங்கள் தலைவர் அவர்கள் உளி வீச்சு பற்றிக் குறிப்பிட்டார்கள். அமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் சொல்ல வேண்டும்'' என்று பேசினார்கள். அப்போது மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் குறுக்கிட்டு ''உளி வீச்சுக்கும் இந்த பில்லுக்கும் என்ன சம்பந்தம், உட்காருங்கள்'' என்று கூறினார். பிறகும் திரு. கலியமூர்த்தி அவர்கள் ''அதற்கு அமைச்சர் அவர்கள் இன்று வரையில் விளக்கம் கொடுக்கவில்லை. செபாஸ்டியன் கீழ்ப்பாக்கம் ஆஸ்பத்திரியில் இருப்பதாக சொன்னார்கள். அதைப்பற்றித் தெரியப்படுத்தவில்லை. அதை நான்

கூறுவது கடமை என்று கருதி கூறி அமர்கிறேன் '' என்று பேசியுள்ளார். இதற்கு உடனே பதில் அளிக்கும் வகையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் '' மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல் செபாஸ்டியன் அவர்கள் மருத்துவ மனையிலே இல்லை. போலீஸ் கண்காணிப்பிலேதான் இருக்கிறார் '' என்று கூறியுள்ளார்.

1979 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 10 ஆம் நாளன்று மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள ஒரு ஒழுங்குப் பிரச்சினை மூலமாக '' தலைவர் அவர்களே, நேற்றைய தினம் நம்முடைய மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மாண்புமிகு சௌந்தரராசன் அவர்கள் ஒரு விளக்கம் அளித்திருக்கிறார்கள் நான் மாண்புமிகு சௌந்தரராசன் அவர்களிடம் தெரிந்து கொள்ள விரும்புவது அவர் (செபாஸ்டியன்) நிச்சயமாக மருத்துவ மனையில் சேர்க்கப்படவில்லையா ? ரிமாண்டில் வைக்கப்பட்டவர், நெல்லை மாவட்ட சிறையில் வைக்கப்பட்டவர், போலீஸ் கண்காணிப்பில் எப்படி வந்தார் ? ரிமாண்டில் இருக்கிற கைதி போலீஸ் கண்காணிப்பில் எப்படி வந்தார் ? போலீஸ் கண்காணிப்பில் இருக்கிறார் என்றால் அதற்கு என்ன காரணம் ? எந்த ஊரில் இருக்கிறார் '' என்று கேட்டார்.

இந்த ஒழுங்குப் பிரச்சினைக்கு விளக்கம் அளிக்கும் வகையில் மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது —'' தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இந்தப் பிரச்சினையை எழுப்பிய காரணத்தால் அதை விளக்க வேண்டிய கடமை எனக்கு இருக்கிறது. திரு. செபாஸ்டியன் என்பவர் திருநெல்வேலி மருத்துவ மனையில் இருந்தார். மேலும் அவர் பரிசோதிக்கப்பட வேண்டுமென்று மருத்துவ அதிகாரிகள் கொடுத்த அறிக்கையின் பேரிலும் அவரைப் பரிசோதிப்பதற்கு வசதிகள் அங்கே இல்லை என்று அவர்கள் தெரிவித்த அடிப்படையின் பேரிலும் அத்தகைய வசதிகள் சென்னை மனநோய் மருத்துவ மனையில் இருக்கிறது என்று அவர்கள் எடுத்துச் சொன்னதின் பேரிலும் அவர் இங்கே கொண்டுவரப்பட்டு மத்திய சிறையில் வைக்கப்பட்டு, இங்கேயுள்ள மனநோய் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகிறார். இதுதான் நடந்திருக்கிற விஷயம்.

உடனே மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் '' நான் மாண்புமிகு அமைச்சர் சௌந்தரராசன் அவர்கள் மீது ஒரு உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வருகிறேன். ஏனென்றால் உரிமைப் பிரச்சினையை உடனடியாகக் கொண்டு வரலாம். நேற்றைய தினம் அவர்கள் அறிவித்த விளக்கத்தில் போலீசார் கண்காணிப்பில் இருக்கிறார் என்று அவையை திசை திருப்பி விட்டிருக்கிறார். சென்னை மருத்துவ மனையில் சேர்க்கப்படவில்லை என்று சொன்னார்கள். இப்போது மின்சாரத்துறை அமைச்சர் அதை மறுத்

திருக்கிறார்கள். எனவே அமைச்சர் சௌந்தரராசன் அவர்கள் மீது நான் உரிமைப் பிரச்னை கொண்டு வருகிறேன்'' என்று உரிமைப் பிரச்சினையை எழுப்பினார்கள்.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் மீண்டும் விளக்கம் அளிக்கும் வகையில் ''தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் முதல்நாள் பேசும் போது மனநோய் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெறுகிறார் என்று கூறினார். அதற்கு விளக்கம் தருகின்ற வகையில்தான் மனநோய் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு அவர் உள்ளிருப்பு நோயாளியாக இல்லை. சிறையில் இருக்கிறார் வெளியிருப்பு நோயாளியாக சிகிச்சை பெற்று வருகிறார் என்று நேற்றையதினம் சொன்னேன்'' என்று கூறியுள்ளார்.

இதன் பிறகு இப்பிரச்சினை குறித்துப் பல கட்சித் தலைவர் களும் பல கருத்துக்களை எடுத்துக் கூறினர். நீதி விசாரணை வேண்டும். மருத்துவர்கள் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட வேண்டும் என்றெல்லாம் பல கருத்துக்கள் எடுத்துச் சொல்லப் பட்டன. ஆனால் இப்போதுள்ள உரிமை மீறல் பிரச்சினைக்கு அவை தேவையில்லை என்பதால் அந்தக் கருத்துக்களை நான் எடுத்துக் கூற தேவையில்லை என்று கருதுகிறேன்.

இப்போதுள்ள பிரச்சினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் பேரவைக்குக் கொடுத்த தகவல் தவறானது தானா, தவறானது என்றால், தவறு என்று தெரிந் திருந்தும், வேண்டுமென்றே அவையை திசை திருப்பும் எண்ணத் துடன் அது பேரவைக்குத் தெரிவிக்கப்பட்டதா என்பதுதான்.

''செபாஸ்டியன் மருத்துவ மனையில் இல்லை. போலீஸ் கண்காணிப்பில் இருக்கிறார்'', என்று முதல் நாள் கூறிய மாண்பு மிகு நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் மறுநாள் ''மன நோய் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு அவர் உள்ளிருப்பு நோயாளியாக இல்லை. சிறையில் இருக்கிறார். வெளியிருப்பு நோயாளியாக சிகிச்சை பெற்று வருகிறார்'' என்று விளக்கம் கூறியுள்ளார்.

மாண்புமிகு பேரவை முன்னவரும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும், அளித்த விளக்கத்திலிருந்து தெரி வது—திரு. செபாஸ்டியன் பாளையங்கோட்டை மருத்துவமனை யில், மாஜிஸ்ட்ரேட் உத்தரவின் பேரில், சேர்க்கப்பட்டு, சிகிச்சை அளிக்கப்பட்டார் என்றும் அப்போது அவர் நாங்குநேரி சப்-ஜெயிலில் வைக்கப்பட்டிருந்தார் என்றும், பாளையங்கோட்டை மருத்துவமனை மருத்துவர்களின் வேண்டுகோளுக்கிணங்க அவர் சென்னைக்குக் கொண்டுவரப்பட்டு, மத்திய சிறையில் வைக்கப் பட்டு, சென்னை மனநோய் மருத்துவ மனையில் சிகிச்சை அளிக் கப்பட்டு வருகிறார் என்பதுதான் ''திரு. செபாஸ்டியன்

1979 மார்ச் 26] *[பேரவைத் தலைவர்]*

சென்னையில் மத்திய சிறையில் இருக்கிறார், வெளியிருப்பு நோயாளியாக சிகிச்சை பெற்று வருகிறார் '' என்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரும் கூறியுள்ளார்.

ஆயினும் முதல் நாள் விளக்கம் அளிக்கையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது '' அவர் போலீஸ் கண்காணிப்பில் இருக்கிறார் '' என்பது.

[முற்பகல் 10-20.]

'' போலீஸ் கண்காணிப்பில் '' இருப்பதற்கும் ஜூடிசியல் கஸ்டடியில் (Judicial custody) வைக்கப்பட்டிருப்பதற்கும் வேறுபாடு உண்டு. ஜூடிசியல் கஸ்டடி என்பது மாஜிஸ்டிரேட் உத்தரவுப்படி சிறைச்சாலையில் இருப்பது, போலீஸ் கட்டுப்பாட்டிற்கு அப்பால் இருப்பது. அதாவது மாஜிஸ்ட்ரேட் உத்தரவின்றி அவரை எங்கும் கொண்டு செல்லக் கூடாது. எனவே, '' போலீஸ் கண்காணிப்பில் இருக்கிறார் '' என்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கூறியது அவ்வளவு சரியல்ல. ஆயினும், இரண்டிற்கும் உள்ள வேறுபாடு சட்ட நுணுக்கமானது. இந்த வேறுபாட்டை அறியாமல்தான் அமைச்சர் அவ்வாறு கூறினார் என்பது, மறுநாள் '' சிறையில் இருக்கிறார் '' என்று அவர் கூறியதிலிருந்து புலப்படும்.

அவையில் ஒரு பிரச்சினை முன்னறிவிப்பின்றி திடீரென்று எழுப்பப்பட்டால், அமைச்சர்கள் தங்கள் நினைவில் இருக்கும் தகவல்களை அவைக்கு அளிப்பதும், அவற்றில் தவறு இருக்குமானால் பின்னர் விளக்கம் அளிப்பதும் முறை. தாங்கள் அளிக்கும் தகவல் தவறு என்று அறிந்து, வேண்டுமென்றே அத்தவறான தகவலை அவைக்கு அளித்து, அவையைத் திசை திருப்ப முயன்றால் அது அவை உரிமை மீறிய குற்றத்திற்கு உட்படும். மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் தமக்குத் தவறு என்று தெரிந்திருந்தும் அந்தத் தகவலை அவைக்கு வேண்டுமென்றே அளித்தார் என்பதற்கான எந்தவித ஆதாரமும் காட்டப்படவில்லை.

எனவே, இதில் அவை உரிமை மீறல் எதுவும் எழவில்லை என்று தீர்ப்பளிக்கிறேன்.

* திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, தாங்கள் இவ்வளவு முயற்சி எடுத்துக் கொண்டு, இந்த உண்மைகளையெல்லாம் ஆராய்ந்து பார்த்து, எந்த இடத்தில் குறை இருந்ததோ, அதை மட்டும் விட்டுவிட்டு, மிச்சத்தைத் தாங்கள் வரிசைப்படுத்தி சொல்லியிருக்கிறீர்கள். அதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு அமைச்சர் இந்த அவைக்குத் தகவல் தருகின்ற முறையில் சிகிச்சை அளிக்கப்பட்டது என்று சொன்னால், அவர் உள்-நோயாளியாகச் சிகிச்சை பெற்றாரா, வெளிநோயாளியாகச் சிகிச்சை பெற்றாரா என்பது எழாது. மருத்துவ மனைக்கு

வேளியே, வெளி நோயாளியாக சிகிச்சை அளிக்கப்பட்டாலும், அப்படி சிகிச்சை அளிக்கப்பட்டது குறித்து முதல் நாளே தெரிவித்திருக்கவே டும்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தீர்ப்புக் கொடுத்து விட்டேன். மேலும்

திரு. க. அன்பழகன்: தாங்கள் வழங்கிய தீர்ப்பை ஏற்றுக் கொள்கிறேன். இந்தத் தீர்ப்பை வாசிக்கும்போது, தாங்கள் ஒன்றைத் தெரிவித்தீர்கள். நாளை அதேமாதிரி கருத்து, விவரம் வருகின்றபோது, முதல் நாள் இந்த அவையிலே உண்மைக்குப் புறம்பாக, மாறாகச் செய்தி கொடுக்கின்ற நிலைமை இருக்கக் கூடாது என்பதற்காக . . . இந்தக் கருத்தைச் சொல்ல

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவர் அவர்களே, தாங்கள் தீர்ப்பு அளித்து விட்டீர்கள் இந்த உரிமைப் பிரச்சினையின் மீது. அப்படி குறிப்பிட்ட ஒரு பிரச்சினையின் மீது சபாநாயகர் தீர்ப்பளித்துவிட்டப் பிறகு, அதன் மீது எப்படி பதில் சொல்லலாம்?

திரு. க. அன்பழகன்: என்னைப் பேச அனுமதிக்க வேண்டும் இதிலே தாங்கள் தீர்ப்பளித்து விட்டீர்கள். அந்தத் தீர்ப்பை நான் மறுக்கவில்லை. முதலிலே என்னைப் பேச அனுமதிக்க வேண்டும் .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேராசிரியர் அவர்கள் அனுபவம் மிக்கவர். வழிகாட்ட வேண்டும். தீர்ப்பளித்து விட்டப் பிறகு, எந்த விதியின் கீழ் பேச அனுமதிப்பது என்று இருக்கிறது?

திரு. க. அன்பழகன்: தங்களுடைய தீர்ப்பை ஏற்றுக்கொள்கிறேன். தீர்ப்பின் நோக்கத்திலே மாறுபாடில்லை. இந்த பிரச்னை உரிமைப் பிரச்னைக்கு வரவேண்டுமென்று சொல்லவில்லை. தாங்கள் சொல்லுகின்ற வாசகத்தில், தங்களுக்கு ஆலோசனை வழங்கிய தங்கள் உதவியாளர் அல்லது அதிகாரிகள் சட்ட நுணுக்கம் என்று சொல்லி, தாங்கள் தீர்ப்பளிக்கப்பட்ட அந்த வாசகத்தில் நாளைய தினம் இப்படிப்பட்ட குற்றம் நிகழாது பாதுகாக்க வேண்டும் என்ற வகையிலே, இதையும் இந்தத் தீர்ப்பிலே சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன். உண்மைக்கு மாறாக, புறம்பாக, முழு உண்மை என்று முதல் நாள் சொல்லிவிட்டு, பிறகு வெளி நோயாளியாக சிகிச்சை என்று இடம்பெறுவது விரும்பத்தக்கதல்ல. அப்படிப்பட்ட கருத்து இடம் பெற்றுவிட்டால், அது முழு உண்மை என்று இல்லாமல், பாதி உண்மை என்று சொல்வதும் ஒரு வகையிலே தவறு. இந்த அவையிலே அந்த நிலை ஏற்பட்டாலும் தவறு.

1979 மார்ச் 26]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க் கட்சித் துணைத் தலைவர் பேராசிரியர் அவர்கள் சட்டமன்றத்தில் நீண்ட அனுபவம் பெற்றவர்கள். அவர்கள் எழுப்புகின்ற பிரச்னைகள் நியாயமா, இல்லையா என்பது ஒருபுறம் இருக்க, பேரவைத் தலைவர் அவர்கள் எழுப்பிய உரிமைப் பிரச்னை மீது தனது தீர்ப்பை அளித்திருக்கிறார்கள். இந்தத் தீர்ப்பைப் பற்றி விமர்சிக்கவோ, விளக்கம் தரவோ, அல்லது மாற்றுக் கருத்துக்கள் சொல்லவோ, ஆலோசனை சொல்லுவதற்கோ வாய்ப்புக்கள் இருந்தாலும், நம்முடைய வரைமுறைகளுக்கு ஏற்றதாக இல்லை என்பதை தங்கள் மூலமாக அவருடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத்தலைவர் அவர்கள் பேசுவது பல உரிமைப் பிரச்சினைகள் இதைப்போல் இந்த மன்றத்திற்கு வரும்போது ஒரு முன்மாதிரியாக அமைந்துவிடக் கூடாது என்பதில் அவரும் அதிலே கவனமாக இருப்பார்கள் என்பதில் எனக்கு நம்பிக்கையுண்டு. அப்படி இருக்க தாங்கள் அளித்த தீர்ப்பின்பேரில் மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் மறுபடியும் எழுந்து விளக்கம் தருவது சரியான மரபும் ஆகாது, விதிகளுக்கும் உகந்தது அல்ல என்ற காரணத்தால் அவர்கள் அதை வற்புறுத்த வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்காலத்திலே இப்படிப்பட்ட பிரச்சினைகள் வரும்போது கொஞ்சம் உன்னிப்பாக முறையாகக் கவனம் செலுத்தி தீர்ப்புச் சொல்லவேண்டுமென்று சொன்ன அறிவுரையை ஏற்றுக் கொள்கிறேன். இந்தத் தீர்ப்பிலே இடம் பெற வேண்டுமென்ற வகையிலே குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. தீர்ப்புக் கூறிவிட்ட பிறகு அதைப் பற்றிப் பேசுவது முறையாகாது.

திரு. க. அன்பழகன் : நான் அறிவுரை சொல்லத் தகுதி பெற்றவன் என்ற எண்ணத்தில் பேசவில்லை. வேண்டுகோளாகத்தான் சொன்னேன். தலைவர் சொன்ன அந்தக் கருத்துக்கள் இடம் பெற்றுவிட்டால் போதுமானது.

(ஈ) உணவுத் துறை அமைச்சர் மீது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் 184-வது விதியின் கீழ் மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் மீது ஒரு உரிமைப் பிரச்னை கொடுத்திருக்கிறார்கள். அதை அவர் சுருக்கமாக எடுத்துக் கூறவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[1979 மார்ச் 26

திரு. அ. ரகுமான்கான் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டப் பேரவை 184-வது விதியின்கீழ் மாண்புமிகு உணவு அமைச்சர் எட்மண்ட் அவர்களுக்கு எதிராக உரிமை மீறல் பிரச்சினை இந்த அவையில் எழுப்புகிறேன்.

மூன்றாவது ஊதியக் குழு பரிந்துரையின்படி தங்களுக்கு ஊதிய உயர்வு வழங்க வேண்டுமென வலியுறுத்தி சிவில் சப்ளை கார்ப்பரேஷன் ஊழியர்கள் 16-3-1979 முதல் தொடர்ந்து உண்ணாவிரதம் இருந்து வருகிறார்கள். சிவில் சப்ளை ஊழியர்கள் உண்ணாவிரதப் போராட்டம் சம்பந்தமாக இந்தப் பேரவையில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் சிலர் 20-3-1979 அன்று ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்தார்கள். மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் எட்மண்ட் அவர்கள் அந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்குப் பதிலளித்தார்கள். "சிவில் சப்ளை ஊழியர்களின் நியாயமற்ற தன்மையை உறுப்பினர்கள் புரிந்து கொள்ளவேண்டும். மற்ற பொது நிறுவனங்களில் ஊழியர்களுக்குத் தரப்படும் சம்பள விகிதங்களைவிட சிவில் சப்ளை ஊழியர்களுக்குக் கூடுதலாகத் தரப்படுகிறது. மற்ற பொது நிறுவனங்களுக்கும் இந்த நிறுவனத்திற்கும் (சிவில் சப்ளை கார்ப்பரேஷன்) வித்தியாசம் இருக்கிறது. மற்ற நிறுவனங்கள் லாபத்தில் நடக்கின்றன. சர்க்கரைக் கட்டுப்பாடு கொண்டு வரப்பட்டதாலும், ஒப்பன் மார்க்கட்டில் அரிசி விலை இறங்கி விட்டதாலும் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனுக்கு மொத்தம் 19.13 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது" என்ற அமைச்சரின் இந்தப் பேச்சுக்கள் சபைக் குறிப்பில் இடம் பெற்றிருக்கிறது. 20-3-1979 மக்கள் குரல், 20-3-1979 மாலை முரசு, 21-3-1979 இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகைகளில் வந்திருக்கின்றன. அமைச்சர் சொல்லியிருக்கும் கருத்துக்கள் உண்மைக்குப் புறம்பானவை. சிவில் சப்ளை கார்ப்பரேஷன் ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு களங்கம் கற்பிக்கும் விதத்தில் வேண்டுமென்றே உள்நோக்கத்தோடு அமைச்சர் சபைக்குத் தவறான தகவலைக் கொடுத்திருக்கிறார். அதுமட்டுமல்லாது சபைக்கு இந்தப் பிரச்சினை சம்பந்தப்பட்ட முழு உண்மைகளைத் தராமல் வேண்டுமென்றே சபையை இருளில் ஆழ்த்தியிருக்கிறார்.

மற்ற பொது நிறுவனங்கள் இலாபத்தில் ஓடுகின்றன என்பது உண்மைக்குப் புறம்பானது. சிவில் சப்ளை கார்ப்பரேஷன் மட்டுமல்லாது அரசின் பொது துறையைச் சேர்ந்த 18 நிறுவனங்கள் நஷ்டத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பி.டி.சி., டான்சி, அக்ரோ இண்டஸ்ட்ரிஸ் கார்ப்பரேஷன், பிஷரிஸ் கார்ப்பரேஷன் போன்ற 18 நிறுவனங்கள் நஷ்டத்தில் நடக்கின்றன. அதுமட்டுமல்ல. 9-3-1979 இந்து பத்திரிகையில் தொழில் துறைச் செயலாளர் ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிறார். அந்த அறிக்கையிலே 18 நிறுவனங்கள் நஷ்டத்தில் நடக்கின்றன என்பதைத் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

சிவில் சப்ளை ஊழியர்கள் மற்றப் பொதுத்துறை ஊழியர்களை விட அதிக ஊதியம் வாங்குகிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொல்லிய தகவல்கள் உண்மைக்குப் புறம்பானது. மற்றப் பொது நிறுவனங்களைப் போல இங்கே உள்ள ஊழியர்களுக்குச் சம்பள விகிதம் வேண்டுமென்பதுதான் சிவில் சப்ளை கார்ப்பரேஷன் ஊழியர்களின் கோரிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னுடைய கவனம் வேறு இடத்தில் இருக்கிறது என்று உறுப்பினர் அவர்கள் பேசிக் கொண்டே இருக்கக் கூடாது. சுருக்கமாக உரிமை மீறல் பிரச்சினை என்ன என்பதை மட்டும் கூறி முடிக்கவேண்டும்.

திரு. அ. ரகுமான்கான்: சிவில் சப்ளை கார்ப்பரேஷனில் ஒரு சூபபானடென்டுக்குச் சம்பளம் 650 ரூபாய் என்று அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் வேறு இலாகாகளிலிருந்து டெப்புடேஷனில் போனவர்களுக்குத்தான் அந்த சம்பளம் தரப்படுகிறது. சிவில் சப்ளை கார்ப்பரேஷனிலேயே நேரடியாக வேலை செய்து கொண்டிருக்கக்கூடிய சூப்பிரின்டென்டுக்கு ரூ. 600.50பை. தான் சம்பளம் என்பதுதான் உண்மையான புள்ளிவிவரம். இந்தத் தவறான தகவலை அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். சிவில்சப்ளை கார்ப்பரேஷன் நஷ்டத்தில் இயங்குவதற்கு அரசு தரப்புதான் காரணம் என்ற உண்மையை — பேராசிரியர் சொன்னதுபோல் முழுமையான தகவலை அமைச்சர் சபைக்கு தெரிவிக்கவில்லை. 'சப்ரஷன் ஆப் மெட்டீரியல் ஃபாக்ட்ஸ்' அதுவும் உரிமை மீறல் பிரச்சினையின் கீழ்தான் வரும்.

* * * *

(முற்பகல் 10-30)

தனி நபர் மூலமாக.....................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உரிமை மீறல் பிரச்சினை பற்றி மட்டும் சொல்லுங்கள். என்ன எழுதி வைத்திருக்கிறீர்களோ அதை மட்டும் படியுங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் கொடுத்த உரிமை மீறல் பிரச்சினை வேறு. அதைமட்டும் சொல்லி முடியுங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : அமைச்சர் சபைக்குக் கொடுத்த தகவல் நட்டம் ஏற்பட்டிருக்கிறதற்குக் காரணம் எது என்று சொன்னார், காரணம் உண்மையிலேயே அதுவல்ல. வெளி

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

யிலே அதிகமாகக் கொடுத்து வாங்கியிருக்கிறார்கள், அதனாலே மிகப் பெரிய நட்டம் ஏற்பட்டிருக்கிறது. மிகப் பெரிய ஊழலே இதிலே ஏற்பட்டிருக்கிறது....................

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவர் அவர்களே, என்மீது உரிமைப் பிரச்சினை கொண்டுவருவதற்கு உறுப்பினருக்கு உரிமை இருக்கிறது. ஆனால் என்ன உரிமைப் பிரச்சினையைத் தங்களிடம் அளித்தாரோ அதைத்தான் பேச வேண்டுமே தவிர எதையெல்லாமோ பேசிக்கொண்டு இருக்கக் கூடாது என்பது அவருக்குத் தெரியும், அவரும் ஒரு வழக்கறிஞர், ஆகவே அவருக்கும் தெரியும். ஆனால் அவர்கள் இடத்தை விட்டு வேறு எங்கெல்லாமோ சென்று சுற்றிக் கொண்டிருக்கிறார்கள். நான் அவரை இந்த மன்றத்திலே கேட்டுக்கொள்வது, அவர் அதை நிரூபிப்பதற்குப் பொறுப்பு ஏற்றுக்கொள்கிறாரா, அப்படி அவர் நிரூபிக்கவில்லையென்றால் என்ன தண்டனையை ஏற்றுக்கொள்ள இருக்கிறார் என்பதைச் சொல்லவேண்டும்.

திரு. அ. ரகுமான்கான்: இந்த அவையிலே இன்றைய தினம் பொறுப்பு ஏற்றுக்கொள்வார்களா? நிரூபிக்க முடியுமா என்று கேட்டுக்கொண்டிருக்கிற நிலை இருக்கிறது. நான் பொறுப்பு ஏற்றுக்கொள்கிறேன்..............

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நாளைக்கு விரிவான விளக்கம் தருவதாக இருந்தால்

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : எதற்காக எல்லாம் விளக்கம் என்று தெரியவில்லை. உரிமை மீறல் பிரச்சினை என்ற அடிப்படையிலே பல கருத்துக்களை இங்கே சொல்லியிருக்கிறார்கள். இந்த அவையிலே நான் எடுத்துச் சொன்னவைகள் தவறாக இருக்குமானால் அதைப்பற்றி உரிமைப் பிரச்சினை இருக்கிறது என்றால் அவர்கள் அதைப்பற்றித்தான் பேச வேண்டும். வேறு நிர்வாகப் பிரச்சினைகள் பற்றியெல்லாம் பேசவேண்டுமென்றால் இந்த சட்டமன்றத்திலே அவர் பேசுவதற்கு வேறு நேரம் இருக்கிறது, அப்போது விளக்கிப் பேசுவதற்கு உரிமை அவருக்கு இருக்கிறது..................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் கொடுத்தது இங்கே இருக்கிறது, நான் அதை வாசிக்க முடியும். அந்தப் பிரச்சினைக்குள் தான் பேசவேண்டும். என்னிடம் தாங்கள் சொன்னது, தாங்கள் அதைப் படித்துவிட்டு உட்கார்ந்து விடுகிறேன் என்பதுதான். தாங்கள் இப்போது எங்கு எங்கேயோ செல்வது உரிமைப் பிரிச்சினைக்குள் வராது.

1979 மார்ச் 26]

திரு. அ. ரகுமான்கான் : சிவில் சப்ளை கார்ப்பரேஷன் ஊழியர்கள் நடத்துகிற போராட்டம்பற்றிச் சொல்கிறபோது நட்டம் ஏற்பட்டது தான் காரணம் என்று சொன்னார்கள், ஆனால் உண்மைக்காரணம் அதுவல்ல.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவர் அவர்களே, நாளைய தினம் நான் பதில் கொடுப்பதற்கு முன்னாலே ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். ஏதாவது இந்த மன்றத்திலே சொல்வது பத்திரிகையிலே வரவேண்டுமென்ற அடிப்படையிலே பேசுவது என்பதை சில உறுப்பினர்கள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.................

திரு. சி. ஆறுமுகம்: மாண்புமிகு அமைச்சர் இந்த அவையிலே அந்த விளம்பரத்தைத் தேடியவர் என்பதை மறந்துவிடக் கூடாது..................

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : இந்த அவையிலே நான் எதை எதை எல்லாம் சொன்னேன் என்பது எல்லாம் அவைக் குறிப்பிலே இருக்கிறது. நான் சொன்னதை எப்போதும் நான் மறுக்கமாட்டேன் என்பதையும், நான் எந்த ஆதாரத்தோடு அப்படிச் சொன்னேன் என்பதையும் விளக்கிச் சொல்வதற்குத் தயாராக இருக்கிறேன். நான், சொல்ல விரும்புவது அவர்கள் உரிமை மீறல் பிரச்சினை கொண்டுவந்திருக்கிறார்கள். அது சம்பந்தப்படாத முறையிலே வெளிமாநிலங்களிலிருந்து வாங்கப்பட்டிருக்கிறது, கூடுதல் விலைக்கு வாங்கப்பட்டிருக்கிறது என்று எல்லாம் சொல்வது இங்கே பொருத்தமும் இல்லை, தேவையும் இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தாங்கள் ஒரு உரிமைப் பிரச்சினையை இந்த மன்றத்தின் விவாதத்திற்கு வருவதற்கு அனுமதித்து இருக்கிறீர்கள். ஆனால் இப்போது நடந்த இந்த விவாதத்திலிருந்து உரிமைப் பிரச்சினை என்ன என்பதே தெரியவில்லை.

அந்த உரிமைப்பிரச்சினை என்ன என்பதைப்பற்றியும், மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் உரிமைப் பிரச்னையைப் பற்றித்தான் பேசினாரா என்பதும் எங்களுக்குத் தெரியவில்லை. உரிமைப் பிரச்னை என்னவென்பதைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : நான் விளக்கம் கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விளக்கம் கொடுக்க அனுமதி கிடையாது, உரிமை மீறல் குறித்த பிரச்னையைப் படித்து விட்டீர்கள். இனி விளக்கம் சொல்வதற்கு அனுமதி இல்லை.

அவர் பேசியதை அத்தனையையும் குறிப்பேட்டிலிருந்து பார்க்கப் போகிறேன். பார்த்து விட்டு, அவை உரிமை மீறல் பிரச்னை குறித்து அதற்கு உட்பட்டுப் பேசியதைத்தான் குறிப்பேட்டில் வைக்கப் போகிறேன்.

''மற்ற பொது நிறுவனங்களில் ஊழியர்களுக்கு தரப்படும் ஊதிய விகிதங்களை விட சிவில் சப்ளை ஊழியர்களுக்கு கூடுதலாக தரப்படுகிறது. மற்ற பொது நிறுவனங்களுக்கும் இந்த நிறுவனத்திற்கும் வித்தியாசம் இருக்கிறது. மற்ற நிறுவனங்கள் லாபத்தில் நடக்கிறது. சிவில் சப்ளை ஊழியர்களின் நியாயமற்ற தன்மையை உறுப்பினர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இவைபோன்ற கருத்துக்களை அமைச்சர் வெளியிட்டு இருக்கிறார். அமைச்சர் மேலே கண்டவாறு சொல்லியிருப்பது உண்மைக்கு புறம்பானது. தவறான தகவலாகும்''.

இதுதான் கருத்து. இதைவிட்டு அவர்களுக்கு இவ்வளவு 'சம்பளம்', இவர்களுக்கு இவ்வளவு சம்பளம் இல்லை என்றெல்லாம் கூறுவது சரியல்ல.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, அதிலேயும் நான் ஒன்றைக் கூற விரும்புகிறேன். மற்ற நிறுவனங்கள் எவ்வளவோ இருக்கின்றன. தமிழ்நாட்டில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட நிறுவனங்கள் இருக்கின்றன. ஆகையினாலே, சில நஷ்டத்தில் நடைபெறும் நிறுவனங்களும் நம் நாட்டில் இல்லாமல் இல்லை. சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன்னில் எவ்வளவு சம்பளம் வருகிறதோ அதைவிடக் குறைவாகச் சம்பளம் கிடைக்கும் நிறுவனங்களும் நாட்டிலே இருக்கின்றன. அப்படியிருக்கும்போது எப்படி இது உரிமைப் பிரச்னையின்கீழ் வருகிறது என்பது தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் ஏற்கனவே அறையிலேயே நன்கு பரிசீலித்து, இதை அனுமதிப்பதா வேண்டாமா என்ற நிலையில் இருந்தபொழுது, இன்றைக்கு எல்லா உரிமை மீறல் பிரச்னைகள் சம்பந்தமாக வருகிறபொழுது, இதை படித்து விட்டு மட்டும் அமருங்கள், அமைச்சர் இன்றைக்கு விளக்கம் தர முடியவில்லை என்றாலும் நாளைக்கு தரலாம் என்று சொல்லிவிட்டுத்தான் அவருக்கு நான் அனுமதி கொடுத்தேன்.

அவர் படித்து விட்டு அமராமல், பல விவரங்களைச் சொன்னதையொட்டி எத்தனையோ விவரங்களை எடுத்துச் சொல்வது என்றால் எடுத்துச் சொல்லலாம், ஆனால் அவைகளுக்கு அவையிலே நேரம் இல்லை—அவர் சொன்னவைகளையெல்லாம் எடுத்துப் பார்த்து, உரிமை மீறல் பிரச்னைக்குச் சம்பந்தப்பட்ட

வைகளை மட்டும் வைத்து, பிறகு தீர்ப்பு அளிக்கிறேன். நாளைக்கு அமைச்சரவர்கள் பதில் அளிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவரவர்களே, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சரவர்கள் பதில் அளித்துக் கொண்டிருந்த பொழுது சில உறுப்பினர்கள் பத்திரிகைகளில் விளம்பரம் பெறுவதற்காகவே தேவை இல்லாத விஷயங்களைச் சொல்லி விளம்பரம் தேடுகிறார்கள் என்று யாரையும் குறிப்பிடாமல் சொல்வது அவ்வளவு நல்லது அல்ல. ஆகவே, அதைச் சபைக் குறிப்பிலிருந்து நீக்கலாமா என்று கேட்க விரும்புகிறேன். சில உறுப்பினர்கள் என்று சொல்லாமல், யாரையாவது குறிப்பிட்டு அமைச்சரவர்கள் சொல்லலாம். சில உறுப்பினர்கள் பத்திரிகைகளிலே விளம்பரங்கள் தேடுவதற்காகத் தேவையில்லாத விஷயங்களைச் சொல்லி என்று சொல்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படிச் சொன்னால் என்ன தவறு? அதை ஏன் தவறான பொருளில் எடுத்துக் கொள்ள வேண்டும்? ஒவ்வொரு உறுப்பினரும், தொகுதிக்காக மட்டுமல்ல. தமிழகம் முழுவதற்குமாகப் பாடுபடுகிறோம் என்ற அளவில் விளம்பரம் தேடுவதில் தவறு இல்லை.

திரு. எம். ஏ. லத்தீப்: மக்கள் தெரிந்து கொள்ள வேண்டுமென்று சொல்வது ஒன்று. விளம்பரத்திற்காகவே கொண்டு வருவது ஒன்று. அமைச்சரவர்கள் அந்த வகையிலே சொல்லியிருப்பார்களேயானால்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: லத்தீப் அவர்களே, அதில் தப்பு ஒன்றுமில்லை.

(4) தகவல்கள் கோரல் (தொடர்ச்சி)

(ஆ) முன்னாள் கல்வி அமைச்சர் திரு நெடுஞ்செழியன் மீது எழுப்பப்பட்ட பிரச்சினை குறித்து.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, தாங்கள் மிகச் சிரமப்பட்டு உரிமைப் பிரச்னைகளின் மீது இங்கே தீர்ப்பு அளித்திருக்கிறீர்கள். ஏற்கனவே முன்னாள் கல்வியமைச்சர் நெடுஞ்செழியன் அவர்கள் மீது உரிமைப் பிரச்னை எழுப்பப்பட்டு, விவாதிக்கப்பட்டு, அதற்குத் தீர்ப்பு அளிப்பதாகவும் கூறியிருக்கிறீர்கள். இது வரையிலும் அந்தத் தீர்ப்பு வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கனவே எதிர்க்கட்சித் தலைவரவர்கள் என்னிடத்தில் கேட்டார்கள். நாவலர் அவர்களிடமிருந்து பதில் வந்து விட்டது.

திரு. மு. கருணாநிதி; நான் கேட்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, ஜேம்ஸ் அவர்கள் தந்திருக்கிறார்கள். பத்திரிகையின்மீதும் தந்திருப்பதால் பத்திரிகையிடம் விளக்கம் கேட்டு அனுப்பப்பட்டிருக்கிறது, தகுந்த பதில் இன்னும் வரவில்லை. வந்ததும் கட்டாயம் எடுத்துக் கொள்ளப்படும்.

[முற்பகல் 10-40]

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 24-3-1979 அன்று நான் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரவர்கள் மீது பேரவையின் 184-வது விதியின் கீழ் ஒரு உரிமை மீறல் பிரச்னை கொடுத்திருக்கிறேன். அதை நான் படிக்கட்டுமா? அல்லது உங்களுடைய கருத்தைச் சொல் கிறீர்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளைக்கு எடுத்துக் கொள்கிறேன். அடுத்து, ஒத்தி வைப்புத் தீர்மானம்......

திரு. எம். ஏ. லத்தீப்: வேறு பிரச்னைப் பற்றி நான் கொடுத்திருக்கிறேன்..........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து தாங்கள் என்னுடைய அறைக்கு வந்து கேட்பீர்களானால் நான் பதில் சொல்கிறேன்.

(5) ஒத்திவைப்புத் தீர்மானம்.

என். ஜி. ஓ -வினரின் உண்ணாவிரதம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழகம் முழுவதும் அரசிதழ் பதிவில்லா அரசு ஊழியர்கள் காலவரையற்ற உண்ணாவிரதம் மேற் கொண்டுள்ளதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டு திரு. ஜே. ஜேம்ஸ், திரு. மு. அம்பிகாபதி, திரு. எஸ். சிவசாமி, திரு. கூத்தக்குடி எஸ். சண்முகம், திரு. சேலம் மு. ஆறுமுகம், திரு. சி. கோவிந்தராசன், திரு. ஏ. ஆர். மாரிமுத்து ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர்.

திரு. சி. ஆறுமுகம்: நாங்களும் கொடுத்திருக்கிறோம். நாங்கள்தான் முதலில் கொடுத்தோம்.

திரு. கெ. சொக்கலிங்கம்: நான், 19-ந் தேதியே கொடுத்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதலிலே கொடுத்தது மறுக்கப்பட்டது.

1979 மார்ச் 26]

திரு. சி. ஆறுமுகம்: உங்களுடைய தீர்ப்புக்குள்ளே நான் போகவில்லை. ஆனால், பதில் எங்களுக்கு வந்து சேரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுடைய பெயர்களையும் சேர்த்துக் கொள்கிறேன். திருவாளர், கனம், மாண்புமிகு உறுப்பினர் மதுராந்தகம் ஆறுமுகம் அவர்களும், திரு. சொக்கலிங்கம் அவர்களும் இதே பிரச்னை குறித்து ஒத்திவைப்புத் தீர்மானம் தந்துள்ளார்கள்.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவரர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஆறுமுகத்திற்கு மட்டும் கனம், மற்றொரு உறுப்பினருக்கு கனம் இல்லையா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னைவிட சிறிய வயதானவர்களை எப்படியும் அழைக்கலாம். ஆனால், அவர் கோபித்துக் கொள்வார்.

திரு. துரை முத்துசாமி: நானும் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. துரை முத்துசாமியும் கொடுத்திருக்கிறார். இது எப்படி அவசர முக்கியமானது என்பதை சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, நீண்ட நாட்களாக என்.ஜி.ஓ.-க்கள் பிரச்னை தீர்க்கப்படாமல் இருந்து கொண்டேயிருக்கிறது. மூன்றாவது சம்பள ஆணைக் குழுவின் பரிந்துரைகளால் ஏற்பட்டுள்ள அனாமலிகளைத் தீர்க்க வேண்டும்; ஊதியக் குழுவின் பரிந்துரைப்படி ஓய்வு பெறும் வயதை 58ஆக உயர்த்த வேண்டும் போன்ற ஏறத்தாழ 14 கோரிக்கைகளை முன்வைத்து என்.ஜி.ஓ.-க்கள் கடந்த ஒரு வார காலமாக உண்ணாவிரதம் இருந்து கொண்டேயிருக்கிறார்கள். இன்று முதல் அதாவது, 26-3-1979 முதல் காலவரையற்ற உண்ணாவிரதம் இருக்க முடிவு செய்து, உண்ணாவிரதத்தை ஆரம்பித்திருக்கிறார்கள். என்.ஜி.ஓ.-க்கள் பிரச்னை இந்த அரசால் தீர்க்கப்பட வேண்டுமென்று பல முறை அவர்கள் கோரிக்கை விட்டும் இந்த அரசு அதில் எள்ளளவும் கவனம் செலுத்தாமல் அவர்கள் ஏதோ இந்த நாட்டுப் பிரஜைகள் அல்ல என்ற எண்ணத்தோடு இந்த அரசு பாராமுகமாக இருப்பது நல்லதல்ல என்பதை நான் நிச்சயமாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

என்.ஜி.ஓ.-க்கள்இந்த அரசுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவர்கள் என்பதை நான் கூறாமல், அரசே நன்றாக உணரும். ஆக, அவர்கள் பிரச்னையை உடனடியாகத் தீர்க்க வேண்டும். அவர்கள்

பிரச்னை என்ன என்பதை இந்த அரசு அறிந்து கொள்ளவில்லை யென்றால், இந்தத் தீர்மானத்தை விவாதிக்கும்போது, உண்மை யிலே அதை அறிந்து கொள்ள அரசுக்கு வாய்ப்பிருக்கும். ஆகவே, என்.ஜி.ஓ.-க்கள் பிரச்னையைத் தீர்க்க வேண்டுமென்பதற்காக, இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்கவேண்டு மென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் என்.ஜி.ஓ. யூனி யனைச் சேர்ந்தவர்கள் 21-ம் தேதியிலிருந்து 25-ம் தேதி வரை தொடர் உண்ணாவிரதம் மேற்கொண்டிருந்தார்கள். 26-ம் தேதி அதாவது இன்று முதல் கால வரையறையற்ற உண்ணா விரதம் அண்ணா சதுக்கத்தின் அருகில் துவங்கியிருக்கிறார்கள். அண்ணா சதுக்கத்தின் அருகில் என்.ஜி.ஓ.-வினர் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். ஆசிரியர்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். சிவில் சப்ளை கார்ப்பொரேஷன் ஊழியர்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். பொதுப் பணித் துறையினர் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். இப்படி தொடர்ந்து உண்ணாவிரதம் அங்கே நடைபெறுகிறது. இதனால் அண்ணா சதுக்கத்தின் அருகில் நிரந் தரமாக உண்ணாவிரத கொட்டகை அமைத்துவிட வேண்டிய நிர்ப்பந்தம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருக்கிறது.

என்.ஜி.ஓ.-வினர் கேட்டிருப்பது—3-வது ஆணைக் குழுவின் பரிந்துரைகள் முறைப்படுத்தப்பட வேண்டும். கிராமப் புறங் களில் பணியாற்றுகிறவர்களுக்கு வசதி வேண்டும். மருந்துவப் படி கொடுக்கப்பட வேண்டும். இறந்தவர்களுக்கு கொடுக்கப் படுவதாக சொல்லப்படுகிற 10,000 ரூபாயை, உரிய வயதில் ரிடையர் ஆகிறவர்களுக்கு அளிக்கப்பட வேண்டும். இது போல 14 கோரிக்கைகள் எழுப்பப்பட்டு தமிழ்நாடு முழுவதும் போராட் டங்களும் உண்ணாவிரதங்களும் நடைபெறுகின்றன. அரசாங் கத்தைப் பொறுத்த வரையில் அது எந்தப் போராட்டமாக இருந்தாலும் சரி, என்.ஜி.ஓ.-வினர் போராட்டமாக இருந் தாலும் சரி, வழக்கறிஞர்கள் போராட்டமாக இருந்தாலும் சரி, சிவில் சப்ளை கார்ப்பொரேஷன் ஊழியர்கள் போராட்டமாக இருந்தாலும் சரி, அது வளர்ந்து, வேறொன்றி நன்றாக முத்திய பின்னால்தான் தலையிட வேண்டும் என்று நினைக்கிறார்கள்.

மூன்றாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகள் வந்த பிறகு என்.ஜி.ஓ.-வினர் ஏற்றுக் கொண்டு திருப்தி அடையத்தானே வேண்டும்? ஆனால் அதற்குப் பதிலாக அவர்கள் அந்தப் பரிந்துரைகளை சீரமைக்க வேண்டும் என்கிறார்கள். தமிழ் நாடு முழுவதிலும் பணி புரிகின்ற அத்தனை என்.ஜி.ஓ.-வினரும் இதை கேட்கிறார்கள். டி.எம்.எஸ். ஆபீஸ் ஊழியர்கள், கும்பகோணத்தில் உள்ள என்.ஜி.ஓ.-வினர், சிவில் சப்ளை கார்ப்பொரேஷன் ஊழியர்கள், பொதுப் பணித் துறை ஊழியர் கள், ஆசிரியர்கள், இங்குப் பணி புரியும் ஊழியர்களுக்குக் கூட இந்த ஊதியக் குழுவின் பரிந்துரைகள் திருப்தியை அளிக்கவில்லை

1979 மார்ச் 26] [திரு. மு. அம்பிகாபதி]

என்பதை இந்த அரசாங்கம் எற்றுக் கொள்ள வேண்டும். ஆக என்.ஜி.ஓ.-வினர் கோரிக்கைகள் சம்பந்தமாக முறையாக விவாதத்தை நடத்த இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சேலம் மு. ஆறுமுகம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் நம்முடைய தமிழக அரசின் நிர்வாக இயந்திரத்தினுடைய ஒரு அம்சமாக இருக்கக் கூடிய என்.ஜி.ஓ. வினர் அவர்களது 14 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த சிலநாட்களாக தொடர் உண்ணாவிரதம் இருந்து வருகிறார்கள். இன்று முதல் காலவரையற்ற உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருக்கிறார்கள். நம்முடைய அரசினுடைய நிர்வாக இயந்திரமானது செம்மையாக செயல்பட வேண்டுமானால், இம் மாதிரி அடிக்கடி இந்த இயந்திரத்தில் பழுது ஏற்படாமல் பார்த்துக் கொள்வது அரசாங்கத்தினுடைய பொறுப்பு ஆகும்.

ஆனால் இன்றைய தினம் தமிழகத்தில் எங்கு பார்த்தாலும் கடந்த ஒரு மாத காலமாக உண்ணாவிரதம், உண்ணாவிரதம் என்ற சொல்லே காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலை ஏன் வந்தது என்பதை அரசாங்கம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நம்முடைய அரசாங்கம் ஒரு பிரச்னை தலையெடுக்கிறது என்று கருதினால் அதை ஒழித்துக் கட்டக் கூடிய வேலைகளில் வேகத்தை காட்டுவதை விட, அந்தப் பிரச்னையை தீர்வு காண்பதற்கான வகைகளை மேற்கொள்ள வேண்டும் என்பது என்னுடைய பணிவான கருத்தாகும்.

தமிழகத்தில் இருக்கக்கூடிய என்.ஜி.ஓ.-வினர் 3-வது ஊதியக் குழுவின் பரிந்துரைகளில் ஏற்பட்டுள்ள சில முரண்பாடுகளை களைய வேண்டும் என்றும், ஊதிய குழுவின் பரிந்துரைகளின்படி அரசு ஊழியர்களின் ஓய்வு வயது வரம்பை 58 ஆக உயர்த்த வேண்டும் என்றும், தமிழகம் முழுவதிலும் உள்ள அரசு ஊழியர் களுக்கு ஊதியம் ஊதிய குழுவின் பரிந்துரைகளின்படி உடனடியாக தரப்பட வேண்டும் என்றும், பவானி சாகர் பள்ளியில் முதல்வரின் தகாத செயல்களில் இருந்து.....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சுருக்கமாக முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. சேலம் மு. ஆறுமுகம்: இன்னும் பிற கோரிக்கைகளை அவர்கள் முன் வைத்து இன்றைய தினம் நாடு தழுவிய ஒரு போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இம்மாதிரியான நாடு தழுவிய போராட்டங்கள் நடைபெறுவதோ. தொடர் உண்ணாவிரதங்கள் துவங்கப் பெறுவதோ கொந்தளிப்பான நிலைமை நாட்டிலே உருவாகிக் கொண்டிருப்பதோ நல்ல உத்தேசமான காரியங்கள் அல்ல என்பதை பணிவாக தெரிவித்துக் கொண்டு இன்னும் பல பிரச்னைகளைப் பற்றி விவரமாகவும்,

[திரு. சேலம் மு. ஆறுமுகம்] [1979 மார்ச் 26

விளக்கமாகவும் விவாதிக்க இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 10-50]

திரு. சி. கோவிந்தராசன்: துணைத் தலைவர் அவர்களே, மாநில அரசு ஊழியர்கள் இன்று முதல் கால வரையற்ற உண்ணா விரதத்தை தொடங்க இருக்கிறார்கள். நேற்று வரையில் அவர்கள் மாவட்ட தலைநகரங்களில் தொடர் உண்ணாவிரதம் நடத்தினார்கள். அவர்களுடைய குறைகளில் முக்கியமானவை ஏற்கனவே அறிவிக்கப்பட்ட பே கமிஷனில் உள்ள அனாமலிஸ் போக்கப்படவேண்டும். அந்த அனாமலிஸ் என்ன வென்றால், உதாரணத்திற்கு இரண்டை கூறுகிறேன்—ஏற்கனவே அவர்கள் வாங்கிய சம்பளத்தை விட 6 ரூ. 11 ரூபாய் குறைந்த நிலை இருக்கிறது. சீனியர்களை விட ஜூனியர்கள் அதிகமாக சம்பளம் வாங்குகிறார்கள். இப்படிப்பட்ட மோசமான அனாமலிஸ் அங்கே இருக்கிறது. அதை பரிசீலிக்க ஒரு குழு போட வேண்டும் என்று அவர்கள் கூறுகிறார்கள். அது மட்டுமல்ல, டி.ஏ.-வைப் பொறுத்த வரையில் பல மாநிலங்களில் மத்திய அரசு பஞ்சப்படி விகிதங்கள் வழங்கப்படுகிறது. நம்முடைய மாநிலத்தில் மத்திய அரசு பஞ்சப்படி வழங்கப்படாதது மட்டுமல்ல ஊதியக்குழு பரிந்துரைக்குப் பிறகு விலைவாசிப் புள்ளி 8 புள்ளி உயர்ந்து இருக்கிறது. அதற்கும் ஒன்றும் கொடுக்கவில்லை. இதனால் ஏற்கனவே கொடுத்து வந்த பஞ்சப்படி கூட கிடைக்காத நிலை இருக்கிறது. மற்றொரு முக்கியமான பிரச்னை, 303 பவானிசாகரில் பயிற்சி பெற்றவர்கள் அங்கே பிரின்சிபால் மீது குற்றச்சாட்டு காட்டி, அது முதலமைச்சர் வரை வந்தது, அவர்களை எல்லாம் ப்ரபேஷன் டிக்ளேர் செய்யாமல், வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். இது வரை ரெகுலரைஸ் செய்யவில்லை. மற்றும் உள்ள கோரிக்கைகள் பற்றி எனக்கு முன்னால் பேசியவர்கள் சொன்னார்கள்.

கடந்த ஆண்டு இப்படிப்பட்ட கோரிக்கைகளை வைத்து அரசு ஊழியர்கள் ஒரு வேலை நிறுத்தம் செய்தார்கள். அதனால் அரசு யந்திரமே ஸ்தம்பித்து விட்டது. இப்போது தொடர் உண்ணாவிரதம் இருந்தவர்கள், கால வரையற்ற உண்ணா விரதம் என்கிற அளவிற்கு சென்று இருக்கிறார்கள். அடுத்த நடவடிக்கை வேலை நிறுத்தம் தான் அவர்கள் செய்ய வேண்டியிருக்கும். வேறு வழியில்லை. அப்படி வந்து விட்டால் அவர்கள் மீது குற்றம் சாட்டுவீர்கள். கௌரவப் பிரச்னை பிறகு வரும். ஆகவே, அப்படி பிரச்னைகளை வளர்த்துக் கொண்டு போகாமல், அவர்கள் கோருகிற பிரச்னைகளை ஆராய்ந்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். கடந்த ஆண்டு அவர்களின் வேலை நிறுத்தத்தின் போது அவர்களுக்கு பல ஸ்தாபனங்கள் இருந்ததால், அவைகளை நம்பி அந்த

TRUTH ALONE TRIUMPHS

1979 மார்ச் 26] [திரு. சி. கோவிந்தராசன்]

வேலை நிறுத்தத்தை உடைத்து விடலாம் என்று நினைத்தீர்கள். அந்தக் கணக்கு சரியாக இல்லை. தப்புக் கணக்காகப் போய்விட்டது. இந்த ஆண்டு என்ன செய்திருக்கிறீர்கள் என்றால், அரசாங்கத்தின் ஊக்கம் கொடுத்து வேறு ஒரு போட்டி ஸ்தாபனம் ஆரம்பிக்கப்பட்டு இருக்கிறது. அதை நம்பி காலம் கடத்தலாம் என்றும், போராட்டத்தை உடைக்கலாம் என்றும் தப்புக் கணக்குப் போட வேண்டாம் என்பதை எடுத்துச் சொல்லி வேலை நிறுத்தம் வரை செல்வதற்கு இந்தப் பிரச்னையை விடாமல், இந்தப் பிரச்னையை தீர்ப்பதற்கு இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து இது குறித்து விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. ஏ. ஆர். மாரிமுத்து: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, என்.ஜி. ஓ.-க்கள் கடந்த பல நாட்களாக தொடர் உண்ணாவிரதம் இருந்து இன்று முதல் சாகும் வரையில் உண்ணாவிரதம் இருக்கபோகிறோம் என்று அறிவித்து இருக்கிறார்கள். அவர்களது கோரிக்கைகளில் சிலது நியாயமாக இருப்பதை அரசு உணர்ந்து கொள்ள வேண்டும். ஊதியக்குழுவின் பரிந்துரைகளில் உள்ள சில குறைபாடுகளை நீக்கத்தான் அவர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டு இருக்கிறார்கள். அதற்கு அரசு எப்படி ஆட்சேபணை தெரிவிக்கிறது என்பதை எங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. அது குறித்து இங்கே பலதரப்பினர் எடுத்துச்சொல்லி இருக்கிறார்கள். அந்த வேறுபாடுகளைத் தீர்ப்பது அவசியம் என்பதை நான் வலியுறுத்திச்சொல்ல விரும்புகிறேன். விலைவாசி ஏற்றத்தால் ஏறியிருக்கும் புள்ளி அளவிற்கு அவர்களுக்கு அகவிலைப்படி கொடுக்கப்படவில்லை. இன்னும் அந்த கட்டாய சேமிப்புத் தொகை கொடுக்கப்படவில்லை என்று சொல்கிறார்கள். மத்திய அரசு அதை திருப்பி வழங்கிவிடலாம் என்று சொல்லியிருக்கிறது. அப்படியிருந்தும் வழங்கப்படவில்லை. தற்காலிக ஊழியர்கள், வேலையிலிருந்து நீக்கப்பட்டவர்கள், 40,000 பேர்கள் எம்.பி.எஸ்.சி. தேர்வு எழுதி செலக்ட் ஆனபிறகும் வேலை கொடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். அவர்கள் இந்தக் கோரிக்கைகளை வைத்து போராட்டம் என்று ஆரம்பித்து விட்டார்கள். அதை நீடித்து விட்டுக்கொண்டேபோனால் கடைசியில் அதைப்பற்றி சிந்திப்பது கஸ்டமாக இருக்கும். ஆரம்பத்திலேயே அதற்குப் பரிகாரம் அரசாங்கம் செய்வது நல்லது. ஆகவே, இது குறித்து விவாதிக்க இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சி. ஆறுமுகம்: துணைத் தலைவரவர்களே, மைக் சரியாக நிற்கமாட்டேன் என்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மைக் சரிந்து இருந்தாலும் நீங்கள் பேசுங்கள்; கேட்கும்.

திரு. சி. ஆறுமுகம் : மைக்கும் சரியாக நிற்கமாட்டேன் என்கிறது அரசாங்கத்தின் போக்குமாதிரி (குறுக்கீடு). நான் நேராகத்தான் நிற்கிறேன்.

துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு அரசு ஊழியர்கள் தங்களுடைய கோரிக்கையை முன்வைத்து, பல்வேறு கட்டங்களில் போராடி வருகிறார்கள். இந்த அரசைப் பொறுத்த மட்டில் அரசு ஊழியர்கள் எந்தக் கட்டத்திலிருந்து எந்தப் பிரச்சனையை வைத்தாலும் அதை காது கொடுத்து கேட்பதே இல்லை இந்த அரசு. பிரச்சனை உச்சக் கட்டத்தை அடையும்போது தங்களுடைய கவனத்தைச் செலுத்தி, பிரச்சனையை மேலும் பெரிதாக்குவதற்கு இந்த அரசு கண்ணும் கருத்துமாக இருந்து கொண்டிருக்கிறதே தவிர பிரச்சனையைத் தீர்ப்பதில் கண்ணும் கருத்துமாக இல்லாமலிருப்பது ஒரு அரசுக்கு சரியான நியாயம் ஆகாது.

இன்றைக்கு அரசாங்க ஊழியர்கள் மொட்டை அடித்துக் கொண்டு ஊர்வலம் வரும் வரையில், கோமணம் கட்டி ஊர்வலம் வரும் வரையில் இந்த அரசு அவர்களின் பிரச்சனைகளை அணுகுவது இல்லை. சரியான ஒரு அணுகுமுறை இந்த அரசிடம் இல்லாத காரணத்தால்தான் அரசு ஊழியர்கள் மட்டுமல்ல; ஆசிரியர்கள் மட்டுமல்ல; பொறியாளர்கள் மட்டுமல்ல; மாணவர்களும் போராட்டம் நடத்தும் சூழ்நிலை உருவாகியிருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு அவல நிலை தொடர்ந்து கொண்டே போகுமானால் பல்வேறுவிதமான அசம்பாவிதங்கள் நடப்பதற்கு இந்த அரசு வழிவகுத்ததாகிவிடும்.

இன்றைக்கு என். ஜி. ஓ.-வினர்—அரசிதழ் பதிவு பெறாத அரசு ஊழியர்கள்—குறிப்பாக எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் இன்றைக்கு காஞ்சிபுரம் வரையில் சென்னைக்கு சமமான நகர ஈட்டுப்படி, வீட்டுவாடகைப்படி கேட்கிறார்கள். நம்முடைய அமைச்சர் பதில் சொல்லும் முன் உதட்டைக் கடிக்கிறார்கள். அது கிடையாது என்பதற்கு அறிகுறி என்று நான் கருதுகிறேன். எல்லா இலாகாக்களையும் சேர்ந்த அரசு ஊழியர்கள் அதை கேட்டு, வற்புறுத்திக் கொண்டிருக்கிறார்கள்; அதற்காகப் போராடிக்கொண்டிருக்கிறார்கள்.

இன்னொன்றையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இந்த அரசு சில கோரிக்கைகளுக்காக விசாரணைக் கமிஷன் போடுகிறது. அதிலே இருக்கிற தவறு என்னவென்றால், மந்திரி தவறு செய்கிறார் என்றால் அதைப்பற்றி விசாரிக்க இன்னொரு மந்திரியைப் போட்டால் அவர் எப்படி நடந்துகொள்வார்? அமைச்சரைக் காப்பற்றத்தான் அவர் முயற்சி செய்வார். ஒரு கலெக்டர் தவறு செய்கிறார் என்றால் அதைப் பற்றி விசாரிக்க இன்னொரு கலெக்டரைப் போடக்கூடாது. ஒரு கலெக்டர் இன்னொரு கலெக்டரை விட்டுக்கொடுக்கமாட்டார்.

1979 மார்ச் 26] *[திரு. சி. ஆறுமுகம்]*

அதேமாதிரி ஊழியர்களின் கோரிக்கையை விசாரிக்க ஒரு அதிகாரி தவறிவிட்டார் என்று சொல்லும்போது அதே இலாகாவைச் சேர்ந்த இன்னொரு அதிகாரியைக் கொண்டு விசாரணை செய்ய அனுமதிக்கக்கூடாது. இன்னொரு இலாகாவைச் சேர்ந்த அதிகாரியைப் போட்டால்தான் ஓரளவு நிவாரணம் கிடைக்க வழி பிறக்கும். இப்படிப்பட்ட பல்வேறு பிரச்னைகளைப்பற்றி விவாதிக்க சபையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, இந்தப் பிரச்சனை மீது விவாதம் நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ரா. க. சு. தண்டபாணி : சார், பாயிண்ட் ஆஃப் ஆர்டர். துணைத் தலைவரவர்களே, அமைச்சர்களுடைய கேள்வி பதில் விவரம் நிருபர்களுக்கு டைப் செய்து கொடுக்கப்படுவதாகத் தெரிகிறது. ஆனால் போதுமான பிரதிகள் கொடுக்கப்படாததால், அதுபற்றி கேட்டபோது அந்த பிரிவு அலுவலர் ஒருவருக்கும் நிருபர்களுக்கும் தகராறு வந்திருக்கிறது. அது சம்பந்தமாக லாபியில் ஒரு பதட்ட நிலை இருப்பதாகத் தெரிகிறது. அதுபற்றி விசாரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : லாபியில் பதட்ட நிலை ஒன்றும் இல்லை; அமைதியாகத்தான் இருக்கிறது. ஏதாவது இருந்தால் அதுபற்றி விசாரிக்கலாம்.

திரு. கே. கந்தசாமி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, அரசின் முக்கிய அங்கமாகச் செயல்படக்கூடிய பல இலாகாக்களைச் சேர்ந்த ஊழியர்கள் தங்களுடைய நியாயபூர்வமான உணர்வுகளை வெளியிடுகிறோம் என்ற அளவில் பலவிதமான போராட்டங்களைக் கையாள்வதும், உண்ணாவிரதம் இருப்பதும் குறிப்பாக அரசு பதிவு இல்லாத ஊழியர்கள் சங்கம் உண்ணாவிரதம் இருக்கிறோம் என்று அறிவித்திருக்கிறார்கள். சட்ட மன்றம் செயல்படும் இந்த நேரத்தில் அண்ணா சிலைக்கு முன்னால் உண்ணாவிரதம் இருப்பதாகத் தெரிகிறது. இது தவிர்க்கப்பட வேண்டியது அவசியம் என்பதை நான் வற்புறுத்திக் கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

சாதாரணமாக கோரிக்கைகள் எழுவதும், அதற்கு நிவாரணம் அளிப்பதும் மரபு என்றாலும் எதற்கு எடுத்தாலும் போராட்டம் நடத்துவது, அதற்கு நிவாரணம் இல்லை என்றால் சட்டம் ஒழுங்கு, அமைதி, பொது மக்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய அரசாங்க உதவிகள் இவைகள் ஸ்தம்பித்துப் போகக் கூடிய ஒரு நிலைமை ஏற்படுகிறது; இன்றைக்கு அப்படி ஏற்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த அளவுக்குச் சூழ்நிலைகள் உருவாகாமல், அவர்களுடைய கோரிக்கைகளைப் பரிசீலனை செய்து, மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்ததைப்போல அவர்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்க அரசு முயல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் இன்று மனிதனுடைய அங்க அவயவங்கள் அனைத்தும் ஒழுங்காகச் செயல்பட்டால்தான் உடல் நலத்தோடு இருந்து, சாதாரண கடமைகளைச் செய்ய முடியும். அதைப்போலவேதான் அரசின் பலதரப்பட்ட ஊழியர்களும் இந்த அரசின் அங்கமாகும். அனைத்து ஊழியர்களும் சிறப்பாகப் பணியாற்றினால்தான் அரசு நல்லமுறையில் செயல்பட முடியும். ஏதாவது ஒரு அங்கம் செயல்படவில்லை என்றால் உரிய வைத்தியரிடம், உரிய நேரத்தில் இங்கே உரிய வைத்தியர் இந்த அவை என்று நான் கருதுகிறேன்—சிகிச்சை பெற வேண்டும். சிகிச்சை பெறுவதற்காக, நிவாரணம் அளிக்கப்படுவதற்காக, அவர்களுடைய பிரச்சனை அவைக்கு வந்திருக்கிறது. இங்கே பலதரப்பட்ட அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் இருக்கிறார்கள். அவர்களுடைய அரிய ஆலோசனைகளைக் கேட்டு, பிரச்சனையைத் தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு இந்தச் சபையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 11-00]

அதே நிலையில் இது சாதாரணமான ஒரு ஒத்திவைப்புத் தீர்மானமாகக் கருதப்பட்டுவிடக்கூடாது. என். ஜி. ஓ.-க்களைக் கேட்டால் அவர்கள் தாங்கள் செய்வது நியாயமான கோரிக்கைகளுக்காகத்தான் என்று சொல்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் அரசாங்கத்தைக் கேட்டால் அவர்கள் நிதிப்பற்றாக்குறை பற்றிச் சொல்கிறார்கள், இருக்கின்ற நிதி பொதுமக்களுடைய நன்மைக்காகச் செயல்படுத்தப்படுவதற்கே போதுமானதாக இல்லை என்றும் கூறுகிறார்கள். படித்தவர்கள் மட்டுமல்லாமல் படிக்காதவர்கள், அதாவது உழைப்பதற்குத் தயாராக இருக்கின்றவர்களுக்குத் தக்க வேலைவாய்ப்புக்களைக் கொடுப்பதற்கே நிதி வசதி இன்னும் தேவைப்படுகிறது என்றெல்லாம் சொல்கிறார்கள். ஆனால் எங்களைப் பொறுத்தமட்டில் நாட்டிலே அமைதி காக்கப்படவேண்டும் என்பதிலே அக்கறை கொண்டிருக்கிறோம். ஆகவேதான் இதில் ஒரு சுமூகமான நிலை ஏற்படவேண்டும் என்ற காரணத்தால், இந்த என்.ஜி.ஓ. பிரச்சினை குறித்து விவாதிப்பதற்காக அவையின் மற்ற அலுவல்களை ஒத்தி வைக்கவேண்டும் என்று கேட்டு அமர்கிறேன்.

*மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, என்.ஜி.ஓ.-க்கள் பிரச்சினை சம்பந்தமாக மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அவையை ஒத்தி

1979 மார்ச் 26] [திரு. ச. இராமச்சந்திரன்]

வைத்து விவாதிக்கவேண்டும் என்ற அடிப்படையிலே இங்கே சில கருத்துக்களைத் தெரிவித்தார்கள். குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்பிகாபதி அவர்கள் பேசுகிறபோது அறிஞர் அண்ணா அவர்களுடைய சமாதிக்கு அருகில் ஒரு உண்ணாவிரதக் கொட்டகையை நிரந்தரமாகக் கட்டி விடலாம் போல் இருக்கிறது, அந்த அளவுக்கு உண்ணாவிரதங்கள் பெருகி விட்டன என்று சொன்னார்கள். அதற்கு நல்ல பதிலைத் தருகின்ற முறையில் மாண்புமிகு திரு. கந்தசாமி அவர்கள் பேசுகிறபோது எதற்கெடுத்தாலும் போராட்டமா என்ற கேள்வியை இங்கே எழுப்பினார்கள். உண்மையிலேயே இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில்..............

திரு. கே. கந்தசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்ன வார்த்தையை நான் சொன்னேன். ஆனால் சொன்ன நோக்கம் என்னவென்றால் எங்கே பார்த்தாலும் போராட்டங்கள் ஏற்படுவதால் நாட்டிலே பொது மக்களுடைய அமைதி பாதிக்கப்படக்கூடிய அளவுக்கு அதாவது

Normal business of Government is stopped with the result the people are affected.

என்ற பொருளைக் குறிப்பதற்காகச் சொன்னேனே தவிர போராட்டம் நடத்துவது நியாயம் இல்லை என்ற கருத்து தொனிக்கத் தக்க அளவில் சொல்லவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, என்ன இருந்தாலும், இதற்கு என்ன சொல்வது என்று நாங்கள் நினைத்துக் கொண்டிருந்தபோது அவர் குறிப்பிட்ட வாசகங்கள் எனக்கு மிகவும் பொருத்தமாகக் கிடைத்தது என்பதற்காக நான் அவருக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். போராட்டம் நடத்துகின்ற ஒவ்வொருவருக்கும் அவர்களுக்கென்று சில நியாயங்கள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். மாரிமுத்து அவர்கள் பேசுகிறபோதுகூட இந்தக் கோரிக்கைகள் எல்லாம் நியாயமாகத்தானே இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அதேபோல் அரசாங்கம் சொல்கிறபோது சில நியாயங்கள் இருக்கின்றன. ஆனால் நான் இந்த அவையிலே சொல்ல விரும்புவது என்னவென்றால் எல்லாமே நியாயங்களாகக் கருதப்பட்டாலும் அவைகளிலே தலை சிறந்த நியாயங்கள் எது என்பதைப் பற்றி நீங்கள்தான் தீர்மானிக்கவேண்டும் என்பதுதான். அந்த அடிப்படையிலே சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

குறிப்பாக ஒரு அரசை நடத்துவதில் மிக முக்கிய பங்கு வகிப்பவர்கள் என்.ஜி.ஓ.-க்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. அதேபோல் ஒரு அரசினுடைய நிலையைப் பற்றியும்

நன்கு அறிந்தவர்கள் அவர்களாகத்தான் இருக்க முடியும். ஆகவே அரசாங்கத்தினுடைய ஒரு அங்கமாக இருக்கக் கூடிய என். ஜி. ஓ.-க்கள் அரசாங்கத்தின் தரப்பிலே இருக்கின்ற காரியங்களை நம்மை விட நன்கு அறிந்தவர்கள். அப்படிப்பட்ட என்.ஜி.ஓ.-க்கள் இந்த போராட்டத்தினை ஏன் மேற்கொள்கிறார்கள் என்று எனக்கு உண்மையிலேயே புலனாகவில்லை.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிறபோது, ''மூன்றாவது சம்பளக்குழு அறிக்கை வந்திருக்கிறது. அந்த அறிக்கையில் சில முரண்பாடுகள் இருக்கின்றன. அந்த முரண்பாடுகளை நீக்குவதற்கு ஏன் ஒரு முரண்பாட்டுக் குழு போடக்கூடாது'' என்று கேட்டார்கள். நான் சொல்ல விரும்புவது முரண்பாட்டுக் குழு ஒன்று போட்ட அனுபவம் எங்களுக்கு உண்டு. அதாவது அனாமலீஸ் கமிஷன். அதற்கு அனாமலீஸ் கமிஷன் என்று தான் பெயரே ஒழிய அனாமலிஸைத் தீர்க்கிற கமிஷன் என்று கூடப் பெயர் இல்லை. ஆகவே ஏற்கனவே அப்படி முரண்பாடுகளை நீக்குகின்ற குழு என்று போட்டு அதுவே ஒரு ஊதியக் குழு போல் செயலாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது என்பதை எல்லாம் மறந்து விடக்கூடாது.

குறிப்பாக இந்த மூன்றாவது ஊதியக் குழுவைப் பொறுத்த வரையில் இவைகள் எல்லாம் முன்கூட்டியே தவிர்க்கப்பட வேண்டும் என்று, கடந்த கால அனுபவத்தின் அடிப்படையிலே, ஒரு நீதிபதியையே இதற்குத் தலைவராகப் போட்டோம்.

நிதிக் குழு தலைவர் பல்வேறு மாவட்டங்களுக்குச் சென்று எல்லாப் பிரதிநிதிகளையும் குறிப்பாக அலுவலர் சங்க பிரதிநிதிகளையும் சந்தித்து அவர்கள் கருத்தைக் கேட்டறிந்து பரிந்துரைகள் கொடுக்கப்பட்டதாக எடுத்துச் சொன்னோம். அதற்கு ஏற்ப 18 நகரங்களுக்குச் சென்று சுமார் 1,361 பிரதிநிதிகளையும் கலந்து பேசி இந்த முடிவை எடுத்திருக்கிறார்கள். இதிலே பல முன்னேற்றகரமான திட்டங்களை அதாவது Rationalisation of pay scales எல்லாம் இதில் இருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் என்னதான் ஒரு குழு ஆராய்ந்து முடிவு எடுத்தாலும் சில குறைபாடுகள் இருப்பது இயற்கை. அந்தக் குறைபாடுகளைப் பற்றி, அதுவும் அந்தச் சங்கத்தைச் சார்ந்தவர்கள் அரசிடம் வந்து நேரில் தெரிவித்திருக்கிறார்கள். சில குறைபாடுகள் இருக்கின்றன என்பதை அரசும் ஒத்துக் கொண்டு ஆணைகளைப் பிறப்பித்திருக்கின்றது. அதை நடைமுறைப்படுத்துவதில் ஏதாவது சிக்கல் இருக்குமானால், அது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுமானால் அதைப்பற்றியும் ஆராய்வதற்கு அரசு தயாராக இருக்கின்றது. அதுமட்டுமல்ல, அந்தப் பிரதிநிதிகளைச் சந்திக்கின்றபோது அவர்கள் சொல்வதைக் கேட்டு அதன் அடிப்படையில் உத்தரவுகளைப் பிறப்பிக்க இப்போதே வழியுண்டு. ஒரு அநோமலி கமிஷனைப்

1979 மார்ச் 26] [திரு. ச. இராமச்சந்திரன்]

போட்டு என்னென்ன காரியங்களைச் செய்ய வேண்டும் என்று அவர்கள் வற்புறுத்துகிறார்களோ அந்தக் காரியங்களை செய்வதற்கு வேண்டிய வாய்ப்பு இப்போது ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் அரசாங்கமே நேரிடையாக உத்தரவுகளைப் பிறப்பிக்கக் கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. ஒரு கமிஷனை அமைக்க வேண்டிய அவசியம் இல்லை, என்பதைத் தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன். இன்னொன்றையும் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அகவிலைப்படி உயர்வு பற்றிக் கேட்டார்கள். அகவிலைப்படி உயர்வு பற்றி மத்திய அரசு எந்த அடிப்படையில் அறிவிக்க இருக்கிறார்களோ அந்த அடிப்படையில் நாமும் அறிவிக்க இருக்கிறோம். இது பற்றி அரசு ஏற்கனவே உத்தரவு பிறப்பித்திருக்கிறது. அகவிலைப்படி உயர்வு பற்றி மத்திய அரசு எந்த அடிப்படையில் செய்கின்றார்களோ அந்த அடிப்படையில் மாநில அரசினுடைய முடிவும் அமையவேண்டியிருக்கிறது. இந்த விஷயத்தில் ஒரு மாறுபாடான சூழ்நிலை இருக்கக்கூடாது. மத்திய அரசினுடைய முடிவு எந்த வகையில், எந்த முறையில் இருக்கும் என்று தெரியவில்லை. மத்திய அரசு ஒரு முறையில் அறிவித்து, நாம் வேறு முறையில் அறிவிப்போமேயானால், அது முறையாக இருக்காது. மத்திய அரசு எந்த முறையில் அறிவிக்கப் போகிறார்களோ, அதைப் பார்த்து அறிவிக்க இருக்கிறோம். ஆகவே, இந்தப் பிரச்னைக்கு உண்மையிலேயே இப்போது இடமில்லை என்று நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, ஓய்வு பெறுகிறபோது ரூ. 10,000 தரவேண்டும் என்று சொன்னார்கள். இது சென்ற ஆண்டிலிருந்து பேசப்படுகிற பிரச்னை. ஆகவே, ரூ. 10,000 ஓய்வு பெறுகிறபோது தர இயலுமா என்பது அந்த அலுவலர் சங்கங்களைச் சார்ந்த பிரதிநிதிகளுக்குத் தெரியாதது அல்ல. மாநில அரசு பல கடமைகளைச் செய்ய வேண்டி இருக்கிறபோது, அரசாங்கத்திலே பணியாற்றுகின்ற ஊழியர்கள் ஓய்வு பெறுகிறபோது, ரூ. 10,000 கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்துவது என்றால் அது அரசினுடைய நிதிநிலைக்கு ஏற்றது ஆகாது. இந்த நேரத்தில் உண்ணாவிரதத்தைப் பற்றிச் சொன்னார்கள். நான் சொல்வது, அவர்கள் பொறுத்தவரையில் அவர்களுக்குச் சில குறைபாடுகள் நியாயமாக இருக்கலாம். உதாரணத்திற்குச் சொல்கிறேன். 55 வயது ஆனபிறகு ஓய்வு பெறுகிறவர்கள் 58 வயது வரை பணியில் இருக்கவேண்டும் என்று கேட்கிறார்கள். அது கேட்கிறபோது இருக்கிறவர்களுக்கு அது நியாயமாக, உகந்ததாக இருக்கலாம். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் கந்தசாமி அவர்கள் குறிப்பிட்டதுபோல் எத்தனை பேர் இன்றைக்கு வேலையில்லாமல் இருக்கிறார்கள், தற்கொலை செய்யக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். 55 வயது இருப்பதனால் மேலும் வேலைவாய்ப்பு கொடுக்கப்போகிறார்களா என்று கேட்டார்கள். அதுவல்ல பிரச்னை. 55 வயது என்று தீர்மானித்து இருக்கிறோம் என்றால், புதியதாகச் சேருகிறவர்களுக்கு ஒரு வாய்ப்பு

[திரு. ச. இராமச்சந்திரன்] [1979 மார்ச் 26

கிட்டும் என்ற அடிப்படையில் வைத்திருக்கிறோம். அந்த அடிப்படையில் அதைச் சிந்திக்க வேண்டும். எத்தனை பேருக்கு கொடுக்கப்போகிறோம் என்றால், ஏதோ கிடைத்தவரையில் நன்மை என்ற அடிப்படையில் இந்தப் பிரச்னையை அணுக வேண்டும். ஒரு பிரச்னையைப் பார்க்கிறபோது அதிலே ஒரு சாராருக்கு நியாயமாக இருந்தாலும் மறு சாராருக்கு நியாயமாக இருக்காது. ஆனால் ஒட்டுமொத்தமாகப் பார்க்கிறபோது அரசு எடுக்கும் முடிவு நியாயமாக இருக்கும். ஆகவே, எத்தகைய பிரச்னையாக இருந்தாலும், என்.ஜி. ஓ. வினர் சங்கத்தைச் சார்ந்தவர்கள் பேச்சுவார்த்தைகள் மூலம் அந்தப் பிரச்னையைத் தீர்த்துக் கொள்ளலாம். உண்ணாவிரதம் இருக்கத் தேவையில்லை. அதுவும் சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கத் தேவையில்லை. இந்த அரசாங்கத்தில் பெரும் பங்கு வகிக்கின்ற அரசாங்க ஊழியர்கள் இதைக் கட்டாயம் உணர்ந்து செயல்படுவார்கள் என்று எண்ணுகிறேன்.

[முற்பகல் 11-10]

பிரச்னையை வளர்க்கவேண்டும் என்பது இந்த அரசின் நோக்கமல்ல.

''இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த விடத்து''

என்பது திருக்குறள். முளையிலே கிள்ளி எறிய வேண்டும் என்ற முறையில் சில பிரச்னைகள் முளையிலே கிள்ளி எறியப் படுகிறது. ஆனாலும் சில சமயங்களில் சில வற்புறுத்தல்களின் காரணமாக சில விளைவுகள் ஏற்படுகின்றன. ஆகவே பிரச்னையை வளர்க்கவேண்டும் என்றோ, வளர்ந்த பின்தான் அதை களையவேண்டும் என்றோ அந்த எண்ணம் இந்த அரசுக்கு நிச்சயமாகக் கிடையாது என்பதைத் தெரிவித்துக் கொள்வதோடு என். ஜி. ஓ. க்கள் பிரச்சினைகளைப் பேசிப் தீர்த்துக்கொள்வது தான் அவர்களுக்கு அழகு என்பதை எடுத்துச் சொல்லி, இதற்காக அவை நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டிய அவசியமில்லை என்று கூறி அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து, இத்தீர்மானம் குறித்து விவாதிக்கவேண்டிய தேவையில்லை என்ற காரணத்தினால் இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

திரு. மு. அம்பிகாபதி : * * * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தயவுசெய்து உட்காருங்கள். 42-வது விதியின் கீழ் அமைச்சர் அவர்கள் தனது பதிலைச் சொன்ன பின்னால் உறுப்பினர்கள் பேச

***மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1979 மார்ச் 26] [பேரவைத் துணைத் தலைவர்]

முடியாது. அவர்களது பதில் உங்களுக்குத் திருப்தி அளிக்க வில்லையென்றால், அடுத்த நாளே அதே பிரச்சினையைப் பற்றி எழுதிக் கொடுங்கள்.

திரு. மு. அம்பிகாபதி : * * * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் என்ன சொன்னாலும் நான் அனுமதிக்க மாட்டேன். நீங்கள் இப்படிப் பேசிக்கொண்டேயிருந்தால், அதையெல்லாம் நான் நீக்க வேண்டி யிருக்கும். என்னுடைய கடைசி ஆயுதம் அதுதான்.

திரு. மு. அம்பிகாபதி : * * * * *

இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக நாங்கள் * * * * * * * * * * இந்தச் சபையை விட்டு வெளியேறுகிறோம்.

(இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அம்பிகாபதி அவர்கள் சபையை விட்டு வெளியேறு கிறோம் என்று சொன்னது மட்டும் சபைக் குறிப்பில் இருக்க லாம். மற்றவைகளை எல்லாம் நீக்கிவிடும்படி உத்தரவிடு கிறேன்.

(4) தகவல்கள் கோரல்—தொடர்ச்சி.

(இ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் குறித்து.

திரு. கே. கந்தசாமி : அவசர முக்கியத்துவம் வாய்ந்த ஒத்திவைப்புத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறேன். முக் கியமாக மதுரை மேற்கு தொகுதி உறுப்பினர் திரு. டி. பி. எம். பெரியசாமி அவர்களும் நானும்......................

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவை உரிமை மீறல் பிரச்னைகளை அவைத் தலைவர் அவர்கள் எடுத்துக் கொண்டார். மிச்சம் இருப்பவைகளை அவரது அறையில் போய்க் கேட்டுக்கொள்ளலாம்.

திரு. கே. கந்தசாமி : நாங்கள் கொடுத்திருப்பது ஒத்தி வைப்புத் தீர்மானம்...........

* * * * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதையும் அவைத் தலைவர் அவர்களின் அறையில் போய்க் கேட்டுக் கொள்ளலாம்.

(6) கவன ஈர்ப்புகள்.

(அ) பல்லடம் தாலூகாவில் பல விவசாயிகள் மீது பைப் லைன் வரி, மேல்வரி, என அதிகமாக வரிகள் போட்டு வசூலிப்பது குறித்து.

திரு. க. சுப்பு : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''கோவை மாவட்டம் பல்லடம் தாலூகா, சூலூர், கண்ணம் பாளையம், குருகூர், ராவத்தூர், நிலம்பூர், சாமளாபுரம் போன்ற கிராமங்களில் உள்ள விவசாயிகள் மீது பைப்லைன் வரி, மேல்வரி அதிகமாகப் போட்டு, கெடுபிடி வசூல் செய்ய முனைந்துள்ளதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1977-ம் ஆண்டுக்கு முன்பு அரசு நிலங்களில் குழாய்கள் மூலம் தண்ணீர் கொண்டு செல்வதற்கு வருவாய்த்துறை வாரிய நிலை ஆணை 24-ஏ (9) (d)-யின்படி கீழ்க்கண்ட பாதை வரிக்கட்டணங்கள், வசூலிக்கப்பட்டு வந்தன.

பெரிய நகராட்சி	மைலுக்கு ரூபாய் 220 அல்லது ஒரு கெஜத்துக்கு 13 பைசா.	குறைந்த பட்சம் ரூபாய் 6.
சிறிய நகராட்சி	மைலுக்கு ரூபாய் 165 அல்லது ஒரு கெஜத்துக்கு 10 பைசா.	குறைந்த பட்சம் ரூபாய் 4.
மற்ற நகரங்கள்	மைலுக்கு ரூபாய் 110 அல்லது ஒரு கெஜத்துக்கு 7 பைசா.	குறைந்த பட்சம் ரூபாய் 2.
கிராமப் பகுதிகள்	மைலுக்கு ரூபாய் 82.50 அல்லது ஒரு கெஜத்துக்கு 5 பைசா.	குறைந்த பட்சம் ரூபாய் 2.
சென்னை நகரம்	மைலுக்கு ரூபாய் 1,000	..

1979 மார்ச் 26] [திரு. எஸ்.டி. சோமசுந்தரம்]

2. மேற்கண்ட பாதை வரிக் கட்டணங்கள் 25 ஆண்டுகளுக்கு முன்னர் விதிக்கப்பட்டவை. தற்போது நிலங்களின் மதிப்பு உயர்ந்துள்ளதால் வருவாய் வாரியம் பாதை வரிக் கட்டணங்களைத் திருத்தி அமைக்க சிபாரிசு செய்தது. வருவாய் வாரியத்தின் சிபாரிசை ஏற்று அரசாணை (நிலை) எண். 1747, வருவாய், தேதி 1977-ம் வருடம் செப்டம்பர் மாதம் 8-ம் தேதியில் கீழ்க்கண்டவாறு பாதை வரிக் கட்டணங்களை மாற்றி ஆணை பிறப்பிக்கப்பட்டது.

I (i)	தனி நிலை, தேர்வு நிலை நகராட்சிகள்.	1 கி. மீட்டருக்கு ரூ. 300 அல்லது 1 மீட்டருக்கு 30 பைசா.	குறைந்த பட்சம் ரூ. 15.
(ii)	முதல் அல்லது இரண்டாம் நிலை நகராட்சிகள்.		
II	மூன்றாம் நிலை நகராட்சிகள்.	1 கி. மீட்டருக்கு ரூ. 300 அல்லது 1 மீட்டருக்கு 30 பைசா.	குறைந்த பட்சம் ரூ. 10.
III	நகர் பஞ்சாயத்து வட்டாரங்கள்.	1 கி. மீட்டருக்கு ரூ. 150 அல்லது 1 மீட்டருக்கு 15 பைசா.	குறைந்த பட்சம் ரூ. 7.
IV	கிராம பஞ்சாயத்து வட்டாரங்கள்.	1 கி. மீட்டருக்கு ரூ. 100 அல்லது 1 மீட்டருக்கு 10 பைசா.	குறைந்த பட்சம் ரூ. 5.
V	மதுரை மாநகர் ..	1 கி. மீட்டருக்கு ரூ. 500.	குறைந்த பட்சம் ரூ. 25.
VI	சென்னை மாநகர்	1 கி. மீட்டருக்கு ரூ. 2,000	குறைந்த பட்சம் ரூ. 100.

3. கிராம பஞ்சாயத்து, நகர பஞ்சாயத்துக்களில் ரூபாய் 2 ஆக இருந்த பாதைவரிக் கட்டணங்கள், கிராம பஞ்சாயத்துக்களில், ரூ. 5 ஆகவும், நகர பஞ்சாயத்துக்களில் ரூ. 7 ஆகவும் உயர்த்தப்பட்டிருக்கிறது. நில வருவாயில், பாதைவரிக் கட்டணங்கள், குத்தகைப்பணம், நிலத்தீர்வை, உரிமை ஊதியம் ஆகியவை அடங்கும். தமிழ்நாடு பஞ்சாயத்து சட்டம், 1958, 115 பிரிவின்படி நில வருவாய் ஒவ்வொரு

ரூபாய்க்கும் உள்ளூர் செஸ் 45 பைசா வீதம் வசூல் செய்ய வேண்டும். அதே போல் 116 பிரிவின்படி நிலவருவாய் ஒவ்வொரு ரூபாய்க்கும் உயர்ந்த பட்சம் ரூபாய் 2.50 வீதம் உள்ளூர் செஸ் மேல்வரி வசூல் செய்யலாம். புதிய விகிதத்தில் பாதைவரிக் கட்டணம் கணக்கிடும்போது உயர்த்தப்பட்ட விகிதத்தில் உள்ளூர் மேல்வரியும் கணக்கிடப்படுகிறது.

4. சூலூர், பஞ்சாயத்து ஒன்றியம் ரூபாய் 0.75 என்று இருந்த உள்ளூர் செஸ் மேல் வரியை ரூ. 2.05 வீதம் உயர்த்தியும் பல்லடம் பஞ்சாயத்து ஒன்றியம் ரூபாய் 0.75 என்று இருந்த உள்ளூர் செஸ் மேல் வரியை ரூபாய் 1.55 வீதம் உயர்த்தியும் வசூல் செய்கிறது. கோவை மாவட்ட தேசீய உழவர் சங்க செயலாளரிடமிருந்து இது சம்பந்தமாக மனு வந்துள்ளது. தமிழ்நாடு பஞ்சாயத்து சட்டம், 1958 பிரிவு 115, 116-ஐ திருத்தி அமைக்கும் வரையில் பாதைவரிக் கட்டணங்கள் மீது உள்ளூர் செஸ், உள்ளூர் செஸ் மேல்வரி வசூலிக்க வேண்டி உள்ளது. அரசாணை எண். 1747, வருவாய், நாள் 1977 செப்டம்பர் 8-ன்படி உயர்த்திய பாதை வரிக் கட்டணங்கள் பல்லடம், சூலூர் பஞ்சாயத்து வட்டாரங்களுக்கு மட்டும் அல்லாமல் எல்லா மாவட்டங்களில் இருக்கும் விவசாயிகளுக்கும் பொருந்தும். ஆகையால் கோவை மாவட்டம், பல்லடம் தாலூக்கா, சூலூர் ஒன்றியத்தைச் சேர்ந்த சூலூர், கண்ணம் பாளையம், குருகூர், ராவத்தூர், நீலம்பூர், பல்லடம் ஒன்றியத்தில் சாமளாபுரம் போன்ற கிராம விவசாயிகள் மீது பழி வாங்கும் நோக்குடன் பாதை வரிக்கட்டணங்கள் அதிகமாக விதிக்கவில்லை. அதன் பொருட்டு கெடுபிடி வசூலும் இல்லை. எனவே பதட்ட நிலைக்கோ, கொந்தளிப்பு நிலைக்கோ யாதொரு காரணமுமில்லை. பாதைவரிக் கட்டணங்கள் (Track rent) அதிகரிப்புக்கு முக்கியமான காரணம் உள்ளூர் மேல்வரித் துகைகள் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியன்களால் பெருமளவில் அதிகப்படுத்தப்பட்டதேயாகும்.

திரு. க. சுப்பு : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கேட்டிருப்பது விவசாயிகள் சம்பந்தமானது. நீங்கள் சொல்லியிருப்பது நகராட்சி சம்பந்தமானது. விவசாயிகள் விவசாயம் செய்வதற்காக ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு பைப் போட்டு, அவர்களாகவே தண்ணீர் கொண்டு போகிறார்கள். இதிலே சர்க்காருக்கு பொறுப்பில்லை. அப்படி பைப் போட்டு தண்ணீர் கொண்டு போவதிலே அவர்கள் கஷ்டப் படுகிறார்கள்; நஷ்டப்படுகிறார்கள். அந்த நிலையிலே அவர்கள் குறைகள் தீர்க்கப்படாமல், அவர்கள் உண்ணாவிரதம் இருக்கப்போவதைப் பற்றிக்கூட அன்றைக்கு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அப்படி இருக்கும்போது, அவர்கள் இந்த பைப் லைன்களில் தண்ணீர் கொண்டு போவதற்கு 200 சதவீதம் 300 சதவீதம் என்று டாக்ஸ் போடுவது இந்த டாக்சேஷன் பாலிசிக்கே விரோதமானது. இது ஒரு சூபர் டாக்சாக இருக்கிறது.

1979 மார்ச் 26] [திரு. க. சுப்பு]

ஆனால் இன்றைக்குக் கேள்விப்படுகிறோம், அவர்கள் மாட்டைப் பிடித்துக் கொண்டு போகிறார்கள். அவர்கள் அக்ரிகல்சுரர் இம்பிளிமெண்ட் சாமான்களை ஜப்தி செய்து கொண்டு போகிறார்கள் என்று. அப்படியென்றால் இது போதாதா?......

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: கேள்வியாகக் கேளுங்கள், விளக்கமாகப் பேசுவதாக இருந்தால், மானியம் வரும்போது பேசலாம். அப்போது பதில் சொல்கிறேன். இப்போது கேள்வியாகக் கேளுங்கள். பதில் சொல்கிறேன்.

திரு. க. சுப்பு: துணைத் தலைவர் அவர்களே, இந்த விவசாயிகள் விவசாயம் செய்வதற்காக அவர்களே பைப் லைன் போட்டுக்கொண்டு தண்ணீர் எடுத்துக்கொள்கிறார்கள். அவர்களுக்கு இந்தத் தண்ணீர் வரி விதிக்கப்படுகிறது. அதைக் கட்டவில்லையானால், மாட்டைப் பிடித்துக் கொண்டு போகிறார்கள். அக்ரிகல்சர் இம்பிளிமெண்ட்டுகளை ஜப்தி செய்கிறார்கள். அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் என்ன சொல்ல விரும்புகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 11.20.]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: விவசாயிகளுக்குத் தண்ணீர் கொண்டு வருவதற்கு பைப் மூலமாகத் தண்ணீர் கொண்டு வரும் வரியைத்தான் சொன்னேன். அதைச் சொல்லுகிறபோது நான் நகராட்சி, ஊராட்சி என்றெல்லாம் சொல்வதற்குக் காரணம் எந்தெந்த ஊர்களுக்குக் கொண்டு போக எப்படி வரி போடப்பட்டிருக்கிறது என்றுதான் சொன்னேன். அந்த வரிகள் எல்லாம் இந்த அரசு கொண்டு வந்தது அல்ல. நீண்ட பல காலமாக இப்படி வரி போடப்பட்டிருக்கிறது. அது இப்போது மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. அதிகமாகப் போடப்பட்டிருக்கிறது என்பதைத்தான் சொன்னேன். அது மட்டுமல்ல, விவசாயிகள் சம்பந்தமான வரி வசூலிப்பதில் எங்கும் மாட்டையும் பிடிக்கவில்லை, ஆட்டையும் பிடிக்கவில்லை, அப்படி யாராவது பிடித்திருந்தால் திருடர்கள் பிடித்திருப்பார்கள் என்று கருதுகிறேன்.

திரு. க. சுப்பு: தற்போது விதிக்கப்பட்ட வரி 200 சதவீதம், 300 சதவீதம் உயர்த்தப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. விவசாயிகளுக்காக அதைக் குறைக்க முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: 100 மடங்கு, 200 மடங்கு என்று உயர்த்தப்படவில்லை. ஆயினும் விவசாயிகள் நலனைக் கருதி இதுபற்றி வருவாய் வாரியத்தின் மூலமாகப் பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) திருவில்லிபுத்தூர் நகரில் தாழ்த்தப்பட்ட மக்களின் குடிசைகள் தீ விபத்திற்குள்ளானது குறித்து.

திரு. இரா. தர்மரைக்கனி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முகவை மாவட்டம் திருவில்லிப்புத்தூர் நகரில் 1979 மார்ச் மாதம் 23 அன்று தாழ்த்தப்பட்ட மக்களின் 100க்கும் மேற்பட்ட குடிசைகள் எரிந்தும், பொருள் சேதம் அதிகம் ஏற்பட்டதால் பொதுமக்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

திருவில்லிப்புத்தூர் நகரில் 1979 மார்ச் 23 அன்று பிற்பகல் 1.45 மணியளவில் தீ விபத்து ஏற்பட்டது. இத் தீ விபத்தில் ரூ. 20,750 மதிப்புள்ள 27 வீடுகள் தீக்கிரையாயின. உயிர்ச் சேதமோ, கால்நடைச் சேதமோ ஏதும் இல்லை. தீ விபத்து செய்தி கிடைத்தவுடன் திருவில்லிப்புத்தூர் மற்றும் இராச பாளையம் தீயணைப்பு நிலையங்களிலிருந்து தீயணைப்புப் படையினர் விரைந்து சென்று தீயை அணைத்தனர். 1979 மார்ச் மாதம் 23 அன்று இரவு பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன. 1979 மார்ச் மாதம் 24 அன்று அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவு வழங்கினர். குடிசை கருணை மானியத் தொகையாக ரூ. 2,575 பாதிக்கப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. மேலும், ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா 5 கிலோ அரிசியும் வருவாய்த் துறையினரால் வழங்கப்பட்டுள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவில்லிப்புத்தூரில் தீப்பிடித்ததாக டெலிபோன் மூலம் தகவல் வந்தது. நான் நம்முடைய முதல்வர் அவர்களிடமும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடமும் விவரங்களைச் சொன்னேன். உடனடி நடவடிக்கை எடுத்ததற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும் அரசு அலுவலர்களுக்கும் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அங்கே வாழ்கிற மக்கள் தாழ்த்தப்பட்ட மக்கள், மேற்குத் தொடர்மலைக்கு காய்ந்த விறகுகளை எடுப்பதற்காகப் போவார்கள். தினசரி இரண்டு அல்லது மூன்று ரூபாய்தான் கூலி கிடைக்கும். அவர்களுக்கு மாற்று உடை உடுத்த துணிமணிகள் கிடையாது. அவர்களுடைய துணிமணிகளும் பொருள்களும்

1979 மார்ச் 26] [திரு. இரா.தாமரைக்கனி]

சேதமாகிவிட்டன. உணவுக்கு வழியில்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு 5 கிலோ அரிசி கொடுத்ததாகச் சொன்னார்கள். இன்னும் 45 கிலோ அரிசியும் துணிமணிகளும் கொடுத்தால் பேருதவியாக இருக்கும். இப்போது அவர்கள் யாதாம் ஏவாள் எப்படி இருந்தார்களோ அதே போன்று இலையை உடுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இன்றைக்கு இருக்கிற அரசாணைப்படி இந்த மாதிரி வீடு தீப்பற்றிக் கொண்டால் 100 ரூபாயும் 5 கிலோ அரிசியும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் எதிர்பாராத நேரங்களில் தீ விபத்து ஏற்பட்டு சேதம் அதிகமாக இருந்தால் 50 கிலோ அரிசி வரை கொடுக்கப்படுகிறது. 50 கிலோ அரிசி கொடுக்கவேண்டுமென்று அவர் சொன்னபோது பேராசிரியர் அவர்கள் அங்கு கார்ப்பரேஷன் தேர்தல் இல்லையென்று சொன்னார்கள். அவர்கள் வருவதற்கு முன்பு இங்கே படித்தேன். ஒரு லட்சம் பேருக்கு வெளி மாவட்டங்களில் இருப்பவர்களுக்கு 50 கிலோ அரிசி கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற விவரங்களைத் தந்தேன். உறுப்பினர் அவர்கள் கோருகிறபடி கொடுக்கவேண்டுமென்றால் தனி ஜி. ஓ. போட வேண்டும். வருவாய்த்துறையுடன் ஆராய்ந்து செய்கிறேன்.

டாக்டர் கே. சமரசம்: இங்கே மாண்புமிகு சுப்பு அவர்கள் பேசுகிறபோது வேளாண்மைத் துறையினர் பாசன வரிகளை விவசாயிகளிடமிருந்து வசூலிக்க ஜப்தி செய்கிறார்கள், ஆடு மாடுகளைப் பிடித்துக் கொண்டு போகிறார்கள் என்ற உண்மைக்கு மாறான தகவல்களைச் சொன்னார்கள். அமைச்சர் அவர்கள் அதை மறுத்திருக்கிறார்கள். இது குறிப்பில் இருக்க வேண்டுமா என்று சிந்தனை செய்ய வேண்டும். பத்திரிகையில் அது வேறு விதமாக வந்துவிடும் என்பதால் அதைப் பற்றிக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் ஒரு தகவலைத் தந்திருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் அதற்கு தகவலைத் தந்திருக்கிறார்கள். ஆகவே இரண்டுமே சபைக் குறிப்பிலே இருக்கலாம். நீக்கவேண்டிய அவசியம் இல்லை.

(4) தகவல்கள் கோரல் (தொடர்ச்சி.(—

(இ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் குறித்து—தொடர்ச்சி.

திரு. மு. அம்பிகாபதி: துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் 41 இல் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் பல்லாவரம் போன்ற பகுதிகளிலே 28 ஆம் தேதி குவாரி தொழிலாளர்கள் தொழிற் தகராறு சட்டத்தை எரிக்கப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள் என்று..............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 41-வது விதியின் கீழ் கொடுத்திருக்கிறீர்கள். அதற்கு அமைச்சரிடம் இருந்து பதில் வரவில்லை. பதில் வந்தபிறகு எடுத்துக் கொள்ளப் படும்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: துணைத் தலைவர் அவர்களே, குத்தாலத்திலே காவிரியினுடைய பாலம் ஒன்று உடைந்திருக்கிறது. அதன் காரணமாக அங்கே கடந்த 10, 15 நாட்களாக எந்த விதமான போக்குவரத்தும் அனுமதிக்கப்படவில்லை. நான் 41-வது விதியின் கீழ் அதுபற்றிக் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 41இல் கொடுத்திருந்தால், அது என்ன ஆயிற்று என்று அறையிலே வந்து கேளுங்கள். அமருங்கள்.

(7) வரவு செலவுத்திட்டம் 1979-80—மானியக் கோரிக்கைகள்—வாக்கெடுப்பு.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"மானியக்கோரிக்கை எண். 17—கல்வி என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,08,53,13,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

திரு. கோ. இளங்கோவன்: தலைவர் அவர்களே, என்னுடைய வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிவதற்கு முன்னதாக ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய பெயரால் வேறு ஒரு வெட்டுத் தீர்மானம் தவறாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதைப்பற்றி தாங்கள் பேசும்பொழுது வேண்டுமானால் குறிப்பிடுங்கள். இப்போது தங்கள் வெட்டுத் தீர்மானத்தை முன்மொழியுங்கள்.

திரு. கோ. இளங்கோவன்: தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், திருவையாறு அரசினர் மகளிர் உயர்நிலைப் பள்ளிக்கு, நகர்புறத்துக்கு வெளியே இடமொதுக்கிப் புதிய கட்டடம் கட்ட என்பது பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 17—கல்வி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,08,53,13,000--ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறன்.

1979 மார்ச் 26] [திரு. கோ. இளங்கோவன்]

திரு. ரெ. **வீ. சவுந்திரராஜன்:** தலைவர் அவர்களே, துவக்கப்பள்ளி, உயர் துவக்கப்பள்ளி ஆகியவைகளில் மாணவர்களின் விகிதாச்சாரப்படி ஆசிரியர்கள் நியமனம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க—

"மானியக்கோரிக்கை எண். 17—கல்வி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,08,53,13,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, பல கிராமங்களில் ஆரம்பப் பள்ளிகள் இல்லாமல், குழந்தைகள் படிக்க தூரப் பள்ளிகளுக்குச் செல்ல வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டுள்ளதை எடுத்துக்காட்ட—

'மானியக் கோரிக்கை எண். 17—கல்வி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,08,53,13,000—ல் ரூ. 100 குறைக்கவேண்டும்

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, பள்ளி நேரத்துக்கு வெளியே மத்திய அரசு வழங்கியுள்ள நிதியைப் பயன் படுத்தி, விரும்பும் மாணவர்களுக்கு இந்தி சொல்லிக் கொடுக்க வேண்டியதன் அவசியம்பற்றி விவாதிக்க—

"மானியக்கோரிக்கை எண். 17—கல்வி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,08,53,13,000-ல் ரூ. 100 என்ற குறைக்கவேண்டும்" வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

திரு. செ. சிவசாமி: தலைவர் அவர்களே, மதுரைச் தமிழ்ச் சங்கத்தில் 4 ஆண்டுகள் புலவர் படிப்புப் படித்துத் தேறியும் அம்மாணவி லேடி வில்லிங்டன் பயிற்சிக் கல்லூரியில் சேர்த்துக் கொள்ளாததைப்பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண். 17—கல்வி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,08,53,13,000 --ல் ரூ. 100 குறைக்கவேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை **முன்மொழிகிறேன்.**

Thiru M. **ARUMUGAM**: Sir, to discuss the failure of the Government to upgrade the Kulesakaram Government High School in Kanyakumari district into a higher secondry school, I move the following cut motion:—

That the allotment of Rs. 2,08,53,13,000 under Demand No. 17* Education be reduced by Rs. 100.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மானியக் கோரிக்கையும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்காக வைக்கப் பெற்றுள்ளன.

திரு. ஜே. ஜேம்ஸ் : பாயிண்ட் ஆப் ஆர்டர் சார், தப்பான வெட்டுத் தீர்மானம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை ரிமூவ் செய்வது நல்லது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

It refers to cut motion of Thiru Salem M. Arumugham. That particular school has already been upgraded and so there is no necessity for the cut motion.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானம் அது. தகவல் தெரியாமல் ஒருவேளை அவர் கொடுத்து இருக்கலாம். அது கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிலே ஒன்றுமில்லை.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : துணைத் தலைவர் அவர்களே, எனக்குக் கிடைத்த தகவலை வைத்துத்தான் நான் கொடுத்தேன். அதுதான் சரி என்று கருதுகிறேன்.

[முற்பகல் 11.30.]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவர்கொடுத்த நேரத்திலே நம்பி கொடுத்திருக்கலாம், உறுப்பினர் பதில் சொல்லி விட்டார். அதில் பிரச்னையே இல்லை. மாண்புமிகு கல்வியமைச்சர் ஏதாவது சொல்ல விரும்பினால் சொல்லலாம்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டில் கல்வி வளர்ச்சி என்கின்ற ஒரு விவர அறிக்கை* அவையின் முன்னால் வைக்கப்பட்டிருக்கிறது. அதை நான் படித்ததாகக் கருதி ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இங்கே, கல்வி மானியக் கோரிக்கையில் ரூ. 208 கோடிக்கு மேல் ஒரு பெருந்தொகையை அனுமதிக்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கை அவை முன்னாலே வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அதன் மீது நிறைய யோசனைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிற நேரத்தில், இந்த ஆண்டு துவக்கப்பட்டிருக்கிற மேல் நிலைப் பள்ளிகளைப் பற்றிய ஒரு அறிக்கையும் மாண்புமிகு உறுப்பினர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதிலே, மேல் நிலைப் பள்ளிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிற இந்த நிலைமையில் நாங்கள் சந்திக்கின்ற பல்வேறு சங்கடங்கள், சிரமங்கள் யதார்த்தமான ரீதியிலே தெரிவிக்கப்பட்டு, அவற்றைச் சமாளிப்பதிலே நாங்கள் என்னென்ன

* 280-366-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதையும் இனிமேற்பட்டும் எத்தகைய பிரச்னைகள் எழக்கூடும் என் பதையும் நாங்கள் அதிலே சொல்லியிருப்பதன் முக்கிய நோக்கமே மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்துழைப்பை, அறி வுரைகளை, ஆலோசனைகளை, அதன்மீது குறிப்பாகப் பெற வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் அவை தெரிவிக்கப்பட் டிருக்கின்றன. எனவே, அவை மீது குறிப்பான ஆலோசனை களை இந்த அரசு எதிர்பார்க்கிறது என்பதை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் ஆசிரியர் பிரச்னை சம்பந்த மாக ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தாலும், இன்றையதினம் இந்த மானியக் கோரிக்கை எடுக்கப்பட்ட காரணத்தாலே, அது சபையில் எடுத்துக் கொள்ளப்பட வில்லையென்றாலும், இந்தச் சமயத்திலே அதுபற்றி தங்கள் கருத்துக்களைச் சொல்ல அவர்கள் வாய்ப்பு பெற்றிருக்கிறார் கள் என்பதை எடுத்துச் சொல்லி, இந்தச் சமயத்திலே அவர்கள் தங்கள் கருத்துக்களைச் சொல்ல வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. கோ. இளங்கோவன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1979-80ஆம் ஆண்டுக்கான கல்வி மானியக் கோரிக்கையைப் பற்றி எனது கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன். எதிர்க்கட்சியில் உள்ளவர்களெல்லாம் எதிரியாக நினைத்துக் கொண்டு தங்களுடைய கருத்துக்களை சொல்லக் கூடாது என்று கல்வியமைச்சரவர்கள் சொல்லக் கூடும். நிறைகளை எடுத்துச் சொல்லக்கூடாது என்பதல்ல. குறைகளைக் கோடிட்டு காட்டவே ஒதுக்குகின்ற நேரம் போதவில்லையென்பதைத் தான் நான் இங்கே சொல்ல விரும்பு கிறேன். எனவே, கூடுதல் நேரம் சற்றுக் கொடுப்பார்களா னால், குறைகளோடு நிறைகளையும் சொல்வேன் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால், இந்த அவைக்கு வருகின்ற நேரத்தில் நண்பர்கள் சில கோரிக்கை களைக் கொடுத்திருக்கிறார்கள். உதாரணமாக, எனது கட் சியைச் சேர்ந்த அருமை நண்பர் இராசமாணிக்கம் அவர்கள் ஆசிரியர் கோரிக்கை என ஒன்றை என்னிடம் கொடுத்திருக் கிறார்கள். அதனைப் பார்க்கிறேன், சாதாரண கோரிக்கை தான் என்றாலும், ஏனோ, தெரியவில்லை, அங்கங்கே உள்ள அதிகாரிகள் அதை நிறைவேற்றத் தவறிவிடுகிறார்கள். தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அலுவலகம் முன்னால், ஆசிரியர்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். அவர்களது கோரிக்கைகள் என்ன? 1. நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கட்கு உரிய ஊதியம் நிர்ணயம் செய்ய அரசு வெளியிட்டுள்ள ஜி. ஓ. எம். எஸ். 65, கல்வி, நாள் 1979 ஜனவரி 11-ஐ நிறுத்திவைத்துள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் குறிப்பாணையை ரத்து செய்து உடன் அரசு

ஆணையை அமுல் படுத்தவேண்டும். 2. கல்வி ஆண்டின் இடையில் ஆசிரியர்களை மாற்றம் செய்யக் கூடாது என அரசு ஆணை ஜி. ஓ. எம். எஸ். 1913, கல்வி, நாள் 1978 அக்டோபர் 25 க்குப் புறம்பாக நாகை நகராட்சி ஆணையர் 10 ஆசிரியர்களையும் மாற்றம் செய்துள்ளதை உடன் ரத்து செய்யவேண்டும். 3. திருவாரூர் விஜயபுரம் உதவிபெறும் உயர் தொடக்கப்பள்ளியை நிர்வாகி இக்கல்வி ஆண்டுடன் மூடிவிட முடிவு செய்துள்ளதால் அதனை திருவாரூர் நகராட்சி மன்றம் ஏற்று நடத்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்ற நியாயமான மூன்று கோரிக்கைகளைக் கொடுத்துள்ளார்கள்.

அதே போல நான் வருகிறபோது ஒரு 70, 80 வயது இருக்கும் ஒரு பெரியவர், அவர் வந்து தஞ்சை மாவட்ட ஆசிரிய பென்ஷனர்கள் சங்கத்தின் சார்பாக என்னை இந்த அவையில் எடுத்துச் சொல்லவேண்டும் என்று சொல்லி சில கோரிக்கைகளை கொடுத்தார். அந்த கோரிக்கைகளில், மூன்றாவது ஊதியக் குழு பரிந்துரைகளின்படி ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கும், சிவில் பென்ஷனர்களுக்கும் வழங்கப்படுவது போல், அரசு செலவிலேயே பணவிடை அஞ்சல் மூலம் பென்ஷன் தொகையை அனுப்ப வேண்டும். 1964 ஏப்ரல் 1ஆம் தேதிக்கு முன் ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கும் குடும்ப பென்ஷன் திட்டத்தை விரிவுபடுத்தி வாரிசுகளுக்கு 21 வயது முடியும் வரை பென்ஷன் கொடுக்கப்படவேண்டும். சிவில் பென்ஷனர்களுக்கு வழங்கப்படுவது போலவே ஆசிரியப் பென்ஷனர்களுக்கும் இலவச மருத்துவ உதவி வழங்கப்பட வேண்டும். குறைந்த பட்ச ஆசிரியர் பென்ஷனை 1979 ஏப்ரல் 1 முதல் ரூ. 150 ஆக உயர்த்த வேண்டும். குடும்ப பென்ஷனர்களுக்கும் 1978 ஏப்ரல் 1 முதல் உயர்வு வழங்கப்பட வேண்டும். இது போன்ற சில கோரிக்கைகளை கொடுத்துள்ளார்கள். அந்த எல்லா கோரிக்கைகளையும் எடுத்துச் சொல்வதற்கு நேரம் இல்லாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜே. இராமசாமி)—தலைமை]

தொடக்கப்பள்ளிக் கல்வி என்று பார்த்தால், 1978-79-ஆம் ஆண்டில் இருந்த 33,130 தொடக்கப்பள்ளிகளில் படித்த மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 67.46 இலட்சமாகும் என்று சொல்கிறார்கள். உயர் தொடக்கப் பள்ளிகளையும் தொடக்கப்பள்ளிகளையும் சேர்த்து 16.83 லட்சம் மாணவர்கள் வருகிறார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. உங்கள் அறிக்கையிலேயே உயர் தொடக்கப்பள்ளியையும் தொடக்கப்பள்ளியையும் இணைத்துப் பேசியிருக்கிறீர்கள். பத்தாண்டுக் கல்வியை 1 முதல் 7 ஆண்டுகள் வரை தொடக்கப்பள்ளியாகவும் 8 முதல் 10 ஆண்டுகள் வரை உயர்நிலைப் பள்ளியாகவும் மாற்றிவிட்டால், தமிழ்நாட்டில் பிறக்கிற ஒவ்வொரு ஆணோ பெண்ணோ குறைந்த பட்ச

7-வது வரை கட்டாயமாக கல்வி கற்கிற சூழ்நிலை உருவாகும் அதை இந்த அரசு உருவாக்கித் தரவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இது போன்ற அரசு பள்ளிகளுக்கு ஏழை மாணவர்களுக்கு இலவசமாக பாடப் புத்தகங்கள் வழங்கப் படும் என்று சொல்லப்படுகிறது. பாடப் புத்தகங்கள் ஒரு புறம் இருக்கட்டும். நோட்டு புத்தகங்களுக்கு வாருங்கள். நோட்டுப் புத்தகங்கள் கிடைப்பதே இல்லை. ஏன் இந்த நெருக்கடி? மற்ற மாநிலங்களில் எல்லாம் தொழில் தகுதி பெற்றவர்களுக்கு, அந்த வேலையில் பயிற்சி பெற்றவர்களுக்கு மொத்தமாக அந்த கோட்டாவை நேரிடையாக அரசுகளே கொடுத்துவிடுகின்றன. அது சரியான முறையில் செயல் பட்டுக்கொண்டிருக்கிறது. தமிழக அரசு அரசு வெளியீடு களின் மூலம் வெளியிடக்கூடிய வெளியீடுகளுக்கு தொழில் தகுதி பெறாத பேப்பர் வியாபாரிகளுக்கு கொடுத்து விடு வதால், அவர்கள் அதை மீண்டும் தொழில் தகுதி பெற்றவர் களிடம் கொடுத்து வெளியிடுவதற்கு காலதாமதம் ஆவ தோடு, விலையும் கூடுதலாக இருக்கிறது என்ற கருத்து சொல்லப்படுகிறது. உதாரணத்திற்கு எடுத்துக் கொண்டால் ஆந்திராவில் 192 பக்கங்கள் கொண்ட அந்த புத்தகம் 1 ரூபாய்க்கு கிடைக்கிறது என்று சொன்னால், தமிழ்நாட்டில் 1.15க்குத்தான் கிடைக்கிறது. ஏன் இந்த விலையேற்றம். இப்படி இடைத்தரகரிடம் கொடுப்பதற்கு பதிலாக நேரிடை யாகவே தொழில் தகுதி பெற்றவர்களிடம் கொடுத்தால், விலையும் குறையும். காலதாமதத்தையும் தவிர்க்கலாம். அதனால் இதை மாநில அரசு நேரிடையாகவே தொழில் தகுதி பெற்றவர்களிடம் கொடுக்க வேண்டும் என்றுக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மேல்நிலைக்கல்வி, மேல்நிலைக் கல்வியைப் பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். பக்கம் 28-ல் முதல் பத்தியிலே ''1979 மார்ச் 9 நாளிட்ட 'இந்து' நாளிதழில் குறிப்பிடப்பட்டது போல ''அரசு மேல் நிலைப் பள்ளிகளில் +2 நிலைக் கல்விக்கென்றே தனியாக நவீன அறிவியற் சோதனைக் கூடங்கள் அமைக்கப்பட்டு வரு கின்றன'' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்து நாளிதழ் சொல்வதையெல்லாம் அரசு நிறைவேற்றி வருகிறது என்று பொருளா? இந்த மனப்பான்மையை நிச்சயமாக மாற்றிக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக 3வது பாராவில் பாடப்பிரிவுகள் என்று உள்ளன. அந்தப் பிரிவின் கீழ் 21 பாடங்கள் கொடுக்கப் பட்டு இதில் ஏதேனும் 4-ஐ எடுத்துக் கொள்ளலாம் என்று கூறப்பட்டிருக்கிறது. அதிலே 19-வது பிரிவு 'நுண்கலைகள்' —பின்வருவனவற்றில் ஏதேனும் ஒன்று — என்று

[திரு. கோ. இளங்கோவன்] [1979 மார்ச் 26

போட்டு (1) வரைதல்—வண்ணம்தீட்டுதல், (2) இந்திய இசை, (3) மேற்கத்திய இசை என்று போட்டிருக்கிறார்கள். நமது மாணவர்கள் இந்திய இசையைப் பற்றியும் மேற்கத்திய இசையைப் பற்றியும் தான் தெரிந்துக் கொள்வதற்கு வாய்ப்பு இருக்கிறதே ஒழிய தமிழ் இசைப் பற்றி தெரிந்துக் கொள்வதற்கு வாய்ப்பு இல்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். பண்டைய தமிழகத்தில் 4 பிரிவுகள் இருந்தன—குறிஞ்சி; முல்லை, மருதம், நெய்தல் பாலை என்று 4 வகையாகப் பிரித்தார்கள். குறிஞ்சி நிலத்திற்கு குறிஞ்சிப் பண், முல்லை நிலத்திற்கு முல்லைப்பண், மருதநிலத்திற்கு மருதப் பண், நெய்தல் நிலத்திற்கு நெய்தற் பண் என்றும், பெயரிட்டுப் பண்கள் இருக்கின்றன. அந்தப் பண்களைப் பற்றி தெரிந்துக் கொள்வதற்கு வாய்ப்பு இல்லை. இந்தச் சூழ்நிலை உயர் நிலைப் பள்ளிகளில் மட்டும் இல்லை. தமிழ்நாட்டிலேயே இசைக்கல்லூரி ஒன்று இருக்கிறது. சென்னையிலேயே அரசு உள்ள அந்த இசைக் கல்லூரியில் தமிழ் இசை ஆராய்ச்சி பிரிவு இருக்கிறதா என்று சொன்னால்—இல்லை—என்ற விடைதான் வருகிறது. திருவையாற்றிலுள்ள இசைக் கல்லூரியிலும் தமிழ் இசை ஆராய்ச்சி கிடையாது. இன்னும் புதிதாக ஒரு இசைக் கல்லூரியை மதுரையில் தொடங்க இருக்கிறார்கள் என்று தெரியப்படுகிறது. அங்கேயாவது தமிழ் இசை ஆராய்ச்சி நடக்குமா? தமிழ் இசை ஆராய்ச்சி தமிழ் இசைக்கல்லூரியிலாவது நடைபெறும் என்ற உறுதியை தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 11-40]

இந்த மேல் கல்வி வருகிற போது, அவற்றை பள்ளிகளில் வைப்பது என்று முடிவு எடுத்து இருக்கிறீர்கள். அதைப் பாராட்டுகிறேன். வரவேற்கிறேன். நன்றி செலுத்திக் கொள்கிறேன். ஆனால் அதே நேரத்தில் 11-வது வகுப்பு போகும் என்ற பயத்தில் என்ன செய்து இருக்கிறீர்கள். 7,000 பட்டதாரி ஆசிரியர்கள் வேலை இழப்பர் என்ற பயத்தால் 1—4—1970-க்கு பிறகு பணியில் அமர்த்தப்பட்டவர்களை தற்காலிக ஆசிரியர்களாக இது வரையில் வைத்து இருக்கிறீர்கள். இப்போது ஒரு அறிவிப்பு சொல்லியிருக்கிறீர்கள். 'த்ரு. தி. எம்.பி.எஸ்.ஸீ. அவர்கள் நிரந்தரப் பணியில் அமர்த்தப்படுவார்கள். இது சொல் அளவில் இல்லாமல் செயலளவில் செய்தல் வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போலவே கல்லூரி ஆசிரியர்கள் போராட்டம் நடத்தினார்கள். போராட்டம் நடத்திய பிறகுதான் அவர்களுடைய கோரிக்கைகள் ஓரளவிற்கு அரசின் கவனத்திற்கு வந்து இருக்கிறது. அந்த நேரத்தில் ஆசிரியர்கள் பழி வாங்கப் பட்டார்கள். சிறையில் அடைக்கப்பட்டார்கள், பல கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டார்கள். இன்று காலையில் ஒரு தந்தி வந்தது. அந்தத் தந்தியில் என்ன குறிப்பிடப்பட்டு இருக்கிறது

1979 மார்ச் 26] [திரு. கோ. இளங்கோவன்]

என்றால் தஞ்சாவூர் மகளிர் கல்லூரியில் (பிசிகல் இன்ஸ்டிரக்ட்ரஸ்) உடற்கல்வி ஆசிரியையாகப் பணியாற்றுபவர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டு இருக்கிறார்கள். காரணம் அவர்கள் போராட்டம் நடத்தினார்கள் என்பதற்காக. போராட்டம் நடத்துவதற்கு அனுமதி வழங்கிவிட்டு, பழி வாங்குவது என்றால் அப்படி பழிவாங்குவது சரியல்ல. பட்டதாரி ஆசிரியர்கள் 24—3—1979 கடற்கரை அருகே உண்ணாவிரதம் இருந்தார்கள். எனக்கு ஒரு அச்சம். முன்பெல்லாம் அண்ணா சதுக்கம் என்று அழைத்துக் கொண்டு இருந்தார்கள். எனக்கு இப்போது என்ன அச்சம் என்றால் அதை எங்கே 'உண்ணாவிரதச் சதுக்கம்' என்று அழைத்து விடுவார்களோ என்பதாகும். காலையில் ஒத்திவைப்புத் தீர்மானம் மீது பேசுகின்ற உறுப்பினர்கள் மூன்றாவது பே கமிஷன் அனாமலிஸ் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். நத்திங் ஈஸ் பர்பெக்ட் இன் திஸ் வொர்ல்ட்—இந்த உலகத்தில் எதுவுமே முழுமை பெற்றது இல்லை. அப்படி இருக்கும்போது 3-வது சம்பளக் குழு பரிந்துரை மட்டும் எப்படி 100-க்கு 100 சரியாக முழுமைப் பெற்றதாக இருக்க முடியும். அதிலே உள்ள குறைபாடுகளை எடுத்துச் சொல்லி, அதற்கு ஒரு ஒன்மேன் கமிட்டி அமைக்க வேண்டும் என்று அவர்கள் சொல்கிற போது, நாங்கள் அமைக்கத் தயாராக இல்லை, இல்லவே இல்லை என்று அமைச்சர் தெரிவிப்பது சரிதானா என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நேற்றைய தினம் பாலிடெக்னிக் ஆசிரியர்கள் 5 கோரிக்கைகளை அழகாக எடுத்து வைத்து இருக்கிறார்கள். அவற்றை இங்கே எடுத்துச் தெரிவித்தால் நேரம் அதிகம் ஆகும் என்கிற காரணத்தால் அந்தக் கோரிக்கை மனுவை அமைச்சரிடம் நான் கொடுத்து விடுகிறேன். இது போன்ற குறைகளைச் சொல்கிற போது அவற்றைக் கேட்டுக் கொண்டு, பரிகாரம் காண வேண்டுமே தவிர நாங்கள் அதற்காக குழு அமைக்கத் தயாராக இல்லை என்று சொல்வது சரியல்ல. இந்த நேரத்தில் நான் நினைவூட்ட விரும்புவது

''செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு.''

என்கிற திருக்குறளே ஆகும்.

அடுத்தபடியாக, பொது நூலகங்களைப் பற்றி நான் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய கன்னிமரா நூலகம் இருக்கிறது. இங்கே கொடுத்த புத்தகத்தில் கூட கன்னிமரா பொது நூலகம் என்று தான் போட்டிருக்கிறார்கள். ஆனால் அந்த நூலகத்தில் கன்னிமாரா பொது ஜன நூலகம் என்று எழுதி வைத்து இருக்கிறர்கள். எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்று இருக்கிற போது, அங்கும் தமிழ் வேண்டாமா? இதையும் அமைச்சர் அவர்கள் சரியான தமிழில் மாற்றி அமைக்க வேண்டும் என்று

கேட்டுக் கொள்கிறேன். நூலக நிர்வாகத்தில் ஏற்பட்டுள்ள ஒரு சில குறைகேடுகளை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எஜுகேஷன் டிபார்ட்மெண்ட்டில் இருந்து ஒரு அரசாணை போட்டு இருக்கிறார்கள். ஜி.ஓ. எம். எஸ். 2244, அதிலே என்ன சொல்லப் பட்டு இருக்கிறது என்றால் தகுதி உடையவர்களைத்தான் ரெபரன்ஸ் அசிஸ்டென்ட்டாக அங்கே நியமிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. தகுதி உடையவர்கள் என்று சொன்னால் அவர்கள் பட்டம் பெற்று இருக்க வேண்டும். நூலகத் துறையில் பட்டம் பெற்று இருக்க வேண்டும் இந்த இரண்டு பட்டங்களும் உடையவர்களைத் தான் அங்கே நியமிக்க முடியும். ஆனால் அங்கேயிருக்கிற நூலக இயக்குநர் என்ன செய்து இருக்கிறார் என்றால் தகுதி இல்லாத 5 பேரை நியமனம் செய்து இருக்கிறார். அப்படி தகுதி இல்லாதவர்களை நியமனம் செய்த நிகழ்வினை கல்விச் செயலர், துணை செயலாளர் கவனத்திற்கும் கொண்டு வந்தபின் இயக்குநர் அவர்களை பதவி இறக்கம் செய்கிறார். பிறகு கல்வித் துறையின் ஆணைக்கிணங்க பட்டம் பெற்ற 5 பேரை நியமிக்கிறார். அதற்கு அடுத்தபடியாக அண்மையில் என்ன நடந்து இருக்கிறது என்றால், தமிழ்நாடு ஜாயிண்ட் சிவில் சர்வீஸ் கவுன்சில் கூட்டத்தில் என்ன முடிவு எடுக்கப்பட்டு இருக்கிறது என்றால் பட்டதாரிகளையும் நியமிக்கலாம் அல்லது S.S.L.C. படித்துவிட்டு சர்டிபிகேட் வாங்கியவர்களையும் நியமிக்கலாம் என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. இந்த முடிவுக்கு எல்லாம் யார் காரணமாக இருக்கிறார்கள் என்று அமைச்சரவர்கள் அறிந்து, அந்த குறைகளைக் களைய வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போல மற்றொரு பணி இருக்கிறது. அந்தப் பணி 'பிப்லியாகிராபி அசிஸ்டண்ட் கிரேடு ஒன்' என்பதாகும். அந்தப் பணியில் தகுதி இல்லாத இருவர் முதலில் நியமிக்கப்படுகிறார்கள். பிறகு தகுதி இல்லாத காரணத்தால் அவர்கள் பதவியிலிருந்து இறக்கப்படுகிறார்கள். 4 அல்லது 5 மாதங்கள் கழித்து மீண்டும் அவர்களுக்கு அதே பதவி கொடுக்கப்படுகிறது. அதற்கு யார் காரணம் என்பதையும் கவனிக்க வேண்டும்.

அடுத்து, மாவட்ட நூலகங்களில் பணியாளர்கள் இருக்கிறார் கள். அவர்கள் அரசு ஊழியர்களாகக் கருதப்படவில்லை. அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் அவர்களுக்கு வழங்கப்படுவதில்லை. எல்லா சலுகைகளையும் அவர்களுக்கும் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இதை நான் சொல்லும் போது ஒரு குழு அமைத்திருக்கிறோம்; அது அறிக்கை தரும்; அதன்மீது ஆய்வு நடத்தி, அதன்பிறகு ஆணை பிறப்பிக்கப்படும் என்று சொல்வார்கள். நாம் ஒரு

குழு அமைப்பதே கால தாமதத்தை ஏற்படுத்துவதாகத்தான் பொருள்; உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் விவசாயிகள் பிரச்சினை. குழு அமைக்கப்பட்டது. கூட்டம் நடைபெற்றது. ஆலோசனை சொன்னார்கள். பரிசீலனை செய்யப்பட்டது. நிவாரணம் கிடைக்கவில்லை. போராட்டம் தொடருகிறது. கால தாமதத்திற்கு கணக்கு இல்லை. ஆக, குழு அமைக்கிறோம் என்பதே கால தாமதம் என்று பொருள். அதனால் குழுவின் அறிக்கை வந்த பிறகு பரிசீலனை செய்து விரைவில் ஆணை பிறப்பிக்கப்படும் என்பது மேலும் கால தாமதத்திற்கு வழி ஏற்படும். இப்படிப்பட்ட கால தாமதங்களைத் தவிர்க்க வேண்டும்; உடனடியாக ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தமிழ் வளர்ச்சி என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காக ஏறத்தாழ 70 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அதைப் பராட்டுகிறேன். வரவேற்கிறேன். ஆனால் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் தமிழ் வளருகிறதா அல்லது இந்தி வளருகிறதா என்ற சந்தேகம் ஏற்படுகிறது.

இங்கே சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் ஒரு காலண்டர் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில் மாதம் எங்கே இருக்கிறது, நாள் எங்கே இருக்கிறது என்று தெரியவில்லை. அதற்குக் காரணம் அந்த நாட்காட்டியில் மாதம், நாள் எல்லாம் இந்தியில் இருக்கிறது. இங்கே இருக்கிற உறுப்பினர்களில் சிலர் அதை கிழித்துப் போடலாமா என்றுகூட சொன்னார்கள். அந்த காலண்டர் யாரால் வாங்கப்பட்டது? ஏன் வாங்கப்பட்டது? எங்களுக்கு ஏன் அது கொடுக்கப்பட்டது என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

இங்கே 'வேயிங் மெஷின்' இருக்கிறது. அதிலே ஏறி நின்றால் கார்டு வருகிறது. அதிலே ஆங்கிலத்திலும் இந்தியிலும் இருக்கிறது; தமிழில் இல்லை. மெஷின் இருப்பது தமிழ் நாட்டில்; அதிலே தமிழ் எழுத்து கிடையாது.

அடுத்து, தமிழ் நாட்டிலிருந்து வெளிவருகிறது ஒரு பத்திரிகை. அந்த பத்திரிகை 'மாலை முரசு'. அதில் குடும்பக் கட்டுப்பாடு பற்றிய ஒரு விளம்பரம் வந்திருக்கிறது. அந்த விளம்பரத்தில், ஒரு குழந்தையை தந்தை தூக்கி வைத்திருக்கிறார். இரண்டாவது குழந்தை எப்போது என்று கேட்கப்படுகிறது. அதற்குப் பதில் 'முதல் குழந்தை ஆனா, ஆவன்னா படிக்கும்போது! குடும்பக் கட்டுப்பாட்டுக்கு நாங்கள் விரோதம் அல்ல. அந்த விளம்பரத்தில் 'ஆனா' என்ற எழுத்து எழுதப்பட்டிருக்கிறது; அது இந்தியில் எழுதப்பட்டிருக்கிறது. ஆகவே, எனக்கு இருக்கிற சந்தேகம் இனி இங்கே 'ஆனா', 'ஆவன்னா' இந்தியில் கற்பிக்கப்போகிறார்களா என்பது தான். இப்படிப்பட்ட நிலைமை இருக்கலாமா? பொறுப்பிலே இருக்கிறவர்கள் அதை கவனிக்காமல் என்ன செய்கிறார்கள்?

திரு. இரா. முத்தையா : சார், பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு விளம்பரத்தைப் படித்துக் காட்டினார்கள். அந்த விளம்பரத்தை வெளியிட்டவர் யார் என்று அடியிலே குறிப்பு இருக்கும். அதையும் குறிப்பிட்டால் நல்லது.

திரு. கோ. இளங்கோவன் : யார் விளம்பரம் செய்தாலும் சரி. தமிழ் நாட்டிலே செய்யப்படும் விளம்பரம் எல்லாம் இந்தியில் ; கொடுக்கும் பதில் எல்லாம் இந்தியில். மாண்புமிகு உறுப்பினர் முத்தையா அவர்கள் அதை வரவேற்கிறார்களா ? ஆளும் கட்சியினர் அதை வரவேற்கிறார்களா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். (திரு. இரா. முத்தையா எழுந்தார்) சார், ஐ ஆம் நாட் ஈல்டிங்.

அடுத்து, படிக்கின்ற மாணவர்களுக்கு படிப்பை சரியாகச் சொல்லிக் கொடுக்காவிட்டாலும், ஆசிரியர்கள் சரியாகச் சொல்லி கொடுக்கின்ற வாய்ப்பு இருக்கிறதா என்று பார்த்தால் அதுவும் இல்லை. மாணவர்கள் தாக்கப்படுகிறார்கள். தியாகராயர் கல்லூரி மாணவர்கள் தாக்கப்பட்டார்கள். பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் தாக்கப்பட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் சாதிக் பாட்சா அவர்கள் ஒரு விவரத்தை வேதனையோடு சொன்னார்கள். புதுக் கல்லூரி மாணவர்கள் தாக்கப்பட்டனர்.

[முற்பகல் 11-50.]

கஞ்சா சாப்பிடுகிறவர்கள் அந்த மாணவர்களைத் தாக்குகிறார்கள். மதுவிலக்குச் சட்டம் கூட அமலில் இருக்கிறது. இருந்தாலும் இப்படிப்பட்டவர்களால் மாணவர்கள் தாக்கப்படுகிறார்கள். இதெல்லாம் நியாயம்தானா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

அடுத்து, மாணவர்களின் உதவித் தொகை பற்றி ஒன்றைச் சொல்கிறேன். மாணவர்கள் பி.ஏ., அல்லது பி.எஸ்.சி. படித்து முடித்த பிறகு மூன்றாண்டு காலத்திற்கு உதவித்தொகை வழங்கப் படலாம் என்று விதி இருக்கின்றது. ஆனால் எம்.ஏ. அல்லது எம்.எஸ்.ஸி. இரண்டாண்டுகள்தான் படிக்கிறார்கள். அதன் பிறகு எம்.ஃபில் படிக்க வேண்டும் என்றால் அவர்களுக்கு உதவிப் பணம் கிடைப்பது இல்லை. எம்.எஸ்ஸி-க்குப் பிறகு எம்.ஃபில் ஒரு வருடம் படிக்க வேண்டும். அதற்கு உதவிப் பணம் கொடுப்பதில்லை. ஆனால் பிற மாநிலங்களிலே அவ்வாறு படிப்பதற்கு உதவிப் பணம் கொடுக்கப்படுகிறது. ஆகவே, அது மாதிரி இங்கேயும் தரப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து இன்னும் நாடகம், கலை ஆகியவற்றைப் பற்றி நிறையக் கருத்துக்களைச் சொல்லலாம். இருந்தாலும் நேரம் இல்லாத காரணத்தால் ஒன்றை மட்டும் சொல்கிறேன். அதாவது

அரசு கலைஞர்களை நியமனம் செய்திருக்கிறார்கள். அவர்களுக்கு திறமை இல்லையென்று கூட சொல்லமாட்டேன். அந்த அரசு கலைஞர்களுக்கு மாதம் ரூ. 1,000 என்று அரசு கூறிவந்தபோது மக்கள் எத்தகைய உணர்வுக்கு ஆளாகிறார்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. சென்ற ஆண்டு ஆஸ்தான கவி நியமனம் நடைபெற்றது. அரசுக் கவிஞர் என்று சொல்லப்படுகிறபோது அவர்கள் முறையாக நடந்துகொள்ள வேண்டாமா? மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கூடச் சொன்னார்கள், அரசவைக் கவிஞர் அல்ல அரசுக் கவிஞர்தான் என்று. அவர்கள் அந்த விளக்கம் தந்ததற்காக நன்றி. அப்படி அரசுக் கவிஞராக இருந்தாலும் அரசவைக் கவிஞராக இருந்தாலும் அவர்கள் முறையாக நடந்து கொள்ள வேண்டும். இப்போது கூட ஒரு போராட்டம் நடந்தது. அதன் காரணமாக விடுதலையின் ஆசிரியர் திரு. வீரமணி போன்றவர்கள் கைது செய்யப்பட்டார்கள். அது குறித்து ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தாலும், கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்தாலும் அதற்குச் சரியான நடவடிக்கைகள் எடுப்பதில்லை. இந்த நிலையிலே நீங்கள் யாருக்கு பாதுகாப்பு தருகிறீர்கள்? எடுப்பது பெரியார் விழா, ஆனால் இழித்தும் பழித்தும் எழுதப்படுவதோ பெரியார் குடும்பத்தைப் பற்றி. இதை எல்லாம் இந்த அரசு வரவேற்கிறதா? என்று கேட்டு அமர்கிறேன். வணக்கம்.

*திரு. ஆர். சண்முகம்: மாண்புமிகு சட்டப் பேரவை மாற்று தலைவரவர்களே, 1979-80ஆம் ஆண்டிற்கான கல்வி வளர்ச்சி மானியக் கோரிக்கையின் மீது சில கருத்துக்களைக் கூறலாம் என்று நினைக்கிறேன். 1979-80ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் கல்விக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பது பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது.

1979-80ஆம் ஆண்டில் கல்விக்காக ரூ. 209 கோடி ரூபாய்களை ஒதுக்கி இருப்பதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். வரவு-செலவுத் திட்டத்தில் மற்ற எல்லாத் துறைகளைக் காட்டிலும் கல்வித் துறைக்கு அதிகத் தொகை அளிக்கப்பட்டுள்ளதை நாம் அனைவரும் பாராட்டாமல் இருக்க முடியாது. நாம் கல்வித் துறைக்காக தொன்று தொட்டு 1975-76ஆம் ஆண்டில் 123 கோடி ரூபாயும், 1976-77-ல் 143 கோடி ரூபாயும், 1977-78ல் 163 கோடி ரூபாயும் 1979-80ல் 191 கோடி ரூபாயும் கல்விக்காக நாம் செலவு செய்திருக்கிறோம். அப்படி பல கோடிகளை நாம் கல்விக்காகச் செலவு செய்திருந்தாலும் நம்முடைய தமிழகத்தில் இருக்கின்ற கல்வித்தரமானது உயர்ந்திருக்கிறதா என்று கேட்டால், கிராமப் பகுதிகளிலே இருக்கின்ற மக்கள் எல்லாம் அதிருப்தி அடைந்திருக்கின்ற நிலையினைத்தான் பார்க்கிறேன், இந்த நிலைமை ஏன் என்று தெரியவில்லை. கிராமப்பகுதிகளிலே உள்ள பள்ளிகளில் மாணவர்கள் ஒன்று முதல் 5 வரை முறையாகப் படிப்பதில்லை என்பதை எல்லாம் கவனித்து அரசு நல்ல பல திட்டங்களை வகுத்திருக்கிறார்கள். அதன்படி 1972 முதல் 1977 வரை எடுக்கப்பட்ட புள்ளிவிவரப்படி

முதல் வகுப்பிலே நூறு மாணவர்கள் சேருவார்களேயானால் அவர்களில் 58 பேர்தான் முறையாக 5-வது வகுப்பு வரை படிக்கிறார்கள் என்றும் மீதமுள்ள 42 மாணவர்கள் இடையிலேயே நின்றுவிடுகிறார்கள் என்றும் எந்தக் காரணத்தினால் அவர்கள் அவ்வாறு நின்றுவிடுகிறார்கள் என்றும் கண்டறிந்து இவற்றை எல்லாம் சீர்திருத்துவதற்கு நல்லபல திட்டங்களை எல்லாம் வகுத்து அந்தத் திட்டங்களின் மூலமாக எல்லா மாணவர்களும் பயிற்றுவிக்கப்படுவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அப்படி ஏற்படுத்தப்பட்ட நல்ல திட்டங்களில் உணவு வழங்கும் திட்டம், இலவசமாகப் பாடப் புத்தகங்கள் வழங்கும் திட்டம், மூன்றாவது வகுப்பு வரையிலே எந்தவிதமான தேர்வும் இல்லாமலேயே மேல் வகுப்பிற்கு மாற்றும் திட்டம் ஆகியவற்றை நான் வரவேற்கிறேன். இந்த உணவுத் திட்டத்தின் மூலமாக ஒரு ஆண்டுக்கு 5.37 கோடி ரூபாய் இந்த அரசு செலவு செய்கிறது. இதனால் 21.90 இலட்சம் மாணவர்கள் பயனடைகிறார்கள். மாநில அரசு இந்த மாணவர்களுக்கு 10 காசு வீதமும் ஊராட்சி மன்றம் ஒரு மாணவனுக்கு 5 காசு வீதமும் 200 நாட்களுக்கு, இதிலே எவ்வளவு மாணவர்கள் பங்கேற்கிறார்களோ அவ்வளவு பேர்களுக்கும் ஒட்டுமொத்தமாக செலவு செய்யத் தயாராக இருக்கிறது. கேர் நிறுவனம் 20 ஆயிரம் டன் உணவைக் கொடுப்பது பயனுள்ளதாக இருக்கிறது. இலவசமாகப் புத்தகங்கள் வழங்கப்படுவதால் ஏறக்குறைய 13 இலட்சம் மாணவர்கள் பயனடைகிறார்கள்.

ஊராட்சி ஒன்றியங்களிலே பணி புரிகின்ற ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்கப்படுவதில் முறைகேடுகள் இருக்கின்ற காரணத்தால் அவர்கள் சரிவரத் தங்களது வேலையைச் செய்யவில்லை என்று மக்கள் மத்தியிலே கருதப்படுகிறார்கள். அதற்கான நான் சில கருத்துக்களைக் கூறலாம் என்று நினைக்கிறேன். முதன் முதலில் 1978ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன். ஜி.ஓ. எண். 130-ல் போட்டார்கள். அந்த ஜி.ஓ.வில் சரிவரத் தெளிவாக கருத்துக்கள் வெளியிடாததன் காரணமாக, ஒரு சில ஒன்றியங்களிலே அது செயல்படுத்தப்பட்டும், மற்றும் ஒருசில ஒன்றியங்களிலே செயல்படுத்த முடியாத காரணத்தால், ஆசிரியர்களிடையே மற்றவர்கள் வாங்கி விட்டார்கள், நாம் வாங்கவில்லையே என்ற ஒரு கருத்து நிலவுகிறது. அப்படி இருக்கும்போது, அதற்குப் பின்னால் இன்னொரு ஜி.ஓ. எண் 65 வெளியிடப்பட்டிருக்கிறது அந்த ஜி.ஓ. வும் சில இடங்களில் நிறைவேற்றப்பட்டு, மற்றும் சில இடங்களில் நிறைவேற்றப்படாமல் இருக்கின்ற காரணத்தால், மாவட்ட ஆட்சித் தலைவர் இந்த உத்தரவை நிறுத்தி வைக்குமாறு உத்தரவு பிறப்பித்திருக்கிறார். இதுபோன்ற உத்தரவுகளை போடும்போது, அவைகள் தெளிவாக, கருத்து விளக்மாக இல்லாத காரணத்தால், இனிமேல் இந்த ஜி.ஓ.-க்கள் போடும்போது, தெளிவாகப் போடும்படி கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தப் பள்ளிக்கூடங்களில் ஏ, பி பிரிவுகள் இயங்கிக் கொண்டு வந்திருந்தது. இதிலே பல மன மாச்சரியங்களும், இன்னல்களும் இருந்து வந்தது. நம்முடைய அரசு பதவி ஏற்ற பிறகு, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இந்த ஏ, பி பிரிவுகளை ஒன்றாக இணைத்து, அவைகளுக்கான சட்ட திட்டங்களை வகுத்ததைப் பாராட்டாமல் இருக்க முடியாது. ஆகவே, அவர்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்போது, படித்தவர்களுக்கே வேலையில்லாமல் இருக்கின்ற போது, படித்து கொண்டிருக்கும் மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கக்கூடிய நடவடிக்கையிலே தொழிற் கல்வி படிக் கின்ற மாணவர்களுக்கு, படித்துவிட்டு வந்தவுடனே நிச்சயமாக வேலை கிடைக்கும் என்ற ஒரு புத்துணர்ச்சியைப் பெற்றிருக் கிறார்கள். அதற்காக இந்த அரசை நாம் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம். படித்துவிட்டு அவர்கள் வெளிவரும்போது, அன்றாடம் 2, 3 ரூபாய் சம்பாதிக்கவழி செய்யப்பட்டிருக்கிறது. நிச்சயமாக அதை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மாற்றுத்தலைவர் அவர்களின் அனுமதியோடு, என்னுடைய தொகுதியிலே உள்ள ஒன்றிரண்டு குறைபாடுகளைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அதற்கு அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய பகுதியிலே பள்ளிக்கூட கட்டிடங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டாமல் இருக்கின்றன. அவைகள் மாற்றியமைக்கப் படவேண்டும். குறிப்பாக, கடம்பத்தூர், திருவாலங்காடு, திருத்தணி ஆகிய ஒன்றியங்களிலே உள்ள பள்ளிகள் கடந்த இரண்டு ஆண்டுகளாக மாற்றியமைக்கப்படாமல், மாட்டுத் தொழு வங்களைப்போல் காட்சியளிக்கின்றன. பள்ளிக்கூடங் களுக்கு மான்யம் ஓரளவுக்கு வழங்கப்பட்டாலும், இப்போது இருக்கின்ற சட்டம் காரணமாக, இந்த ஊராட்சிகளிலே உள்ள பள்ளிகள் அபிவிருத்தி செய்யப்படாமல் இருக்கின்றன. காரணம், இந்தப் பள்ளிக்கூடங்களைக் கட்டுவதற்கு யாரும் முன்வருவது கிடையாது. அரசு தரப்பிலே ஆயிரம் செங்கற்களுக்கு ரூ. 80, ரூ. 85 தரவேண்டுமென்று சொல்கிறார்கள். ஆனால் வெளியிலே விற்பதோ ஆயிரம் செங்கற்கள் ரூ. 180. இதன் காரணமாக யாரும் இத்தகைய பள்ளிக் கட்டிடங்களைக் கட்டுவதற்கு முன் வருவது கிடையாது. ஆகவே, அங்குள்ள ஊராட்சித் தலைவர்கள் நல்ல முறையிலே இதனை நிறைவேற்றுவதற்குத் தகுந்த வகை யிலே இந்த அரசு உத்தரவு போடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், கடைசியாக வாலாஜாபாத் இந்துமத பாடசாலை பற்றி எல்லோரும் அறிந்ததே. இதைப்பற்றி உறுப்பினர்களுக்கும் அமைச்சர்களுக்கும், மற்றவர்களுக்கும் நன்கு தெரியும். ஆனால் அந்த பாடசாலை ஏனோ, இப்போது மூடப்பட்டிருக்கிறது. அந்தப் பாடசாலையிலே கற்றவர்கள் இன்று தமிழகத்திலே பல

பெரிய பொறுப்புகளிலே இருக்கிறார்கள். அவர்களும், மற்றவர்களும் இந்த வாலாஜாபாத் இந்துமத பாடசாலையைத் திறக்க வேண்டுமென்று சொல்வதால், அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் தெரிவித்து கொள்கிறேன் அவசியம் இந்த இந்துமத பாடசாலையைத் திறப்பதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[நண்பகல் 12-00.]

கடைசியாக இன்னொன்றையும் கூற நான் கடமைப்பட்டிருக்கிறேன். திருவொற்றியூர் தொகுதியைச் சேர்ந்த ஆண்டார் குப்பம் என்ற இடத்தில் பள்ளிக்கூடம் ஒன்று நடந்து வருகிறது. இதுவரை எந்த அதிகாரிகளும் இதில் போய் ஆய்வு செய்யவில்லை என்று தெரிகிறது. இந்தப் பள்ளியிலுள்ள கட்டிடம் இடிந்து விழும் நிலையில் இருக்கிறது. அந்தக் கிராமத்திலுள்ள மக்கள் எல்லாம் இந்தப் பள்ளிக்கு தங்கள் குழந்தைகளை அனுப்ப மறுக்கிறார்கள் என்ற செய்தியும் வந்துகொண்டிருக்கிறது. ஆகவே அதிகாரிகள் இந்த இடத்தைப் போய் பார்த்து, அங்கே நல்லதொரு கட்டிடத்தை கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் திருவொற்றியூர் பகுதி சுற்றிலும் தொழில்கள் நிறைந்த இடமாக இருப்பதால், இங்கு ஒரு தொழில் நுட்பக் கல்லூரியை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்று செங்கற்பட்டு மாவட்டம் மாமல்லபுரத்தில்—சதுரங்கபட்டினத்தில் உள்ள பள்ளிக்கு நல்ல முறையில் கட்டிடம் கட்டிக் கொடுக்க வேண்டும். அத்துடன் திருத்தணியில் உள்ள பெண்கள் உயர்நிலைப்பள்ளி நடந்து வருகிறது. இது இரு பிரிவுகளாக இருந்தும், இதற்குப் போதுமான கட்டிடம் இல்லை. இதையும் அரசு ஆராய்ந்து தனியாக கட்டித் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(மணியடிக்கப்பட்டது)

<u>திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்</u>: பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, அவை முன் இருக்கும் கல்வி மான்யக் கோரிக்கையின் மீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

''அறம், பொருள், இன்பம், வீடும்பயக்கும்
புறங்கடை நல் இசையும் நாட்டும்
உறுங்கவல் ஒன்று உற்றொழியும்—கைகொடுக்கும்
கல்வியின் ஊங்கில்லை சிற்றுயிர்க் குற்ற துணை.''

என்று ஔவையார் அவர்கள் பாடிச் சென்றார்கள். இன்றுள்ள நிலைமையில் கல்வியை நினைத்தாலும் வருத்தமாக இருக்

1979 மார்ச் 26] [திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்]

கிறது, கல்வியை படிக்கின்ற மாணவர்களை நினைத்தாலும் வருத்தமாக இருக்கிறது. எஸ். எஸ். எல். சி., பி.யு.சி. பட்டப் படிப்பு, மேல் பட்டப்படிப்பு படித்துவிட்டு லட்சக்கணக்கானவர்கள் வேலையில்லாமல் வெளியில் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வேலைவாய்ப்பு தரவேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது. அந்தப் பொறுப்பை நன்கு உணர்ந்து செயல்பட வேண்டும். இது நான் ஏன் சொல்கிறேன் என்றால் படித்துவிட்டு பல்லாயிரக்கணக்காண பேர்கள் இன்று வேலையில்லாமல் மனம் நொந்து போய் வருந்தி கொண்டிருக்கிறார்கள். இப்போது எல்லோரும் படிப்பதற்கு காரணமே உத்தியோகத்தை நம்பித்தான். சும்மா படிக்கவைத்தேன் என்று சொல்வதை நம்பமுடியாது இதில் ஏழைகளாக இருந்தாலும் சரி, பணக்காரர்களாக இருந்தாலும் சரி, உத்தியோகத்தை நம்பித்தான் படிக்க வைக்கிறார்கள். இன்றைய கல்வி அந்த நிலேயில்தான் இருக்கிறது. இதை உணர்ந்து பார்க்க வேண்டிய பொறுப்பு இந்த அரசினுடையது.

மேலும் இப்போது போகிறபோக்கைப் பார்த்தால் இந்த அரசு ஒரு மொழித் திட்டத்தை அமுலுக்கு கொண்டு வந்துவிடுமோ என்று அஞ்ச வேண்டிய நிலைமை இருக்கிறது. தமிழ் என்பது அவசியம் தான். எங்கும் தமிழ், எதிலும் தமிழ் தமிழில் தான் அதிகாரிகள் கையெழுத்து போடவேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பது, இவையெல்லாம் வரவேற்கக் கூடியது தான். கோர்ட்டுகளில் தீர்ப்புக் கூறுவதும் தமிழில் இருக்க வேண்டும் என்று வந்திருக்கிறது. அதுவும் வரவேற்கக் கூடியது தான். ஆனால் இங்கிலீஸ் இல்லாமல் எதுவும் இந்த நாட்டில் நடைபெற முடியாது என்பது என்னுடைய எண்ணம். இதை ஏன் சொல்கிறேன் என்றால், ஸ்ரீலங்காவில், சிங்கள மொழி தமிழ் மொழி இருக்கின்றன, அத்துடன் ஆங்கிலமும் கட்டாயமாக படிக்கவேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறார்கள். ஆங்கிலம் இருந்தால்தான் நாடு முன்னேற்றம் அடைய முடியும் என்பது அவர்களுடைய கருத்து. அதற்கு தகுந்தவாறு உத்தரவிட்டிருக்கிறார்கள். நமது அரசு பி.யு.சி. வரை எந்தவிதமான கட்டணமும் செலுத்தவேண்டாம் என்று சொல்லியிருந்தது ஆனல் இப்போது ஹையர் எஜுகேஷன் அதாவது பிளஸ் 2 முறை ஆரம்பித்த பின்னால் இங்கீலீஸ் மீடியத்திற்கு சம்பளம் வசூலிக்கப்படுகிறது. • முதல் வருடத்திற்கு மாதம் 20 ரூபாய் வீதம் வசூலிக்கப்படுகிறது. இதை நிறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எப்படியிருந்தாலும் இங்கிலீஸ் போய்விடும் என்று கருத முடியாது. ஒரு சமயம் நமது மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள், தமிழ் படித்தவர்களுக்கு என்ன வேலை வாய்ப்பு என்று கேட்டபோது, வேலைகளை அவரவர்கள் தேடிக்கொள்ளவேண்டியதுதான் என்று சொன்னார்கள், இங்கிலீஷ் பாண்டித்தியம் இருந்தால் கம்பெனியிலாவது அல்லது வேறு மாநிலத்திலாவது ஏதா

வது வேலை பார்த்துக்கொள்ள முடியும். ஆனால் தமிழில் படித்திருந்தால் வேலைவாய்ப்பு கிடைக்கிறதா என்றால் அதுவும் இல்லை. இதே மாதிரிப் போய்க் கொண்டிருந்தால் நாட்டினுடைய நிலைமை இன்னும் மோசமாக போய்க்கொண்டிருக்கும். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சொன்னர்கள்.

208 கோடி ரூபாய் இன்றைக்கு கல்விக்காக செலவு செய்யப்பட இருக்கிறது என்று அந்தக் காலத்திலே காங்கிரஸ் கட்சி 200 கோடி ரூபாய் மொத்த வருமானத்தில், பல திட்டங்கள் தீட்டியது. இந்த மாதிரி போடும் போது; மேற்கு வங்காளம், கேரளா ஆகிய மாநிலங்களில் எல்லாம் பட்டதாரிகளுக்கு மாதா மாதம் மானியம் உதவித் தொகைக் கொடுக்கப்படுவதாகக் கேள்விப்படுகிறேன். அதேமாதிரி படித்த ஏழை பட்டதாரிகளுக்கு நாமும் நிதி உதவி செய்ய வேண்டும். காரணம், ஏழை மாணவர்களின் பெற்றோர்கள் எல்லாம் நம் பிள்ளைகள் படித்துவிட்டு, பெரிய உத்தியோகத்திற்கு வருவார்கள். சம்பளம் கிடைக்கும் குடும்பத்தை காப்பாற்றுவான் என்று கனவு கண்டு கொண்டிருக்கிறார்கள். அந்தக் கனவுகள் எல்லாம் இன்றைக்கு கானல் நீராக இருக்கிறது எனவே இந்த அரசு அவர்களுக்கு எல்லாம் வேலை வாய்ப்பு கொடுக்க சிந்திக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த ஆசிரியர்கள் பற்றி நான் கேள்வி கேட்டு, பதில் அளிக்கும்போது நமது கல்வி அமைச்சர் அவர்கள், ஒரு ஆண்டிற்கு முன்பு செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் 20,000 பேர்களுக்குமேல் வேலையற்று இருக்கின்றார்கள் பட்டதாரி ஆசிரியர்கள் 8,000 பேர்கள் இருக்கிறார்கள்; தமிழாசிரியர்கள் 4,000 பேர்கள் இருக்கிறார்கள்; உடற்பயிற்சி ஆசிரியர்கள் 4,000 பேர்கள் இருக்கிறார்கள் என்று கணக்கு சொன்னார்கள் ஆனால் சென்ற ஆண்டு நிதி நிலை அறிக்கையிலே ஆயிரம் செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்குத்தான் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது; அதே போல் 200 தமிழ் ஆசிரியர்களுக்குத் தான் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. அதேபோல் இந்த ஆண்டு, 1000 செக்ண்டரிகிரேடு ஆசிரியர்களுக்கும், 200 உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, இப்படி 20,000 ஆசிரியர்கள் வேலையற்று இருக்கிறார்கள் என்று சொல்லும்போது, வருஷத்திற்கு 1000 பேர்களுக்குத் தான் வேலை வாய்ப்பு என்று சொன்னால், எத்தனை ஆண்டுகளில் பூர்த்தியாகும் என்று சொல்ல முடியாது. எனவே, இந்த விவரங்களை யெல்லாம் கவனித்து அவர்களுக்குக்கெல்லாம் வேலை வாய்ப்பு அளிக்க வேண்டியது மிகமிக அவசியம். கல்வியின் அஸ்திவாரம் ஆரம்பப் பள்ளி, உயர் ஆரம்பப் பள்ளிகள்தான்.

இந்தப் பள்ளிகளிலே எல்லாம் ஒரு வகுப்பிலே 50, 60 பிள்ளைகள் இருக்கிறார்கள். மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, இந்த அரசு ஆரம்பப் பள்ளியாக இருந்தாலும், உயர் ஆரம்பப் பள்ளியாக இருந்தாலும் ஒரு ஆசிரியருக்கு இத்தனை குழந்தைகள் தான் இருக்கவேண்டுமென்று நிர்ணயிக்க வேண்டும். அப்படி செய்தால்தான், ஆசிரியர்கள் நல்ல முறையிலே பணியாற்ற முடியும். நம் வீட்டிலேயே 4, 5 குழந்தைகள் இருந்தால், பொறுக்கமுடியாமல் $3\frac{1}{2}$ வயதுள்ள குழந்தையை, 5 வயது என்று சொல்லி பள்ளிக் கூடங்களிலே கொண்டுபோய்ச் சேர்க்கிறோம் இது பெரிய தப்பு. 5 வயது பூர்த்தியானால்தான் பள்ளிக்கூடங்களிலே சேர்க்கவேண்டும் என்று கண்டிப்பாக ஒரு உத்தரவு போட வேண்டும். அப்போதுதான் அந்தக் குழந்தைகளுக்கு கற்கும் தன்மை ஏற்படுகின்றது என்பதை நான் இந்த சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்கிறேன்.

அதோடு, தனியாருடைய பள்ளிகளிலேயும், உயர்நிலைப் பள்ளிகளிலேயும் வேலை செய்கின்ற ஆசிரியர்களுக்கு குறித்த நேரத்தில் சம்பளம் கிடைப்பதில்லை; அப்படி கொடுப்பதும் இல்லை. சென்ற ஆண்டு, தீபாவளிக்குகூட, தீபாவளி கழிந்த பிறகுதான் அவர்களுக்கு சம்பளம் கொடுக்கப்பட்டது. அதே போல், மெடிகல் லீவ் சாலரி, சரண்டர் லீவ் சம்பளம், பி.எப். எல்லாம் தனியார் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகளிலே உள்ள ஆசிரியர்களுக்கு சரியாகக் கிடைப்பதில்லை. எனவே, இவைகள் மற்றவர்களுக்கு எப்படி கிடைக்கிறதோ, அந்த மாதிரி கிடைக்கும்படி செய்ய வேண்டும். அல்லது அரசே நேரடியாக வழங்க வேண்டும்.

நல்லமுறையிலே இந்த ஆசிரியர்கள் வேலை செய்ய வேண்டுமென்றால், ஒரு ஆசிரியருக்கு இவ்வளவு மாணவர்கள் என்றிருக்க வேண்டும். உயர் ஆரம்பப் பள்ளி, அதாவது ஹையர் எலிமெண்டரி ஸ்கூல்களை எடுத்துக் கொண்டால் 350 மாணவர்கள் உள்ள ஒரு உயர் துவக்கப்பள்ளிக்கு ஒரு பட்டதாரி ஆசிரியர், ஒரு தமிழ் ஆசிரியர், ஒரு உடற் பயிற்சி ஆசிரியர், ஒரு அட்டெண்டர் என்று போட்டால், அது நல்ல முறையிலே இயங்குமுடியும். ஹைஸ்கூலை எடுத்துக் கொண்டால் 100 பிள்ளைகள் இருந்தாலே ஒரு கிளார்க் போடுகிறார்கள். ஆனால், ஒரு உயர்துவக்கப்பள்ளியில் 1000 பிள்ளைகள் இருந்தாலும் ஒரு அட்டென்டர் கூட போடுவதில்லை. அதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

அதேபோல், நிதி வசதியின்றி இப்போது பல ஹையர் செகன்டரி பள்ளிகள் இருக்கின்றன. அப்படி நிதி வசதியின்றி இருக்கும் அந்தப் பள்ளிகளிலே லேபாரடரி வசதியில்லாமல், நூல்நிலைய வசதியில்லாமல் இருக்கின்றன. சரியான தேவையான ஆசிரியர்களும் இல்லை. எனவே, கண்டிப்பாக இந்த அரசு முயற்சி எடுத்துக்கொண்டு, அங்கே

எல்லாம் லேபாரடரி வசதிகள், நூல்நிலைய வசதிகள் செய்து தரவேண்டும். இதிலே, தனியார் பள்ளிகள், அரசுப் பள்ளிகள் என்று பாகுபாடு செய்ய வேண்டிய அவசியம் இல்லை. மேலும் இந்தத் தனியார் பள்ளிகளுக்கு 1971க்குப் பிறகு ஆரம்பிக்கப் பட்டவைகளுக்கு மானேஜ்மெண்டு கிராண்டு கிடையாது என்று சொல்லப்படுகிறது. அந்த கிராண்டு கிடைப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

[பிற்பகல் 12.10]

சிறந்த தமிழ்ப் புத்தகங்களுக்குப் பரிசு கொடுத்து வந்தார்கள். அதுவும் நிறுத்தப்பட்டதாகத் தெரிகிறது. மீண்டும் சிறந்த புத்தகங்களுக்குப் பரிசுகள் வழங்கவேண்டும். கரூர் தாலுகாவில் பரமாத்தி உயர்நிலைப் பள்ளிக் கட்டடத்திற்காக 35,000 ரூபாய் வசூலிக்கப்பட்டு கல்வி இலாகாவிடம் கொடுத்து ஆறு ஏழு ஆண்டுகளாகியும் கட்டிடம் கட்டித்தரப்படவில்லை. அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் பொன்னமராவதி ஒன்றியத்தில் சடையப்பட்டி கிராமத்தில் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட உயர்நிலைப் பள்ளிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் 10,000 ரூபாய் தருவதாகச் சொன்னார்கள். ஆனால் ஐயாயிரம் ரூபாய்தான் கொடுத்திருக்கிறார்கள்.

நேரம் இல்லாத காரணத்தால் பல விவரங்களை எடுத்துச் சொல்ல முடியவில்லை. பத்து நிமிஷத்தில் எதைப் பேசுவது? முன் வரிசையில் உள்ளவர்கள் நிறையப் பேசுகிறார்கள். பழக்கம் இல்லாத எங்களுக்கு அதிக நேரம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜே. இராமசாமி): நடுவிலே அட்ஜார்ன்ட்மென்ட் மோஷன்கள் எல்லாம் வந்து நிறைய நேரம் எடுத்துக் கொள்கிறபடியால் நேரத்தை இப்படி பங்கிட வேண்டிய நிலைமை ஏற்பட்டு விடுகிறது.

திரு. கு. அ. செங்கோட்டையன் : பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, 1979-80 ஆம் ஆண்டுக்கான கல்வி மானியத்தைப் பாராட்டிப் பேசுவதற்கு வாய்ப்புத் தந்தமைக்காக முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1979-80 ஆம் ஆண்டுக்கான கல்வி மானியத்தில் கல்விக்காக 208 கோடி ரூபாய் ஒதுக்கி பிற்பட்ட பகுதிகளுக்கு எல்லாம் கல்விக் கண்ணைக் கொடுக்கிற திட்டத்தை உருவாக்கிய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுக்கும், கல்வியமைச்சர் அவர்களுக்கும் முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேல் நிலைக் கல்வித் திட்டத்தில் 10 பிளஸ்2 என்ற அடிப்படையில் தொழில் கல்வியை உருவாக்கியிருப்பதன் மூலம் கிராமங்களில் வேலை இல்லாமல் இருப்பவர்கள் தொழில் கல்வி கற்று அதன்மூலம் கிராமங்களில் ஆங்காங்கு சிறு தொழில்மனை

நிறுவி வாழ்க்கைக்கு நல்ல அடிப்படையான கல்வித் திட்டத்தைப் புகுத்தியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் தாளவாடி போன்ற பகுதிகளில் எல்லாம் அரசு ரூ 1,75,000 ஒதுக்கி செலவு செய்தாலும் அங்கு 12 மாணவர்கள்தான் படித்துக் கொண்டிருக்கும் நிலைமை உருவாகியிருக்கிறது. அந்தப் பகுதி பிற்பட்ட பகுதி, வெகு தூரத்திலிருந்து அவர்கள் வரவேண்டியிருக்கிறது. ஆகவே, அங்கே ஒரு ஹாஸ்டல் அமைத்துத் தந்தால் அதிகமான மாணவர்கள் தங்கி படிக்க முடியும். அந்த வகையில் திட்டத்தை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

10 பிளஸ் 2 என்ற அடிப்படையில் கல்வித் திட்டத்தை உருவாக்கியிருப்பதில் அரசு இதை அறிவித்து ஓராண்டுக் காலம் ஆகியிருப்பதில் என்னென்ன குறைபாடுகள் இருக்கின்றன என்பதைப் பற்றி ஆராய குழுக்கள் அமைத்து குறைகளை எல்லாம் களையும் வண்ணம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அரசு ஆட்சிக்கு வந்த பிறகு கணவன் மனைவி இருவரும் ஆசிரியர்களாக இருந்தால் இருவரும் ஒரே இடத்தில் இருக்க வேண்டுமென்ற ஆணையைக் கல்வித்துறை முதல் முதலாக அமல்படுத்தியிருக்கிறது. முன்பு ஏ. விங்., பி. விங் என்று இரண்டு பிரிவுகள் இருந்தன. ஆசிரியர்கள் ஏ விங்கில் இருந்தால் உயர்ந்தவர்கள் என்றும், பி விங்கிலிருந்தால் கீழ்த் தரப்பட்டவர்கள் என்றும் கருதும் நிலை இருந்தது. நம்முடைய அரசு இரண்டையும் இணைத்திருக்கிறது என்பதை மாற்றுக் கட்சியில் இருப்பவர்கள் மறந்து விடமாட்டார்கள் என்று கருதுகிறேன். எனக்கு முன்னால் உரையாற்றிய நண்பர்கள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் எத்தனை ஆசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள் ஒடுக்கப்பட்டார்கள், சிறைச்சாலையில் வைத்து கையொப்பம் வாங்கினார்கள் என்பதையெல்லாம் 1974-ல் கண்டோம் என்பதை மறந்துவிடமாட்டார்கள் என்று கருதுகிறேன். மாணவர்களை ஹாஸ்டலில் சென்று அடிப்பதாகச் சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பட்டம் பெறுவதற்காக ஒரு மாணவரைச் சுடுகின்ற காட்சியைக் கண்டோம். அப்படிப்பட்ட சூழ்நிலை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இருந்ததை மறந்துவிட முடியாது. இன்றையதினம் கல்வித் துறையில் இருந்து வெளியிடப்படும் ஆணைகள் நகராட்சிப் பள்ளிகளுக்கும் உள்ளாட்சிப் பள்ளிகளுக்கும் மிகவும் தாமதமாகப் போகிறது.

அதனைப் போக்கக் கல்வித் துறையிலே ஆணைகளை உடனுக்குடன் ஏனையை துறைகளிலே பணிபுரிகின்ற ஆசிரியர்களுக்கும் அமல்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் மிகவும் பிற்படுத்தப்பட்ட தொகுதியாக இருக்கிறது. சத்திய மங்கலம் தொகுதியிலே கல்லூரி ஒன்றை அமைக்க வேண்டும். ஏறத்தாழ 4 ஆயிரம் மாணவர்கள் படிக்கின்ற அந்த ஏரியா வில், மேல்நிலைப்பள்ளிகளிலே 400, 500 மாணவர்களுக்கு மேல் படிக்கின்ற நிலையில் ஒரு கல்லூரியை அமைத்துத் தரவேண்டுமென்றுகேட்டுக் கொள்கிறேன்.

தூக்கநாய்க்கன்பாளையத்திலே 19 பள்ளிகளைச் சேர்ந்த ஆசிரியர்கள், பள்ளிகள் மலைப்பிரதேசங்களில் அமைந்திருப் பதால், வாரத்திற்கு 5 நாட்கள் பள்ளிகள் நடந்தாலும், 3,4 நாட்கள்தான் செல்ல முடிகிறது, போக்குவரத்து வசதியற்ற அந்தக் காரணத்தாலே ஆசிரியர்களும் கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் ஹில் அலவன்ஸ் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு ஹில் அல வன்ஸ் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தூக்கநாயக்கன்பாளையம், பங்களாபுதூரில் மேல் நிலைப்பள்ளி இருக்கிறது, அங்கே மாணவர்களுக்காக விடுதி அமைத்துத் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

சிக்கரசம்பட்டியில் ராமர்பயனூர் என்ற இடத்திலே மலை வாழ் மக்கள் இருக்கிறார்கள், அவர்களுடைய 80 குழந்தைகள் இன்றைக்கு கல்வி கற்க முடியாமல் இருக்கிறது. அவர்கள் 2 மைல் யானைகள் வருகின்ற அடர்ந்த காட்டைத் தாண்டிப் போகவேண்டியிருக்கிறது. ஆகவே அங்கே ஒரு பள்ளி அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சத்தியமங்கலம் நகராட்சிக்குட்பட்ட புளியங்கொம்பு என்ற இடத்திலேயும் கிட்டத்தட்ட மலைப்பகுதியாக உள்ள அந்தப் பகுதியிலே 60 குழந்தைகள் கல்வி கற்பதற்கு வசதி யில்லாமல் இருக்கிறார்கள். ஆகவே அவர்கள் கல்வி கற் பதற்காக அங்கே ஒரு ஆரம்பப் பாடசாலையை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த மானியத்தை வரவேற்று வாழ்த்திப் பாராட்டி விடைபெறுகிறேன். வணக்கம்.

*திரு. கு. ரமணி: மிஸ்டர் சேர்மன், இந்த மானியத்தின் மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய சார்பிலே என்னு டைய சில கருத்துக்களை முன் வைக்க விரும்புகிறேன். போன ஆண்டு கல்வியமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் சொன்ன சில வார்த்தைகளை நான் ஞாபகப்படுத்திக் கொண்டு என்னு டைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். 'நான் படித்து விட்டேன், பட்டம் பெற்றுவிட்டேன், படித்துவிட்டுத் தொழில் இல்லாமல் இருக்கிறேன். சமுதாயத்திற்குப் பாரமாக இருக்கிறேன்' என்ற நிலைமை இல்லாமல், பயன்தரக்கூடியவர்

களாக இருக்கின்ற சூழ்நிலையில், இப்போதுள்ள நிலைமையை ஒழித்து 'எங்களுக்குத் தொழில் தெரியும்' என்னால் உழைக்க முடியும், நான் சமுதாயத்திற்குப் பயன்படுவேன் என்கிற அடிப்படையில், தகுதியையும், தன்மையும் உருவாக்கிக் கொள் கின்ற அளவில், கல்வி அமைய வேண்டும், முற்போக்கான கல்வி யாக அமைய வேண்டும். அப்படிப்பட்ட ஒரு முற்போக்கான கல்வித் திட்டத்தை உருவாக்குவதற்கு எங்களாலான முயற்சியை எடுத்துக் கொண்டு வருகிறோம்' என்று சொல்லியிருக்கிறார் களே—அமைச்சர் அவர்கள் சொல்லலாம், நாங்கள் வந்து இரண்டு ஆண்டுக்காலம் தானே ஆகிறது என்று—இந்த சூழ் நிலையில் கல்வியை முழுமையாக மாற்றியமைக்க அவர்கள் கூறியபடி என்ன திட்டங்கள், கொள்கை வரையறைகளை வைத்திருக்கிறார்கள் என்று கல்வியமைச்சர் அவர்களுடைய விளக்கத்திலே குறிப்பிடவில்லை என்பதைப் பார்க்கிறேன். மேலும் கூறும்போது ''கல்லூரிகளில் போய் 80 ஆயிரம் மாணவர் கள் படிக்கின்றார்கள், என்றால் 2 லட்சம் பேர்கள் படிக்காமல் தேங்கிவிடுகிறார்கள், இப்படித் தேங்கிவிடுகின்ற 2 லட்சம் பேர் களுக்கும் தன்னம்பிக்கை ஏற்படக்கூடிய வகையில், உயர்நிலைக் கல்வியில் தொழில் கல்வி பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில், அதன் அடிப்படையில், அகில இந்திய அடிப்படையில் கொண்டுவரப் பட்ட திட்டத்தின் அடிப்படையில் எல்லோருக்கும் இந்த வாய்ப்பு இருக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் இந்தத்தொழில் கல்வியைக் கொண்டுவந்திருக்கிறோம்.'' என்று போன வருடத் தில் குறிப்பிட்டிருக்கிறார்கள். மேல்நிலைப் பள்ளிகளிலே ப்ளஸ் 2 வகுப்புகளிலே கொண்டுவரப்படுகிற தொழில் கல்வி யைப்பற்றித் தான் குறிப்பிடுகிறார் என்று நான் நினைக்கி கிறேன்.

[பிற்பகல் 12.20]

இன்றைக்கு நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன், அந்த வகுப் புகளிலே சொல்லிக் கொடுக்கிற தொழில் கல்வியைக் கற்றுக் கொண்டு மேல்வகுப்புக்குப் போகாத மாணவன் வெளிவந்து விட்டால், அந்தத் தொழிற்சாலைக்குப் போய் வேலையில் சேரக்கூடிய தகுதி கிடைக்குமா? அந்த அளவுக்கு அங்கே தொழில் கற்றுக் கொடுக்கப்படுகிறதா என்பதை நாம் பார்க்க வேண்டும். அப்படியில்லையென்பதுதான் உண்மை. அவர் களுக்குச் சில பாடங்கள் கற்றுக்கொடுக்கப்படுகின்றன. அதில் கிடைக்கக்கூடிய அனுபவங்கள் வாயிலாக வேலைக்குச் செல்ல லாம், மேற்படிப்புக்குப் போகலாம் என்ற நிலையிருக்கும்போது மேல்படிப்புக்குத்தான் போக முடியுமே தவிர, அந்தப் படிப்பை வைத்துக்கொண்டுமட்டும் வேலை கொடுக்கமாட்டார்கள், தொழிற்சாலைகளில். அந்த அளவுக்குத்தான் தொழில் கல்வி யினுடைய தகுதி இருக்கிறது என்பதை வருத்தத்துடன் தெரிவித் துக் கொள்கிறேன். ஆகவே, கல்வியினுடைய இன்றைய தரத் திலே ஒரு மாற்றம் செய்து வாழ்க்கைக்கு ஏற்ற, வாழ்க்கை யோடு இணைந்த கல்வி, ஒரு தொழில் செய்யக்கூடிய திறமை

பெறுகிற கல்வி என்ற வகையில், மேல்நிலைப் படிப்புகள் முடிவதற்குள்ளே, அவர்களுக்குக் கொடுக்கும்படியான கல்வித் திட்டத்தை அமைக்க ஆசிரியர் பிரதிநிதிகளையும், மாணவர்கள் பிரதிநிதிகளையும் கொண்டு சரியான ஆலோசனை செய்து திட்டம் வகுக்கவேண்டும். அப்படிச் செய்யாதவரையில் இது ஒழுங்காக வராது என்பதை நான் எடுத்துச் சொல்லவிரும்பு கிறேன்.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை]

கல்விக்காக, அதிகமாகப் பணம் செலவிடப்பட்டது என்று கணக்கு கொடுக்கிறார்கள். 1975-76-லிருந்து, 1979-80 வரை ஒவ்வொரு வருஷமும், ரூ. 20 கோடி, ரூ. 15 கோடி என்று அதி கரிக்கப்பட்டு, இன்றைக்கு, சற்றே குறைய ரூ. 209 கோடிக்கு வந்திருக்கிறது. இதெல்லாம், பணத்தினுடைய மதிப்பு குறைந்த பிறகு, பண வீக்கம் ஏற்பட்டு, வருஷாவருஷம் ஏற் படும் மதிப்புக் குறைவையும் சேர்த்துத்தான் பார்க்கவேண்டும். ஆகவே, அதிக பணத்தின் பலன் என்ன இருக்கிறது என்ற அந்தப் பொருளாதார விஷயத்திற்குள்ளே நான் போக விரும்ப வில்லை. பணத்தைச் சொல்லி, அதிகமாகப் பணம் கொடுத்து விட்டோம் என்று சொல்லிவருவது, பரம்பரையாக, சொல்கிற டிரடிஷனல் வாதமாகும். பணம் அதிகம் கொடுப்பது தப்பு என்று நான் சொல்லவில்லை, இன்றைக்குச் செலவு செய்வதைவிட பல மடங்கு அதிகம் கொடுத் தாலும், செலவழித்தாலும் கல்வித் தேவையை பூர்த்தி செய்யமுடியாது என்று நான் சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன். பணம் அதிகம் கொடுப்பதால், பிரச்னை சரியாகி விட்டது, சரியான பாதையில் செல்கிறோம் என்று சொன்னால், அது சரியாகாது. ஆகவே, அதற்கு ஒரு உதாரணம் சொல் கிறேன், நீங்கள் ஆசிரியர்களை எடுத்துக்கொள்ளுங்கள். கல்வி பற்றிய எண்ணங்கள் முழுவதும் செயலாக்கப்பட்டு மாணவர்களுக்குக் கல்வி புகட்ட சங்கிலிக் கன்றி போன்றவர்கள் ஆசிரியர்கள். இந்தக் கல்விக்காக அதிகம் செலவழிப் பதிலே, எவ்வளவு ஆசிரியர்கள் புதிதாக வருகிறார்கள். 1977-78 ஆம் ஆண்டிலே, 1,000 புதிய ஆசிரியர்கள், 200 உடற் பயிற்சி ஆசிரியர்கள், 200 முதுநிலைத் தமிழாசிரியர்கள்—இந்த வருஷம், ரூ. 208 கோடி ஒதுக்கும்போது, அதே ஆயிரம் ஆசிரியர்கள், 200 உடற் பயிற்சி ஆசிரியர் பதவிகள், 200 பி.டி. தலைமை ஆசிரியர் பதவிகள், இன்னொரு 200 பி.டி. நடுத்தரப் பதவிகள், 200 பகுதி நேரக் கைத் தொழில் ஆசிரி யர் பதவிகளில் 200 முழு நேரப் பதவிகள், இவ்வளவுதான் புதிதாக வேலை வாய்ப்புக்காக, ஏற்படுத்தப்பட இருக்கின் றன. அப்படியானால், எவ்வளவு இருக்கும்? இன்றைக்கு வேலையில்லாமல் இருக்கும் ஆசிரியர்கள், செகண்டரி கிரேட் ஆசிரியர்கள் படித்தவர்கள், கோவை மாவட்டத்திலே கணக்கு போட்டால், 1,500 லிருந்து 2,000 வரை, பல வருஷங்களாகக், 8 வருஷங்களாகக் கூட வேலையில்லாமலிருக்கிறர்கள் என்று குறிப்பிடுறார்கள். ஆகவே, வேலையில்லாமலிருக்கும்

1979 மார்ச் 26] [திரு. கு. ரமணி]

ஆசிரியர்களுடைய எண்ணிக்கையை கருத்தில் கொண்டு, அவர்களது வேலையில்லா திண்டாட்டத்தைப் போக்கும் வகையில் இது இருக்கிறதா என்றால் இல்லை என்பதை நாம் பார்க்கிறோம். அப்படியானல் கல்வி வளர்ச்சிதான் எப்படி ஏற்படும்?

அடுத்து, பள்ளிகளிலே வசதி. கல்வி கற்றுக்கொடுக்கும் பள்ளி கூடங்கள் எப்படி இருக்கவேண்டும்? உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளில் சரியான நூல் நிலையங்கள் இல்லை. நூல் நிலையங்களை விஸ்தரிக்கப்போகிறோம் என்று சொல்கிறார்கள். நூல்நிலையத்திற்கென, தனியாக, புஸ்தகங்களை வாங்க, போதிய யோசனை செய்து, அதை உபயோகப்படுத்தக் கூடிய தன்மையில், மாணவர்களுக்கு வழங்கக்கூடிய முறையில், அதற்கென்று தனியாகப் பாதுகாப்பாளர் கூட நியமிக்கப்படவில்லை. அங்கே பணியாற்றக் கூடிய ஆசிரியர் தலையில் அதைக் கட்டிவிட்டு, அவர் படிப்புச் சொல்லிக்கொடுக்கும் வேலையையும் சரியாகச் செய்ய முடிவில்லை, நூல் நிலையத்தையும் பாதுகாக்க முடியவில்லை. வளர்ந்து வரும் விஞ்ஞான யுகத்தில், அறிவு வளர்ந்து வரும் வேகத்தில், நூல் நிலையங்கள் எப்படிப் பயன் உடையதாக இருக்கும் என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் நன்றாக அறிவார்.

அதை கவனத்தில் எடுத்துக்கொள்ளவேண்டும். அதை கவனித்து ஆராய வேண்டியது மிகவும் அவசியம். அதற்கு அடுத்தது, கட்டிட வசதி, பர்னிசர் வசதி. இன்றைக்கு பள்ளிகளிலே 6,7, 8-வது வரைக்கும் இருக்கிற ஆரம்ப பள்ளிகளிலே இருக்கிற குழந்தைகள் தரையிலே உட்கார்ந்து தான் கல்வி கற்கிறார்கள். உட்கார ஒரு பலகை கூட கிடையாது அவர்களுக்கு. அவர்களுக்கு பாடம் கற்பிக்கிற ஆசிரியர்களுக்கு அவர்கள் உட்கார ஒரு நாற்காலிகூட கிடையாது. டேபிளை விட்டுத் தள்ளுங்கள். உட்கார ஒரு நாற்காலிகூட கிடையாது என்னும்போது டேபிள் பிரச்னை எதற்கு? நாற்காலிகளை கூட சில பள்ளிகளில், அவர்களுக்கு இருக்கக்கூடிய வேறு சில பண்டுகளில் இருந்து பணம் எடுத்து தாங்களாகவே வாங்கிக் கொள்கிறார்கள். இவைகளை நிர்வாகத்தினர் வாங்கிக் கொடுப்பதில்லை. தேவையான பர்னிசர்கள் இல்லை, போதிய கட்டிடங்கள் இல்லை, போதிய இடவசதிகள் இல்லை. இந்த நிலையை நீங்கள் உடனடியாக மாற்றியாக வேண்டும், இல்லாவிட்டால் நீங்கள் என்ன கொள்கையைச் சொன்னாலும் அந்தக் கொள்கைகளை கல்வியை மாணவர்களுக்கு புகட்டுவதற்கு முடியாமல் போய்விடும் சூழ்நிலை ஏற்பட்டுவிடும்.

அடுத்து மேல்நிலைப் பள்ளிகளில் தலைமை ஆசிரியர்கள்—அவர்கள் சுமார் 700 பேர்களுக்கு மேல் இருக்கிறார்கள். அந்த தலைமை ஆசிரியர்களுக்கு அவர்களின் தகுதி அளவுக்கு சம்பளம் நிர்ணயிக்கபட்டு கொடுக்கப்படவில்லை. மூன்றாவது

ஊதியக்குழுவின் பரிந்துரைப்படிகூட அவர்கள் இன்னும் சம்பளம் நிர்ணயிக்கப்படாமல், ஏற்கெனவே வாங்கிக் கொண்டிருக்கிற சம்பளத்தையே வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். என் வீட்டிற்குப் பக்கத்திலேயே இருக்கக்கூடிய சித்தாபுதூர் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர், ஒரு எம். ஏ. எம். எட். படித்த தலைமை ஆசிரியர் இன்னமும் பழைய சம்பளத்தையே வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமையை மாற்றியாக வேண்டும். அந்த தலைமை ஆசிரியர்களுக்கு நியாயமாக தகுதிப்படி தரவேண்டிய சம்பளம் கொடுக்கப்பட வேண்டும். அவர்கள் 4, 5, 7 வருடங்களாகவே அந்த நிலைமையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு உடனடியாக அந்தச் சம்பளம் நிர்ணயிக்கப்பட்டு அவர்களுக்கு அவை உடனடியாக வழங்கப்படவும் வேண்டும்.

மாணவர்களின் நிலை மட்டும் என்ன? அவர்களுக்கு உயர் நிலைப்பள்ளிகளில் ஸ்டேஷனரி பீஸ், லைப்ரரி பீஸ், லிட்டரரி பீஸ், கேம்ஸ் பீஸ், எக்ஸ்கர்ஷன் பீஸ், லேபரட்டரி பீஸ், கிராப்ஃட் பீஸ் என்று பலவகை பீஸ்கள் மாணவர்களிடமிருந்து வசூலிக்கப்படுகின்றன. அந்த கட்டணங்கள் வசூலிக்கப்படுவதை மட்டும் நான் தவறாகச் சொல்லவில்லை. அப்படி வசூலிக்கப்பட்ட பணம் எல்லாம் எந்தெந்த காரியங்களுக்காக வசூலிக்கப்பட்டதோ அந்தக் காரியங்களுக்கு முறையாக செலவழிக்கப்படுகிறதா என்று பார்த்தால்—கிடையாது. சில பள்ளிகளில் எக்ஸ்கொர்ஷன் போவதே கிடையாது. சில பள்ளிகளில் தேர்வு நேரங்களில் கூட அவர்களுக்கு காகிதங்கள் கொடுக்படுவது கிடையாது. இப்படிப்பட்ட நிலைகள் இருப்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். அவைகளை எல்லாம் கணக்கில் எடுத்துக் கொண்டு சரியான முறையான காரியங்களைச் செய்ய முன் வரவேண்டும்.

அதேமாதிரி ஆரம்ப பள்ளிகளில் இருக்கும்படியான குழந்தைகள்—20 லட்சம் பேர்களுக்கு மேல் வருகிறார்கள் என்று சொல்கிறார்கள். அது பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த குழந்தைகளையும் சேர்த்து 20 லட்சத்திற்கு வருகிறார்கள், என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அவர்களில் 58 சதவீதத்தினரே பள்ளிகளுக்கு ஒழுங்காக வருகிறார்கள் என்று கூறுகிறார்கள். அந்த மீதி 42 சதவீதம் மாணவர்கள் பள்ளிக்கு வராமல் இருப்பதற்கு பிரதானமான காரணம் என்ன? அந்த காரணத்தை நாமே தெரிந்துக் கொள்ள முடியும். யாரையும் கேட்க வேண்டிய அவசியம் இல்லை. என்ன காரணம் பசியும் பட்டினியும் தான் காரணம். அந்த ஏழைக் குழந்தைகளுக்கு, சின்னஞ் சிறுவர்களுக்கு பள்ளிக்கு வரமுடியாமல் போவதற்கு காரணம் பசியும் பட்டினியும்தான். கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற பழமொழியை மாற்றி பள்ளி இல்லாத தெருவில் குடியிருக்க வேண்டாம் என்ற கருத்து உருவாக வேண்டும்.

1979 மார்ச் 26] [திரு. கு. ரம ணி]

இந்தக் குழந்தைகளுக்கு மதிய உணவு அளிக்கும் திட்டம் இருக்கிறது. அந்த உணவுப் பொருளுக்குத் தேவையான சாத னங்கள் கேர் ஸ்தாபனங்கள் போன்றவைகள் கொடுத்து உதவுகின்றன. கேர் ஸ்தாபனம் 20,000 டன் உணவுப் பொருள் களையும் கொடுக்கிறது. அந்த சாதனங்களும், உணவுப் பொ ருட்களும் திருடப்படுகின்றன. ஊழல் நடக்கிறது குழந் தைகளுக்கு கொடுக்கும் மதிய உணவிலேயே ஊழல் நடக் கிறது. ஒரு மாணவனுக்கு ஒரு மதிய உணவிற்கான செலவு மாநில அரசில் கொடுப்பது 10 காசு, மற்ற உள்ளாட்சி மன்றங் கள் போன்றவை 5 காசு ஆக 15 காசுகள் தான் செலவா கிறது. அந்த மதிய உணவிற்கான செலவை 25 பைசாவாக கூட்டி, நல்ல உணவை, தரமான உணவை அவர்களுக்கு வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். ஒரு மாணவனுக்கு குறைந்த பட்சம் அவனுடைய அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப் பட வேண்டும். அவனுக்கு மதிய உணவு அளிக்கப்பட வேண்டும், உடைகள் வழங்கப்பட வேண்டும், சீருடை என்று கொடுத்தாலும் சரி—சிலேட்டு புத்தகங்கள் வாங்கிக் கொடுக்க வேண்டும். இப்படி அவர்களுக்குத் தேவையானவற்றை கொடுத்துப் பாருங் கள். அவர்கள் ஏன் பள்ளிக்கு வராமல் போகிறார்கள்? நிச்சய மாக வருவார்கள். இந்த 42, 58 என்று வராது. அனைவரும் நிச்சயமாக பள்ளிக்கூடத்திற்கு வருவார்கள்.

அதே மாதிரி மைய சமையற் கூட திட்டம். மைய சமையற் கூட திட்டம் செங்கற்பட்டு, தென்னார்க்காடு, வட ஆர்க்காடு ஆகிய மூன்று மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்டிருப்பதாக சொல்கிறார்கள். மேலும் 3 மாவட்டங்களில் ஏற்படுத்து வதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டு முயற்சிகள் மேற்கொள்ளப் படுவதாக சொல்லியிருக்கிறார்கள். என்னைக் கேட்டால் அனைத்து மாவட்டங்களிலும் இந்த மைய சமையர் கூட திட்டம் செயல்பட வேண்டும் என்று சொல்வேன். பொருள்கள் திருட்டு போவதற்கும், ஊழல் நடைபெறுவதற்கும் இடம் ஏற் படாத வகையில் இம்மைய சமையற் கூடம்—கிச்சன்கள் ஏற் படுத்தப்பட்டு நல்ல தரமான உணவு இந்த குழந்தைகளுக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகள் எல்லா இடங்களிலும் செய்ய வேண்டும் என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

[பிற்பகல் 12-30]

மேலும் இந்த ஆரம்பக் கல்வி என்பது கட்டாயக் கல்வியாக இருக்கவேண்டும். எனக்கு முன்னாலே பேசிய திராவிட முன் னேற்றக் கழக உறுப்பினர் சொன்னார், 5-வது வகுப்பு வரைக்கும் என்று இருக்கக்கூடாது, 8-வது வரைக்கும் கட்டாயம் என்று இருக்க வேண்டும் ஒன்றும் கட்டாயக் கல்வியாக இல்லை என்றால், அந்த மாதிரி கொண்டு வரவில்லை என்றால், நிச்சயமாக நாம் நினைக்கும் எண்ணம் நிறைவேறாமல் போகும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

தனியார் துறையில் நடக்கும் கல்வி வியாபாரத்தை மாற்றி அமைக்க வேண்டும். தனியார் கல்வி ஸ்தாபனங்கள் நல்ல சேவை செய்கிறார்கள் என்று நாம் சொல்வதற்கு பழகிக் கொண்டு இருக்கிறோம். அதிலே நாம் தயங்குவது இல்லை. ஆனால் அதற்காக கல்வியை ஒரு வியாபாரச் சரக்காக ஆக்கிவிடக்கூடாது. இன்று இருக்கும் கல்விமுறை எப்படி இருக்கிறது என்றால்,, சமுதாய அமைப்பு பணக்கார நிலப்பிரபுத்துவ சமுதாயமாக இருக்கிறது. பணம் உள்ளவர்கள் தான் கல்விக் களஞ்சியத்திற்குச் செல்லலாம். அதிலிருந்து அள்ளலாம். பணம் இல்லாதவர்கள் கல்விக் களஞ்சியத்திற்குச் செல்ல முடியாது. அள்ளமுடியாது. தனியார் துறையில் உள்ள கல்வி அகங்கள் பணம் பறிப்பவையாக இருக்கின்றன. ஆகவே, தனியார் கல்வி நிலையங்களை அரசே மேற்கொள்ள வேண்டும். அப்படி செய்தால்தான் ஆசிரியர்களின் கஷ்டமும் போகும். தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு சம்பள செக் நேரடியாகக் கொடுக்கப்படுகிறது என்று சொன்னார்கள். அப்படி செக் கொடுத்தாலும், அதை மாற்றுகிறபோது மறைமுக நிர்ப்பந்தம் செலுத்தி இதைச் செய்தால் தான் பணம் வாங்க முடியும் என்று நிர்ப்பந்தம் செய்ய முடியாதா? ஆகவே, கல்வி ஸ்தாபனங்கள் தனியார் வசம் இல்லாமல், எல்லாவற்றையுமே அரசு ஸ்தாபனங்களாக மாற்ற வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைச் சேர்ந்த கோவை நகரத்தைப் பொறுத்தவரையில், சில வார்த்தைகளைச் சொல்லவேண்டிய அவசியம் இருக்கிறது. நகராட்சியின் கீழ் உள்ள உயர்நிலைப் பள்ளிகளில் செகண்டரி ஆசிரியர்களாக பணிபுரிந்து, தனியாக படித்து பட்டதாரிகளாக தேர்வு பெற்ற பலர் இருக்கிறார்கள். அவர்களுக்கு பட்டதாரி ஆசிரியர்கள் பதவி நியமனம் அளிப்பதில் முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று ஜி.ஓ. 1180, எஜுகேஷன் டிப்பார்ட்மெண்ட், தேதி 28—6—1977-ல் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் என்ன நடைபெறுகிறது என்றால் ஒரு ஆசிரியர் 13 தரம் ஏற்றி இறக்கி, ரிவர்ஷன் செய்யப்பட்டு இருக்கிறார். கே. ஆர். கருப்புசாமி என்பவர் இந்த நிலைமைக்கு ஆளாக்கப்பட்டு இருக்கிறார். 1977 மார்ச்சு மாதத்திலிருந்து இதுவரையில் வெளியில் பயிற்சியில் இருந்து வந்த ஆசிரியர்கள் 10 பேருக்கு வேலை கொடுத்து இருக்கிறார்கள். இது எல்லாம் ஊழல் நடவடிக்கை இல்லையா? இதிலே நடவடிக்கை எடுக்க ஒரு சங்கடம் இருக்கிறது என்று நினைக்கிறேன். இங்கே இருக்கிற கல்வி அமைச்சர் கல்விக் கொள்கையை மட்டும் வரையறுத்துவிட்டு அதை நிறைவேற்றும் பணியை நகராட்சிகளுக்கும் மற்ற ஊராட்சிகளுக்கும் விட்டு விடுகிறார் என்று கருதுகிறேன். அதனால்தான் இந்தத் தவறுகளை உடனுக்குடன் தவிர்க்கமுடியவில்லை. நிர்வாக அதிகாரம் உள்ளாட்சி துறையிடமுள்ளது. அந்தப் பள்ளியிலேயே பணிபுரிந்துகொண்டு பட்டதாரிகளாக ஆகியிருப்பவர்களுக்கு முதலிடம் கொடுத்துவிட்டு, வெளியிலிருந்து வருகிற மற்ற ஆசிரியர்களுக்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டும் என்பது கட்டாயமாக பின்பற்றப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1979 மார்ச் 26] *[திரு. கு. ரமணி]*

கோவை நகராட்சியில் ஆசிரியர்களுக்குக் கொடுக்க வேண்டிய பாக்கி பணங்கள் ஏராளமாக இருக்கின்றன. ப்ரமோஷன் கொடுத்தால் அல்லது லீவ் எடுத்தால், லீவு கன்வர்ஷன் செய்தால், அதற்கெல்லாம் கொடுக்க வேண்டிய பணம் கொடுக்காமல் தேங்கி இருக்கிறது. வருடக் கணக்கில் ஆசிரியர்களையும் இஷ்டம் போல் மாற்றி விடுகிறார்கள். அதிலே பாரபட்சம் இருக்கிறது. வீட்டு அருகாமையில் வேலை கொடுக்க வேண்டும் என்று முனிசிபாலிடியில் தீர்மானம் இருக்கிறது. கணவன் மனைவிக்கு ஒரே இடத்தில் வேலை கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது. இது அரசின் கொள்கை. இப்படி இருந்தும் அது நடைபெறுவது இல்லை. இவை பற்றியெல்லாம் கோவை நகராட்சியில் இருக்கிற கல்வி அதிகாரி மீது எத்தனையோ ரிப்போர்ட் கொடுக்கப்பட்டு இருக்கிறது. கணக்குக் கிடையாது. மதிய உணவு வினியோகத்தில் ஊழல் நடந்துள்ள குற்றச் சாட்டுக்கு அவர்மீது விசாரணை நடக்கிறது. அதைப்பற்றி எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இவ்விஷயத்தை உள்ளாட்சித் துறை அமைச்சர், இன்ஸ்பெக்டர் ஆப் லோகல் பாடீஸ், ஆகியவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம். அதை பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்படிப்பட்ட முறையில் ஊழல்களுக்கு நிச்சயமாக இடம் கொடுக்காமல், செலவாகும் பணம் பூராவும் ஒழுங்காக கிடைத்து ஆசிரியர்கள் நன்றாக இருந்து, மாணவர்கள் ஊக்கமாக படிக்க அவர்கள் உறுதுணையாக இருக்க வேண்டும் என்ற முறையில் அமைய வேண்டும். இன்டர் டிபார்ட்மென்டல் ஆடிட் தேவை. இன்ஸ்பெக்டர் ஆப் லோகல் பண்டில் இருந்து அதைச் செய்ய வேண்டும்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது பிளஸ் டூ வகுப்புகள் துவக்கப்பட்டதன் மீது கருத்து கூறக் கேட்டார். தொழிற் கல்வி போன ஆண்டு எப்படி இருந்தது என்பதைப்பற்றி இங்கே சுட்டிக்காட்டினார்கள். இந்த ஆண்டு குறைகள் அது நீக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இப்போது நாம் வைத்து இருக்கும் பிளஸ் 2 வகுப்பு ஆரம்பித்து ஒரு வருஷம்தான் ஆகிறது. அது உருப்படியாக நடத்தப்பட வேண்டும். முதலில் லேபரேட்டரி இல்லை. தேவையான சாதனங்கள் இல்லை. அதை வாங்கி வைக்க இடம் இல்லை. லாபரேடரி வேண்டும், இடம் வேண்டும், திறமையான தலைமை ஆசிரியர்கள் வேண்டும், அவர்களுக்கு வேண்டிய சம்பளம் சரியான முறையில் கொடுக்க வேண்டும். இப்படிப்பட்ட காரியங்கள் நடைபெற்றால் நாம் அனுபவத்தில் ஒரு முடிவுக்கு வர முடியும். இன்றைக்கே அது சரிவராது என்று கூறுவது 'ப்ரிமெட்சூர்ட் ஜட்ஜ்மெண்ட்' என்ற வகையில் ஆகும். அது நல்லமுறையில் செயல்பட்டால்தான் சரியாக இருக்கும். தொழில் கல்வி பயனுள்ளதாக ஆரம்பித்தால் நல்ல முறையில் அது வளரும். அந்த முறையில் அமைச்சர் அவர்கள் போன வருஷம் கொடுத்த கொள்கை விளக்க அடிப்படையில் ஆசிரியர்கள், மாணவர்களு

டைய பிரச்னைகளை மனதில் கொண்டு, அவர்களின் பிரதிநிதிகளையும் இணைத்து செயல்பட அரசு திட்டமிட்டு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்

திரு. எம். ஏ. லத்தீப் : துணைத் தலைவர் அவர்களே, நாம் இன்றைக்கு எடுத்துக்கொண்டு இருக்கிற மானியக் கோரிக்கை மீது என் கருத்துக்களைத் தெரிவித்து கொள்கிறேன். என்னைப் பொறுத்தவரையில் இது ஒரு முக்கியமான மானியமாகும். அந்த வகையிலே இதிலே கலந்துகொண்டு என்னுடைய கருத்துக்களை சொல்கிறேன் என்ற உணர்வோடு நான் எழுந்து நின்று இருக்கிறேன்.

கல்வி என்பது இந்தக் காலத்திற்கு மட்டுமல்லாமல், வாழையடி வாழையாக, வரும் காலத்திற்கும் பயன் அளிக்கக்கூடிய ஒரு திட்டம் என்பதை நாம் எல்லோரும் உணர்ந்து இருக்கிறோம்.

''ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவருக்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து.''

என்று வள்ளுவர் பெருந்தகை அதைக் கூறியிருக்கிறார்கள். 7 ஜென்மங்கள் என்று சிலர் ஒப்புக்கொள்ளாவிட்டாலும், 7 தலைமுறைக்கு ஒருவன் பெரும் கல்வி பயன் உடையதாக ஆகிறது என்கிற முறையில் நாம் இந்தத் துறைக்கு செலவழிக்கும் பணம் மிக ஆழமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய ஒன்று என்பதை நான் இந்த நேரத்தில் நினைவுபடுத்த விழைகிறேன். இப்படிப்பட்ட ஒரு துறை செலவழிக்கிற பணம் முழுமையான பலனை கிடைக்கக்கூடிய ஒரு செலவினமாக அமைந்துவிடவேண்டும் என்பதுதான் இன்றைக்கு எல்லோருடைய ஒரு ஆவலாக இருந்து கொண்டு இருக்கிறது. இன்றைக்கு கல்விக்கு என்று ரூ. 209 கோடி நாம் ஒதுக்கியிருக்கிறோம். அதிலும் குறிப்பாக தொடக்கப் பள்ளிகளுக்காக ஏறக்குறைய ரூ. 160 கோடி நாம் ஒதுக்கீடு செய்து இருக்கிறோம். ஆனால் இன்றைக்கு நாம் பார்க்கிறபோது தொடக்கப் பள்ளிகளில் இருந்து நாம் பெறுகின்ற பலன் அதிகமான விளைவுகள் தருகின்றன என்பதை நாம் பெறுகிறோம்.

முதல் வகுப்புக்கு வருகிற மாணவர்கள் எண்ணிக்கை நம்முடைய தேசத்தின் எண்ணிக்கையை விட மிகமிகக் குறைவாக இருக்கிறது என்பது ஒருபுறம் இருந்தாலும், அந்த முதல் வகுப்பில் வருகின்ற, எழுகின்ற மாணவர், மாணவியர் கூட 2-ம் வகுப்பு, 3-ம் வகுப்பு என்று சொல்கிறபோது அவர்களுடைய எண்ணிக்கை படிப்படியாக குறைந்து ஆசிரியர்கள் எவ்வளவு மாணவர்களுக்கு போதிக்க வேண்டுமோ அந்த விகிதாச்சார அளவிற்கு மாணவர்களுடைய எண்ணிக்கை தொடர்ந்து இருப்பது இல்லை என்ற நிலை தொடர்ந்து வருவது நமக்கு எல்லாம் பெருத்த கவலை அளிக்கக்கூடியது என்பதை இந்த நேரத்தில்

ஓர் ஆசிரியர் பள்ளிகள் நாம் எத்தனை நடத்துகிறோம்? ஓராசிரியர் பள்ளிகள் என்று சொல்லக்கூடியவைகளைச் சில பகுதி களில் நாம் நடத்துகிறோம். ஊராட்சி ஒன்றியங்களால் நடத்தப் படும் பள்ளிகளில் பயிலுவதற்கு நிறைய சங்கடங்கள் இருக்கின்றன பல பள்ளிகளில் அதுவும் காட்டுப் பகுதிகளில் இருக்கின்ற பள்ளி கள் சரிவர நடப்பது இல்லை. வருஷத்தில் ஒரு சில வாரங்கள் கூட நடைபெறுவது இல்லை. மாணவர்கள் அந்தப் பள்ளிக்கு வருவது இல்லை. ஆசிரியர்களும் வருவது இல்லை. அந்தப் பள்ளிகள் சில தினங்களுக்குத் திறக்கப்படுவதுகூட இல்லை. சில இடங்களில் பள்ளிகள் இருக்கின்றன என்று கல்வி அலுவலகங் களிலே குறிப்பு இருக்கிறதே தவிர உண்மையிலேயே அங்கே பள்ளிகள் இருக்காது. ஆசிரியர்கள் சம்பளம் வாங்கிக்கொள்வார் கள். ஆசிரியர்கள் எப்போதும் அங்கே காணப்பட மாட்டார்கள். மாணவர்கள் என்பது குறிப்பிலே இருக்குமே தவிர உண்மையி லேயே மாணவர்கள் இருக்க மாட்டார்கள்.

[பிற்பகல் 12-40]

இன்னொரு வேதனை என்னவென்றால் சில பகுதிகளில் நான் சென்று பார்க்கும்போது—எந்த இடம் என்று குறிப்பிட்டுச் சொல்ல நான் விரும்பவில்லை—கல்வி அலுவலரிடம் ஒரு ஊருக்கு பள்ளி வேண்டுமென்று சொல்லி, அவர் அந்த ஊரில் ஏற்கெனவே பள்ளி இருக்கிறது என்று பதில் அளிக்க, நான் அந்த ஊருக்குச் சுற்றுப்பயணம் செய்தபோது அந்த ஊரிலே பள்ளியே இல்லை என்று அவர்கள் சொல்ல, நான் திரும்ப வந்து அலுவலரைப் பார்க்க, அவர் ஆசிரியர் ஒவ்வொரு மாதமும் சம்பளம் வாங்கிக் கொண்டிருக்கிறார் என்று சொன்னார். ஆசிரியர் ஒழுங்காகச் சம்பளம் வாங்குகிறார்; ஆனால் பள்ளி இல்லை. அப்பேர்ப் பட்ட பள்ளிகள் ஜவ்வாது மலையில் 3, 4 இடங்களில் இருக்கின் றன. வேண்டுமென்றால் பின்னால் பெயரைக் குறிப்பிட்டுச் சொல்கிறேன். இது ஒரு நிலைமை.

இன்னொன்று. என்னுடைய தொகுதியில் மகதகடப்பா பஞ்சாயத்துக்கு உட்பட்ட ஒரு இடம்—அது சித்தூர் மாவட் டத்தை ஒட்டி இருக்கிறது—அங்கே இயங்குகின்ற பள்ளிக்கு கட்டடம், சுவர் இருக்கிறது; ஆனால் கூரை இல்லை. கூரை இல்லாதிருப்பது மட்டுமல்ல; கதவும் இல்லை. மனிதர்கள் அங்கே இல்லை; மாக்கள்தான் எப்போதாவது தங்குகிறார்கள். நான் எப்போது அங்கே போனாலும் இதைத்தான் பார்க்கிறேன். அங்கே குறிப்பு இருக்கிறது, ஆனால் பள்ளி இல்லை. இப்படிப் பல்வேறு இடங்களில் பள்ளியே இல்லாமல் இருக்கிறது. நான் அரசாங்கத்தைக் குற்றஞ்சாட்டவில்லை. அரசு தொடக்கப்பள்ளி நன்றாக நடக்க வேண்டும்; கல்விக்கு அதிகமாகச் செலவழிக்க வேண்டுமென்று 160 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக் கிறது; அதைச் செலவிடும்போது அதற்கான கண்காணிப்பு இல்லை என்ற குறைபாட்டை என்னால் சொல்லாமல் இருக்க முடியாது.

அதுமட்டுமல்ல, ஒரு பள்ளியிலே நான் பார்க்கும்போது, பெப்ரவரி மாதத்தில் பார்க்கும்போது ஜூன் மாதம் வரையில் அட்டன்டன்ஸ் இருக்கிறது. பெப்ரவரி மாதம் பார்க்கும்போது அட்டன்டன்ஸ் ரெஜிஸ்டரில் ஜூன்மாதம் வரை கையெழுத்து போட்டுவிட்டு ஆசிரியர் சென்றுவிட்டார். அவர் அங்கே இல்லை. வேறு ஒரு ஊரில் மளிகைக் கடை வைத்திருக்கிறார். ஏழை, எளியவர்கள், நலிந்தவர்கள், சமூகத்தில் ஒதுக்கப்பட்டவர்கள்—இவர்களுக்கு எல்லாம் கல்வி அறிவை ஊட்டவேண்டுமென்ற நோக்கத்தில் காரியங்கள் செய்தாலும், ஏராளமாகச் செலவு செய்தாலும் அந்தப்பணம் இப்படிப் பாழாகிறதுஎன்பது வேதனை அளிக்கக்கூடியதாக இருக்கிறது.

கல்வித்துறையிலே இன்ஸ்பெக்டர் ஆஃப் ஸ்கூல்ஸ் நியமித்திருக்கிறார்கள். அவர்கள் அடிக்கடி அங்கே போய்ப் பார்த்தால் நிலைமையில் சீர்திருத்தம் ஏற்படும். ஒரு பள்ளியில் பார்த்தேன். 4 ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு இன்ஸ்பெக்ஷன் ரிப்போர்ட் அங்கே இருக்கிறது. அதற்குப் பின்னால் அங்கே இன்ஸ்பெக்டர் வரவில்லை. நான்கூட நோட் எழுதி வைத்திருக்கிறேன். இப்படிப்பட்ட நிலைமைகளைக் கவனிக்க கல்வி இலாகாவில் பள்ளிக் கல்வி இயக்குநர் ஒருவர் தலைமையிடத்தில் இருந்தாலும், அது போதாது. பல ஜோனல்களாகப் பிரித்து, அங்கங்கே ஜாயின்ட் டைரக்டர் அல்லது டிபுடி டைரக்டர் பொறுப்பில் விடவேண்டும். அப்படியானால் இன்னும் கொஞ்சம் நல்ல முறையில் கண்காணிக்க முடியும் என்று கருதுகிறேன். அதற்காக கொஞ்சம் செலவு ஆனாலும் பரவாயில்லை. அப்படிச் செய்தால்தான் ஓரளவு பலன் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொரு முக்கியமான பிரச்சனையையும் அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். ஊராட்சி மன்றங்கள் நடத்தும் பள்ளிகளுக்கு ஆகும் செலவு முழுவதையும் அரசாங்கம் மானியமாகக் கொடுக்கிறது. அப்படி இருக்கும்போது பொறுப்பை ஏன் அவர்களிடம் விட வேண்டும்? பணத்தைக் கொடுக்கின்ற அரசாங்கமே பொறுப்பையும் ஏற்றுக்கொள்வதுதான் சாலச் சிறந்தது. ஆகையால் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளையும் அரசாங்கமே ஏற்று நடத்தினால் ஏதாவது நல்ல விளைவுகள் ஏற்படுமா என்று சிந்தித்துப் பார்த்து, பயன் இருக்குமானால் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளை எல்லாம் அரசாங்கமே தன்னுடைய கண்காணிப்பில் எடுத்துக் கொள்வது சிறப்பாக இருக்கும் என்பது என்னுடைய கருத்து; அது சாத்தியமாக இருந்தால் அரசு அதைக் கவனிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நண்பகல் உணவுத் திட்டம் என்று பள்ளிக்குக் கொடுக்கிறார்கள். அது நல்ல திட்டம். அரசாங்கம் 10 பைசா கொடுக்கிறது; ஊராட்சி ஒன்றியம் 5 பைசா கொடுக்கிறது. ஆக மொத்தம் 15 பைசா ஒரு பிள்ளைக்கு. அதோடு 'கேர்'

நிறுவனம் கொடுக்கும் உதவியையும் வைத்து நண்பகல் உணவு கொடுக்கிறார்கள். இந்த 15 பைசாவிலே ஒரு பிள்ளைக்கு எப்படி சாப்பாடு போட முடியும்? மிட்டாய் கூட வாங்கிச் சாப்பிட முடியாது. ஆகையால் ஒரு பிள்ளைக்கு குறைந்தபட்சம் 25 பைசா, 50 பைசா என்று வைத்தால் அது பயனுடையதாக இருக்கும்.

ஒரு 50 பைசா அளவிற்காவது கொடுக்க வேண்டாமா? நாமெல்லாம் வளர்ந்துவிட்டவர்கள், ஆனால் வளரக்கூடிய அவர்களுக்குச் சத்துணவு இருந்தால்தான், அவர்களுக்கு உடல் நலம் இருந்தால்தான் அந்த உடல் நலத்தோடு உள்ள நலமும் இருந்தால்தான் அவர்களுடைய அறிவு செம்மையாக இருக்கும். அப்போதுதான் அவர்களுக்குக் கல்வியிலே ஒரு அக்கறை ஏற்படும். அதை அரசு கவனித்துப் பார்க்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று. இங்கே பள்ளிக் கட்டிடங்களைப் பற்றிச் சொன்னார்கள். பள்ளிகளுக்கு வேண்டிய எல்லாக் கட்டிடங்களையும் ஒரே நேரத்தில் கட்டிவிட முடியாது என்பதை நானும் உணருகிறேன். இருந்தாலும், தனியார் நடத்துகின்ற பள்ளிகளுக்கும் நகராட்சி நடத்துகின்ற பள்ளிகளுக்கும் உரிய கட்டிடங்கள் கட்டுவதற்காக 9 இலட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அரசினர் நடத்துகின்ற பள்ளிகளுக்கு 37 இலட்ச ரூபாய் ஒதுக்கி இருக்கிறார்கள். இது போதாது. பல இடங்களில் கட்டிடங்களே இல்லை. ஒரு சில இடங்களில் இருக்கின்ற கட்டிடங்களில் உள்ள குறைபாடுகளைப் பற்றிச் சொல்வதற்கு எனக்கு நேரம் இல்லை. சில இடங்களில் கட்டிடங்கள் இருப்பதைப் பார்த்தால் மிகப் பயங்கரமாக இருக்கிறது. அது எந்த நேரத்தில் விழுந்துவிடுமோ என்ற அபாயகரமான நிலையில் இருக்கின்றது. சில இடங்களில் கட்டிடங்களே இல்லை. சில இடங்களில் இருக்கின்ற கட்டிடங்களுக்குக் கூரைகளே கிடையாது. ஒரு கட்டுமானம்தான் கட்டிடம். கட்டுப்பாடு வேண்டும் என்றால் கட்டு இடம் வேண்டும். கட்டு இடம் என்று சொல்லப்படுவது கட்டுப்பாட்டை ஏற்படுத்துவதற்குக் கண்டிப்பாக வேண்டிய ஒரு இடமாகும். கட்டுப்பாட்டை ஏற்படுத்துவதற்கு கட்டு இடம் வேண்டும். ஆகவே இடம் இல்லாவிட்டால் உங்களிடத்தில் கட்டுமானம் இருக்காது, கட்டுப்பாடும் இருக்காது. ஆகவே இந்தக் கட்டு இடம் என்று சொல்லப்படுவது தமிழிலே இருக்கின்ற ஒரு நல்ல வார்த்தை. இந்தக் கட்டு இடம் மிக முக்கியம். ஆகவே இந்தக் கட்டு இடத்தைக் கட்டுவதற்கு நீங்கள் முன்னுரிமை கொடுத்து அதற்கு மேலும் அதிகமாக நிதியை ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மெட்ரிக்குலேஷன் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்லப் பட்டிருக்கிறது. அந்தக் குறிப்பு ஒரு பெரிய பிரச்சினையைத் தூண்டக்கூடியதாக இருக்கிறது. இந்த மாநிலத்திலே இப்போது 31 மெட்ரிக்குலேஷன் ஸ்கூல்கள் இருக்கின்றன. அந்த 31 மெட்ரிக்

குலேஷன் ஸ்கூல்களிலும் 31 ஆயிரம் மாணவர்கள் படிக்கிறார்கள். அதாவது ஏறக்குறைய, சராசரியாக ஒரு பள்ளிக்கு ஆயிரம் மாணவர்கள் படிக்கிறார்கள். அதிலும் என்ன விசேஷம் என்று சொன்னால் அந்தப் பள்ளிகளிலே கட்டணம் வசூலிக்கிறார்கள். அப்படிக் கட்டணத்தைக் கொடுத்து அந்தப் பள்ளிகளிலே ஆயிரம் மாணவர்கள் படிக்கிறார்கள். ஆனால் நாம் கட்டணம் வசூலிப்பது இல்லை அரசுப் பள்ளிகளில். அது மட்டுமல்ல வேறு சில வசதிகளும் செய்து கொடுக்கிறோம். அப்படி இருந்தும் நம்முடைய பள்ளிகளிலேயும் அதாவது ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளிலேயும், அரசினர் நடத்துகின்ற பள்ளிகளிலேயும் இருக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை 200, 400 என்றுதான் இருக்கிறது. இப்படிக் குறைந்த எண்ணிக்கை இருக்கின்றதே, இதற்கு என்ன காரணம் என்பதைத் தயவு செய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். அங்கே கட்டணம் கொடுத்து படிப்பதற்குத் தயார். இங்கே கட்டணம் இல்லை என்றாலும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாக இல்லை. 31 மெட்ரிக்குலேஷன் ஸ்கூல்களில் 31 ஆயிரம் மாணவர்கள் படிக்கிறார்கள் என்று சொன்னால், அங்கே இருக்கின்ற சூழ்நிலைகளுக்காகத்தான். அங்கே அந்த மெட்ரிக்குலேஷன் ஸ்கூல்களில் பாடங்களை மட்டும் சொல்லிக் கொடுப்பதில்லை. அங்கே ஆசிரியர்கள் ஒழுக்கத்தையும் கற்பிக்கிறார்கள். சொல்லால் சொல்லப்படுகின்ற எந்தக் காரியமும் நிச்சயமாக எடுபடாது. ஆசிரியர்களாக இருப்பவர்கள் மாணவர்களுக்கு ஒழுக்கத்தை போதிக்கும்போது அவர்கள் செயலால் அதைச் செய்து காட்ட வேண்டும். அவர்களுக்கு ஒரு கடமை உணர்ச்சி வேண்டும். அந்தக் கடமை உணர்ச்சி அங்கே இருக்கின்ற காரணத்தால்தான், அந்த ஒழுக்கம் அங்கே இருக்கின்ற காரணத்தால்தான், டிசிப்ளின் அங்கே இருக்கின்ற காரணத்தால்தான் அந்த ஸ்கூல்களில் அதிக அளவில் மாணவர்கள் படிக்கிறார்கள். ஏன் அதே நிலைமையை நாமும் நம்முடைய பள்ளிகளில் ஏற்படுத்தக் கூடாது? அப்படி அந்தச் சூழ்நிலை இல்லாமல் இருப்பதற்கு என்ன காரணம்? இதை எல்லாம் அரசும், அலுவலர்களும் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து தமிழ்நாடு பாட நூல் திட்டக் குழு என்று ஒன்று இருக்கிறது. அது குறித்து நான் தனியாக ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கூடக் கொடுத்திருக்கிறேன். அதே பொருள் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் மேலவையிலே கூட விளக்கம் கொடுத்திருக்கிறார்கள். இஸ்லாமிய சமுதாயத்தின் உயிரினும் மேலாகக் கருதப்படுபவர் நபிகள் நாயகம். அவர்களைப் பற்றி எப்படி எழுத வேண்டும், எப்படி எழுதினால் சரி என்ற அந்த அடிப்படை அறிவுகூட இல்லாதவர்கள் நபிகள் நாயகத்தைப் பற்றியும் இஸ்லாமிய சமுதாயத்தைப் பற்றியும் வேதனையுறக் கூடிய அளவுக்கு எழுதி அப்படிப்பட்ட கருத்துக்களைப் பாட நூலிலே புகுத்தி இருக்கிறார்கள் என்று சொல்கின்றபோது நாம் இதை எல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். சிறுபான்மைச் சமுதாயத்தைச் சேர்ந்தவர் ஒருவர் அந்த பாட நூல் குழுவிலே

1979 மார்ச் 26] [திரு. எம். ஏ. லத்தீப்]

இருக்கக் கூடாதா? அதிலே அப்படி ஒருவர் இருந்திருந்தால் இந்த நிலைமை உருவாகி இருக்குமா? ஆகவே இதை எல்லாம் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இன்னொன்று. வரலாற்றை எழுதும் போது எல்லா சமுதாயத்து மக்களிடத்திலும் ஒரு சாத்வீகமான சூழ்நிலை உருவாவதற்குரிய வழிகளிலே எழுதப்பட வேண்டும். பழங் காலத்திலே ஆங்கிலேயன் எழுதி வைத்து விட்டுச் சென்றான், முஸ்லீம்கள் இங்கே படையெடுத்தார்கள், அதை உடைத்தார்கள் இதை உடைத்தார்கள், இந்துக்கள் அவர்களை எதிர்த்தார்கள் என்றெல்லாம் இந்து, முஸ்லீம்களைப் பிரிப்பதற்கு என்று எழுதி வைத்து விட்டுச் சென்றான்.

[பிற்பகல் 12-50]

அந்த வரலாற்றை, அந்தச் சாக்கடைக் குப்பை இருக்கிறதே, அதை, சமுதாயத்தில் பிளவு ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தில் ஆங்கிலேயன்கள் எழுதிவிட்டுப் போனார்கள். அந்த வரலாற்றைத் தூக்கியெறிந்து விட்டு..............

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சரவர்களின் கவனத்திற்கு இந்தச் சந்தர்ப்பத்தில்—மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் பேசுகின்ற காரணத்தினால் கொண்டு வர விரும்புகிறேன். தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனத்தால் வெளியிடப்பட்டிருக்கும் மேல்நிலை முதலாம் ஆண்டு வரலாறு புத்தகத்தில் 168 ஆம் பக்கத்தில் ஆட்சேபகரமான பகுதிகள் இருக்கின்றன. அது இஸ்லாமிய சமுதாயத்தினரைப் புண்படுத்துகின்ற அளவிற்கு இருக்கிறது. இது பற்றி அமைச்சரின் கவனத்திற்குப் பல முறை கொண்டு வரப்பட்டிருக்கிறது. அமைச்சரவர்களும் மேலவையில் கருத்துத் தெரிவித்திருக்கிறார் என்று கருதுகிறேன். நான் இதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்வதற்குக் காரணம், எனக்குக் கிடைத்த தகவலின்படி தமிழ்நாடு முழுவதும் உள்ள முஸ்லீம் சமுதாயத்தினர் இதுபற்றிக் கொதிப்படைந்திருக்கிறார்கள், அதிருப்தி அடைந்திருக்கிறார்கள் என்ற சூழ்நிலையில் அமைச்சரவர்கள் இது பற்றி விளக்கினால் பிரயோசனமாக இருக்கும் என்பதற்காகச் சொல்கிறேன். நான் இதற்காக அதிக நேரம் எடுத்துக் கொள்ள விரும்பவில்லை. அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன். இவ்வளவு பயங்கரமான மிக மோசமாக தகவல்கள் அமைச்சரின் நாலெட்ஜ் இல்லாமல் வந்திருக்க முடியாது. பாட நூல் நிறுவனத்தில் இப்படிப் பட்டவர்களை ஏன் நியமித்தீர்கள், அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள்? பள்ளிகளிலே பரீட்சை எழுத வேண்டியவர்கள் அந்தப் பகுதியை எழுத வேண்டியிருக்குமா? உதாரணத்திற்காகச் சொல்ல விரும்புகிறேன்.**

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

இவ்வாறு..........

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, மேல்நிலைப் பள்ளிக்கு வைக்கப்பட்டிருக்கும் ஒரு புத்தகத்தில் வணக்கத்திற்குரிய முகம்மது நபி அவர்களைப் பற்றிச் சில தவறான கருத்துக்கள் வந்திருக்கின்றன என்று கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறார்கள் என்று கருதுகிறேன். இன்றைக்கு அதை நீக்கி உத்தரவு போட்டாகி விட்டது. மறுபடியும், அதைத் திருப்பிப் படிப்பதன் மூலம் எந்தெந்த வகையிலே அதற்கு விளம்பரம் தர விரும்புகிறார்கள் என்று தெரியவில்லை. அது ஆட்சேபகரமான பகுதி, அது இருப்பதை விரும்பவில்லை என்றால், கூடுமான வரையில் அதைப் பற்றிச் சொல்லாமல் இருப்பதுதான் நலமே தவிர, அதைச் சொல்லி, அதற்குப் பாடப் புத்தகத்தில் விளம்பரமாகியிருப்பதைவிட அதிக விளம்பரத்தைத் தருகின்ற காரியத்தை அவர்கள் சொல்வதன் மூலம் யாருக்கு நன்மை செய்ய உறுப்பினரவர்கள் விரும்புகிறார்கள் என்று தெரியவில்லை.

திரு. அ. ரகுமான்கான்: அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள்: அடிப்படை வரலாறு தெரியாதவர்கள் எழுதுவதற்கு என்ன காரணம்?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினரவர்கள் பேசியதில் அத்தனையும் இருக்கட்டும். ஆனால் கடையாகச் சொன்னார்கள். அந்தப் புத்தகத்தில் எந்தப் பக்கம் என்றெல்லாம் சொன்னார்கள். அதுவெல்லாம் இருக்கட்டும். ஆனால் அதற்குள்ளே இருந்து படித்த விஷயங்கள் பத்திரிகைகளில் வர வேண்டாம், அவைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: நான் சொல்லியதில் என்ன தவறு?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஏற்கனவே மேலவையில் பேசும்பொழுது, அதை நீக்கியாகிவிட்டது என்று சொல்லியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். உத்தரவு போடப்பட்டிருக்கிறது. இப்பொழுது நீங்கள் பேசியது பத்திரிகைகளிலே வந்தால் அது மறுபடியும் வெளியே தெரியும். எனவே, அந்தக் குறிப்பைப் பத்திரிகைகளிலிருந்தும், அவைக் குறிப்பிலிருந்தும் நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எப. ஏ. லத்தீப்: துணைத் தலைவரவர்களே, இதை நீக்கியதற்காக அரசு உத்தரவிட்டிருக்கிறது என்று சொல்லி இருக்கிறார்கள். அதற்காக நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கனவே நான் ஒரு கவன ஈர்ப்புத்

தீர்மானம் கொடுத்திருக்கிறேன். என்னென்ன நீக்கியிருகிறார்கள் என்ற அந்த விவரங்களையெல்லாம் அந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொண்டு இந்த அவையிலேயும் சொல்லி விட்டால் பிரச்சினைகள் தீர்ந்துவிடும். அதைச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன. அந்தப் பிரச்சினையை விட அடுத்த பெரிய பிரச்னை (மணியடிக்கப் பட்டது)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள். இன்னும் நான்கு பேர் பேச வேண்டியிருக்கிறது,

திரு. எம். ஏ. லத்தீப்: ஆகவே, அதை விடுத்து, அடுத்த படியாக ஒரு விஷயத்தைச் சொல்கிறேன். உருது மொழியைப் பற்றி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு வைக்க விரும்புகிறேன். உருது மொழி லிங்குஸ்டிக் மைனாரிடி லாங்குவேஜ். ஆகவே, அந்த உருது மொழியைப் பற்றி என்னதான் சட்டங்கள் இருந்தாலும், குறிப்புகள் இருந்தாலும், ஆணைகள் இருந்தாலும், நடைமுறையிலே பார்த்தால் ஆபீசர்கள் லெவலில் இந்த உருது மொழியை எவ்வளவு தூரம் அழிக்க முடியுமோ அவ்வளவு தூரம் காரியங்கள் நடக்கின்றன. உருது மொழியைப் படிப்பதற்கான வாய்ப்பு வசதிகள் அதிக அளவிற்குக் குறைக்கப்பட்டிருக்கின்றன. அதை அரசு கவனத்தில் வைத்துக் கொண்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

அடுத்தபடியாக நான் சொல்ல விரும்புவது, சிறுபான்மையோர் நடத்தும் நிறுவனங்கள் விஷயமாக அரசு கடைப் பிடிக்கும் கொள்கை ஊறு விளைவிக்கக் கூடியதாக இருக்கிறது என்பதைத் தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். உணர்ச்சி பூர்வமாகக் காரியங்களைச் செய்துவிட்டு, இருக்கிற யதார்த்த நிலைமைகளை மறந்து விட்டால், சமுதாயத்தில் வேறு விளைவுகளை ஏற்படுத்திவிடும். அது தேவையில்லாத விஷயத்தை நாமே தருவிப்பதாகவும் ஆகும். அரசியல் சட்டத்திலேயே குறிக்கப்பட்டிருக்கின்ற ஜீவாதார உரிமைகளில் அரசு கை வைக்க முயல்வதை எப்பொழுதுமே சமுதாயம் ஏற்றுக் கொள்ளாது. நேரடியாகச் சம்பளம் கொடுக்க வேண்டுமென்று சொல்கிற விஷயத்தில் யார் மூலம் கொடுத்தாலும் கவலை இல்லை, ஆனால் இதில் உள்ள சட்டப் பிரச்சினையையும் கவனத்திற்கொள்ள வேண்டும். மானேஜ்மென்ட் ஆசிரியர்களாக இருக்கலாம். எம்ப்ளாயர்—எம்ப்ளாயீஸ் ஸ்டேடஸ் என்னவென்றால், நேரடியாக ஊதியம் கொடுப்பதற்கு என்ன உரிமை அவர்களுக்கு இருக்கிறது? அப்படி மானேஜ்மென்ட்டார் நடத்துகின்ற நிறுவனங்களில், அரசியல் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிற அடிப்படையான உரிமைகளை அது முஸ்லீம் பள்ளிகளானாலும் சரி, கிருத்துவ பள்ளிகளானாலும் சரி, அந்தச் சட்டத்திலே சொல்லப்பட்டிருக்கிற அடிப்படை உரிமைகளை அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். அதை அரசு கவனிக்க வேண்டும்.

[1979 மார்ச் 26

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சீக்கிரம் முடியுங்கள். ஒவ்வொரு கட்சியிலிருந்தும் ஒரு பிரதிநிதி பேசவேண்டியிருக்கிறது. ஆகவே, நீங்கள் ரெஸ்டிரிக்ட் பண்ணவேண்டும்.

திரு. எம். ஏ. லத்தீப் : இன்றைக்குக் கல்லூரிகளை மூட வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எத்தனை நாட்களுக்குக் கல்லூரிகளை மூடுவது ? கல்விக்காக நாம் எவ்வளவு செலவழிக்கிறோம் ? எதற்கு நாம் கல்லூரிகளை மூடுகிறோம்? இப்படி மூடிவிட்டால் என்ன பிரயோஜனம் ? நிலைமைகளைச் சமாளிக்க வேண்டுமே தவிர இருக்கின்ற கல்லூரிகளை மூடுவது முறையல்ல. இப்படிக் கல்லூரிகளை மூடுவதால், 'அன்-ஆர்கனைஸ்டு லேபரி'லே பலருக்கு வருமானம் இல்லை. ரூ. 1, ரூ. 2 கூட சம்பளம் கிடைப்பதில்லை. நம்முடைய சமுதாயத்திலே எம்.ஏ. படித்துவிட்டு, உடனே பாங்கியிலே வேலை கிடைத்தால் சுமார் 926 ரூபாய் சம்பளம் பெறுகிறார்கள். அடிக்கடி இந்த மாதிரி தாக்குதல் நடந்து கொண்டிருந்தால், இந்த நாட்டினுடைய நிலைமை என்னவாகும் என்று சொல்ல முடியாது. ஆகவே, இந்த நிலைமையில் அன்-ஆர்கனைஸ்ட் லேபரில் ஒரு புரட்சி ஏற்படும். பலரிடையே இப்போது உருவாகிக் கொண்டிருக்கிறது. அத்தனை பேர்களிடமிருந்தும் இந்தப் பெருமூச்சு உருவானால், யாரால் தடுத்து நிறுத்த முடியும் ? எனவே, அடிக்கடி இம்மாதிரி கல்லூரிகளை மூடுவதால் எவ்விதமான பிரயோஜனமும் இல்லை. இந்த அரசு சிந்தித்து, அந்தக் கல்லூரிகள் அனைத்தும் செம்மையான முறையிலே நடைபெற நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும். அந்த வகையிலே இதனைச் செய்ய, தமுவ முன்வர வேண்டும். இல்லாவிட்டால், வருங்காலத்திலே கல்வியின் தரம் நிச்சயமாகப் பாதிக்கும். இன்றைக்கு அரசியலுக்காக கல்வித் துறையைப் பாழாக்கினால், வருங்காலம் நம்மைச் சபிக்கும் என்பதை உங்களுக்குச் சொல்லி, எனவே, கல்லூரிகளை மூடுவதைத் தடுத்து நிறுத்துங்கள் என்று கூறி அமர்கிறேன்.

[மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை;

திரு. செ. மெ. ராஜூ : பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்த மன்றத்திலே கல்வித் துறை அமைச்சர் அவர்களால் வைக்கப்பட்ட இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த ஆட்சி பொறுப்பேற்ற இரண்டு ஆண்டு காலத்தில், கல்விக்கு மிக அதிகமான தொகையை ஒதுக்கிச் செலவிட்டு, கல்வி வளர்ச்சி அடைந்திருப்பதைப் பாராட்டுகிறேன். கிட்டத்தட்ட நான்கில் ஒரு பங்கு வருமானத்தை இந்த மானியத்திற்காகச் செலவழிக்கிறோம். மாநிலக் கல்வி ஆலோசனைக் குழு என்ற ஒரு குழுவை அமைச்சர் அவர்கள் நியமித்து, அதிலே அரியதொரு ஆலோசனைகள் எல்லாம் சட்ட மன்ற உறுப்பினர்களும், மற்றவர்களும் கேட்டு, அதன்படி கல்வியினுடைய வளர்ச்சியை முன்னேறச் செய்ததற்குப் பாராட்டுகிறேன். வேலை இல்லாத நிலைமையைப் போக்க, தொடக்கக் கல்விக்கு 1,000 ஆசிரியர்களும், உயர்நிலைக் கல்விக்கு

1979 மார்ச் 26] [திரு. செ. மெ. ராஜூ]

200 ஆசிரியர்களும், உடற் பயிற்சி ஆசிரியர்கள் 200 பேர்களும், மேலும் 200 தொழில் நுட்ப ஆசிரியர்களும் நியமிக்கப்பட இருப்பதைப் பாராட்டுகிறேன். (மாண்புமிகு பேரவைத் தலைவர் இருக்கையில் அமர்தல்) இதனால் வேலையற்று இருக்கும் ஆசிரியர்களுடைய நிலைமை சீரடையும். இதிலே, மேலும் அதிகமான எண்ணிக்கை உள்ள ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 1-00]

நிர்வாக நலனைக் கருதி, சேலம் மாவட்டம், தர்மபுரி மாவட்டத்திற்கும் சேர்ந்து ஒன்றாக இயங்கி வந்த முதன்மைக் கல்வி அலுவலகம் இப்போது நிர்வாக நலனைக் கருதி புதிதாகத் தனியாக முதன்மைக் கல்வி அலுவலகம் திறக்க இருப்பதை நான் பாராட்டுகின்றேன்.

மதிய உணவுத் திட்டத்தில் ஏழை எளிய மாணவர்களுக்கு இலவசமாக உணவு வழங்கப்படுகின்ற முறை—ஒருவேளை உணவு கூட இல்லாமல் இருக்கும் ஏழை எளிய மாணவர்கள் தங்கள் கல்வியைக்கற்றுக்கொள்வதற்கு வசதியான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்திருப்பதைப் பாராட்டுகின்றேன். மேலும் இந்த மதிய உணவுத் திட்டத்தின் கீழ் மைய உணவுக் கூடம் ஏற்படுத்துவது—குறிப்பாக தர்மபுரியிலும் இராமநாதபுரத்திலும் நிறுவ இருப்பது பாராட்டுதற்குரியது. இதைப்போன்று எல்லா மாவட்டங்களிலும் மைய உணவுக் கூடங்களை நிறுவ வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேல்நிலைப் பள்ளித் திட்டம் ஒன்றை அமைச்சர் அவர்கள் வைத்துள்ளார்கள். எஸ்.எஸ்.எல்.ஸி. வரை படித்த மாணவர்கள்—கிராமப்புறங்களில் உள்ள மாணவர்கள்—கல்லூரிகளைத் தேடிச் சென்று பல இன்னல்களை அனுபவித்துக் கொண்டிருப்பதை நாம் கண்கூடாகப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அந்த நிலை மாறி கிராமப்புறங்களில் இந்தக் கல்லூரிப் படிப்பை அதாவது 10 பிளஸ் 2 பிளஸ் 3 என்ற படிப்பை அமைச்சர் அவர்கள் வெகு தீவிரமாகச் செயல்படுத்திக் கொண்டிருப்பதைப் பாராட்டுகின்றேன். உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றிய தலைமை ஆசிரியர்கள் எல்லாம் இன்றைய தினம் அவர்களுடைய பணியை முன்னிட்டு வேறு மேல்நிலைப் பள்ளிகளுக்கு மாற்றப்பட்டிருக்கிறார்கள். மேலும் 10, 12 ஆண்டுகள் பி.டி. படித்துவிட்டு ஒரே பள்ளியில் வேலை பார்த்து வந்தவர்கள் இன்றைய தினம் வேறு பள்ளிகளுக்கு மாற்றப்பட்டிருக்கிறார்கள். இதனால் அவர்களுக்கு ஏற்படுகின்ற கஷ்டத்தை உணர்ந்து அவர்களை முன்னால் இருந்த பள்ளியிலேயே நியமிக்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. செ. மெ. ராஜு] [1979 மார்ச் 26

மேலும் கல்வித் துறையில், கல்லூரிக் கல்வி என்றும், பள்ளிக் கல்வி என்றும், தேர்வுக் கல்வி என்றும் தனித்தனியாக இயக்குநர்களை நியமித்திருப்பது பாராட்டுதற்குரியதாகும். இருந்தாலும் ஆரம்பக் கல்விக்கு என்று தனியாக ஒரு இயக்குநரை நியமிக்க வேண்டும் என்று இச்சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன். மேலும் இப்போது புதிதாக அறிவியல் கூடங்கள் திறக்கப்பட்டு அதற்குரிய கருவிகளும் வழங்கப்படுகின்றன. இதே போன்று ஆய்வுக் கூடங்களை எல்லா உயர்நிலைப்பள்ளிகளிலும் துவக்க வேண்டும் என்றும், அதற்குரிய கருவிகளை வழங்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

பொறியியல் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகள் இவைகளில் மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும்போது, கிராமப்புறங்களிலுள்ள மாணவர்களுக்கு முன்னுரிமை அளிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் பள்ளி ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு எல்லாம், பிற அரசு ஊழியர்களுடைய குழந்தைகளுக்கு வழங்கப் படும் எல்லாச் சலுகைகளையும் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எல்லா அரசு நிர்வாகங்களிலும் தமிழ் இருக்க வேண்டும் என்று உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டும், இன்னும் ஆங்கிலத்தின் மோகம் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. ஆகவே தமிழ் வளர்ச்சித் துறையை செம்மைப்படுத்தி அதிக எண்ணிக்கையுள்ள அரசு அலுவலாளர்களை நியமித்து அவர்களுக்குச் சில வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியைப்பற்றி சில கோரிக்கைகளையும் ஆசிரியர் சம்பந்தமான ஒருசில கோரிக்கைகளையும் அமைச்சர் அவர்களின் முன் வைக்கிறேன்.

கல்வித் துறையைப் பொறுத்தவரையில், இந்தத்துறை உள்ளாட்சித் துறையிலும், தனியார் துறையிலும், நகராட்சித் துறையிலும் நலத்துறையிலும் இப்படிப் பலதுறைகளிலும் பல திட்டங்கள் இருக்கின்றன. இவற்றையெல்லாம் சேர்த்து ஒரு கல்வி வாரியமாக ஆக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் மேல் தொடக்கப் பள்ளிகளுக்கு ஆய்வுக் கூடங்களும், அதற்கு வேண்டிய உபகரணங்களும் வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுகிகொள்கிறேன். மேலும் ஆசிரியர்களுடைய குழந்தைகளுக்கு கல்லூரிப் படிப்பு வரை இலவசக் கல்வி அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்களுக்கு இரண்டு ஆண்டு தனிப்பயிற்சி முடிந்தவுடன் ஊதியத்தில் மாற்றம் இல்லாமல் இருக்கிறார்கள். அப்படியில்லாமல் அவர்களுடைய ஊதியத்தை உயர்த்தித்தர வேண்டும் என்று

1979 மார்ச் 26] *[திரு. செ. மெ. ராஜு]*

கேட்டுக்கொள்கிறேன். கிராமப்புறங்களில் பணிபுரிகின்ற ஆசிரியர்களுக்கு வீட்டுவாடகைப்படியும், மருத்துவப் படியும் இந்த அரசு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்கள்- மாணவர்கள் விகிதாச்சாரத்தைக் குறைத்து ஆசிரியர்களை அதிகப்படியாக நியமிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் ஆத்தூரில் பேரறிஞர் அண்ணா கலைக் கல்லூரி ஒன்று இருக்கிறது. இதற்கு ஆஸ்டல் வசதி கிடையாது. ஆகவே உடனடியாக அங்கே ஒரு ஆஸ்டலைக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையிலும், தம்மம்பட்டு, தலைவாசம் போன்ற இடங்களில் பள்ளிக்கூட வசதிகள் இல்லாமல் இருக்கின்றது இதுவரையிலும் அங்கேயெல்லாம் அரசாங்கம் கட்டிடம் கட்டித்தரவில்லை. பொதுமக்கள் கட்டிக் கொடுத்த கட்டிடங்களிலேதான் பள்ளிகள் இருக்கின்றன. எனவே, இந்த அரசு நிதி ஒதுக்கி அங்கேயெல்லாம் கட்டிடங்கள் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கங்கைவள்ளியில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி இருக்கிறது. 25 மாணவர்களே இருக்கிறார்கள். 500 பேர்களுக்கான இடம் இங்கே இருக்கிறது. இப்போது அந்தப் பள்ளியிலே இடம் சும்மாதான் இருக்கின்றது. எனவே, அந்தக் கட்டிடத்தைப் பயன்படுத்தி. அங்கே ஒரு பெண்கள் உயர்நிலைப்பள்ளி அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த அளவிலே இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து விடை பெறுகிறேன். வணக்கம்.

*** திரு. கா. அப்புனு கவுண்டர்:** சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் 17 ஆம் எண், கல்வி மானியக் கோரிக்கையின் மீது ஜனதா கட்சியின் சார்பாகச் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த ஆண்டு கல்வித் துறைக்கு 209 கோடி ரூபாய் பணம் ஒதுக்கியிருப்பதை வரவேற்கிறேன். ஆனால், அதே நேரத்தில் நாம் இவ்வளவு தொகை செலவு செய்தாலும், கல்வியின் தரம் குறைந்துவிட்டது என்பதை நாம் யாரும் மறுக்க முடியாது என்று கருதுகிறேன்.

தனியாரால் நடத்தப்படுகின்ற பள்ளிகளானாலும், கல்லூரிகளானாலும் நல்லமுறையிலே நடத்தப்படுகிறது. அங்கே அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களைச் சேர்த்து விடுகிறார்கள். அதனால், தரமான கல்வி அங்கே பயிற்றுவிக்கப்படுகிறது. ஆனால், அரசு துறைக் கல்லூரிகளிலே, பள்ளிகளிலே எல்லாவிதமான மாணவர்களையும், எவ்வளவு மார்க்குகள் வாங்கியிருந்தாலும் சேர்த்து விடுவதன் காரணமாக, கல்வியின் தரம் குறைவாக இருக்கிறது. இந்தச் சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால், அந்தக் கல்லூரிகளும் நல்ல முறையிலே நடப்பதற்கான நடவடிக்கைகளை

அவசியம் இந்த அரசு எடுக்க வேண்டும், அதிலே அவசியம் கவனம் செலுத்த வேண்டுமென்று நான் இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இப்போது இந்த ஆண்டு கொடுக்கப்பட்ட மானியக் கோரிக்கையிலே 1,000 செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கும், 200 உடற் பயிற்சி ஆசிரியர்களுக்கும், 200 பி.டி. ஆசிரியர்களுக்கும் வேலை வாய்ப்பு கொடுக்கப் போவதாகக் குறிப்பிடப்பட்டிருக் கிறது. ஆனால், இதிலே உண்மை நிலை என்ன என்பதைப் பார்த்தால், 37 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் வீதம் அமர்த்தப் படவேண்டுமென்று இருக்கிறது. நடைமுறையிலே இப்படிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. கொடுக்கப்பட்டுள்ள குறிப்பிலேயும் உள்ளது. ஆனால் உண்மை நிலை என்ன? 60 முதல் 70 மாணவர் களுக்குக்கூட ஒரே ஆசிரியர் என்ற பொறுப்பு இருந்து வருகிறது. எனவே, கூடுதலாக ஒரு ஆசிரியர் போட வேண்டுமென்ற கோரிக்கை பல பஞ்சாயத்து யூனியன்களிலே இருந்து வந்திருக்கிறது. அப்படி இருந்தும், அதற்கு நிதி ஒதுக்கப்படவில்லை. எனவே, இதையெல்லாம் ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்து, மாணவர்களுக்குத் தகுந்தாற்போல் ஆசிரியர்கள் போட்டால்தான் கல்வியின் தரம் உயரும். எனவே, அதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

அடுத்து, ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், செகண்டரி கிரேடு ஆசிரியர்களாக இருப்பவர்கள் சிலர் பி.டி. பட்டமும் பெற்றிருக்கிறார்கள். சிலர் புலவர் பயிற்சியில் தேர்வு பெற்றிருக் கிறார்கள். நீங்கள் கொடுக்கின்ற இந்தப் புதிய நியமனங்களிலே, அவர்களுக்கு முன்னுரிமை அளித்து, அவர்களுக்கு முதலிலே கொடுத்துவிட்டு, பிறகு மற்ற பயிற்சி பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கவேண்டும். இப்போது இந்தக் குறைபாடு இருந்து வருகிறது. எனவே, வேலை செய்யும் ஆசிரியர்களுக்குமுன்னுரிமை கொடுப்பது என்பதை அமல் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, போஸ்ட் கிராஜுவேட் டிகிரி. மேல்நிலைப் பட்ட தாரிகளை யெல்லாம், உயர்மட்ட அதாவது ஹையர் செகண்டரி பள்ளிகளிலே நியமிக்கின்றபோது, உயர்நிலைப் பள்ளிகளிலே இருக்கக்கூடிய பி.டி. ஆசிரியர்கள் 10, 15 ஆண்டுகள் அனுபவம் பெற்றோ அல்லது எம்.ஏ., எம்.எஸ்ஸி., பட்டம் பெற்றிருந்தாலே நியமிக்கப்படுகின்ற நிலைமை இப்போது நடந்துவருகின்றது. அப்படிப்பட்ட செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் சிலர் எம். ஏ., எம்.எஸ்ஸி. தகுதி பெற்றிருந்தும், அவர்கள் யாருக்கும் இந்தப் பள்ளிகளிலே வேலை வாய்ப்பு கொடுக்கப்படாமல் இருக்கின்றது, அதையும் இந்த அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

இந்த நண்பகல் உணவுத் திட்டத்தை, மைய இடத்திலே இருந்து உணவு கொண்டுபோய் எல்லா இடங்களுக்கும் வழங்கக் கூடிய இந்தத் திட்டத்தை வரவேற்கிறேன். இந்த ஆண்டு

1979 மார்ச் 26] [திரு. கா. அப்புனு கவுண்டர்]

என்னுடைய மாவட்டமாகிய தர்மபுரியிலே கொண்டுவந்து இருப்பதை வரவேற்பதோடு, இதனாலே மதிய உணவுத் திட்டத்திலே உள்ள சீர்கேடுகளையும் களைய வேண்டிய வாய்ப்பு ஏற்படுகிறது. கூடிய சீக்கிரத்தில் எல்லா மாவட்டங்களுக்கும் இதைக் கொண்டு வரவேண்டுமென்று நான் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 1-10]

அடுத்து, பள்ளிக் கட்டிடங்களைப் பொறுத்தவரை ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். உயர்நிலைப்பள்ளிக் கட்டடங்கள் அந்தப் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டபோது எந்த நிலையில் இருந்தனவோ அதே நிலையில்தான் இன்னும் இருந்துகொண்டிருக்கின்றன. நாளுக்கு நாள் மாணவர்கள் தொகை அதிகமாகும் நிலையில் கட்டிடங்கள் தேவை என்ற நிலை வந்தும் உயர்நிலைப் பள்ளிக் கட்டிடங்கள் இல்லாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. இதை உடனடியாக நிவர்த்தி செய்ய வேண்டியது அவசியம். அரசு கொடுக்கக்கூடிய மானியம் குறைந்து கொண்டே வருகிறது. அதனால் கட்டிடங்கள் பூர்த்தியாகாமல் இருக்கின்றன. முன்பு பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளாக இருந்தபோது இருந்த கட்டிடமே இன்று அரசு உயர்நிலைப் பள்ளிகளாக மாறிய பிறகும் இருந்துகொண்டிருக்கின்றன. எங்கெங்கு உயர்நிலைப்பள்ளிக் கட்டிடங்கள் தேவை என்று குறிப்பு வருகிறதோ அங்கெல்லாம் உடனடியாகக் கட்டிடம் கட்ட வாய்ப்பு ஏற்படுத்தித்தரவேண்டும்.

அடுத்து, துவக்கப் பள்ளிகளைப் பொறுத்தவரை அரசு மானியங்கள் மூலமாக ஒரு கட்டிடத்தைக் கட்ட அனுமதி இருக்கிறது. இரண்டாவது கட்டிடம் தேவையென்றால் அரசு அனுமதி கிடையாது என்று தெரிகிறது. உண்மையிலேயே மாணவர்கள் அதிகமாகி இரண்டாவது கட்டிடம் தேவை என்ற நிலைமை ஏற்பட்டால் இரண்டாவது கட்டிடத்திற்கும் மானியத் தொகை கொடுப்பதற்கு அரசு உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கல்லூரிகளைப் பொறுத்தவரை எங்கள் மாவட்டத்தில் இரண்டு கலைக் கல்லூரிகள் கிருஷ்ணகிரியில் ஒன்றும், தர்மபுரியில் ஒன்றும் இருக்கின்றன. எல்லாப் பாடங்களும் அங்கு இல்லை. தர்மபுரியில் இரண்டு மூன்று பட்டப் படிப்பு பாடங்கள்தான் இருக்கின்றன. அதேபோன்று கிருஷ்ணகிரியிலும் இரண்டு மூன்று பட்டப் படிப்புப் பாடங்கள்தான் இருக்கின்றன. மற்ற மாவட்டங்களைப் பொறுத்தவரை பத்து பதினைந்து கல்லூரிகள் இருப்பதால் அடுத்த கல்லூரியில் படிக்க வாய்ப்பு இருக்கிறது. எங்கள் மாவட்டம் பின்தங்கிய மாவட்டம். ஏழை எளிய மாணவர்கள், வெளி மாவட்டங்களுக்குச் சென்று மாநிலக் கல்லூரிகளுக்குச் சென்று படிக்க வாய்ப்பில்லாதவர்கள். உள்ளூரில் என்ன பட்டப் படிப்பு இருக்கிறதோ அதைத்தான் படிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கிறார்கள். எல்லாப் பட்டப் படிப்புகளையும் இந்த ஆண்டாவது அந்த இரண்டு கலைக் கல்லூரிகளி

லும் அரசு ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பெண்கள் கல்லூரி ஒன்று வேண்டுமென்று கடந்த இரண்டாண்டுகளாகக் கூறி வருகிறோம். எங்கள் மாவட்டத்தில் பெண்கள் கல்லூரியே இல்லை. ஆண்களாவது வெளி மாவட்டங்களுக்குச் சென்று படிக்கலாம். பெண்கள் போவது சிரமம். பெண்கள் கல்லூரி ஒன்றை இந்த ஆண்டு எங்கள் மாவட்டத்தில் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தர்மபுரி மாவட்டத்தில் ஒரு பாலிடெக்னிக் ஏற்படுத்தும் குறிப்பு இருக்கிறது. தர்மபுரி நகரத்தில் எந்த ஒரு தொழிற் பயிற்சியும் இல்லை. பாலிடெக்னிக்கைத் தர்மபுரி நகரத்தில் ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விளையாட்டைப் பொறுத்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். மாவட்ட ஸ்போர்ட்ஸ் கவுன்சில் என்று ஒவ்வொரு மாவட்டத்திலும் இருக்கிறது. அதற்கு அந்தந்த மாவட்டங்களிலிருந்து உறுப்பினர்களை நியமனம் செய்கிறார்கள். என்ன அடிப்படை என்று தெரியவில்லை. கட்சி பாகு பாட்டுடன் நியமனம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. சிறந்த விளையாட்டு வீரர்களை, விளையாட்டில் தொடர்புடையவர்களை அதிலே அங்கம் பெறும் வகையில் நியமிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நூல் நிலையங்கள் லோகல் செஸ் வரியின் மூலமாகவும். அரசு கொடுக்கும் மானியத்தின் மூலமாகவும் நடைபெற்று வருகிறது. எனக்குத் தெரிந்த அளவில் இரண்டு மூன்று மாதங்களாக நூலகங்களில் பணி புரிகிறவர்களுக்கு சம்பளம் கொடுக்க முடியாத நிலைமை இருந்து வருகிறது. லோகல் செஸ் வரிகள் சரியான முறையில் வசூலிக்கப்படாததால் அத்தகைய நிலைமை ஏற்படுகிறது என்று மாவட்ட நூலக அதிகாரி கூறுகிறார்.

அந்த நிலை வேண்டாம். அரசே நூல்நிலையங்களை மேற்கொண்டு அவர்களுக்குச் சம்பளம் கொடுக்க வேண்டும், அரசே அவைகளை ஏற்று நடத்த வேண்டுமென்று தெரிவித்துக் கொண்டு எனக்கு இன்றைக்கு கல்வி மானியத்திலே பேச வாய்ப்புக் கொடுத்ததற்காக நன்றியைக் கூறி முடிக்கிறேன்.

திரு. செ. சிவசாமி : மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி மானியக் கோரிக்கையிலே ரூ. 209 கோடி ஒதுக்கியதாகப் பெருமையடித்துக் கொண்டிருக்கிறோம். கிராமாந்திர மக்கள் வாழ்விலே கல்வி மலரவில்லை. அந்தக் குழந்தைகளிடையே கல்வி மலரவில்லை என்பதை உங்களுடைய புள்ளிவிவரங்களே தெளிவாகக் காட்டுகின்றன. உதாரணமாக. 1978-79ஆம் ஆண்டிலே, 6 முதல் 11 வயதுள்ள மாணவர்கள் 62,21 லட்சமாக இருந்தவர்கஸ்,

1979 மார்ச் 26] [திரு. செ. சிவசாமி]

11 முதல் 14 வயது மாணவர்கள் என்று வருகிறபோது 16.95 ஆகக் குறைந்திருக்கிறார்கள். அதே மாணவர்கள் 14 முதல் 17 வயது என்று வருகிறபோது 7.27 லட்சமாகக் குறைந் திருக்கிறார்கள். இப்படி பார்க்கிறபோது 61 லட்சமாகப் படிக்கத் துவங்கியவர்கள் 16 லட்சமாகக் குறைந்து இருக் கிறார்கள். ஆகவே கிட்டத்தட்ட 44 லட்சம் மாணவர்கள் ஆரம்பப் பாடசாலையிலே படித்தவர்கள் காணவில்லை. எங்கே போனார்கள் என்று தெரியவில்லை. அதைப் போன்றே 16 லட்சமாகப் படித்துக் கொண்டிருக்கிறவர்கள் மேல் வகுப் பிலே பார்த்தால் 7 லட்சம் பேர்களாகக் குறைந்திருக் கிறார்கள். இங்கே கிட்டத்தட்ட 8 லட்சம் மாணவர்களைக் காணவில்லை. இப்படி மூன்று கட்டங்களிலேயும் பார்த்தால் 61 லட்சமாகத் துவங்கியவர்கள் 7 லட்சமாகக் குறைந்து விட்டார்கள், அவ்வளவு பேர்கள்தான் மேல் கல்விநிலையில் படிக்கிறார்கள் என்ற நிலைமைதான் இருக்கிறது. இதை வைத்துக் கல்லூரிகள், பள்ளிகள் கணக்கை நாம் போடவேண்டும். ஒட்டு மொத்தமாக 209 கோடி ஒதுக்கப்படுகிறது என்று சொல்கிறார் களே, மாணவர்கள் இவ்வளவு பேர்கள் இடையிலே எங்கே போனார்கள் என்று பார்க்கவேண்டாமா? கல்வியமைச்சர் அவர்கள் மிகவும் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டு இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து விகிதாச்சார அடிப்படையிலே பார்த்தாலும் கூட, 6--லிருந்து 11 வயது வரையிலே 94 சதவீதமாக இருந்தது. 11--லிருந்து 14 வரையிலே 58 சதவீதமாக இருக்கிறது. 14–17 வரையிலே 30 சதவீதமாகத்தான் இருக்கிறது. இப்படி பார்க்கிறபோது, 64 சதவீதம் குழந்தைகளைக் காண வில்லை. அவர்கள் எங்கே போனார்கள் ? வீட்டுக்குப் போய்விட்டார்களா? கிராமங்களிலே படிக்கக்கூடிய மாண வர்கள் பள்ளிக்கு வரவில்லையென்றால் எங்கே போனார்கள்? உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்று சொல் வது மாதிரி உழவுக்குப் போனார்களா என்றால் அங்கேயும் போகவில்லை. எங்கே இருக்கிறார்கள் அந்தச் சாதாரண ஏழை எளிய மக்கள், அரிசன மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் எங்கே பார்த்தாலும் காணவில்லை. ஆனால் மெரினா பீச்சிலே தேங்காய், மாங்காய், பட்டாணி, சுண்டல், முறுக்கு விற்றுக் கொண்டிருக்கிறார்கள். நகரங்களிலே உள்ள ஹோட்டல்களிலே வேலை செய்து கொண்டு இருக்கிறார்கள். இப்படி 11 வயதிலிருந்து 14 வயது வரையுள்ள குழந்தைகள் தமிழ்நாடு முழுவதும் திரிந்து கொண்டிருக்கிறார்கள். அந்தக் குழந்தைகளுக்குக் கல்வி கொடுப்பதற்கு அடிப்படைத் திட்டம் எதுவும் உங்கள் புள்ளிவிவரத்திலே கிடையாது.

மேனாடுகளிலே பார்த்தால், குறிப்பாக சோவியத் ரஷியா விலே பார்த்தால் அங்கே 65 லட்சம் மாணவர்கள் ஆரம்பக் கல்வி பெறுகிறார்கள் என்றால் கல்லூரி வரையிலும் கடைசி

வரையிலும் அந்த 65 லட்சம் மாணவர்களும் படிக்கிறார்கள், இடையில் காணவில்லை என்றால் அதற்கு அங்கே பதில் சொல்லியாகவேண்டும். அந்த அளவிற்கு 100-க்கு 100 கல்வி அறிவு பெறுகின்ற காரணத்தால்தான் அவர்கள் இன்றைக்கு சந்திரனிலே கொடியை நடுகிறார்கள், அங்கே நாயை அனுப்புகிறார்கள், இன்னும் என்ன என்னமோ நடத்திக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், தமிழ்நாட்டிலே குழந்தைகள் படிப்பை விட்டுவிட்டு தேங்காய், மாங்காய், பட்டாணி, சுண்டல் விற்றுக் கொண்டிருக்கிறார்கள். சென்னை நகரத்திலே பார்த்தால், சிறு பையனிடம் சாராயம் கொடுத் தனுப்பி, சிறு பையனாவதால் யாரும் கவனிக்க மாட்டார்கள் நல்ல முறையிலே சாராயம் விற்கமுடியும் என்ற நிலைமை இருந்து வருகிறது என்பதை நான் அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

கட்டட வசதிகளைப் பொறுத்த வரையில் கிராமாந்திர பகுதிகளில் எங்கு பார்த்தாலும் ஓலைக் குடிசைகள்தான் இருக்கின்றன, நல்ல பாம்புகள் அங்கே குடி கொண்டிருக் கின்றன.

[பிற்பகல் 1--20]

என்னுடைய தொகுதியிலே இளையாங்குடி பஞ்சாயத்து யூனியனிலே, நன்னியாவூரிலே மூன்று நான்கு மாதங்களுக்கு முன் ஒரு நல்ல பாம்பை அடிக்கிறார்கள். காலையிலே சென்று பார்த்தால் படம் எடுத்து ஆடிக்கொண்டிருக்கும், சாரைப் பாம்பு கூட இருக்கும். காரணம் என்னவென்றால், கீழே பொந்துகள் இருக்கின்றன. அதை அடைப்பதற்குக் கூட வழியில்லாத அளவிலே, பாம்புகள் குடியிருக்கும் நிலையிலே இன்றைக்கு ஆரம்பப் பள்ளி இருந்து கொண்டிருக்கிறது என் பதை மேலான கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இந்த நிலைமைகளுக்குக் காரணம் என்ன என்பதைப் பார்க்க வேண்டும். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், ஆனந்தூர் பள்ளி அடியோடு விழுகின்ற நிலைமையிலே இருக் கிறது. சோளாந்தூரில் பள்ளிக்கூடமே இல்லை. இன்னும் பலயிடங்களில் பள்ளிக்கூடம் இல்லை. குலநாத்தி என்ற ஊரில் ஆரம்பப் பள்ளி வேண்டுமென்று மனுக் கொடுத்திருக் கிறார்கள். ஏ. டி. எம். கே. செயலாளர் ராமசாமி அவர்கள் எழுதியிருக்கிறார்கள். அங்கே ஆரம்பப் பள்ளிக்கூடத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சொல்லி எழுதியிருக்கிறார்கள். அந்த அளவிற்குக் கிராமாந்திரப் பகுதிகள் கவனிக்கப்படாமல் இருக்கின்றன என்பதை மதிப்பிற்குரிய அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (மணியடிக்கப்பட்டது) தயவு செய்து இன்னும் கொஞ்சம் நேரம் அளிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பத்து நிமிஷம் என்றால் பத்து நிமிஷம்தான். அதற்குள் பேசுங்கள். அதற்குமேல் அனுமதிக்கமாட்டேன். இன்னொருவர் பேச வேண்டும். எனவே, சுருக்கமாகப் பேசுங்கள்.

திரு. செ. சிவசாமி : நாளைக்கு நாங்கள் பேசவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 25-வது நிமிஷத்திலே மணியடித்து விடுவேன். அதற்குள் பேசுங்கள்.

திரு. செ. சிவசாமி : கிராமாந்திரச் சாலைகளை எடுத்துக் கொண்டால், இணைப்புச் சாலைகள் சரியானபடி இல்லாத தால் பள்ளிக்கூடங்களுக்குப் பையன்கள் செல்வது கஷ்ட மாக இருக்கிறது.

ஸ்காலர்ஷிப் விஷயமாகச் சொல்ல வேண்டுமென்றால், கேரளாவில் 8,000 ரூபாய் வரையில் வருமானம் உள்ளவர் களுக்கு ஸ்காலர்ஷிப் கிடைக்கிறது, ஆந்திராவில், 6,000 ரூபாய் வரையில் வருமானம் உள்ளவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கிடைக்கிறது. ஆனால் நாம் என்ன நிர்ணயித்திருக்கிறோம் என்றால், 2,500 ரூபாய் என்று சொல்லப்படுகிறது. அதுவும் கூட இன்றைக்கு அறிக்கையிலே அதை எடுத்திருக்கிறோம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. எந்த அளவிற்கு நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது என்று சொல்லப்படவில்லை. நான் சொல்ல விரும்புகிறேன். தமிழ்நாட்டில் 6,000 ரூபாய் வருமானம் உள்ளவர்கள் அத்தனைபேருக்கும் ஸ்காலர்ஷிப் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக அரிசன மாணவர்களுக்கு அந்த நியதியை எடுத்துவிட்டு, என்ன வருமானம் இருந்தாலும் அவர்கள் படிக்க வேண்டுமென்ற திட்டத்தைக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, 'டெஸ்டிடியூஷன் சர்டிபிகேட்' வாங்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அதை இன்றைக்கிருக் கின்ற அரிசன மாணவர்களும், பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களும், ஏழை மாணவர்களும் வாங்க வேண்டி யிருக்கிறது. இவர்களுக்கு அந்த சர்டிபிகேட் கிடைக்கக் கஷ்டமாக இருக்கிறது. 150 வருஷங்களுக்கு முன்னால் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய காலத்தில் 'டெஸ்டிடியூஷன் சர்டிபி கேட்' என்று 300 ரூபாய் நிர்ணயித்து இருக்கிறார்கள். இன்றைக்கும் அது மாற்றப்படாமல் அப்படியே இருக்கிறது. அதன்மூலம் எதையும் படிப்பதற்குத் தடங்கல் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, நம்மிடத்தில் படித்துவிட்டு இருக்கின்ற 12,000 உபாத்தியாயர்களுக்கு வேலை இல்லை. 20 மாணவர்களுக்கு ஒரு உபாத்தியாயர் என்று போட்டால் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியும். சாதாரண ஜனங்களுக்கு நல்ல தரமான கல்வி கற்பிக்க நல்ல தரமான ஆசிரியர்களைப் போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கணவன் மனைவியை ஒரேயிடத்தில் வேலை செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். எங்கள் மாவட்டத்தில், மதுரையில் கணவனும், இராமநாதபுரத்தில் மனைவியும் இப்படியாக இரண்டுபேரும் தனித்தனியாகப் பிரித்து வைக்கப்பட்ட சம்பவங்களைப் பற்றி மதிப்பிற்குரிய அமைச்சரவர்களின் நோட்டீசுக்கே கொண்டு வந்திருக்கிறேன்.

ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் 16 அம்ச கோரிக்கைகளுக்காகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் கோரிக்கைகளுக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேற்கு வங்கத்திலும், கேரளத்திலும் அரசுகள் கொண்டு வந்திருப்பதைப் போல ஒரு போனஸ் திட்டத்தைக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மதிப்பிற்குரிய அமைச்சரவர்கள் மத்திய அரசுடன் கலந்து உடனடியாக எல்லாவிதமான ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

'அடடா' பணத்தைத் திருப்பிக் கொடுக்க வேண்டிய திட்டத்தை இலகுவாக ஆக்கி உடனடியாகப் பணத்தைத் திருப்பிக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

பரமக்குடியில் உள்ள ஒரு பள்ளிக்கூடத்தின் ஹெட்மாஸ்டருக்குக் கிட்டத்தட்ட 18 மாத காலமாகச் சம்பளம் கிடைக்கவில்லை. ஆனால் இன்றைக்கும் அவர் வேலை செய்து கொண்டிருக்கிறார். அவர் மீது எந்தவிதமான கம்ப்ளெயிண்டும் கிடையாது. நிர்வாகத்தில் கோளாறு இருக்கிறது. அரசு நினைத்தால் அதை நிவர்த்தி செய்ய முடியும். அந்த ஹெட்மாஸ்டருக்குச் சம்பளம் கொடுக்க முடியும். அவர் 18 மாதங்களாகச் சம்ப்ளம் இல்லாமல் வேலை செய்து கொண்டிருக்கிறார், அதை அரசு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல, பார்திபனூரில் ஒரு உயர்நிலைப்பள்ளி இருக்கிறது. அதை மேல் நிலைப்பள்ளியாக மாற்ற வேண்டுமென்று நான் கோரிக்கை கொடுத்திருக்கிறேன். அதேபோல் சாலைக் கிராமத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளியையும் மேல் நிலைப்பள்ளியாக ஆக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறேன்.

இன்றைக்கு அவைகள் அவ்வாறு எடுத்துக் கொள்ளப்பட வில்லை. பார்த்திபனூரில் 752 பேர் இருக்கிறார்கள். தாழ்த்தப்பட்டவர்கள் 301 பேர்கள், பின் தங்கியவர்கள் 368 பேர்கள். விவசாய குடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகள் 98 சதவீதம். மற்றவர்கள் இரண்டே இரண்டு சதவீதம். அப்படிப் பட்ட நிலையிலே உள்ள பள்ளிக்கூடங்களையாவது இந்த ஆண்டு அவசியம் நீங்கள் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று பணிவோடு சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பிளஸ் 2-வைப் பொறுத்தவரை, கிட்டத்தட்ட 709 பள்ளிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் 332 என்ஜி னீயரிங் செக்‌ஷன்களாக உள்ளன. இன்றைய தினம் வரை அங்கே மெஷனரீஸ் வராமலிருக்கிறது. கட்டிடங்களைப் பொறுத்தவரை 225 ஸ்கூல்களுக்குக் கட்டிடம் வரவேண்டும். அதில்லாமல், புது ஸ்கூல்கள் 107. இதில் மின்சார சம் பந்தமான பாடம் உள்ள ஒரு பள்ளிக்கு 1 இலட்சத்து 4 ஆயிரமும், மற்ற பள்ளிகளுக்கு ரூ. 50,000-மும் செலவழிக்க இருக்கிறோம். அப்படியானால், சராசரியாக, 332 பள்ளி களுக்கும் ரூ. 3 கோடி வேண்டும். ஆனால், ஒதுக்கி யிருப்பது ரூ. 1-3/4 கோடிதான்.

திருப்பாலைக்குடியில் 'எக்ஸ்பென்சிவ் லொக்காலிட்டி அலவன்ஸ்' என்று கொடுக்கிறார்கள். அந்தப் பகுதிகள் மழையாலும், மற்ற இயற்கை சீற்றத்தாலும் பாதிக்கப்படு வதால், 'எக்ஸ்பென்சிவ் லொக்காலிட்டி அலவன்ஸ்' என்று போலீஸ்காரர்கள், மத்திய அரசு ஊழியர்கள் ஆகியோருக்கு அளிக்கிறார்கள். ஆனால், ஆசிரியர்கள் அந்த அலவன்ஸ் வேண்டுமென்று கேட்டுக்கொண்டும், இன்றைக்குவரைக்கும் அதற்கான ஆர்டர் போடாத நிலைமை இருந்து கொண் டிருக்கிறது. ஆகவே, அது சம்பந்தமாக உடனடி நட வடிக்கை எடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள் கிறேன்.

உயர்நிலைப்பள்ளிகளிலே ஏ விங், பி விங் இரண்டையும் ஒன்றாக இணைத்து உத்தரவு போடப்பட்டிருப்பது வர வேற்கவேண்டிய விஷயம். ஆனால், ஏ விங்கைப் பொறுத்த வரையில், 20 வருஷம் சர்வீஸ் ஆனவர்களுக்குக் கூட சரி யானபடி பதவி உயர்வு கொடுக்கப்படவில்லை. மொத்தத்தில் யாவரையும் ஒழுங்குபடுத்தி அவரவர்கள் சர்வீசுக்குத் தகுந்தபடி பதவி உயர்வு கொடுக்க வேண்டாமா ? ஆகவே, அதையும் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன்.

கல்லூரி ஆசிரியர்களைப் பொறுத்தவரை எக்காரணம் கொண்டும் வேலை நீக்கம் செய்யக்கூடாது என்று சொல்லிக் கொள்கிறேன்.

தனியார் கல்லூரிகளில் நேரடியாக ஊதியம் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விளையாட்டு சம்பந்தமாக, அதிகமாகப் பேசாவிட்டாலும், கடந்த ஆண்டு இருந்த நிலையைச் சொல்கிறேன். இந்தியாவைப் பொறுத்தவரையில், உலகத்தில் மூன்றில் ஒரு பங்கு ஜனத்தொகையைக் கொண்டது நமது இந்திய நாடு. ஆனால், ஒலிம்பிக் போன்ற போட்டிகளில் 10, 15-வது இடத்திலே தானிருக்கிறோம். அந்த அளவு பின் தங்கியிருக்கிறோம்.

கிராமாந்தரங்களிலே, மாணவர்கள் பள்ளிக்கூடங்களில் படிக்கும்போது, அவர்களை விளையாட்டுகளிலே ஈடுபடச் செய்தால், உலக விளையாட்டுகளிலே அவர்கள் முதலில் வருவார்கள் என்று சொல்லிக் கொண்டு, அந்த அளவு விளையாட்டுகளிலே கவனம் செலுத்த வேண்டிய ஏற்பாட்டைச் செய்யும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

இயல், இசை, நாடகம் போன்றவைகளில் கவனம் செலுத்தியிருப்பதை வரவேற்க வேண்டிய அம்சமாக நாங்கள் கருதுகிறோம். முதியோர் கல்வியையும், முறைசாராக் கல்வியையும் ஒன்றாக இணைத்து, மாலை நேரங்களில், பள்ளிக்கூடங்களில் இருக்கக்கூடிய உபாத்தியாயர்களை வைத்து, பாடம் சொல்லிக் கொடுக்க ஏற்பாடு செய்தால், பள்ளிகளுக்குத் தேவையான லைட்டுகளைப் பள்ளிகளில் போட்டு, ஏற்பாடு செய்தால், இந்தத் திட்டம் வெற்றி அடையும். அதற்கு வேண்டிய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முதியோர் பள்ளிக்கூடங்களில் படிக்க வருகின்றவர்களில் பல பேர் 'காடராக்ட்' என்ற நோயினால் பீடிக்கப்பட்டு, பார்வையிழந்த நிலையிலிருக்கிறார்கள். எங்கள் பகுதியில் 450 பேர்களுக்கு ஆப்பரேஷன் செய்து 8 மாதங்களாகியும் இன்னும் கண்ணாடி சப்ளை செய்யப்படவில்லை. அதை உடனடியாகக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். முதியோர் கல்வித் திட்டம் ஏற்படுத்தி இருக்கிறோம், முதியோர்கள் படிக்க வேண்டுமென்று சொல்கிறோம். ஆனால், அவர்களுக்குக் கண்ணாடி இல்லை. ஆகவே, அவர்களுக்கு கண்ணாடி வழங்கி, அவர்களுக்குப் பாடம் கற்பிக்க வழிசெய்யவேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்திலே, எழுத்துச் சீர்திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். அதை வரவேற்கிறோம் என்று சொல்லி முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.29 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

(8) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

@ 127. 1975–76 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனத்தின் மூன்றாம் ஆண்டு அறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-A பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

92. தொழிலாளர் நல-வேலைவாய்ப்புத் துறையில், 1978 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 30 ஆம் தேதியன்று வெளியாகி, 1978 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 30 ஆம் தேதியிடப் பெற்ற, தமிழ்நாடு அரசிதழின் பாகம்-II, பிரிவு 2-ல் வெளியான 992-ம் எண் அரசாணைக்கு, தொழிலாளர் நல-வேலைவாய்ப்புத் துறையின் 1978 ஆம் ஆண்டு டிசம்பர் 26 ஆம் தேதியிடப் பெற்ற 65666/F2/78–3 ஆம் எண் குறிப்பாணையில் வெளியான அச்சுப் பிழை திருத்தம்.

93. கோரிக்கை எண் 17—கல்வி—1979-80 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் கல்வி வளர்ச்சி பற்றிய குறிப்பு (தமிழ், ஆங்கிலம்).

94. 1979-80 ஆம் ஆண்டில் செயல்திறன்—வரவு செலவுத் திட்டங்கள்—பள்ளிக்கல்வி, கல்லூரிக்கல்வி, தொழில் நுட்பக் கல்வி (ஆங்கிலம்).

@தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 21(5) விதியில் கண்ட வரம்பு நிபந்தனையை ஒட்டி சட்டமன்ற நூலகத்தில் வைக்கப் பெற்றுள்ளது.

இணைப்பு

[...232 ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

I. தோற்றுவாய்.

கல்விச் செலவும் மாநில வரவு-செலவுத் திட்டமும்.

நிதி நிலை அறிக்கையில் கல்விக்கான நிதி ஒதுக்கம் தொடர்ந்து முதலிடம் பெற்று வருகிறது. கல்விக்காக 1979-80 ஆம் ஆண்டில் ரூபாய் 209 கோடி (''மானியக் கோரிக்கை 17-கல்வி''-யின் கீழ்) நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இத்தொகை 1979-80-ல் வருவாய்க் கணக்கில் ஆகும் மொத்தச் செலவான ரூபாய் 849 கோடியில் 25 விழுக்காடாகும். வரவு-செலவுத் திட்டத்தில் மற்றெல்லாத் துறைகளைக் காட்டிலும் கல்வித் துறைக்கே அதிகத் தொகை அளிக்கப்பட்டுள்ளது. கல்வி மானியத்தின்கீழ் 1975-76-ல் ரூபாய் 123 கோடியும், 1976-77-ல் ரூபாய் 143 கோடியும், 1977-78-ல் ரூபாய் 163 கோடியும் செலவாயின. 1979-80-க்கான திருத்த மதிப்பீடு ரூபாய் 191 கோடியாகும். கல்விச் செலவு தொடர்ந்து உயர்ந்து கொண்டே வருவதை இது காட்டும்.

2. கல்வி மானியக் கோரிக்கையின் கீழ் 1979-80 வரவு-செலவு மதிப்பீட்டில் பல்வேறு நிலைக் கல்விப் பணிகளுக்கும் செய்துள்ள நிதி ஒதுக்க விவரங்கள் பின்வருமாறு :—

	1979-80 வரவு-செலவு மதிப்பீடு.		
	திட்ட மல்லாத செலவினம்.	திட்டச் செலவினம்.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)
	(ரூபாய் இலட்சத்தில்.)		
259. அரசுப் பள்ளிகள், கல்லூரிகள் முதலிய வற்றின் கட்டட பாராமரிப்பு செலவு.	50	..	50

இணைப்பு.

	1979--80 வரவு-செலவு மதிப்பீடு.		
	திட்ட மல்லாத செலவினம்.	திட்டச் செல வினம்.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)
	(ரூபாய் இலட்சத்தில்.)		
277. கல்வி—			
1 தொடக்கக் கல்வி	100,89	73	101,62
2 உயர்நிலைப் பள்ளிக் கல்வி.	57,37	53	57,90
3 மேல்நிலைப் பள்ளிக் கல்வி.	6,80	8,37	15,17
4 கல்லூரிக் கல்வி ..	19,62	88	20,50
5 சிறப்புக் கல்வி	59	55	1,14
6 தேசீய மாணவர் படை, விளையாட்டு முதலியவை.	1,56	40	1,96
7 பிற இனங்கள் ..	1	..	1
8 தொழில் நுட்பக் கல்வி.	5,99	97	6,96
மொத்தம்—277. கல்வி ..	1,92,83	12,43	2,05,26
278. கலை, பண்பாடு	25	16	41
தொல்பொருள் ஆராய்ச்சி	10	6	16
ஆவணக் காப்பகமும் அரும் பொருட்காட்சி சாலைகளும்.	30	1	31
பொது நூலகங்கள் ..	1,33	2	1,35
	1,98	25	2,23

இணைப்பு.

(1)	(2)	(3)	(4)
		(ரூபாய் இலட்சத்தில்.)	
288. சமூகப் பாதுகாப்பும் நலனும் (ஊனமுற்றோருக்கான பள்ளிகள் முதலியன).	51	1	52
பலவகை	2	..	2
மொத்தம் மானியக் கோரிக்கை 17—கல்வி.	1,95,84	12,69	2,08,53

3. கல்வி வளர்ச்சிக்காகச் செய்யப்பட்டுள்ள மேற்கண்ட நிதி ஒதுக்கங்கள் தவிர பள்ளி, கல்லூரிக் கட்டிடங்கள், கடன்கள் முதலியவற்றிற்காக பிற கோரிக்கைகளின் கீழ் 1979--80-ல் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கம் வருமாறு :—

	திட்டத்தின் கீழ் வராத செலவு.	திட்டச் செலவு.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)
	பொதுக் கல்வி.		
		(ரூபாய் இலட்சத்தில்.)	
(அ) வருவாய்க் கணக்கில் செலவு—			
314. சமுதாய வளர்ச்சிப் பணிகள்— ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டிடங்கள்.	..	1,00	1,00
சமூகக் கல்வி.. ..	..	8	8
மானியக் கோரிக்கை 37—			
பொதுப் பணி—			
அரசுப் பள்ளிக் கட்டிடங்கள்.	4	10	14
266. தனியார் மற்றும் உள்ளாட்சி மன்ற ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம்.	6,57	..	6.57

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1979 மார்ச் 26]

பொதுக் கல்வி—தொடர்ச்சி.

	திட்டத்தின் கீழ் வராத செலவு.	திட்டச் செலவு.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)
	(ரூபாய் இலட்சத்தில்.)		
(ஆ) வருவாய்க் கணக்கின் கீழ் வராத செலவு—			
459. மூலதனச் செலவு-அலுவலகக் கட்டிடங்கள்.	..	1	1
477. மூலதனச் செலவு அரசுப் பள்ளிகள், கல்லூரிகளுக்குக் கட்டிடங்கள்.	..	4,70	4,70
483. வீட்டு வசதிக்கான மூலதனச் செலவு.	..	2	2
767. கடன்கள்—தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குத் திருமணக் கடன்.	1	..	1
677. தேசீய கடன் படிப்புதவி தொகைகள்.	40	..	40
மொத்தம்—பொதுக் கல்வி	7,02	5,91	12,93
தொழில் நுட்பக் கல்வி.			
477. அரசுத் தொழில் நுட்பக் கல்வி நிலையக் கட்டிடங்களுக்கான மூலதனச் செலவு.	4	20	24
677. தொழில் நுட்பக் கல்வி மாணவர்களுக்குக் கடன்கள்.	9	..	9
தொழில் நுட்பக் கல்வி நிலையங்களுக்குக் கடன்.	..	6	6
மொத்தம்—தொழிற் கல்வி	13	26	39
மொத்தம்—பொதுக் கல்வியும் தொழிற் கல்வியும்.	7,15	6,17	13,32

மேற்சொன்ன நிதி ஒதுக்கங்களைக் கணக்கிற் கொண்டால் 1979-80-ல் கல்விக்காக செலவிடப்படும் தொகை ரூபாய் 222 கோடியாகும்.

4 (i) தாழ்த்தப்பட்டோர் மற்றும் பின்தங்கிய வகுப்பினர் நலப் பள்ளிகள், விடுதிகள், தாழ்த்தப்பட்டோர் பழங்குடி வகுப்பினர், பின்தங்கிய வகுப்பினரைச் சேர்ந்த மாணவர்களுக்குப் படிப்பு உதவித் தொகைகள், முதலியவற்றிற்கான செலவும் சீர்திருத்தப் பள்ளிகள், தொழிற் பயிற்சி நிறுவனங்கள் போன்றவற்றிற்கான செலவுகளும் மேற்படி செலவினங்களின்கீழ் வாரா. இந்த இனங்களின் மொத்தச் செலவு சுமார் ரூபாய் 30 கோடியாகும்.

(ii) மருத்துவக் கல்வி, வேளாண்மைக் கல்வி, கால் நடை மருத்துவக் கல்வி ஆகியவற்றிற்கு, அந்தந்தத் துறைகளின் கீழ் தனித்தனியாக ஒதுக்கியுள்ள நிதி மொத்தம் சுமார் ரூபாய் 12 கோடி. மேற்கண்ட இரு இனங்களுக்கு ஆகும் செலவையும் (ரூபாய் 30 கோடியும், ரூபாய் 12 கோடியும்) கணக்கில் கொண்டால், 1979-80-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் கல்வி வளர்ச்சிக்கான மொத்தச் செலவு சுமார் ரூபாய் 264 கோடியாக இருக்கும்.

5. எல்லாத் தலைப்புகளின்கீழும் (277—கல்வி; 477—கல்வி மூலதனச் செலவு; 677—கடன் முதலியன) கல்விக்காக 1979-80 ஆம் ஆண்டில் செய்யப்பட இருக்கும் திட்டப் பணிகளின் செலவு விவரம் வருமாறு: (கூட்டல் குறிக்குப் பின்னர் உள்ள இலக்கங்கள் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களுக்கான செலவினைக் குறிக்கும்).

	1979–80-ல்.		
	பொறுப்பேற்ற செலவினம்.	புதியதாக ஒப்பளிப்பு வழங்கும் செலவினங்கள்.	மொத்தம்
(1)	(2)	(3)	(4)
		(ரூபாய் இலட்சத்தில்.)	
பொதுக் கல்வி—			
1. பள்ளிக் கல்வி ..	64 +14	1,31	1,95 +14
2. மேல் நிலைப் பள்ளிக் கல்வி.	7,21	4,35	11,56

1979 மார்ச் 26]

(1)	(2)	(3)	(4)
			(ரூபாய் இலட்சத்தில்)
3. கல்லூரிக் கல்வி ..	83	36	1,19
	+1,04		+1,04
4. கட்டட வகையில் பொதுப்பணித் துறைச் செலவு.	65	..	65
	9,33	6,02	15,35
	+1,18		+1,18
தொழில் நுட்பக் கல்வி ..	54	38	92
	+33		+33
சத்துணவு — நண்பகல் உணவு.	..	10	10
கலைப் பணிகள் ..	21	14	35
	+3		+3
பெரு மொத்தம்	10,08	6,64	16,72
	+1,54		+1,54

மாநில கல்வி ஆலோசனைக் குழு.

6. 1958-66 ஆம் ஆண்டுகளில் கல்வி பற்றி அரசுக்கு ஆலோசனை கூற சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்று செயல்பட்டு வந்தது. அக்குழுவைப் புதுப்பிக்க முடிவு செய்து அரசு அண்மையில் ''மாநில கல்வி ஆலோசனைக் குழு''-வை மீண்டும் அமைத்துள்ளது. அக்குழுவின் தலைவர் கல்வி அமைச்சர். சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் 15 பேர்களும் மேலவை உறுப்பினர்கள் 9 பேர்களும் ஆக 24 பேர்கள் உறுப்பினர்களாவர். குழுவின் முதல் கூட்டம் விரைவில் கூட்டப்படும். கல்விக் கொள்கை பற்றிய அனைத்து விஷயங்கள் பற்றியும் அக்குழு அரசுக்கு ஆலோசனை கூறும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

II. பள்ளிக் கல்வி.

(i) பொது.

1. கல்விச் செலவில் பெரும் பகுதி பள்ளி கல்விக்குத்தான் ஆகிறது. 1979-80 ஆம் ஆண்டில் கல்வி மானியத்திற்கான ரூபாய் 209 கோடியில், பள்ளிக் கல்விக்கு ஒதுக்கியுள்ள தொகை சுமார் ரூபாய் 160 கோடியாகும். 1-8-1978 அன்றைய நிலவரப்படி தமிழ் நாட்டில் மொத்தம் 36,238 பள்ளிகள் இருந்தன. அவற்றில் தொடக்கப்பள்ளிகள் 27,425; உயர் தொடக்கப் பள்ளிகள் 5,705; உயர் நிலைப் பள்ளிகள் 3,108 (912 மேல் நிலைப் பள்ளிகள் உட்பட). அனைத்துப் பள்ளிகளிலும் பணி செய்து வந்த ஆசிரியர்கள் எண்ணிக்கை $2\frac{1}{2}$ இலட்சம். பயின்று வந்த மாணவர்கள் எண்ணிக்கை 85.43 இலட்சம் (மேல் நிலைப் பள்ளி முதல் வகுப்பில் பயின்று வந்த 1.14 இலட்சம் மாணவர்கள் உட்பட). இந்த 36,238 பள்ளிகள் மற்றும் வேறு சிறப்புப் பள்ளிகள் ஆகியவற்றின் நிருவாகவாரி விவரங்கள், ஆசிரியர், மாணவர் எண்ணிக்கை ஆகியவற்றை இணைப்பில் காணலாம்.

2. 1978-79-ல் 6-11, 11-14, 14-17 வயதுத் தொகுதியினருள் முறையே 94 சத வீதம், 58 சதவீதம், 30 சதவீதம் சிறுவர் சிறுமியர் பள்ளிகளில் சேர்க்கப்பட்டு இருந்தனர். விரிவான விவரங்கள் இணைப்பில் தரப்பட்டுள்ளன.

3. 1979-80 ஆம் ஆண்டில் (6-11, மற்றும் 11-14 வயதுத் தொகுதிகளுக்காக) 1,000 இடைநிலை (செகண்டரி கிரேடு) ஆசிரியர் பதவிகளும், (உயர் தொடக்கப் பள்ளிகளுக்கும் உயர்நிலைப் பள்ளிகளுக்கும் சேர்த்து) 200 உடற் பயிற்சி ஆசிரியர் பதவிகளும், உயர் தொடக்கப் பள்ளிகளுக்கு 200 பி.டி. தலைமை ஆசிரியர் பதவிகளும், உயர்நிலைப் பள்ளிகளுக்கு 200 பி. டி. தரப் பதவிகளும் ஏற்படுத்தப்படும். உயர் தொடக்கப் பள்ளிகளில் உள்ள பகுதி நேரக் கைத்தொழில் ஆசிரியர் பதவிகளில் 200 முழு நேரப் பதவிகளாக உயர்த்தப்படும். (மேல் நிலைப் பள்ளிகளுக்கு ஏற்படுத்தப்படும் கூடுதல் பதவிகளின் விவரம் பின் அத்தியாயத்தில் தரப்பட்டுள்ளது.)

4. ஆசிரியர்களோடு கல்வித்துறை நல்ல தொடர்பு வைத்திருக்க வகை செய்து ''தமிழ் நாட்டில் கல்வி'' என்னும் பெயரில் காலாண்டு இதழ் ஒன்றை வெளியிட அரசு ஏற்பளித்துள்ளது. பள்ளிக் கல்வி இயக்குநர் தலைமையில் உள்ள ஆசிரியர் குழு ஒன்று அதை வெளியிடும். அதன் முதல் இதழ் விரைவில் வெளிவரும்.

1979 மார்ச் 26]

பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள்.

5. பள்ளிகளில் உள்ள வசதிகளைப் பெருக்கும் நோக்குடன் மக்கள் முயற்சியையும் ஆர்வத்தையும் தூண்டும்வகையில் (1978 செப்டம்பர் முடிய) பள்ளி சீரமைப்பு மாநாடுகள் 578 நடந்துள்ளன. பொதுமக்களிடமிருந்து ரூபாய் 14·32 கோடி மதிப்புள்ள பொருள்கள் பெறப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் இப்பொழுது அறிவியல்—நூல் நிலைய மேம்பாட்டிற்கான வசதிகளைப் பெறுவதில் நாட்டம் செலுத்தப்பட்டு வருகிறது. பொதுமக்களின் நன்கொடையைக் கொண்டு 1978 செப்டம்பர் வரை ரூபாய் 3·03 கோடி செலவில் 41·22 இலட்சம் மாணவர் களுக்கு இலவசமாகச் சீருடை வழங்கப்பட்டுள்ளது.

கல்வித் துறை நிருவாகம்.

6. தற்பொழுது தலைமைக் கல்வி அலுவலர்கள் 12 ; மாவட் டக் கல்வி அலுவலர்கள் 43 ஆகியோர் உள்ளனர். பள்ளித் துணை ஆய்வாளர்கள் சரகங்கள் 396 உள்ளன. கல்வித் துறை நிருவா கத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் 1979-80 ஆம் ஆண்டில் மேலும் ஒரு தலைமைக் கல்வி அலுவலர் பதவி (தருமபுரி மாவட்டத்துக்கு); மேலும் ஒரு மாவட்டக் கல்வி அலுவலர் பதவி (சென்னைக்கு) ; மேலும் 15 பள்ளித் துணை ஆய்வாளர் பதவிகள் ஆகியவை புதியதாக ஏற்படுத்தப்படும்.

(ii) தொடக்கக் கல்வி.

மாணவர் சேர்க்கை.

1. 6–11 வயதுத் தொகுதிச் சிறுவர்களில் 94 விழுக்காட்டின ரும், 11–14 வயது தொகுதிச் சிறுவரில் 58 விழுக்காட்டினரும், இதுவரைப் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவ்விரு வயதுத் தொகுதிகளின்கீழ் 1977-78 ஆம் ஆண்டில் 3·21 இலட்சம் மாணவ மாணவியரும், 1978-79-ல் 1·93 இலட்சம் பேரும் கூடுதலாகச் சேர்க்கப்பட்டனர். 1978-79 ஆம் ஆண்டில் இருந்த 33,130 தொடக்கப் பள்ளிகளில் படித்த மொத்த மாணவர் களின் எண்ணிக்கை 67·46 இலட்சமாகும். வேலை பார்த்த ஆசிரியர்களின் எண்ணிக்கை 1,81,087 ஆகும். ஆசிரியர், மாணவர் விகிதம் 1:37 ஆகும்.

2. தொடக்கப் பள்ளியில் சேரும் மாணவ மாணவியர் தொடர்ந்து படிக்காமல் இடையிலேயே பெரும் எண்ணிக்கையில் பள்ளியிலிருந்து நின்றுவிடும் நிலையை மாற்றப் பல நடவடிக்கை கள் எடுக்கப்படுகின்றன. 1972-73 முதல் 1976-77 முடியவுள்ள ஆண்டுகளின் புள்ளி விவரங்களிலிருந்து, முதல் வகுப்பில் சேரும்

மாணவர்களுள் 58 விழுக்காட்டினரே 5ஆம் வகுப்பு வரைத் தொடர்ந்து படிக்கின்றனர் என்றும் மீதி 42 விழுக்காட்டினரும் இடையிலேயே பள்ளியை விட்டு நின்றுவிடுகின்றனர் என்றும் தெரிகிறது. தொடக்கப்பள்ளி நண்பகல் உணவுத் திட்டம், இலவசமாகப் புத்தகங்கள், கற்பலகைகள் வழங்கும் திட்டம் போன்றவை மாணவ மாணவியர் பள்ளியை விட்டு இடையில் நின்று விடாமல் தொடர்ந்து படிக்கச் செய்ய வேண்டுமென்பதையும் நோக்கமாகக் கொண்டவை. இவற்றோடு 1977-78 முதல் மாநிலத்தில் 1–3 வகுப்புகளில் மாணவர்கள் அனைவரையும் மேல் வகுப்பிற்கனுப்பும் முறை செயல்படுத்தப்படுகின்றது.

நண்பகல் உணவுத் திட்டம்.

3. அனைத்துத் தொடக்கப் பள்ளிகளிலும் நடைமுறையில் உள்ள நண்பகல் உணவுத் திட்டம், பள்ளிகளில் மாணவர் சேர்க்கையை உயர்த்துவதிலும், மாணவர் தொடர்ந்து பள்ளிக்கு வரும்படி செய்வதிலும் சிறந்த இடத்தைப் பெறுகிறது. இப்பள்ளிகளில் பயில்கின்ற மாணவர் தொகையில் மூன்றில் ஒரு பங்காகிய மிகவும் ஏழைக்குடும்பங்களிலிருக்கின்ற மாணவர்கள் இத்திட்டத்தால் நற்பயன் பெறுகின்றனர். தொடக்க-உயர் தொடக்கப் பள்ளிகளில் 1–8 வகுப்புகளில் பயிலும் ஏறத்தாழ 20.25 இலட்சம் மாணவர்களுக்கு இத்திட்டத்தின்கீழ் நண்பகல் உணவு வழங்கப்படுகிறது. அரிசன நல/பிற்பட்டோர் நலத்துறைகள் நடத்திவரும் பள்ளிகளில் பயிலும் சுமார் 1.65 இலட்சம் மாணவரும் இவ்வெண்ணிக்கையில் அடங்குவர். 1979–80 ஆம் ஆண்டில் நண்பகல் உணவுத் திட்டத்திற்காக ஏறத்தாழ ரூ. 5·37 கோடி செலவிடப்படும். நண்பகல் உணவுத் திட்டத்திற்காக மாநில அரசு ஒரு மாணவனுக்கு நாளைக்கு 10 காசு வீதம் ஆண்டுக்கு 200 நாட்களுக்கு மானியம் அளிக்கிறது. உள்ளாட்சி மன்றங்கள் ஒரு மாணவனுக்கு நாளைக்கு 5 காசு வீதம் ஆண்டுக்கு 200 நாட்களுக்கு உதவித் தொகை அளிக்க வேண்டுமென ஆணையிடப்பட்டுள்ளது. கேர் நிறுவனத்திலிருந்து இலவசமாக ஆண்டுதோறும் கிட்டும் சுமார் 20,000 டன் உணவைத் தொடக்கப் பள்ளி நண்பகல் உணவுத் திட்டம் பயன்படுத்துகிறது.

4. மைய சமையற்கூடத் திட்டம் செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு ஆகிய மூன்று மாவட்டங்களில் செயல்பட்டு வருகிறது. அங்கு நவீன அடுப்புகளில் சுகாதார முறைப்படி சமைக்கப் பெற்ற உணவு சுற்றுப்புறங்களிலுள்ள பள்ளிகட்கு மூடப்பட்ட வண்டிகளில் எடுத்துச் சென்று வழங்கப்படுகிறது. இம்மாவட்டங்களில் இயங்கிவரும் 97 சமையற்கூடங்களும் கேர் நிறுவனத்தாரின் 2 கோடி ரூபாய் நிதியுதவியுடன் நிறுவப்பட்டவையாகும். இம்மாவட்டங்களில் சுமார் 4 இலட்சம் மாணவர்கட்கு அவை, பகல் உணவு வழங்கிவருகின்றன.

1979 மார்ச் 26]

மைய சமையற்கூடங்கள்லிருந்து பள்ளிகட்கு உணவை எடுத்துச் சென்று வழங்க 224 உந்து வண்டிகளையும் கேர் நிறுவனம் வழங்கியது. இந்த பெட்ரோல் வண்டிகள் பயன்படாத வகையில் பழுதாகும் போது புதிதாக வாங்கும் வண்டிகளை டீசல் வண்டிகளாக வாங்கினால் செலவு குறையும். ஆகையால் அவ்வாறே படிப்படியாகச் செய்யப்பட்டு வருகிறது. கடந்த 3 ஆண்டுகளில் அவ்வாறு 33 டீசல் வண்டிகள் வாங்கப்பட்டன. இவ்வண்டிகளையும், சமையல் சாதனங்களையும் பழுது பார்க்க 'கேர்' நிறுவனத்தின் உதவியுடன் தென்னார்க்காடு மாவட்டம் விக்கிரவாண்டியில் ரூ. 15 இலட்சம் செலவில் அமைக்கப்பட்ட ஒரு பணிமனை செயல்பட்டு வருகிறது.

5. மைய சமையற்கூடத் திட்டத்தைப் படிப்படியாகப் பிற மாவட்டங்களுக்கும் விரிவாக்குவது நல்லதென்று கருதப் படுகிறது. மைய அரசு ஒப்புதலளித்தால் இதற்கான தொடராச் செலவில் 45 விழுக்காட்டை 'கேர்' நிறுவனம் ஏற்றுக்கொள்ளும். 1979–80–ல், முதல் கட்டமாக தருமபுரி மாவட்டத்தில் (90,000 மாணவர்களுக்குப் பயனளிக்கத்தக்க) 16 சமையற் கூடங்களும், இராமநாதபுரம் மாவட்டத்தில் (1,76,000 மாணவர்களுக்குப் பயனளிக்கத்தக்க) 32 சமையற் கூடங்களும் ஏற்படுத்த முடிவு செய்து, அதற்காக கேர் உதவியைப் பெற மைய அரசிடம் ஒப்புதல் கோரி அவ்வரசின் சமுதாய நலத்துறைக்கு எழுதப் பட்டுள்ளது. இந்த 48 சமையற்கூடங்களையும் அமைக்க மொத்தம் ரூ. 1,44 இலட்சம் ஆகும். அதில் ரூ. 65 இலட்சத்தை கேர் நிறுவனமும் ரூ. 79 இலட்சத்தை மாநில அரசும் ஏற்க வேண்டியிருக்கும்.

6. நண்பகல் உணவுத் திட்டத்திற்குத் தேவையான உணவுப் பொருள்களைச் சீராகச் சேமித்து அவ்வப்பொழுது வழங்கிட 'கேர்' நிறுவன உதவியுடன் ஏறத்தாழ ரூ. 30 இலட்சம் செலவில் வட்டாரக் கிடங்குகள் ஒன்பதும் அடையாற்றில் மையக் கிடங்கு ஒன்றும் கட்டப்பட்டுள்ளன. 'கேர்' உதவியுடன் மேலும் 3 கிடங்குகளை கட்ட மைய அரசின் ஒப்புதலை இவ்வரசு கோரியுள்ளது.

இலவசப் புத்தகங்கள் வழங்குதல்.

7. 1—3 வகுப்புகளில் பயில்வோரும், நண்பகல் உணவு பெறுவோருமான ஏழை மாணவர்களுக்கு முதல் வகுப்பில் பாடப் புத்தகங்களும், சிலேட்டும், இரண்டு, மூன்று வகுப்புகளில் பாடப் புத்தகங்களும் இலவசமாக வழங்கப்படுகின்றன. ஆண்டுதோறும் 13 இலட்சத்திற்கும் அதிகமான மாணவர்கள் இதனால் பயனடைந்து வருகின்றனர். 1972–73ஆம் ஆண்டிலிருந்து பாட நூல்கள் தருவதற்கு ஆகும் செலவினைத் தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனமே தனது நிதியிலிருந்து ஏற்று

வருகிறது. இதற்காக அந்நிறுவனம் ஆண்டு தோறும் ரூ. 25 இலட்சம் செலவிடுகிறது. முதல் வகுப்பு மாணவர்கட்கு சிலேட்டுகள் இலவசமாக வழங்கும் வகையில் ஆண்டுதோறும் அரசு சுமார் ரூ. 5 இலட்சம் செலவிடுகிறது.

8. தொடக்கப் பள்ளிகளில், அறிவியல் போதனையை மேம்படுத்தும் பொருட்டு பாடத்திட்டம் திருத்தியமைக்கப் பட்டுள்ளது. அறிவியல் சாதனங்கள் வாங்குதற் பொருட்டு ஒவ்வொரு தொடக்கப் பள்ளிக்கும் முன்னூறு ரூபாயும் ஒவ்வொரு உயர் தொடக்கப் பள்ளிக்கும் ஆயிரம் ரூபாயும் உதவித் தொகை யாக வழங்கப்படுகின்றன. இதுவரை இதன் மூலம் 12,620 தொடக்கப் பள்ளிகளும், 3,980 உயர் தொடக்கப் பள்ளிகளும் பயனடைந்துள்ளன. 1979–80-ல் மேலும் 200 உயர் தொடக்கப் பள்ளிகள் பயனடையும். கோயம்புத்தூரிலுள்ள அவினாசி லிங்கம் மனையியற் கல்லூரி மூலம் செயல்படுத்தி வரும் ஒரு முன்னோடித் திட்டத்தின் கீழ், கடந்த சில ஆண்டுகளில் கோயம் புத்தூர், நீலகிரி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் மொத்தம் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் 5,700 பேருக்கு சத்துணவு மற்றும் உடல் நலம் பற்றிப் புத்துணர்வுப்பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

தொடக்கப் பள்ளிக் கட்டிடங்கள்.

9. பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதற் பொருட்டு உள்ளாட்சி நிறுவனங்கட்கும் தனியார் நிறுவனப் பள்ளிகட்கும் மானியம் வழங்கப்படுகிறது. 1974–75-லிருந்து தொடக்கப்பள்ளி கட்டிட மானியம் ரூ. 10,000/17,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. நிரு வாகத்தினர் தர வேண்டிய குறைந்த பட்ச பங்குத் தொகையும் ரூ. 5,000/8,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. 1979–80-ல் நகராட்சி மற்றும் தனியார் தொடக்கப் பள்ளிகளுக்கு கட்டட மானியம் தர ரூ.4 இலட்சமும் அரசுத் தொடக்கப் பள்ளி கட்டிடங் களுக்காக ரூ. 17 இலட்சமும் (முன் ஆண்டுகளில் ஏற்பளித்த கட்டட வேலைகளை முடித்திட ரூ. 7 இலட்சமும், புதிய வேலை களுக்கு ரூ. 10 இலட்சமும்) ஒதுக்கப்பட்டுள்ளன. 1979–80-ல் ஊராட்சி ஒன்றியப் பள்ளி கட்டிடங்களுக்காக ரூ. 1 கோடி சமுதாய வளர்ச்சித் துறையின் வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் செலவிடப்படும்.

உள்ளாட்சி மன்றப் பள்ளிகள்.

10. தமிழ்நாட்டிலுள்ள ஏறத்தாழ 33,000 தொடக்கப் பள்ளிகளுள் ஏறத்தாழ 29,000 பள்ளிகள் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் அமைந்துள்ளன. அந்த 29,000 பள்ளிகளில், 23,000 பள்ளிகளை (சுமார் 19,900 தொடக்கப்பள்ளிகளும், 3,100 உயர் தொடக்கப் பள்ளிகளும்) ஊராட்சி ஒன்றியங்கள் நடத்தி வரு ன்றன. தொடக்கக் கல்விக்காக ஊராட்சி ஒன்றியங்கட்கு

1979 மார்ச் 26]

மானியம் வழங்குவதற்கான திருத்திய முறைப்படி (ஒரு ரூபாய் நில வரிக்கு 45 காசு என்று வசூலிக்கப்படும்) உள்ளூர் வரியில் 4/9 பாகம் தொடர்ந்து ஊராட்சி ஒன்றியக் கல்வி நிதிக்கு வழங்கப்படுகிறது. 1971ஆம் ஆண்டு மக்கள் தொகை அடிப் படையில் ஒவ்வொரு வட்டாரத்திலுமுள்ள மக்கள் தொகைக்கு தலைக்கு ரூ. 6 வீதம் கணக்கிட்டு வழங்கும் மானியமும், ஊராட்சி ஒன்றியக் கல்வி நிதிக்குச் செல்கின்றது. தொடக்கக் கல்விக்காக ஆகும் செலவில் எஞ்சியதை வட்டார வகைப் பாட்டிற்கு ஏற்ப அரசும், ஊராட்சி ஒன்றியங்களும் பகிர்ந்து ஏற்கின்றன.

11. சுமார் 1,450 பள்ளிகளை (சுமார் 1,060 தொடக்கப் பள்ளிகளும், சுமார் 390 உயர் தொடக்கப் பள்ளிகளும்) நகராட்சிகளும், சென்னை, மதுரை மாநகராட்சிகளும்நடத்தி வருகின்றன. நகராட்சிகள் கல்வி வரி வசூலிப்பதுடன் அவ்வாறு வசூலாகும் தொகையில் 50 விழுக்காட்டுக்கு ஈடான தொகையை அரசு மானியமாகவும் பெறுகின்றன. அத்துடன் நகராட்சிகள், மதுரை மாநகராட்சி ஆகியவற்றின் தொடக்கக் கல்விக் கணக்கில் துண்டு விழும் முழுத் தொகையினையும் அரசே ஈடு செய்து வருகின்றது.

(iii) உயர்நிலைப் பள்ளிக் கல்வி.

1. 1978-79-ல் தமிழ்நாட்டில் 14—17 வயதுத் தொகுதி யினர் 24,12 இலட்சம் பேர்கள் இருந்தனர். இவர்களுள் 30 விழுக்காடாகிய 7.27 இலட்சம் பேர் (மேல் நிலைப்பள்ளி முத லாண்டு வகுப்பில் பயின்று வந்த 1.14 இலட்சம் பேர் உட்பட) பள்ளிகளில் பயின்று வந்தனர். 1978-79-ல் இம்மாநிலத்தில் இருந்த 3,108 உயர்நிலைப்பள்ளிகளில் 65,379 ஆசிரியர்களும், 16.83 இலட்சம் மாணவர்களும் இருந்தனர். (3,108 உயர் நிலைப்பள்ளிகளில் 912-ல் மேல் நிலைப்பள்ளி முதல் ஆண்டு வகுப்பும் இருந்தன. அந்த 912 பள்ளிகளின் 1—10 வகுப்பு களுக்கான விவரங்களும் இப்புள்ளி விவரங்களில் அடங்கியுள்ளன.) 1978-79 ஆம் ஆண்டில் 41 உயர்நிலைப் பள்ளிகள் புதிதாகத் திறக்கப்பட்டன (அரசுப் பள்ளிகள் 33-ம், தனியார் பள்ளிகள் 8-ம்). இவற்றோடு ''ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) சட்ட'' 9ஆவது பிரிவின் கீழ் சிறுபான்மைக் கல்வி நிறுவனங்கள் இவ்வாண்டு 17 உயர்நிலைப்பள்ளிகளைத் திறந்துள்ளன.

அறிவியல் கல்வி.

2. புதிய பாடத் திட்டத்தின் கீழ் ஆறாம் வகுப்பிலிருந்தே இயல்பியல், வேதியியல், உயிரியல் ஆகியவை தனித்தனிப் பாடங் களாகப் பயிலப்படுகின்றன. அறிவியல் ஆய்வுக் கூடங்களை

அமைப்பதற்கான திட்டத்தின் கீழ் தெரிந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு அரசு உயர்நிலைப்பள்ளிக்கும் ரூ. 55,000 செலவிடப்படுகிறது (ஆய்வுக்கூட கட்டிடத்திற்காக ரூபாய் 37,000மும், கருவிகளுக்காக ரூ. 18,000மும்). தனியார் மற்றும் நகராட்சி உயர்நிலைப்பள்ளிகள் ஒவ்வொன்றும் பெறும் மானியம் ரூ. 40,200 ஆகும். இதில் ரூ. 18,000 கருவிகளுக்காகும். இவற்றைப் பள்ளிக் கல்வி இயக்குநரே வாங்கி வழங்குகிறார். எஞ்சிய ரூ. 22,200 ஆய்வுக்கூட கட்டிடத்திற்காகும். கட்டிடத்திற்கான செலவில் 60 விழுக்காடு, அல்லது ரூ. 22,200 இதில் எது குறைவோ அது, என்ற அடிப்படையில் ஆய்வுக்கூட கட்டிட மானியம் வழங்கப்படுகிறது. 1978–79 முடிய 968 உயர்நிலைப் பள்ளிகள் ஆய்வுக்கூட நிதியுதவி பெற்றிருந்தன. (கடந்த இரண்டு ஆண்டுகளில் பயன் பெற்ற 75 பள்ளிகள் உட்பட). 1979–80-ல் மேலும் 25 உயர்நிலைப் பள்ளிகளுக்கு ஆய்வுக்கூடம் அமைக்கப்படும்.

3. இதுவரையில் அறிவியல் ஆய்வுக்கூட வசதியினைப் பெறாத கிராமப்புற உயர்நிலைப்பள்ளிகளில் அறிவியல் கற்பிப்பதற்கு உதவும் வண்ணம் தற்போது 48 கல்வி மாவட்டங்களில் 42-ல் ஒவ்வொன்றிலும் ஒரு நடமாடும் அறிவியல் ஆய்வுக்கூட வண்டி உள்ளது. (இவற்றில் 6 வண்டிகள் 1977–78-ல் வாங்கியவை).

4. 1978 நவம்பரில் மதுரையில் மாநில அறிவியல் கண்காட்சி ஒன்று நடத்தப்பட்டது. 98 உயர்நிலைப் பள்ளிகள் அதில் பங்கேற்றன. மாவட்ட நகரங்களிலும் அத்தகைய அறிவியல் கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன. மாணவர்களின் அறிவியல் ஆர்வத்தை வளர்ப்பதே இந்த அறிவியல் கண்காட்சிகளின் நோக்கமாகும்.

5. உயர்நிலைப் பள்ளிகளில் நூலக வசதியை மேம்படுத்தும் நோக்கத்துடன், பொருத்தமான நூலக புத்தகங்கள் வாங்கப்பட்டு பள்ளிகளுக்கு வழங்கப்படுகின்றன. கடந்த இரண்டு ஆண்டுகளில் ரூ. 7 இலட்சம் இதற்குச் செலவிடப்பட்டது. 1979–80-ல் இப்பணிக்கு ரூ. 2 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒலி–ஒளிக் கல்வி.

6. அநேகமாக அனைத்துப் பள்ளிகளுமே சுய முயற்சியின் மூலம் அல்லது வட்டார மக்களின் முயற்சியின் மூலம் வானொலிப் பெட்டிகளைப் பெற்றுள்ளதனால் அவை வானொலியின் கல்வி ஒலிபரப்பின் மூலம் பயன்பெறுகின்றன. 700 உயர்நிலைப் பள்ளிகளில் 16 மி. மீ. திரைப்படம் காட்டும் கருவிகளும், 1,250 பள்ளிகளில் துண்டுப்படம் காட்டும்கருவிகளும் உள்ளன. அந்தந்தப் பள்ளிகள் ஒலி–ஒளிக் கல்விக்கென மாணவர்களிடம் வசூலிக்கும் சிறப்புக் கட்டணத் தொகையைக் கொண்டு, ஒலி-ஒளிக் கருவிகள்

1979 மார்ச் 26]

வாங்கலாம். விலையுயர்ந்தனவும் மிகப் பயனுள்ளவையுமான திரைப்படங்களை அத்தொகையிலிருந்து வாங்க இயலா தாகையால் பள்ளிக் கல்வி இயக்குநரகத்தில் உள்ய ''மாநில திரைப்படச் சுருள் சேமிப்பகம்'' பள்ளிகளுக்கு திரைப்படங் களையும் துண்டுப்படங்களையும் கடனாக வழங்கி வருகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் அந்த சேமிப்பு நிலையத்தை வலுப் படுத்த கல்வித் திரைப்படங்களும் துண்டுப்படங்களும் ரூ. 1 இலட்சம் செலவில் வாங்கப்பட்டன. 1979–80-ல் இவ் வகையில் மேலும் ரூ. 25,000 செலவிடப்படும்.

7. தொலைக்காட்சி கல்விப்பணிக்கு மிகவும் பயன்படும் ஒரு நவீனக் கருவியாகும். சென்னையிலும் அதன் அண்மை யிலும் உள்ள பள்ளிகள் சென்னைத் தொலைக்காட்சி நிலையத் தின் கல்வி ஒளிபரப்பின் மூலம் பயனடைகின்றன. பள்ளிக் கல்வி இயக்குனரகத்தில் உள்ள ''தொழில் நுட்ப வளர்ச்சியைக் கல்விப் பணிக்குப் பயன் படுத்துவதற்கான அமைப்பு'' பள்ளிகள் தொலைக்காட்சி கல்வி ஒளிபரப்பின் மூலம் நற்பயனை அடைய உதவி வருகிறது. சென்னை நிலைய ஒளிபரப்புப் பகுதியில் உள்ள பள்ளிகள் தம் மாணவர்கள் ஒவ்வொருவரிடமும் ஆண்டுக்கு ரூ. 2 வசூலித்து தொலைக் காட்சிப் பெட்டிகள் வாங்கிப் பரா மரிக்க பயன்படுத்த அரசு ஏற்கனவே அனுமதித்துள்ளது. கிராமப் புறங்களிலுள்ள பள்ளிகள் 15-க்கு தொலைக்காட்சிப் பெட்டி களை அரசே வாங்கி அளிக்க 1979–80-ல் ரூ. 75,000 ஒதுக்கப்பட் பட்டுள்ளது, அப்பள்ளிகள் வசூலிக்கும் தொலைக்காட்சிக் கட்ட ணத் தொகையைக் கொண்டு அப் பெட்டிகளின் விலை தவணை முறையில் அரசுக்குத் திரும்பச் செலுத்தப்படும்.

பள்ளி இணையங்கள்.

8. சுமார் 2,178 உயர்நிலைப் பள்ளிகளில் பள்ளி இணையங் கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த உயர்நிலைப் பள்ளிகள் ஒவ்வொன்றும் சுற்று வட்டாரத்திலுள்ள தொடக்கப் பள்ளிகளோடும் உயர் தொடக்கப் பள்ளிகளோடும் ஒத்துழைத்துப் பணியாற்றி அனைத்தின் கல்வி வளர்ச்சிக்குட் உதவுகின்றன.

உயர்நிலைப் பள்ளிக் கட்டிடங்கள்.—

9. நகராட்சி மற்றும் தனியார் உயர்நிலைப் பள்ளிகளுக்கு கட்டிட மானியம் தர 1979–80-ல் ரூ. 9 இலட்சம் ஒதுக்கப்பட் டுள்ளது. அரசு உயர்நிலைப் பள்ளிகளின் கட்டிடப் பணிகளுக்காக 1979–80-ல் ரூ. 37 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. (முன் ஆண்டுகளில் ஏற்பளித்த பணிகளுக்கு 1979–80-ல் ஆகும் செலவுக்காக ரூ. 20 இலட்சமும், புதிய கட்டிட வேலைகளுக்காக ரூ. 17 இலட்சமும்).

படிப்பு உதவித் தொகைகள்.

10. தமிழ்நாட்டில் பள்ளிக் கல்வி எல்லா நிலைகளிலும் இலவசமாகும். கிராமப்புறத்தைச் சேர்ந்தவர்களும் கல்வியில் சிறந்து விளங்குகிறவர்களுமான மாணவர்களுக்கு, 1971—72 முதல் படிப்பு உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன. இத் திட்டத்தின்கீழ் 374 ஊராட்சி ஒன்றியங்களில் ஒவ்வொன்றிலும் புதியதாக நான்கு மாணவர்களுக்கு ஆண்டுதோறும் உதவித் தொகை வழங்கப்படுகிறது. ஒரு முறை உதவித் தொகை பெற்ற மாணவர் பள்ளிக் கல்வியை முடித்து வெளிவரும் வரை இவ் உதவித் தொகையைப் பெறுவார். இத் திட்டத்திற்கென ஏற்கப்பட்ட பள்ளிகளில் மாணவர் படிப்பதாய் இருந்தால், உணவு விடுதியில் தங்கிப் படிக்கின்ற மாணவர்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 1,000 மும், விடுதியில் தங்காமல் பள்ளிக்கு வந்து சென்று படிக்கின்ற மாணவருக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 500-ம் உதவித் தொகை வழங்கப்படும். இவ்வுதவித் தொகை பெறும் மாணவர்களுள் தம் விருப்பப்படி சாதாரணப் பள்ளிகளில் சேர்ந்து படிப்பவர்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 150 மட்டும் வழங்கப்படுகிறது. இந்த உதவித் தொகையைப் பெறும் மாணவர் எண்ணிக்கை 1979-80-ல் (புதியதாகப் பெறுவோர் உட்பட) சுமார் 3,000 ஆக இருக்கும். (1978—79-லிருந்து ஒவ்வொரு ஒன்றியத்திலும் இப்படிப்புதவித் தொகையைப் புதிதாகப் பெறும் மாணவர் எண்ணிக்கை இரட்டிக்கப்பட்டது— அதாவது 2-லிருந்து 4 ஆக உயர்த்தப்பட்டது.)

11. இது தவிர, பர்மா, இலங்கை அகதிகள், முன்னாள் இராணுவத்தினர், தாழ்த்தப்பட்ட வகுப்பினர், பழங்குடியினர், அரசியல் தியாகிகள் ஆகியோரது குழந்தைகளுக்கும் தாராளமாக கல்விச் சலுகைகள் தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகின்றன.

நடமாடும் மருத்துவ வண்டிகள்.

12. சென்னை தவிர மற்ற எல்லா மாவட்டங்களிலும் உயர்நிலைப்பள்ளி மாணவர்களின் மருத்துவ சோதனைக்கென நடமாடும் மருத்துவ வண்டிகள் இயங்கி வருகின்றன.

மெட்ரிகுலேசன் பள்ளிகள்.

13. தமிழ்நாட்டில் 31 மெட்ரிகுலேசன் பள்ளிகள் உள்ளன. அவற்றில் பயில்வோர் 31,000 மாணவர்கள். ஆசிரியர்கள் எண்ணிக்கை 1,100 ஆகும். இவை மாணவர்களிடம் கட்டணம் வசூலிக்கின்றன. பாட மொழி ஆங்கிலமாகும். இவை அரசு மானியம் பெறுவதில்லை. இவை முன்னர் சென்னை, மதுரைப் பல்கலைக் கழகங்களுடன் இணைந்திருந்தன. 1976-ம் ஆண்டு டிசம்பரிலிருந்து இவை பள்ளிக் கல்வி இயக்குனரின் கட்டுப்பாட்டிற்கு மாற்றப்பட்டன. மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்காக தனி ஆயம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அப்பள்ளிகளுக்குத் தனி ஆய்வாளர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார்.

1979 மார்ச் 26]

ஆங்கிலோ-இந்தியப் பள்ளிகள்.

14. ஆங்கிலோ-இந்தியப் பள்ளிகளில் பயிலும் ஆங்கிலோ-இந்திய மாணவர்களிடமிருந்து 1978–79-ம் ஆண்டிலிருந்து கற்பிப்புக் கட்டணம் எதுவும் வசூலிக்கப்படுவதில்லை. அம் மாணவர்களுடைய வருமானம் எவ்வளவாக இருந்தாலும் இச் சலுகை உண்டு (அப்பள்ளிகளில் பயிலும் ஆங்கிலோ இந்திய ரல்லாத பிற மாணவர்கள் கற்பிப்புக் கட்டணம் செலுத்த வேண்டும்). இச் சலுகையால் ஆங்கிலோ இந்தியப் பள்ளி நிருவாகங்களுக்கு ஏற்படும் இழப்பை ஈடுகட்ட மானியம் தரப்படுகிறது.

15. ஆங்கிலோ-இந்தியப் பள்ளிகளில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கு உணவு மானியம் வழங்குவதிலும் ஒரு சலுகை தரப்பட்டுள்ளது. அதாவது பள்ளிப் படிப்புக் காலமாகிய 1–10 வகுப்புகளில் மொத்தம் 2 தடவை வரை தோல்வியுறுபவர்கள் உணவு மானியம் தொடர்ந்து பெறலாம் என்று இருந்தது மாற்றப்பட்டு 4 தடவை வரை தோல்வியுறுபவர்களுக்கும் அம் மானியத்தைத் தொடர்ந்து தரலாம் என தாராளமாக்கப் பட்டுள்ளது. ஆயினும் ஒரே வகுப்பில் மூன்றாவது ஆண்டாகப் பயில்பவர்களுக்கு இம்மானியம் கிடையாது.

(IV) பள்ளிப் பாடங்கள், பாடத் திட்டம், பள்ளிப் பாடநூல்கள் பாடத் திட்டத் திருத்தம்

1972–73-ம் ஆண்டிலிருந்து 1976–77-க்குள் படிப்படியாக 10 ஆண்டுப் பள்ளிப் படிப்பு அடிப்படையிலான புதிய பாடத் திட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. கல்வி வல்லுநர்களைக் கலந்து பல்வேறு பாடங்களில் அப் புதிய பாடத் திட்டத்தின் கீழ் உள்ள அதிகப்படி சுமையை 1978–79 முதல் அனைத்து வகுப்புகளிலும் குறைக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. கணிதத்தைப் பொறுத்தவரை 1978–79 முதல் அதிகப்படி சுமை குறைக்கப்பட்டதோடுகூட, கணிதப்பாடத்துக்கு 1–10 வகுப்புகளுக்கு முற்றிலும் திருத்திய பாடத்திட்டம் ஒன்றை அப்பாட வல்லுனர் குழு தயாரித்துத்' தந்தது. அத் திருத்திய கணித பாடத்திட்டத்தை ஏற்று பின்வரும் கால அட்டவணைப்படி பள்ளிகளில் செயல்படுத்த ஆணையிடப் பட்டுள்ளது :—

ஆண்டு.	வகுப்புகள்.
1979–80 ..	1–2 (இவ் வகுப்புகளில் கணிதத்துக்குப் பாடநூல்கள் கிடையாது).
1980–81	3, 6
1981–82	4, 7, 9
1982–83 ..	5, 8, 10

பள்ளிப்பாட நூல்கள்.

2. பள்ளிகளுக்கான அரசுப்பாட நூல்களை வெளியிட்டு வழங்கும் பொறுப்பு 1970-ல் நிறுவப்பட்ட தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனத்துடையதாகும். 1979–80-ல் அந் நிறுவனம் ரூ. 4.60 கோடி விலையுள்ள சுமார் மூன்று கோடி எண்ணிக்கை பாடநூல் படிகளை அச்சிட்டு வழங்க இருக்கிறது.

3. இந்நிறுவன புத்தகங்கள், 50 மொத்த விற்பனையாளர் (கூட்டுறவுச் சங்கங்கள்) மூலமாகவும், பதிவு செய்யப்பட்ட 2,200 சில்லறை வியாபாரிகள் மூலமாகவும் மாநில முழுவதும் விற்கப்படுகின்றன. பாட நூல்கள் உரிய காலத்தில் குறிப்பிட்ட விலையில் மாணவர்கட்குக் கிடைக்க இந்நிறுவனம் வகை செய்துள்ளது.

(V) ஆசிரியர் பயிற்சி.

இடைநிலை (செகண்டரி கிரேடு) ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்திட, இம்மாநிலத்தில் தற்போது 80 ஆசிரியர் பயிற்சி நிலையங்கள் உள்ளன (இளஞ்சிறார் பள்ளி ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் நான்கு, ஆங்கிலோ—இந்திய ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஒன்று, லேடி வில்லிங்டன் மற்றும் புனித கிறிஸ்டோபர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் கல்லூரிக்கு ஒன்ருக உள்ள செகண்டரி கிரேடு பயிற்சி வகுப்புகள் இரண்டு ஆகியவை உட்பட). கடந்த பல ஆண்டுகளாக பயிற்சி பெற்ற ஆசிரியர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் பெருமளவில் நிலவி வருவதால் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் ஒரு ஆண்டு விட்டு மறு ஆண்டுதான் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். அதுவும், குறைந்த எண்ணிக்கை மாணவர்களே சேர்க்கப்படுகின்றனர்.

2. தற்போது இம்மாநிலத்தில் ஆசிரியர்களுக்கு ஆங்கில மொழி கற்பிப்பதில் பயிற்சி அளிக்கும் நிலையங்கள் ஒன்பது செயல்பட்டு வருகின்றன. சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய மூன்று இடங்களிலும் உள்ள மையங்கள் ஆண்டுதோறும் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் 1,350 பேருக்கு (30 தொகுதியினர்; மூன்று வாரப் பயிற்சி) ஆங்கிலம் பயிற்றுவிப்பதில் மறு பயிற்சி அளிக்கின்றன. கடலூர், தஞ்சாவூர், சேலம், திருநெல்வேலி, வேலூர், மேலூர் ஆகிய ஆறு இடங்களிலும் உள்ள மையங்கள் ஆண்டுதோறும் உயர் தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் 2,700 பேருக்கு (60 தொகுதியினர் ; நான்கு வாரப் பயிற்சி) ஆங்கிலம் பயிற்றுவிப்பதில் மறு பயிற்சி அளிக்கின்றன.

3. பெங்களூரில் உள்ள வட்டார ஆங்கிலப் பயிற்சி நிறுவனத்துக்கு ஆண்டுதோறும் உயர்நிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியர்களுள் 50 பேர் 4 மாதப் பயிற்சி வகுப்புகள் இரண்டுக்கு அனுப்பப்படுகின்றனர்.

1979 மார்ச் 26]

4. ஆங்கிலப் பயிற்சி நிலைய ஆசிரியர்களும், வட்டார ஆங்கிலப் பயிற்சி நிறுவனத்தில் பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்களும் தொடக்கப் பள்ளிகளில் 3—5 வகுப்புகளில் ஆங்கிலம் கற்றுத் தரும் ஆசிரியர்களுக்கு ஆங்கிலம் கற்பிப்பதில் 3 நாள் மறு பயிற்சி வகுப்புகள் நடத்தி வருகின்றனர். ஆண்டு தோறும் சுமார் 3,000 ஆசிரியர்களுக்கு இப்பயிற்சி அளிக்கப் படுகிறது.

5. ஆங்கிலப் பயிற்சி நிலைய ஆசிரியர்கள் அவ்வப்பொழுது பள்ளிகளில் ஆங்கிலம் கற்பித்துத் தரப்படும் முறையைப் பார்வை யிட்டும், விளக்க வகுப்புகள் நடத்தியும், கலந்துரையாடியும் பள்ளிகளில் ஆங்கிலம் பயிற்றுவிக்கப்படும் தரம் உயர உதவு கின்றனர். அந்நிலையங்களின் தலைமைப் பொறுப்பில் உள்ள ஆசிரியர்கள் உயர்நிலைப்பள்ளிகளை ஆண்டுதோறும் மாவட் டக் கல்வி அலுவலர் ஆய்வு செய்யப்போகும்பொழுது உடன் சென்று உதவுகின்றனர்.

(vi) தமிழ்நாடு கல்வியாராய்ச்சி—பயிற்சி நிறுவனம்.

தமிழ் நாடு கல்வி நிறுவனம், தமிழ் நாடு அறிவியல் கல்வி நிறுவனம், மாணவர் கல்வித்தர மதிப்பீட்டிற்கான மாநிலப் பிரிவு, ஆகிய மூன்றையும் இணைத்து 1975-ல் தமிழ்நாடு கல்வி யாராய்ச்சி பயிற்சி நிறுவனம் உருவாக்கப்பட்டது. அது பள்ளிக் கல்வி நிலையில் ஆராய்ச்சி, பயிற்சி ஆகியவற்றைக் கவனித்து வருகிறது. இது பல ஆய்வுக் கருத்தரங்குகளையும், பயிற்சி வகுப்புகளையும், பணிப் பயிற்சிகளையும் நடத்தியுள்ளது. 28—8—1978-ல் இருந்து இந்நிறுவனம் அரசுத் தேர்வு இயக்குநர் பொறுப்பிலிருந்து பள்ளிக் கல்வி இயக்குநர் பொறுப்பிற்கு மாற்றப்பட்டுள்ளது.

2. யுனிசெப் உதவியுடன் இக்குழு சோதனைத் திட்டங்கள் இரண்டை நடத்தி வருகின்றது. ஒன்று ''தொடக்கக் கல்விப் பாடத் திட்டத்தைப் புதுப்பிக்கும் திட்டம்'' இதன் கீழ் புதிய பாடத்திட்டம் ஒன்று சில பள்ளிகளில் செயல்படு கிறது. மற்றொன்று ''சமுதாய வளர்ச்சியோடு இணைந்த கல்வி வளர்ச்சி'', இதன்கீழ் பள்ளிக் கல்வி, இளஞ்சிறார் கல்வி, பள்ளிசாராக் கல்வி ஆகிய மூன்றும் இணைந்த கல்வி முப்பது தொடக்கப்பள்ளிகளில் வழங்கப்படுகிறது.

3. பரங்கிமலை ஊராட்சி ஒன்றியத்தில் 50 ஊர்களிலுள்ள தொடக்கப் பள்ளிகளின் மூலம் ''கல்வி மூலம் கிராமப்புற வளர்ச்சிக்கான ஒருங்கிணைந்த திட்டம்'' ஒன்றை மாநிலக் கல்வி ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம் செயல்படுத்திவருகிறது. இதன் கீழ் கிராமப்புற வளர்ச்சிப் பணிகளில் ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப் படுகின்றனர். மாணவர்களின் பெற்றோர்களும், பள்ளியை

விட்டு நின்றுவிட்ட சிறுவர்களும் சுயமாக வேலை செய்து ஓரளவு சம்பாதிக்க வகை செய்யும் திறமைகளை வளர்த்துக் கொள்ள அவர்களுக்கு அந்த ஆசிரியர்கள் உதவுகிறார்கள்.

4. தருமபுரி, வட ஆர்க்காடு, சேலம் ஆகிய மாவட்டங்களில் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு எழுதிய தாழ்த்தப்பட்ட மற்றும் மலைச் சாதியினரைச் சார்ந்த மாணவர்களுக்கு என்ன வேலை வாய்ப்புக்கள் உள்ளன என்பது குறித்த ஆய்வு ஒன்றை இந் நிறுவனம் மேற்கொண்டுள்ளது. அதற்காக அம்மாணவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு எழுதிய பின் மேற்கொண்டு என்ன செய்கிறார்கள் என்பதைப் பற்றிய விவரங்கள் சேகரிக்கப்பட்டு, ஆய்வுக்குப்பின் அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

5. பிரிட்டிஷ் கவுன்சிலின் உடனுழைப்புடனும், உதவியுடனும் இக்குழு சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் ஆசிரியர்கள் நிலையங்களை நிறுவியுள்ளது. கல்விப் பிரச்சினைகள் குறித்து அந்நிலையங்களில் ஆசிரியர்கள் ஒன்றாகக் கூடி விவாதித்து கருத்துப் பரிமாற்றம் செய்துகொள்கின்றனர்.

6. மேற்கண்ட திட்டங்கள் தவிர, இந்நிறுவனம் இதுவரை சுமார் 40 திட்டங்களையும் பல்வேறு வகை ஆராய்ச்சிகளையும் நிறைவேற்றியுள்ளது. அவற்றுள் நீண்ட காலப் பணிகள் சிலவும் குறுகிய காலப்பணிகள் சிலவும் ஆகும். 1979–80-ல் இந்நிறுவனம் ரூ. 2.20 லட்சம் செலவில் ஆசிரியர்களுக்குப் பல்வேறு பணியிருப்புப் பயிற்சிகளை நடத்தும்.

7. இந்நிறுவனத்தின் ''தேர்வு முறை சீர்திருத்தப்பிரிவு'' பள்ளித் தேர்வுகளில் செய்ய வேண்டிய சீர்திருத்தங்கள் பற்றி ஆய்வு செய்து வருகிறது.

8. சென்னை, மதுரை, காரைக்குடி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் ஆசிரியர்களுக்கான ''தொடர் கல்வி மையங்களைத்'' தொடங்க அரசு ஏற்பளித்துள்ளது. இவற்றை நடத்தும் செலவில் பாதியை தேசீய கல்வியாராய்ச்சி, பயிற்சி நிறுவனம் ஏற்கும். அனைத்துவகை ஆசிரியர்களுக்கும் பல பாடங்களிலும் இம்மையங்கள் பயிற்சி அளிக்கும். கல்வி முறைகளில் ஏற்படும் வளர்ச்சியை ஆசிரியர்களிடையே பரப்பிட விரிவுரைகளையும், செயல்முறை வகுப்புகளையும் நடத்தும். பள்ளி ஆசிரியர்களுக்கும், ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளின் ஆசிரியர்களுக்கும் ஆலோசனை தரும் நிலையங்களாக இவை செயல்படுவதோடு அவர்கள் தங்கள் பாடங்களை நன்முறையில் கற்றுத்தர ஆயத்தம் செய்து கொள்வதற்கான வசதிகளையும் இம்மையங்கள் தரும். இத்தகைய தொடர் கல்வி மையங்கள் மேலும் சிலவற்றைத் தொடங்குவது குறித்து ஆய்வு செய்யப்படுகிறது.

1979 மார்ச் 26]

(vii) பள்ளி ஆசிரியர்கள், ஆசிரியர்களல்லாத பணியாளர்களின் நலன்.

1. தமிழ் நாட்டில் உள்ள பள்ளிகளில் பணியாற்றி வரும் இரண்டரை இலட்சம் ஆசிரியர்களின் நலனில் அரசு இடைவிடாத நாட்டம் செலுத்தி வருகிறது.

2. தனியார் பள்ளி ஆசிரியர்களின் ஊதியச் செலவு முழுவதையும் மாநில அரசே ஏற்றுக்கொள்கிறது. இம்மாநிலத்திலுள்ள அனைத்துப்பள்ளி ஆசிரியர்கட்கும் வழங்கும் ஊதியத்தால் ஏற்படும் செலவு 1970–71-ல் சுமார் ரூ. 55 கோடியாக இருந்தது. 1979–80-ல் சுமார் ரூ. 150 கோடியாக உயரும்.

3. மூன்றாவது சம்பளக் குழு சம்பள விகிதங்கள் அரசுப் பள்ளியல்லாத பள்ளி ஆசிரியர்களுக்கும் பொருந்துவனவாகும். பணியாளர்கள் பதவி உயர்வு இல்லாமல் நெடுநாள் இருப்பதைத் தவிர்க்கும் நோக்கத்துடன் அக்குழு பரிந்துரைத்துள்ள புதிய நடைமுறையும் அவர்களுக்குப் பொருந்தும். அம்முறையின்படி நடுத்தர அல்லது கீழ்நிலைப் பதவிகள் பலவற்றில் பணி செய்பவர்கள் பத்தாண்டு பணி முடித்ததும் உயர் பதவிக்கோ அல்லது உயர்ந்த சம்பள விகிதம் கொண்ட தேர்வுநிலை அல்லது சிறப்பு நிலைத் தரப்பதவிக்கோ உயர்வு பெறலாம்.

4. இடைநிலை (செகண்டரி கிரேடு) ஆசிரியருக்கான தகுதி இருந்தும் தொடக்கநிலை (ஹையர் கிரேடு) ஆசிரியர்களாகத் தொடக்கப்பள்ளிகளில் பணியாற்றிவரும் ஆசிரியர்களுக்கு படிப்படியாக இடைநிலைப் பதவிகள் அளிக்கப்படுகின்றன. 1967–68 முதல் 1978–79 முடிய இவ்வாறு 12,950 தொடக்கநிலைப் பதவிகள் இடைநிலைப்பதவிகளாக உயர்த்தப்பட்டன—கடந்த இரண்டு ஆண்டுகளில் உயர்த்திய 5,000 பதவிகள் உட்பட.

5. அரசுப் பள்ளிகளில் பி.டி. ஆசிரியர்கள், முதனிலைத் தமிழாசிரியர் ஆகிய பதவிகளுக்கு முறையான நேரடி நியமனம் தமிழ்நாட்டு அரசுப்பணியாளர் தேர்வுக் குழு மூலமாகவே செய்ய வேண்டியுள்ளது. அப்பள்ளிகளில் தற்காலிகமாக நியமிக்கப்பட்ட பி.டி. ஆசிரியர்கள், முதனிலைத் தமிழாசிரியர் ஆகியோருக்காகவென்றே தனியாக ஒரு தேர்வை அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு நடத்த இருக்கிறது. அவ்வாசிரியர்களுள் 31—3—1977 அன்றைய நிலவரப்படி ஓராண்டு தற்காலிகப்பணி (தொடர்ந்து அல்லது விட்டு விட்டு) முடித்திருந்து அந்நாளில் பணியிலிருந்தவர்களும் அந்நாளில் பணியில் இல்லாமலிருந்தால், அவ்வாறு ஓராண்டு பணி முடித்துவிட்டு 1—4—1974 அன்று அல்லது அதற்குப் பின் பணி நீக்கம் செய்யப்பட்டவர்களும் அத் தேர்வில் கலந்து கொள்ளலாம். அத்தேர்வு முடிந்ததும் இவர்களுடைய பணியை முறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

ஏ. பி. பிரிவுகள் இணைப்பு.

6. ஊராட்சி ஒன்றியங்களை அமைத்தபின் 1960—61-ல் மாவட்டக் கழகங்கள் மறைந்தன. மாவட்டக் கழக உயர் நிலைப் பள்ளிகள் 1963-ல் கல்வித் துறைக்கு மாற்றப்பட்டன. முன்னாள் மாவட்டக் கழக உயர்நிலைப் பள்ளிகளில் 1—4—1970 வரை நியமிக்கப்பட்ட ஆசிரியர்களும் (அரசி னால் 1—4—1970 வரை அரசு கழக உயர்நிலை பள்ளிகளாகத் தொடங்கி நடத்தப்பட்டு வந்த பள்ளிகள் உட்பட) பிற பணியாளர்களும் 1—4—1970 முதல் அரசுப் பணியாளர்களாக எடுத்துக் கொள்ளப்பட்டனர். ஆனால், அவர்கள் தமிழ் நாடு கல்வித் துறை சார்புபணியில் 'பி' பிரிவு என்னும் ஒரு தனிப்பிரிவாக வைக்கப்பட்டனர். அரசு உயர்நிலைப் பள்ளி அலுவலர்கள், பள்ளி ஆய்வுப் பணிஅலுவலர்கள், 'பி' பிரிவு பள்ளி களில் 1—4—1970 அன்று அல்லது அதற்குப்பின் நியமிக்கப் பட்டவர்கள் ஆகிய அனைவரும் 'ஏ' பிரிவைச் சார்ந்தவர் களாவர் :—

7. மேற்சொன்ன 'ஏ', 'பி' இரண்டு பிரிவுகளையும் பின்வரும் முறைப்படி இணைத்து 2—11—78 அன்று ஆணை வெளியிடப்பட்டுள்ளது :—

(i) இதுவரை 'ஏ' பிரிவிலுள்ள அரசிதழ் பதிவு பெற்ற தலைமையாசிரியர்கள், அரசிதழ் பதிவுபெறாத தலைமை யாசிரியர்கள், பி.டி. ஆசிரியர்கள், முதனிலை மொழி ஆசிரியர்கள், உடற் பயிற்சி இயக்குநர் ஆகியோருக்கு மாநில அளவில் பணி மூப்பு பட்டியல்கள் வைக்கப்பட்டு வந்தன. இனி அவை போன்ற மாநில அளவிலான பணி மூப்புப்பட்டியல்களை 'பி' பிரிவினருக்கும் பள்ளிக் கல்வி இயக்குநர் தயாரித்து வைத்து வரவேண்டும்.

(ii) ''பி'' பிரிவைச் சேர்ந்த ஒருவர் 31—3—70 அன்று எந்த பதவியில் இருந்தாரோ அந்தப் பதவியில் அவர் முறை யான நியமனம் பெற்ற நாள் அடிப்படையில் அந்த ''மாநில பணி மூப்பு பட்டியல்கள்'' 'பி' பிரிவுக்கு தயாரிக்கப்படும்.

(iii) 2—11—78 அன்று காலியாக இருந்த பதவிகளையும் அதற்குபின் காலிவிழும் பதவிகளையும் நிரப்பும்பொழுது இரண்டு பிரிவுகளிடையே பல்வேறு பதவிகளை பின்வரும் விகிதங்களின்படி பகிர்ந்தளிக்க வேண்டும்.

2:3 விகிதத்தில் ஏ., பி. பிரிவுகளிடையே பகிர்ந்தளிக்க வேண்டிய பதவிகள்.

(1) அரசிதழ்ப் பதிவு பெறாத தலைமை ஆசிரியர்களை அரசிதழ்ப் பதிவு பெற்ற தலைமை ஆசிரியராக பதவி உயர்த்தும் பொழுது;

[1979 மார்ச் 26]

(2) பி.டி. ஆசிரியர்களை அரசிதழ்ப் பதிவு பெறாத தலைமையாசிரியராக பதவி உயர்த்தும்பொழுது;

(3) செகண்டரி கிரேடு மற்றும் சிறப்பு ஆசிரியர்களை பி.டி. ஆசிரியராக பதவி உயர்த்தும்பொழுது;

5:3 விகிதத்தில் ஏ., பி. பிரிவுகளிடையே பகிர்ந்தளிக்க வேண்டிய பதவிகள்.

(1) இள நிலை உதவியாளரை உதவியாளராகப் பதவி உயர்த்தும்பொழுது;

(2) உதவியாளர்களை கண்காணிப்பாளர்களாக பதவி உயர்த்தும்பொழுது;

(3) அமைச்சுப் பணியாளர்களை அவர்களுக்குரிய வேறு பதவிகளுக்குப் பதவி உயர்த்தும்பொழுது.

தனியார் பள்ளிகள்.

8. 1973 ஆம் ஆண்டு இயற்றிய தமிழ்நாடு ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) சட்டமும், அச்சட்டத்தின்கீழ் வகுத்த விதிகளும் 1—12—74 முதல் அமுலுக்கு வந்தன. அந்தச் சட்டத்தையும் விதிகளையும் எதிர்த்து சிறுபான்மையினர் கல்வி நிலையங்கள் பல உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு தொடுத்தன. அச்சட்டத்தின் பல பிரிவுகளும் விதிகளில் பலவும் சிறுபான்மையினர் கல்வி நிலையங்களுக்கு பொருந்தமாட்டா என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது. எனவே சிறுபான்மையினர் கல்வி நிலையங்களுக்கு அங்கீகாரம் வழங்குதல் போன்றவற்றிற்காக தனி விதிகள் 14—9—1977 அன்று வெளியிடப்பட்டன.

9. தனியார் பள்ளி நிருவாகங்களில் சிலவற்றால் பதவி நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்களை மேல்முறையீட்டில் பள்ளிக் கல்வித் துறை அதிகாரிகள், திரும்பவும் பணியில் சேர்க்க வேண்டும் என்று ஆணையிடும்பொழுது அந்நிருவாகங்கள் அவ்வாணையை செயல்படுத்த மறுக்கும் வருந்தத்தக்க நிலை இருக்கிறது. அவ்வாறு பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள், பிற பணியாளர்கள் ஆகியோரின் இன்னலைக் களைவதற்காக அரசு பின்வருமாறு ஆணையிட்டுள்ளது. தமிழ்நாடு ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) விதிகள், 1974இன் 18வது விதியின்கீழ் மேல் முறையீட்டு அதிகாரிகளாக தலைமைக் கல்வி அலுவலர்களும், இணை பள்ளிக் கல்வி இயக்குநரும் உள்ளனர். ஆசிரியர்களையோ பிறரையோ மீண்டும் பணியில் சேர்க்கும்படி அவ்வதிகாரிகள் பள்ளி நிருவாகத்திற்கு ஆணையிட்டு அவ்வாணையை செயல்படுத்த அந்நிருவாகம் மறுத்தால் பள்ளிக் கல்வித் துறையே

அந்நிருவாகத்தின் கீழ் உள்ள பணியாளர்களுக்கு நேரடியாக சம்பளம் வழங்க வேண்டும் என்று ஆணையிட்டுள்ளது. மேலும் அவ்வாறு பாதிக்கப்பட்ட ஆசிரியரை அல்லது பிற பணியாளரை அவர் பள்ளியிலிருந்து, கூடுதல் ஆசிரியர் தேவையாக உள்ள பிற பள்ளிகளுக்கு (தனியார், அரசு, அல்லது உள்ளாட்சி மன்றப் பள்ளிகள்) அவர் பதவியோடு சேர்த்து மாற்றிவிடவும் அரசு தலைமைக் கல்வி அலுவலர்களுக்கும், மாவட்ட கல்வி அலுவலர் களுக்கும் அதிகாரம் தந்துள்ளது. தனியார் உயர்நிலைப்பள்ளி களிலும் தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களிலும் பாதிக்கப் படுபவர்களுக்கு தலைமைக் கல்வி அலுவலரும், தனியார் நடத்தும் இளஞ் சிறார் பள்ளி, தொடக்கப்பள்ளி, உயர் தொடக்கப் பள்ளி, சிறப்புப் பள்ளி ஆகியவற்றில் பாதிக்கப்பட்டவர்களுக்கு மாவட்ட கல்வ அலுவலரும் இவ்வாறு நிவாரணம் வழங்கலாம். பாதிக்கப்பட்ட ஆசிரியர்களை வேறு தனியார் பள்ளிகளுக்கு மாற்ற இயலாவிட்டால், அவர்களை (நியமன அதிகாரம் உடை யவர்களைக் கலந்து) உள்ளாட்சி மன்றப் பள்ளிகளிலும், அரசுப் பள்ளிகளிலும் (தேவையானால் வயது விதி முதலியவற்றை தளர்த்தி) நியமனம் செய்யலாம்.

10. சிறுபான்மையினர் அல்லாத பிற தனியார் பள்ளிகள் எல்லாம் தங்கள் பணியாளர்களை வேலைவாய்ப்பகங்கள் மூலமாகத்தான் தேர்ந்தெடுத்து நியமனம் செய்ய வேண்டும் என்று ஆணையிடப்பட்டுள்ளது. அப்பள்ளிகளில் உள்ள ஆசிரியர் பதவிகளில் 18 விழுக்காடு பதவிகளை தாழ்த்தப்பட்டோர் மற்றும் மலை சாதியினருக்கு ஒதுக்க வேண்டும் என்றும் ஆணை யிடப்பட்டுள்ளது.

11. மாநில அரசுப் பணியாளர்களுக்குப் பொருந்தும் தாராள ஓய்வூதிய விதிகள், தனியார் மற்றும் உள்ளாட்சி மன்றப் பள்ளி களில் பணியாற்றி 1—6—1970 அன்று அல்லது அதற்குப் பிறகு ஓய்வு பெறும் ஆசிரியர்களுக்கும், தனியார் பள்ளிகளிலிருந்து 1—4—1972 அன்று அல்லது அதற்குப் பிறகு ஓய்வுபெறும் ஆசிரியரல்லாத பிற பணியாளர்களுக்கும் விரிவுபடுத்தப்பட் டுள்ளன. அவர்கள் ஓய்வூதியம் பணிக் கொடை முதலியவற்றை அரசுப் பணியாளர்களையொப்ப பெறுகின்றனர். ஓய்வுபெற்ற பிறகு ஓய்வூதியம் பெறுவதற்கான இறுதி ஆணை பிறப்பிக்கப் படுவதில் ஏற்படும் காலத்தாழ்வினால் அல்லலுறாமலிருக்க தற்காலிக ஓய்வூதியமும் பணிக் கொடையும் பெறவும் (அரசு ஊழியர்களைப் போலவே இவர்களுக்கும்) வழி செய்யப்பட் டுள்ளது.

12. பணியிலிருக்கும்போது ஒருவர் இறந்து விட்டால், அவரது குடும்பத்திற்கு ரூ. 10,000 வழங்குவதற்கான ''குழு ஈட்டுறுதித் திட்டம்'' தனியார் மற்றும் உள்ளாட்சி மன்றப் பள்ளி ஆசிரியர்களுக்கும் பொருந்துவதாகும்.

1979 மார்ச் 26]

13. தனியார் பள்ளி ஆசிரியர்களும், அரசுப் பணியிலுள்ள ஆசிரியர்களுக்கு அவ்வப்போது அளிக்கப்படும் விடுப்பு நலன்கள் அனைத்தையும் பெறத் தகுதியுடையவர்களாவர்.

ஆசிரியர் நலனுக்கான தேசிய நிதி.

14. ஆசிரியர் நாளன்று 1977–78-ல் கொடிகள் விற்பதன் மூலம் வசூல் ஆன தொகை ரூ. 5.25 இலட்சம் ஆகும். இப்பொழுது கையிருப்பில் உள்ள தொகை ரூ. 44.90 இலட்சம் ஆகும். 1—4—78 முதல் 20—1—79 முடிய ஆசிரியர் நல தேசிய நிதிப் பணத்திலிருந்து உதவி பெறத்தக்க 1,797 ஆசிரியர்களுக்கு உதவித் தொகையாக மொத்தம் ரூ. 2.86 இலட்சம் வழங்கப்பட்டது.

15. 1977–78–லிருந்து ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கு தொழில் படிப்பு படிக்க படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது. பணியிலுள்ள, ஓய்வு பெற்ற, மற்றும் இறந்துவிட்ட ஆசிரியர் களின் பிள்ளைகளுக்கு இப்படிப்புதவித் தொகைகள் கிட்டும். பொறியியல், மருத்துவம், வேளாண்மை, கால்நடை மருத்துவம் ஆகிய படிப்புகளுக்கு மொத்தம் ஆண்டுக்கு 80 படிப்புதவித் தொகைகள் புதிதாக அளிக்கப்படுகின்றன. இப்படிப்புதவித் தொகை ஆண்டுக்கு ரூ. 500 ஆகும். இதனைப் பெறும் மாண வர்களின் தாய், தந்தையரின் மொத்த வருமானம் ஆண்டுக்கு ரூ. 8,000-க்கு (வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி போன்ற வற்றை கணக்கிலெடுக்காமல்) மேல் போகக்கூடாது.

16. ஆசிரியர் நல தேசிய நிதிப் பணத்திலிருந்து சென்னையில் ரூபாய் 10 இலட்சம் செலவில் ஆசிரியர் இல்லம் ஒன்றைக் கட்ட ஏற்பளிக்கப்பட்டுள்ளது.

17. ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும் உள்ள உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் இருவருக்கும், தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் இருவருக்கும், மாநில அரசு விருதுகள் தொடர்ந்து வழங்கப் படுகின்றன. விருது பெறுபவர் ஒவ்வொருவருக்கும் ஒரு வெள்ளிப் பதக்கமும் ஒரு சான்றிதழும், ரொக்கப் பணம் ரூ.200-ம் அளிக்கப்படுகின்றன.

(viii) அரசுத் தேர்வுகள்.

பொதுத் தேர்வுகளின் முக்கியத்துவத்தையும் அவற்றை நடத்துவதில் உள்ள நுணுக்கங்களையும் கருத்தில் கொண்டு 1975 பிப்ரவரியில் அரசுத் தேர்வுத் துறை ஒரு தனித் துறையாக அமைக்கப்பட்டது. (28—8—78 முதல் அரசுத் தேர்வு இயக்குநரே பள்ளி சாராக் கல்வியையும் கவனித்து வருகிறார்.) 1978 ஆம் ஆண்டில் அரசுத் தேர்வு இயக்குநர் 36 தேர்வுகள் நடத்தினார். அவற்றை எழுதியவர்கள் 6 இலட்சம் பேர் : அவருக்கு உதவி செய்ய ஒரு இணை இயக்குநர் (இப்பதவி 78–79-ல் புதிதாக

ஏற்படுத்தியது), ஒரு துணை இயக்குநர், செயலர், 3 கூடுதல் செயலர்கள், ஒரு நேர்முக உதவியாளர், ஒரு முதுநிலை கணக்கு அலுவலர் ஆகியோர் உள்ளனர். முக்கியமான தேர்வுகளாகிய உயர்நிலைப் பள்ளி இறுதி தேர்வு (எஸ்.எஸ். எல்.சி.), ஆங்கிலோ இந்தியப் பள்ளி இறுதி தேர்வு(ஏ.ஐ.எஸ்.எல்.சி.)ஆசிரியர் பயிற்சி தேர்வு (டி.எஸ்.எல்.சி.) போன்றவை ஆண்டுக்கு இருமுறை நடைபெறுகின்றன.

எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு.

2. புதிய பத்தாண்டு பள்ளிப் படிப்பு முறை அமுலுக்கு வந்ததன் காரணமாக 1978 மார்ச்சிலும் அக்டோபரிலும் மூன்று வகை மாணவர்களுக்கு தனித்தனியே எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுகள் நடத்தப்பட்டன. விவரங்கள் வருமாறு—

ஆண்டும் மாதமும்.	தேர்வு எழுதிய மாணவர் எண்ணிக்கை.	தேறியவர் எண்ணிக்கை.	தேறியோர் விழுக்காடு.
(1)	(2)	(3)	(4)
1978 மார்ச்-ஏப்ரல்—			
1. 11-வது வகுப்பு 2. 1969 ஆம் ஆண்டு பாடத்திட்ட 11-ம் வகுப்பு.	2,17,564	1,07,540	59.3 சதவீதம் (பள்ளி மாணவர்) 17.2 சதவீதம் (தனியாக எழுதியவர்கள்).
3. 10-வது வகுப்பு ..	2,30,836	1,15,696	50.1 சதவீதம்.
1978 நவம்பர்—			
1. 1969 திட்டம் ..	27,114	பாடம் பாடமாக தேர்ச்சி பெறும் முறை அமுலுக்கு வந்து விட்டபடியால் தேறியவர் எண்ணிக்கை தரப்படவில்லை.	
2. 11-வது வகுப்பு ..	22,613		
3. 10-வது வகுப்பு ..	41,901		

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1979 மார்ச் 26]

மார்ச்–ஏப்ரல் தேர்வு 1,100 மையங்களிலும், நவம்பர் தேர்வு 453 மையங்களிலும் நடந்தது. 1978 ஏப்ரல், மே மாதங்களில் எஸ்.எஸ்.எல்.சி. விடைத்தாள்கள் 51 விடை திருத்தும் மையங்களில் 1,219 தலைமைத் தேர்வாளர்களையும், 13,538 உதவித் தேர்வாளர்களையும் கொண்டு திருத்தி முடிக்கப் பட்டன.

3. 18 வயது அடைந்தவர்களும், இம்மாநிலத்தின் ஏற்பளிக்கப்பட்ட பள்ளிகளில் 8-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர் களுமான அனைவரும், தனிப்பட்ட முறையில் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு எழுத அனுமதிக்கும் சலுகை தொடருகிறது.

பகுதி முறைத் தேர்வு.

4. மேல் வகுப்பில் சேருவதற்குத் தகுதி பெற வேண்டுமாயின் எஸ். எஸ். எல். சி. தேர்வில் ஒரே தடவையில் எல்லாப் பாடங்களிலும் தேர்ச்சி பெற வேண்டும் என்ற நிலை முன்னர் இருந்தது. இப்பொழுது அதை மாற்றி எஸ். எஸ். எல். சி, ஏ. ஐ. எஸ். எல். சி., ஓ.எஸ்.எல்.சி. (ஓரியண்டல் பள்ளியிறுதித் தேர்வு), மெட்ரிகுலேசன் ஆகிய அனைத்திலும் பகுதி முறைத் தேர்வுமுறையை அரசு அமுலுக்கு கொண்டு வந்துள்ளது. இம்முறையில் ஒரு மாணவன் தான் தவறியுள்ள பாடங்களை மட்டும் மீண்டும் எழுதி அதில் தேறினால் போதும். இது இந்த அரசு கல்வித் துறையில் கொணர்ந்துள்ள ஒரு முதன்மை வாய்ந்த சீர்திருத்தமாகும்.

5. 1976-ல் இருந்து ஏ.ஐ.எஸ்.எல்.சி. தேர்வையும் இத் துறையே நடத்தி வருகிறது. 1979 மார்ச்சிலிருந்து மெட்ரிகு லேசன் தேர்வையும் இத்துறையே நடத்தும்.

6. அரசுத் தேர்வு இயக்குநர் நடத்தும் பிற தேர்வுகள், ஆசிரியர் பயிற்சிதேர்வுகளும், மர வேலை, நெசவு, வேளாண்மை போன்ற தொழில்களில் கைத்தொழில் ஆசிரியர் சான்றிதழ் தேர்வுகளும், பிறவும் ஆகும்.

மேல்நிலைப் பள்ளித் தேர்வு.

7. 1980 மார்ச்சிலிருந்து மேல்நிலைப் பள்ளி இறுதித் தேர் வையும் அரசுத் தேர்வு இயக்குநரே நடத்துவார். இத்தேர்வுக் கான ஏற்பாடுகளை செய்து அதனை நடத்த அரசுத்தேர்வு இயக்குநர் தலைமையின் கீழ் ஒரு தனி வாரியம் அமைக்கப்பட்டுள்ளது. 1980 மார்ச்சில் மேல்நிலைப் பள்ளி இறுதித் தேர்வை செவ்வனே நடத்துவதற்கான தொடக்க நிலை வேலை இப்பொழுதே தொடங்கிவிட்டது.

ஈ. எஸ். எல். சி. தேர்வு.

8. எட்டாவது வகுப்பு நிலையில் நடைபெறும் தொடக்கப் பள்ளி இறுதி பொதுத் தேர்வு (ஈ.எஸ்.எல்.சி,) 1979 டிசம்பர் முதல் மீண்டும் நடைபெறும். முறையாக பள்ளிக்குச் சென்று படிக்காத இளைஞர்கள் நன்மைக்காக அது நடத்தப்படுகிறது. தேர்வு நடக்கும் மாதத்தின் முதல் தேதியன்று 14 வயது முடிந்திருந்தவர்கள் இத்தேர்வை எழுதலாம். அவ்வாறு 14 வயது முடிந்தவர்கள் முறையான பள்ளிகளில் கீழ்வகுப்புகள் எதிலாவது படித்துக்கொண்டிருந்தாலும், அவர்கள் விரும்பினால், அவர்களும் இத்தேர்வை எழுதலாம். சமுதாயத்தின் நலிந்த பிரிவினர் பள்ளிசாராக் கல்வி வசதிகளின் முழுப் பயன் எய்த இத்தேர்வு உதவும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1979 மார்ச் 26]

III. மேல்நிலைப் பள்ளிக் கல்வி.

மேல்நிலைப் பள்ளிக் கல்வி தமிழ் நாட்டில் 1978–79 முதல் தொடங்கப்பட்டுள்ளது. 10+2+3 ஆண்டு முறைக் கல்வியின்+2 நிலையாகிய மேல்நிலைப் பள்ளிக் கல்வி இரண்டாண்டுகள் கொண்டது. அதன் முதலாண்டு வகுப்பு 1–7–1978 முதல் தொடங்கியுள்ளது.

2. மேல்நிலைப் பள்ளிக் கல்வியை பள்ளிகளில் மட்டுமே தொடங்கிட அரசு முடிவு செய்தது. பெரும்பாலும் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒவ்வொரு நகராட்சியிலும் ஒரு மேல்நிலைப் பள்ளியாவது இருக்கவேண்டும் என்ற அடிப்படையில் மேல்நிலைக் கல்வி வசதியளிப்பதற்கான பள்ளிகள் தெரிந்தெடுக்கப்பட்டன. தொழில் சார்ந்த கல்விக்கு முதன்மையளிக்கும் மேல்நிலைப் பள்ளிக் கல்வி வசதி கிராமப்புற மக்களுக்கெல்லாம் எளிதில் கிடைக்க வேண்டும் என்ற நோக்குடன் கிராமப்புறப் பகுதிகளின் தேவைக்கு முதன்மை தந்து அப்பள்ளிகள் தெரிந்தெடுக்கப்பட்டன. 1978–79 பட்ஜெட் உரையில் மேல்நிலைப் பள்ளிக் கல்வி சுமார் 400 பள்ளிகளில் தொடங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் பொதுமக்கள் கோரிக்கைகளை கருத்தில் கொண்டு 912 பள்ளிகளில் (எஸ்.எஸ்.எல்.சி. பள்ளிகள் 869 ; ஓ.எஸ்.எல்.சி. பள்ளி 1 ; ஆங்கிலோ–இந்தியப் பள்ளிகள் 24 ; மெட்ரிகுலேசன் பள்ளிகள் 18) மேல்நிலைப் பள்ளி வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன. அந்த 912 பள்ளிகளுக்கான நிருவாக வாரி விவரங்கள் வருமாறு :—

	ஆண்.	பெண்.	மொத்தம்.
அரசு (அரிசன நல, பிற்பட்டோர் நலத் துறைப் பள்ளிகள் 5 உட்பட).	379	34	413
நகராட்சி/மாநகராட்சிப் பள்ளிகள்.	36	15	51
தனியார் (எஸ்.எஸ்.எல்.சி.) ..	295	111	406
தனியார் ஆங்கிலோ-இந்தியன் பள்ளிகள்	..	..	24
தனியார் மெட்ரிகுலேசன் பள்ளிகள்	..	..	18
மொத்தம்		..	912

பெண்களுக்குத் தனியே மேல்நிலைப் பள்ளிகள் இல்லாத இடங்களில் ஆண்கள் மேல்நிலைப்பள்ளிகளில் பெண்களும் அனுமதிக்கப்படுகின்றனர். மேல்நிலைப்பள்ளி மாணவர்களின் பயிற்று மொழி பற்றிய விவரங்கள் வருமாறு :—

	தமிழும் சிறுபான்மை மொழிகளும்.	ஆங்கிலம்.	மொத்தம்.
பொதுக் கல்வி ..	65,300	24,300	89,600
தொழில் கல்வி ..	22,200	2,200	24,400
மொத்தம் ..	87,500	26,500	1,14,000

418 மேல்நிலைப்பள்ளிகளில் ஆங்கிலப் பாடமொழி வகுப்புகள் உள்ளன. அவ்வகுப்புகளின் எண்ணிக்கை 584 ஆகும். சிறுபான்மை மொழிகளைப் பயிற்று மொழிகளாகக் கொண்டு பயில்பவர்கள் எண்ணிக்கை சுமார் 800 ஆகும்.

3. 1978 மார்ச்சில் 11 ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி. தேறிய 1,08,000 மாணவர்களில் 78,000 பேர் மட்டுமே கல்லூரிகளில் புகுமுக வகுப்பில் 1978-79-ல் சேர்ந்தார்கள். ஆனால் 1978 மார்ச்சில் நடந்த 10 ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி.யில் தேறிய 1,16,000 மாணவர்களுள் 1,14,000 பேர்கள் மேல்நிலைப்பள்ளி வகுப்பில் 1978-79-ல் சேர்ந்தனர். உயர்நிலைப்பள்ளிக் கல்விக்கு மேலான தரத்திலுள்ள கல்வி வசதியானது மேல்நிலைப் பள்ளிக் கல்வி முறை அமுலுக்கு வந்ததன் காரணமாக சமுதாயத்தின் பல பிரிவினருக்கும் மிகப் பரவலாக கிடைத்திருக்கிறது என்பது இதிலிருந்து தெளிவாகும். மேல் நிலைப்பள்ளிகளில் பயிலும் 1,14,000 பேர்களுள் 24,400 பேர் தொழில் படிப்பு படிக்கின்றனர் என்பது மேலும் மனநிறைவு அளிப்பதாகும்.

பாடங்கள், பாடத்திட்டம், பாட நூல்கள்.

4. மேல் நிலைப்பள்ளிகளில் என்னென்ன பாடங்கள் கற்றுத்தரவேண்டுமென்பதும், அப்பாடங்களுக்கான பாடத்திட்டமும் 1977 நவம்பரிலேயே ஏற்பளிக்கப்பட்டன. உயர்நிலைப் பள்ளிப் பாடத்திட்டத்திற்கும் பட்டப் படிப்புப் பாடத்திட்டத்திற்கும் இசைந்ததாகவும், இரண்டுக்கும் நல்ல இணைப்பு தருவதாகவும் மேல் நிலைப்பள்ளிப் பாடத்திட்டம் இருக்குமாறு செய்யப்பட்டுள்ளது.

1979 மார்ச் 26]

5. மேல் நிலைப்பள்ளிகளில் பாட வேளைகளில் 25 சதவிகிதம் நேரம் முதல் பகுதி மொழியும் இரண்டாவது பகுதி மொழியும் ஆகிய இரண்டு மொழிகளைப் பயில பயன்படுத்தப்படுகிறது. மூன்றாம் பகுதியாக, வேறு பாடங்களைப் பயில்வதற்காக மீதி 75 சதவிகித நேரம் பயன்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு மாணவனும் முதல் பகுதியின் கீழ் தமிழை (அல்லது வேறு 12 மொழிகளுள் யாதேனுமொன்றை) படிக்க வேண்டும். இரண்டாம் பகுதியின் கீழ் ஆங்கிலம் பயிலவேண்டும். மூன்றாம் பகுதியின் கீழ் பொதுக் கல்வி பயில்பவர்கள் அறிவியல் பாடங்கள் அல்லது கலைப் பாடங்களில் ஏதாவது நான்கை எடுத்துப் பயிலவேண்டும். பகுதி மூன்றின் கீழ் தொழில் கல்வி பயில்பவர்கள் தொழில் பாடம் ஒன்றைப் பயில்வதோடு அத் தொழிலோடு தொடர்புடையதாக அறிவியல் அல்லது கலைப் பாடங்களில் இருந்து ஒரு பாடத்தையும் தேர்ந்தெடுத்துப் பயில வேண்டும்.

6. மேல் நிலைப்பள்ளி முதலாண்டு வகுப்புக்கான பாடங்களில் பெரும்பாலானவற்றுக்கான பாட நூல்களை தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம் வெளியிட்டது. வல்லுநர் குழுக்களால் தயாரிக்கப்பட்ட அப்புத்தகங்கள் குறித்த காலத்தில் வெளிவந்தன. அப்பாடங்களில் 1979-80-ல் மேல்நிலைப்பள்ளி இரண்டாவதாண்டுக்குத் தேவையான பாட நூல்களையும் அந்நிறுவனமே வெளியிடும். பிற பாடங்களுக்கு புத்தகங்களின் படிகள் குறைவான எண்ணிக்கையிலேயே தேவைப்பட்டன. ஆகையால் அப்பாடங்களுக்கு தனியார் வெளியீட்டாளர்கள் வெளியிட்டிருந்த புத்தகங்களில் தகுதியானவற்றைத் தெரிந்தெடுத்து அவற்றைப் பயன்படுத்த பள்ளிக் கல்வி இயக்குநர் 1978-79-ல் அனுமதித்தார். அப்பாடங்களைப் பொறுத்தவரை 1979-80 லும் இரண்டாவதாண்டு வகுப்புக்கும் அதே முறை பின்பற்றப்படும்.

7. தொழில் பாடங்களுக்கு புத்தகங்கள் தயாரித்து வெளியிட மிகுந்த செலவாகும். அவற்றுக்கு நல்ல புத்தகங்களை தயாரிக்க காலமும் அதிகமாகும். எனவே தொழில் பாடங்கள் ஒரு நிலையான தன்மைக்கு வரும் வரை அவற்றுக்கு பாட நூல்கள் தயாரித்து வெளியிட வேண்டாமென கருதப்பட்டது. ஆயினும், அப்பாடங்களுக்கும் வழிகாட்டி நூல்கள் தயாரித்து வெளியிடப்பட்டுள்ளன. கற்றுத்தர வேண்டிய முக்கியமான அம்சங்கள், செயல்முறையில் விளக்க வண்டிய சோதனைகள் முதலியவற்றை அவ்வழிகாட்டி நூல்கள்விளக்குகின்றன. தொழிற் பாடங்களைக் கற்றுத்தரும் மேல் நிலைப்பள்ளிகளுக்கு அற நூல்கள் இலவசமாகத் தரப்பட்டும். தொழிற் பாட ஆசிரியர்கள் பயன்படுத்துவதற்காக தயாரிக்கப்பட்ட இந் நூல்களைத் தொழிற் பாட மாணவர்களும்விரும்பினால் பயன்படுத்தலாம்.

கற்பிப்புக் கட்டணம், படிப்புதவித் தொகைகள் முதலியவை—

8. மேல் நிலைப் பள்ளிகளில் தமிழையோ சிறுபான்மை மொழிகளையோ பாட மொழியாகக் கொண்டு பயிலும் மாணவர்கள் கற்பிப்புக் கட்டணம் எதுவும் தரவேண்டியதில்லை. அப்படி சிறுபான்மை மொழியில் பயில மேல்நிலைப் பள்ளிகளில் வசதி செய்து தரப்படவில்லை என்ற காரணத்தால் ஆங்கிலத்தைப் பாட மொழியாகக் கொண்டு பயில்பவர்களும் கற்பிப்புக் கட்டணம் செலுத்தவேண்டியதில்லை.

9. மேல்நிலைப்பள்ளிகளில் தொழில் பாடங்களைப் பயில்பவர்கள் ஒவ்வொருவரும் அவர்கள் பயிலும் தொழிலோடு இணைந்த தான கலை, அறிவியல் பாடம் ஒன்றைப் பயிலவேண்டும் என்பது மேலே சொல்லப்பட்டது. அந்த கலை/அறிவியல் பாடம் எந்த மொழியில் பயிலப்படுகிறது என்ற அடிப்படையிலேயே தொழிற் பாட மாணவர்கள் கற்பிப்புக் கட்டணம் செலுத்துவது குறித்து முடிவு செய்யப்படுகிறது. அதாவது அந்த கலை/அறிவியல் பாடத்தை தமிழில் அல்லது சிறுபான்மை மொழியில் பயிலும் மாணவர் (தொழிற் பாடத்தை எந்த மொழியின் மூலமாக பயின்றாலும்) கற்பிப்புக் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை.

10. சாதாரண மேல் நிலைப்பள்ளிகளில் ஆங்கிலத்தைப் பாடமொழியாகக் கொண்டு பயில்பவர்கள் மாதம் ரூ. 20 வீதம் ஆண்டுக்கு 10 மாதம் கற்பிப்புக் கட்டணம் செலுத்த வேண்டும். தாழ்த்தப்பட்டோர், மலைசாதியினர் மற்றும் பிற்பட்ட வகுப்பினருக்கு வழக்கமாகவுள்ள கட்டணச் சலுகைகள் இங்கும் உண்டு.

11. மேல் நிலைப் பள்ளிகளில் எந்த மொழியைப் பாட மொழியாகக் கொண்டு பயின்றாலும் பின்வருமாறு ஆண்டு தோறும் சிறப்புக் கட்டணம் செலுத்தவேண்டும் :—

	ரூ.
சிறப்புக் கட்டணம்	15
வசதிக் கட்டணம்	10
ஆய்வகக் கட்டணம்	20

12. கிராமப்புற மாணவர்களுக்கான படிப்புதவித் தொகைகள் ஆண்டுதோறும் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 4 மாணவர்களுக்கு புதியதாக வழங்கப்படுகிறது. இப்படிப்புதவித் தொகைகளைப் பெறுபவர்கள் தமது மேல் நிலைப் பள்ளிப் படிப்பு முடியும் வரை அத் தொகைகளைப் பெறலாம். தாங்கள் 10 ஆண்டு எஸ். எஸ். எல். சி. தேறிய பள்ளியிலேயே மேல் நிலைப் பள்ளி வகுப்பைப் படித்தாலும் சரி, வேறு பள்ளிகளில் படித்தாலும் சரி, அவர்களுக்கு இச்சலுகை உண்டு.

ஆசிரியர்கள் தகுதி, சம்பள விகிதம் முதலியன.

13. மேல் நிலைப் பள்ளிப் பாடத் திட்டம் தரம் உயர்த்தப்பட்டதாகும். எனவே ஆசிரியர்களுக்கு பட்டமேற்படிப்புத் தகுதி தேவைப்படுகிறது. அப்பள்ளிகளில் கல்லூரிகளிலுள்ள விரிவுரையாற்றும் முறைப்படியல்லாமல் பள்ளிகளில் உள்ளதுபோல் கற்றுத்தரும் முறையே கடைப்பிடிக்கப்படுவதால் மேல் நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு ஆசிரியர் பயிற்சித் தகுதியும் இன்றியமையாததாகும். இவற்றைக் கருத்திற் கொண்டு மேல் நிலைப் பள்ளிகளில் கலை, அறிவியல் பாடங்களைக் கற்றுத்தரும் ஆசிரியர்களுக்குப் பின்வரும் தகுதிகளை அரசு நிர்ணயித்துள்ளது:—

பதவி.	பொதுப் படிப்பு.	பயிற்சித் தகுதி.	ஆசிரியராக அனுபவம்.
(1)	(2)	(3)	(4)
1. தலைமையாசிரியர்	பட்டமேற்படிப்பு (எம்.ஏ./எம்.எஸ்.சி/ எம். காம்.)	பி.எட்.,/பி.டி.	பத்தாண்டு அனுபவம். (இந்தப் பத்தாண்டுகளில் பள்ளிக் கல்வித் துறையின் கீழுள்ள மேல் நிலைப் பள்ளிகளில் ஆசிரியர் ஆக இரண்டாண்டுகள் இருந்திருக்கவேண்டும்.)
2. கலை, அறிவியல் பாட ஆசிரியர்கள்,	மேல் நிலைப் பள்ளியில் கற்றுத் தர வேண்டிய பாடத்தில் பட்ட மேற்படிப்புத் தகுதி.	பி.எட்.,/பி.டி.	..

14. மேற்சொன்ன முழுத்தகுதி பெற்ற ஆசிரியர்களுக்கான மூன்றுவது ஊதியக் குழு சம்பள விகிதங்கள் வருமாறு :

பதவி.	சம்பள விகிதம். சாதாரண நிலை.	சம்பள விகிதம். 10 ஆண்டு பணி முடித்த பின் கிடைக்கும் தேர்வுத் தர நிலை.
(1)	(2)	(3)
	ரூ.	ரூ.
முழுத் தகுதி பெற்ற ஆசிரியர்கள் —		
1. தலைமையாசிரியர்	750—50—1,350	850—50—1,200—60—1,500.
2. கலை, அறிவியல் பாட ஆசிரியர் ..	675—35—885—45—1,200.	750—50—1,350.

15. 1978–79 முதல் பதினோராவது வகுப்பு நீங்கிவிட்டபடியால் ஒரளவு பி. டி. ஆசிரியர்கள் ''உபரி''யானார்கள். அவர்கள் வேலை இழக்காமல் பார்த்துக் கொள்வதற்கும், மேலும், பட்ட மேற்படிப்புத் தகுதியும் ஆசிரியர் பயிற்சியும் பெற்று உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றி வந்த ஆசிரியர்கள் மேல் நிலைப் பள்ளிகளுக்கு செல்ல வழி செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடனும், அவ்வாறு தகுதி பெற்றவர்களை மேல் நிலைப் பள்ளிகளில் நியமிக்க அரசு அனுமதித்தது. அவ்வாறு முழுத் தகுதி பெற்ற ஆசிரியர்கள் போதுமான

எண்ணிக்கையில் உயர் நிலைப் பள்ளிகளில் இல்லாத காரணத்தால், உயர் நிலைப் பள்ளி ஆசிரியர்களில் (பட்டப் மேற்படிப்புத் தகுதி இல்லாமல்) பி.டி. மட்டும் உடைய ஆசிரியர் களும் அவர்கள் எந்தப் பாடத்தில் பட்டம் (பி.ஏ. / பி.எஸ்.சி./பி.காம்.) பெற்றுள்ளனரோ அந்தப் பாடத்தை மேல் நிலைப் பள்ளிகளில் கற்றுத் தர அரசு அனுமதித்துள்ளது. மேற் சொன்ன முழுத்தகுதிகளையும் பெறாத மேல் நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கும், பாட ஆசிரியர்களுக்கும், அவரவர்களுக்கு உயர் நிலைப் பள்ளியில் என்ன சம்பள விகிதம் உண்டோ அதே சம்பள விகிதத்தில் தான் மேல் நிலைப் பள்ளியில் சம்பளம் தரப்படும். ஆனால் சிறப்பூதியமாக தலைமையாசியருக்கு மாதம் ரூ. 50-ம் ஆசிரியர்களுக்கு மாதம் ரூ. 25-ம் தரப்படும். இவர்கள் முழுத் தகுதி பெற்ற பின் மேல் நிலைப் பள்ளிகளுக்குரிய சம்பள விகிதத்தைப் பெறலாம். மேல்நிலைப் பள்ளிகளுக்கு கலை, அறிவியல் பாடங்களை கற்றுத் தருவதற்கான ஆசிரியர் தேவையில் பெரும் பகுதி உயர் நிலைப் பள்ளி ஆசிரியர்களை (முழுத் தகுதி பெற்றவர்களும், பெறாதவர்களும்) மேல் நிலைப் பள்ளிகளில் நியமித்து பூர்த்தி செய்யப் பட்டுள்ளது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

16. மேற்கொண்டு தேவையாயிருந்த கலை, அறிவியல் பாட ஆசிரியர்கள் தேவையைப் பூர்த்தி செய்ய 1978–79-ல் மேல் நிலைப் பள்ளிகளுக்கு 1,300 கூடுதல் ஆசிரியர் பதவிகள் ஏற்பளிக்கப்பட்டன. 1979-80-ல் அப்பள்ளிகளுக்கு 1,740 கூடுதல் ஆசிரியர் பதவிகள் ஏற்படுத்தப்படும். இவ்வாசிரியர் கள் 870 சாதாரண மேல் நிலைப் பள்ளிகளிலும் பள்ளிக்கு இருவர் வீதம் முதல் பகுதி, இரண்டாம் பகுதி மொழிகளைக் (தேவையானால் மூன்றாம் பகுதியில் பயிலும் மொழிகளையும்) கற்றுத்தரப் பயன்படுத்தப்படுவார்கள்.

17. தற்பொழுது மேல்நிலைப் பள்ளிகளில் உடற்பயிற்சிக் கல்வியை அந்தந்தப் பள்ளியிலுள்ள உயர் நிலைப் பள்ளி உடற்பயிற்சி ஆசிரியரோ அல்லது சாதாரண நிலை உடற் பயிற்சி இயக்குநரோ தாம் கவனித்து வருகிறார். அவர்களுக்கு பதவி உயர்வு வாய்ப்புகள் தர வேண்டும் என்ற அடிப்படையில் மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள அத்தகைய பதவிகளில் 400 பதவிகள் 1979–80 முதல் ரூ. 600—30—750—35—890—40—1,050 (தேர்வு நிலை : ரூ. 675—35—885—45—1,200) சம்பள விகிதத்தில் உடற்பயிற்சி இயக்குநர் பதவிகளாக உயர்த்தப்படும்.

18. மேல் நிலைப் பள்ளி அறிவியல் ஆசிரியர் களுக்கு ஆய்வுக் கூடங்களில் உதவி செய்ய வகை செய்ய வேண்டி யுள்ளது. இதற்காக அறிவியல் ''மானிட்டர்'' களை ஏற்படுத்து வது குறித்து ஆய்வு செய்யபடுகிறது.

மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற் பாடங்கள்.

19. மேல் நிலைப் பள்ளி மாணவர்களில் 25 விழுக்காட் டினர் தொழிற் பாடங்களைப் பயில முன் வந்திருப்பது இத் தொழிற் பாடங்களுக்கு நல்ல எதிர்காலம் உண்டு என்பதற்கு அறிகுறியாகும். 709 மேல்நிலைப் பள்ளிகளில் ஒவ்வொன்றி லும் ஒன்று அல்லது மேற்பட்ட தொழிற்பாட வகுப்புக்கள் உள்ளன. மொத்தம் உள்ள வகுப்புக்கள் 1,153 ஆகும்.

20. தொழிற்பாடம் பயில்வோர்கள் மொத்தம் 24,400 பேரா வர். அவர்கள் பயிலும் தொழிற் பாடங்கள் 37 ஆகும். அவை 6 பெருந்துறைகளைச் சார்ந்தவையாகும். மிகப்பெரும் எண்ணிக்கை யினர் (10,000-க்கு மேல்), பயில்வது வாணிகத்துறையைச் சார்ந்த தொழிற்பாடங்கள் ஆகும். பொறியியல், தொழில் நுட்பவியல் துறைகளைச் சார்ந்த தொழிற் பாடங்களை 6,700 மாணவர்களும் வேளாண்மைத் தொழிற் பாடங்களை 2,500 மாணவர்களும், மனையியல், மருத்துவம், இசை ஆகியத் துறைகளைத் சார்ந்த தொழிற் பாடங்களை மீதி தொழிற் பாட மாணவர்களும் பயில்கின்றனர்.

REPORTING SECTION

21. தொழிற் பாட வகுப்புக்கள் 1,153-ல் 491-க்கான ஆசிரியர் தேவை உயர்நிலைப் பள்ளிகளில் முன்னர் இருமுனைப் பாடங்களைக் கற்பித்து வந்த ஆசிரியர்களை மாற்றுவதன் மூலம் நிறைவேற்றப்பட்டது. மற்றப் பாடங்களைக் கற்றுத் தர மாதம் ரூ. 150 ஊதியத்தில் பகுதிநேர ஆசிரியர்களை அரசு நியமித்துள்ளது. இவர்கள் பல்வேறு துறைகளில் ஏற்கனவே பணிசெய்பவர்கள் ஆவார்கள். எனவே அவர்கள் பணி செய்யும் இடங்களிலேயே மாணவர்களுக்குத் தொழிற் பயிற்சியும் அவர்களைக் கொண்டே அளிக்கலாம். அந்தந்தப் பள்ளிகளில் உள்ள நிலைமைகளுக்கேற்ப தொழிற் பாடங்களுக்கான பள்ளி நேரம், பள்ளி நாட்கள் ஆகியவற்றை அமைத்துக் கொள்ள பள்ளிகளுக்கு அனுமதி தரப்பட்டுள்ளது.

22. 1979–80-ல் மேல் நிலைப் பள்ளிகளில் இரண்டாண்டு வகுப்புகளிலும் தொழிற் பாடங்களைக் கற்றுத் தருவதற்குத் தேவையான அளவுக்குக் கூடுதலாகப் பகுதிநேர ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள்.

23. முதன் முதலாக 1978–79-ல் மாணவர்களிடையே ''படிக்கும் பொழுதே பணம் ஈட்ட வகை செய்தல்'' என்ற கொள்கை அடிப்படையில், மாணவர்களிடையே பொறுப்பு உணர்ச்சியை உருவாக்கும் நோக்கத்துடன் தொழிற் பாட வகுப்புகளில் ஆசிரியர்களுக்கு உதவ'' தொழிற்பாட மானிட்டர்கள் '' நியமிக்க வகை செய்யப்பட்டது. இந்த மானிட்டர்களுக்கு மாதம் ரூ. 20 வீதம் ஆண்டுக்கு 10 மாதங்களுக்கு ஊதியம் தரப்படும். ஒவ்வொரு தொழிற் பாடத்துக்கும் ஒரு மானிட்டர் உண்டு. அந்தந்தப் பள்ளித் தலைமையாசிரியர்கள் தொழிற் பாட ஆசிரியர்களைக் கலந்து தகுதியுள்ள மாணவரை மானிட்டராக நியமிப்பார். இரண்டாவதாண்டு மேல் நிலைப் பள்ளி வகுப்பு தொடங்கியதும் ஒவ்வொரு தொழிற் பாடத்திற்கும், முதலாவதாண்டுக்கு ஒருவர், இரண்டாவதாண்டுக்கு ஒருவர் ஆக இரண்டு மானிட்டர்கள் இருப்பர்.

கட்டடங்களும் தளவாடங்களும்.

24. 1978-79-ல் தற்காலிக நடவடிக்கையாக மேல்நிலைப் பள்ளிகள் தேவையான அளவுக்கு ஷிப்டு முறையைப் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டது. அந்தந்தப் பள்ளியின் வசதிக் கேற்ப ஷிப்டுகளின் வேலை நேரத்தை அமைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டது. அதே நேரத்தில் அரசு மேல் நிலைப் பள்ளிகளுக்கு கட்டட வசதி செய்ய பெரும் திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. 413 அரசு மேல் நிலைப் பள்ளிகளில் அரிசன நலத்துறை, பிற்பட்டோர் நலத்துறைப் பள்ளிகள் 5. மீதி 408 பள்ளிகள் பள்ளிக் கல்வித் துறையைச் சேர்ந்தவை. அந்த 408 பள்ளிகளில் பூந்தமல்லியிலுள்ள பார்வையற்றோர் பள்ளிக்குக் கூடுதல்

இட வசதி தேவையில்லை. மீதி 407 பள்ளிகளுக்கும் பள்ளிக்கு சுமார் ரூ. 1·57 லட்சம் செலவில் ஒரு வகுப்பறையும் ஒரு ஆய்வுக் கூடமும் இணைந்த கட்டடம் கட்டித் தர ஏற்பளிக்கப்பட்டுள்ளது. 133 பள்ளிகளுக்கான இக்கட்டட வேலைக்கு போன ஆண்டில் ஏற்பளிக்கப்பட்டுள்ளது. அவற்றுள் சுமார் 80 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு அவற்றை பள்ளிகள் பயன்படுத்துகின்றன. 274 அரசு மேல் நிலைப் பள்ளிகளுக்கான கட்டட வேலைகளுக்கு அண்மையில் ஏற்பளிக்கப்பட்டது. அனைத்துக் கட்டட வேலைகளும் 1979 ஜூனுக்கு முன் முடிவடையும். இரண்டாவதாண்டு மேல்நிலைப் பள்ளி வகுப்புகள் தொடங்கும்பொழுது வகுப்பறை மற்றும் ஆய்வுக்கூட வசதி இவ்வாறு அப்பள்ளிகளில் ஆயத்தமாக இருக்கும்.

25. தனியார் மற்றும் நகராட்சி மேல்நிலைப் பள்ளிகளும் கட்டடம் மற்றும் ஆய்வுக்கூட வசதி செய்ய அரசு மானியம் கோரி வந்துள்ளன. அவர்கள் மேல் நிலைப் பள்ளி வகுப்பு தொடங்க அனுமதிக்கும்பொழுதே அவ்வசதிகளை அவர்களே செய்துகொள்ளவேண்டும் என்ற நிபந்தனையின் பேரிலேயே அனுமதி தரப்பட்டது. இருந்தபோதிலும் அவர்கள் கோரிக்கையை அரசு பரிவுடன் ஆய்வு செய்து அவர்கள் கட்டடம் மற்றும் ஆய்வுக்கூட வகையில் செய்யும் செலவில் 40 விழுக்காட்டை, பள்ளிக்கு ரூ. 1 லட்சம் என்ற உச்ச வரம்புக்குட்பட்டு, அரசு மானியமாகத் தர அரசு கருதியுள்ளது. இதற்காக 1979–80 வரவு–செலவு மதிப்பீட்டில் ரூ. 1·75 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. பள்ளி நிர்வாகங்கள் தங்கள் பணத்திலிருந்து செய்யவேண்டிய 60 சதவிகிதம் செலவை ஈடுகட்ட பள்ளிப் பொது நிதியில் உள்ள உபரிப் பணத்தை அனுமதிக்கத்தக்க அளவுக்குப் பயன்படுத்த அனுமதிக்கப்படும்.

26. அரசு மேல் நிலைப் பள்ளிகளில் முதலாண்டு வகுப்புக்கான ஆய்வுக்கூடக் கருவிகளை வாங்க ரூ. 2 கோடி செலவுக்கு ஏற்பளிக்கப்பட்டுள்ளது. 1979–80-ல் அரசு மேல் நிலைப் பள்ளிகளில் இரண்டாவதாண்டு வகுப்புக்காக மேலும் ஆய்வுக்கூடக் கருவிகளை வாங்க வகை செய்யப்படும்.

நூலக வசதிகள்.

27. பள்ளிக்கு ரூ. 6,000 செலவில் அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு 1979–80-ல் நூலகப் புத்தகங்கள் வாங்கப்படும். தனியார் மற்றும் நகராட்சி மேல்நிலைப் பள்ளிகளுக்கும் நூலகப் புத்தகம் வாங்க ஆகும் செலவில் 40 விழுக்காடு, பள்ளிக்கு ரூ. 2,400 என்னும் உச்ச வரம்புக்குட்பட்டு அரசு மானியமாக வழங்கப்படும். மேல்நிலைப் பள்ளிகளுக்கும் இவ்வாறு நூலகப் புத்தகங்கள் தரும் பணிக்காக 1979-80-ல் ரூ. 37 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

1979 மார்ச் 26]

அமைச்சுப் பணியாளர்கள்.

28. மாவட்டக் கல்வி அலுவலர் 48 பேர், மகளிர் பள்ளி ஆய்வாளர்கள் 7 பேர், ஆங்கிலோ இந்தியப்பள்ளி ஆய்வாளர், மெட்ரிக்குலேஷன் பள்ளி ஆய்வாளர் ஆகியோர் அலுவலகங்களில் மேல்நிலைப் பள்ளித்திட்டத்தால் ஏற்பட்டுள்ள கூடுதல் நிருவாக வேலையை கவனிக்க அலுவலகத்திற்கு ஒரு இளநிலை உதவியாளர் வீதம் கூடுதலாக 1979-80-ல் நியமனம் செய்யப்படும்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1979 மார்ச் 26

IV பள்ளிசாராக் கல்வியும் முதியோர் கல்வியும்.

1. 1971 ஆம் ஆண்டு மக்கட் தொகை கணக்கின்படி தமிழ் நாட்டில் 39·39 விழுக்காட்டினர் (ஆண்களில் 51·68 விழுக்காட்டினரும், பெண்களில் 26·83 விழுக்காட்டினரும்) எழுதப்படிக்கத் தெரிந்து இருந்தனர். அக் கணக்கின்படி அனைத்திந்தியாவில் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் விழுக்காடு 29·34 ஆகும். (ஆண்கள் 39·51 விழுக்காடு, பெண்கள் 18·44 விழுக்காடு) தமிழ் நாட்டில் 1971 ஆம் ஆண்டு மக்கட் தொகைக் கணக்கின்படி இருந்த 4·12 கோடி மக்களுள் 1·63 கோடி பேரே எழுதப்படிக்கத் தெரிந்து இருந்தனர்.

2. மொத்த மக்கள் தொகையிலிருந்து 5 வயதுக்குக் குறைந்த குழந்தைகள் எண்ணிக்கையை நீக்கிவிட்டு திருத்திய எழுத்தறிவு விகிதம் கணக்கிடப்படுகிறது. அப்படிக் கணக்கிட்டால், 1971 மக்கள் தொகை கணக்கின்படி, தமிழ்நாட்டில் எழுத்தறிவு பெற்றவர்கள் விழுக்காடு 45·40 சதவிகிதம் (ஆண்களில் 59·54 சதவிகிதம் ; பெண்களில் 30·92 சதவிகிதம்), அனைத்திந்தியாவிலும் 34·45 சதவிகிதம் (ஆண்களில் 45·95 சதவிகிதம்) ; (பெண்களில் 21·97 சதவிகிதம்) ஆகும்.

3. பதினான்கு வயதுக்குக் குறைந்த அனைத்துச் சிறுவர் சிறுமியரையும் பள்ளிகளில் சேர்த்தாக வேண்டும் என்னும் முயற்சிகளில் ஈடுபடும் அதே நேரத்தில், பள்ளிக்கு வராதவர்கள், வந்து நின்றுவிட்டவர்கள், வயது வந்தவர்கள் ஆகியோருக்கும் பள்ளி சாராக்கல்வி, மற்றும் முதியோர் கல்வி வசதிகள் அளித்து அவர்கள் ஆற்றலை வளர்த்துக் கொள்ள வழி செய்யவேண்டும் என்பதில் மைய அரசும், மாநில அரசும் மிகவும் அக்கறை கொண்டுள்ளன.

பள்ளி சாராக் கல்வி.

4. 6—14 வயதுச் சிறுவர் சிறுமியருள் பள்ளியிலேயே சேராதவர்களும், சேர்ந்து ஓரிரு ஆண்டு படித்துவிட்டு நின்றுவிட்டவர்களும் சமுதாயத்தில் மிகுந்த வறுமையால்வாடும் பிரிவினரைச் சார்ந்தவர்களாவார்கள். அவர்கள் முறையான பள்ளிகளில் உள்ள வசதிகளை நன்கு பயன்படுத்த இயலாது. எனவே 11—14 வயதினர் அனைவரையும் பள்ளிகளில் சேர்க்க வேண்டுமாயின் அவர்களுக்கு இசைந்த மாற்றங்களைக் கொண்ட முறை தேவை. அதாவது பாடத்திட்டம், பயிற்றுமுறை, படிக்க வேண்டிய மொத்த காலவரம்பு, நாள்தோறும் பயிற்றுவிக்கும் நேரம் ஆகிய அனைத்திலும் மாற்றங்களைக் கொண்ட முறை தேவை. பள்ளி சாராக் கல்வி மையங்கள் அவர்களுக்கு இவ்வசதிகளைச் செய்கின்றன. அம் மையங்களை பள்ளி சாராக் கல்வித்துறை 1976-77-ல் 374 ஊராட்சி ஒன்றியங்களிலும் ஒன்றியத்துக்கு ஒன்றுவீதம் முதலில்தொடங்கியது. இம்மையங்களின் எண்ணிக்கை

[1979 மார்ச் 26]

1977–78-ல் 2-ஆகவும், 1978–79-ல் 4-ஆகவும் உயர்த்தப் பட்டது. தற்பொழுது 1,496 மையங்கள் செயல்பட்டு வருகின் றன. இம்மையம் ஒவ்வொன்றும் 3 ஆண்டு வேலைசெய்யும். 10 மாத வகுப்புகள் மூன்றை நடத்தும், ஒவ்வொரு 10 மாத வகுப்பிலும் ஒரு புதிய தொகுதி மாணவர்களுக்குப் பயிற்றுவிக்கப் படும். இம்மையங்கள் அனைத்திலும் இப்பொழுது பயில்வோர் சுமார் 45,000 பேராவர். ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டிடங் களில் இவ்வகுப்புகள் நடக்கின்றன. பள்ளி ஆசிரியர்களே பள்ளி சாராக் கல்வி வகுப்புகளை மாலையில் நாள்தோறும் சுமார் இரண்டு மணி நேரம் நடத்துகின்றனர். இதற்கு திங்கள் ஒன் றுக்கு ரூபாய் 50 மதிப்பூதியம் பெறுகின்றனர்.

5. மேற்சொன்னவாறு அரசு நடத்தும் பள்ளி சாராக் கல்வி மையங்கள் தவிர, ஊராட்சி ஒன்றியங்கள் தங்கள் சொந்தப் பணத்திலிருந்து சுமார் 780 பிற ஊர்களில் பள்ளி சாராக் கல்வி மையங்களை நடத்தி வருகின்றன. இவற்றில் சுமார் 25,000 பேர் பயில்கின்றனர். மேலும் இம்மையங்களை அடுத்த ஆண்டு தொடங்க விரும்பும் வசதிபடைத்த ஊராட்சி ஒன்றியங்கள் இவ் வாறு தொடங்க ஊக்குவிக்கப்படும்.

6. பள்ளி சாராக் கல்வியில் ஒரு மத்திய அரசுப் பண உதவித் திட்டம் 1978–79-ல் செயல்பட்டது. இத் திட்டத்தின் கீழ் 15—25 வயதுத் தொகுதியினருக்கு கல்வி கற்பிக்கப்பட்டது. திருச்சிராப்பள்ளி, வட ஆர்க்காடு, சேலம், தருமபுரி, கோயமுத் தூர், தென் ஆர்க்காடு, திருநெல்வேலி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் மாவட்டத்திற்கு 100 இடங்களில் இத்திட்டம் செயல்பட்டது. பாதி மாவட்டங்களில் செலவை மைய அரசும், பாதியில் மாநில அரசும் ஏற்றன. ஒவ்வொரு மாவட்டத்திலும், இத்திட்டத்திற்கு ஆண்டுக்கு ரூ. 1 இலட்சம் செலவானது. மொத்தம் சுமார் 24,000 மாணவர்கள் பயனடைந்தனர்.

7. ஏழ்மைக் குடும்பங்களைச் சார்ந்தவர்களும், எட்டாம் வகுப் புடன் பள்ளிப் படிப்பை விட்டுவிட்டவர்களுமான இளைஞர் களுக்கு எஸ்.எஸ்.எல்.சி. தரத்தில் கல்வி கற்பிக்க மைலாப்பூர் செயிண்ட் தாமஸ் கான்வென்டில் 1975-78 ஆண்டுகளில் மாலை நேரங்களில் பள்ளி சாராக் கல்வி வகுப்புகள் நடத்தப்பட்டன.

முதியோர் கல்வி.

8. இந்நாடு முழுவதிலும், வரும் ஐந்து ஆண்டுகளில் 15–35 வயதுத் தொகுதியைச் சேர்ந்தவர்களுள் எழுதப்படிக்கத் தெரி யாமலிருக்கும் சுமார் 10 கோடி பேர்களுக்கு, குறைந்த அளவு எழுதப்படிக்கவாவது கற்றுக் கொடுக்கவேண்டும் என்பது மைய அரசின் நோக்கமாகும். அவர்களுக்கு அளிக்கப்படும் முதியோர் கல்வியின் மூலம் அவர்கள் மேற்கொண்டு தாமாகவே படிப்பறிவை

வளர்த்துக் கொள்ளும் திறனைப் பெற்று, தமது வளர்ச்சிக்கும் தம்மைச் சுற்றியுள்ள சமுதாய வளர்ச்சிக்கும், தன்னம்பிக்கையுடன் தீவிரமாகப் பாடுபட இயலும். இக்குறிக்கோளைத் தமிழ் நாட்டில் நிறைவேற்ற வேண்டுமாயின் வரும் 5 ஆண்டுகளில் 15–35 வயதினருள் எழுத்தறிவற்றவர்கள் 65 லட்சம் பேருக்கு (ஆண்கள் 21 லட்சம் பேரும், பெண்கள் 44 லட்சம் பேரும்) எழுத்தறிவிக்கவேண்டும். அரசுக்கு முதியோர் கல்வி பற்றி ஆலோசனை கூற முதியோர் கல்விக்கான மாநில வாரியம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. முதியோர் கல்வித் திட்டங்களைக் கவனிக்க கூடுதல் நிருவாகப் பணியாளர்களை நியமிப்பது குறித்து ஆய்வு செய்யப்பட்டுவருகிறது.

9. முதியோர் கல்வி அளித்திட நபருக்கு ரூ. 75 செலவு ஆகும் என்ற மைய அரசின் குறைந்த பட்சமதிப்பீட்டின் அடிப்படையின் கணக்கிட்டாலும் 65 லட்சம் பேருக்கு எழுத்தறிவிக்க பெருந் தொகையான ரூ. 50 கோடி அளவில் தேவைப்படும். 65 லட்சம் பேருக்கு எழுத்தறிவிக்கும் இப்பணியில் கால் பகுதிக்கு மைய அரசு (கல்லூரி மாணவர்களைக் கொண்ட தேசீய பணிப்பிரிவு, நேரு இளைஞர் மன்றங்கள், தனியார் முயற்சிகள் ஆகியவை மூலமாக) நிதி உதவி செய்யக்கூடுமெனத் தெரிய வருகிறது. ஆயினும் மீதி முக்கால் பகுதி பணியையும் மாநில அரசே செய்ய வேண்டியிருக்கும். இதற்கு தனியான மைய அரசுப் பண உதவி உண்டா என்பது பற்றி இதுவரை மைய அரசிடமிருந்து தெளிவான விளக்கம் எதுவும் இல்லை. நிதி வசதி குறைந்த மாநில அரசு இந்த முக்கியமான தேசியப் பணியைச் செயல்படுத்த மைய அரசு (மாநில அரசுத் திட்டப் பணிகளுக்குத் தரும் பண உதவிக்கு மேலாக) தனி நிதி உதவி தருமென எதிர்பார்க்கப்படுகிறது.

10. கிராமப்புறங்களில் எழுத்தறிவிப்பு மையங்கள் 2,800-அய் 12 மாவட்டங்களில் பரவலாக 1979–80-ல் தொடங்கி நடத்துவதற்கு மட்டும் மைய அரசுப் பண உதவி கிடைக்கும் என்று உறுதியாகத் தெரிய வருகிறது. ஒவ்வொரு மையத்திலும் 30 முதியவர்களுக்கு எழுத்தறிவிக்க 10 மாத வகுப்புகள் நடைபெறும். ஆண்டுதோறும் மொத்தம் 84,000 பேர் இம்மையங்களின் மூலம் பயனடைவர்.

11. வயது வந்தவர்கள் தேவைக்கும் சூழ்நிலைகளுக்கும் ஏற்ற பாடத் திட்டங்களையும் பாடங்களையும் நன் முறையில் எழுதுவதற்கான எழுத்தாளர் முகாம்கள் ஏழு நடத்த ஏற்பளிக்கப்பட்டுள்ளது. இதற்கு மைய அரசு ரூ. 2 லட்சம் பண உதவி தந்தது.

1979 மார்ச் 26]

தனியார் அமைப்புகள்.

12. இதுவரை நம் மாநிலத்தில் சுமார் 20 தனியார் அமைப்புகள் முதியோர் கல்விப் பணியைச் செயல்படுத்த மைய அரசு ஏற்பளித்துள்ளது. அவை சுமார் 1,300 மையங்களை நடத்தி சுமார் 40,000 பேருக்கு எழுத்தறிவிக்கும் பணியைச் செய்யும். எழுத்தறிவிப்புப் பணிக்காகும் செலவு முழுவதும் இவ்வமைப்புகளின் நிருவாகச் செலவில் 75 விழுக்காடும், என்று தாராளமாக இவ்வமைப்புக்களுக்கு மானியம் தர மைய அரசு முன்வந்துள்ளது. இவ்வமைப்புக்களின் பணியை பள்ளி சாராக் கல்வித் துறை கண்காணிக்கிறது. மைய அரசு மானியம் கோரிவரும் தனியார் அமைப்புக்களின் மனுக்களை பள்ளி சாராக் கல்வித் துறை ஆய்வு செய்து மாநில அரசு மூலமாக மைய அரசுக்கு அனுப்பி வைக்கிறது. இது வரை சுமார் 500 அமைப்புக்கள் மனுச் செய்து, மனுக்கள் ஆய்விலுள்ளன. இனி இவ்வமைப்புக்களுக்கு (நேரடியாக இல்லாமல்) மாநில அரசின் மூலமாக மானிய உதவி தர மைய அரசு கொள்கை அளவில் இசைந்துள்ளது.

13. தமிழ்நாடு தொடர் கல்வி வாரியம், முதியோர் கல்விப் பணியில் ஈடுபட்டுள்ள ஒரு தனிப்பட்ட அமைப்பாகும். அது 1977—78-ல் 'எழுத்தறிவிப்புப் பணிக்கான மாநில மையம்' ஒன்றைத் தொடங்கியுள்ளது. முதியோர் கல்விப் பணியாளர்களைப் பயிற்றுவித்தல், முதியோருக்கு பயிற்றுவிப்பதற்கும் அவர்கள் பயில்வதற்கும் ஆன பாடங்களைத் தயாரித்தல், ஆய்வுசெய்தல், எழுத்தறிவிப்புப் பணியின் திறனை மதிப்பிடுதல் ஆகிய பணிகளில் அம்மையம் ஈடுபடும். இம்மையத்தின் செலவில் 75 விழுக்காட்டை மைய அரசும், 15 விழுக்காட்டை மாநில அரசும், 10 விழுக்காட்டை அத்தனியார் அமைப்பும் ஏற்கின்றன.

தேசீயப் பணிப் பிரிவைச் சேர்ந்த கல்லூரி மாணவர்கள்.

14. தேசீயப் பணிப் பிரிவின் நடவடிக்கைகளில் ஒரு பங்காக ஒவ்வொரு கல்லூரியும் முதியோர் கல்வி மையங்கள் 5-லிருந்து 10 வரை தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இப்பணிக்கான நிதி உதவியை பல்கலைக் கழக மானியக் குழு நேரடியாகக் கல்லூரிகளுக்குத் தரும். எந்தெந்த வட்டாரத்தில் எவ்விடங்களில் முதியோர் கல்வி மையம் தொடங்க தேவையுள்ளது என்ற ஆய்வை கல்லூரிகள் பலவும் தொடங்கியுள்ளன. பல்கலைக் கழக மானியக் குழுப் பண உதவி வந்ததும் இம்மையங்கள் செயல் படத்துவங்கும். தேசீயப் பணிப் பிரிவின் நிதி வசதியைப் பயன் படுத்தி மேலும் பல எழுத்தறிவிப்பு மையங்கள் தொடங்க வாய்ப்பு இருக்கிறது.

[1979 மார்ச் 26

நேரு இளைஞர் நிலையங்கள்.

15. நேரு இளைஞர் நிலையங்கள் ஏழு, கடலூர், வேலூர், சேலம், திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம், கோயமுத்தூர், புதுக்கோட்டை ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. மேலும் 6 நிலையங்கள் தொடங்க ஏற்பளிக்கப்பட்டு உள்ளது. அவற்றுக்கான அமைப்பாளர்கள் விரைவில் நியமிக்கப்படுவார்கள். இவை குறிப்பாக, பள்ளிசாராக் கல்வித் துறையில் பயனுள்ள பணிகளைச் செய்கின்றன. பள்ளி சாராக் கல்வி எல்லா இளை ஞர்களுக்கும் கிட்டச் செய்வதும், இளைஞர்களிடையே அறிவியல் மனப்பான்மையை வளர்ப்பதும் பாடல்கள், நாடகங்கள் மூலமாக ஆக்க பூர்வமான நடவடிக்கைகளுக்கு வசதி செய் வதும், போட்டி விளையாட்டுக்கள், உடற் பயிற்சிக் கல்வி ஆகிய வற்றுக்கு ஏற்பாடு செய்வதும் இந்நிலையங்களின் பணிகளாகும். இதுவரை இந்நிலையங்கள் முதியோர் கல்வி மையங்கள் 525-அய் தொடங்கி சுமார் 16,000 பேருக்கு எழுத்தறிவித்து வருகின்றன.

1979 மார்ச் 26]

V. கல்லூரிக் கல்வி.

தமிழ்நாட்டில் 1947 ஆம் ஆண்டில் 24 ஆக இருந்த கலை, அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரிகளின் எண்ணிக்கை 1978–79 ஆம் ஆண்டில் 188 ஆக உயர்ந்துள்ளது. 1947 ஆம் ஆண்டில் கல்லூரிகளில் படித்த மாணவர்களின் எண்ணிக்கை 17,000 என இருந்தது; இது 1978–79 ஆம் ஆண்டில் 2 லட்சம் ஆக உயர்ந்துள்ளது. இக் கல்லூரிகளில் படித்து வந்த மாணவர்கள், பணியாற்றிய ஆசிரியர்கள் எண்ணிக்கை ஆகியவை இணைப்பில் தரப்பட்டுள்ளன.

புதிய பல்கலைக் கழகங்கள்.

2. தற்போது தமிழ்நாட்டில் சென்னை, மதுரை காமராஜ், அண்ணாமலை ஆகிய மூன்று பல்கலைக் கழகங்களே உள்ளன—(வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர்; பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகம், சென்னை ஆகியவை நீங்கலாக) மொத்தமுள்ள 188 கலை, அறிவியல் கல்லூரி களில் 110 கல்லூரிகள் சென்னைப் பல்கலைக் கழகத்துடனும், 77 மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்துடனும், ஒன்று அண்ணா மலைப் பல்கலைக் கழகத்துடனும் இணைந்தவை. பல்கலைக் கழகம் ஒன்றுடன் 30 அல்லது 40-க்கு மேற்பட்ட கல்லூரிகள் இணைக்கப் பெற்றிருத்தல் கூடாது என பல்கலைக் கழகங்கள் பற்றிய கசேந்திர கட்கர் குழு பரிந்துரை செய்துள்ளது. எனவே இம்மாநிலத்தில் மேலும் குறைந்தது இரண்டு புதிய பல்கலைக் கழகங்களையாவது நிறுவுவது இன்றியமையா தது என்பது தெளிவாகும். திருச்சிராப்பள்ளியில் ஒன்றும் கோயம்புத்தூரில் ஒன்றுமாக (கல்லூரிகளுக்கு இணைப்பு அளிக்கும் வகையைச் சார்ந்த) இரண்டு புதிய பல்கலைக் கழகங் களை நிறுவுவது குறித்து மைய அரசுடன் இவ்வரசு தொடர்பு கொண்டு இதற்கு மைய அரசின் ஒப்புதலைக் கோரியுள்ளது.

தன்னுரிமையுள்ள கல்லூரிகள்.

3. கல்லூரிகளுக்கு சுய ஆட்சி உரிமை தரப்பட்டுள்ள முதல் மாநிலம் தமிழ்நாடுதான். சென்னைப் பல்கலைக் கழகத்தின் கீழுள்ள 6 கல்லூரிகளும், மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்தின் கீழுள்ள 4 கல்லூரிகளும் ஆக மொத்தம் 10 கல்லூரிகளுக்கு இவ்வுரிமை தரப்பட்டுள்ளது. இதன்மூலம் அக்கல்லூரிகள் கல்வித் தரத்தை உயர்த்தப் பாடுபட வகை செய்யப்பட்டுள்ளது. தன்னுரிமை தர வகைசெய்து சென்னை மற்றும் மதுரை காமராஜ் பல்கலை கழகச் சட்டங்கள் 1977 டிசம்பரில் திருத்தப்பட்டன. சுய ஆட்சி உரிமை பெற்றுள்ள கல்லூரிகள், தாமே பாடத் திட்டங்களை வகுக்கவும் தேர்வு நடத்தவும் உரிமை பெற்றவை. எனினும் பட்டங்களை அந்தந்தப் பல்கலைக் கழகங்களே வழங்கும். இதுவரை தன்னுரிமை பெற்றுள்ள கல்லூரிகள் செயல்படும் முறையை சில ஆண்டுகள் கவனித்துப் பார்த்து, அதன்பின் இத்திட்டத்தை மாநிலத்திலுள்ள பிற கல்லூரிகளுக்கு விரிவாக்கு வதைப் பற்றி யோசிக்கப்படும்.

[1979 மார்ச் 26

தொடர் கல்வி.

4. பகல் நேர வகுப்புகளைத் தவிர 30 கல்லூரிகளில் மாலை நேர வகுப்புகளும் நடத்தப்பட்டு வருகின்றன. இம்மாலை நேர வகுப்புகளில் பயில்வோர்கள் சுமார் 9,000 பேராவர். மாலை நேரக் கல்லூரிகளில் பட்ட மேற்படிப்பு வகுப்புகளுட்பட பல் வகைப் படிப்புகளும் கற்றுத்தரப்படுகின்றன. பட்ட மேற் படிப்பு வகுப்புகளுள்ள மூன்று அரசுக் கல்லூரிகளில் 1978–79-ல் எம்.எஸ்.சி. செயல் முறை வகுப்புகளை மாலையில் நடத்த வசதி செய்யப்பட்டது. இவ்வசதியைப் பயன்படுத்தி உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் தனிப்பட்ட முறையில் எம்.எஸ்.சி. தேர்வு எழுத தகுதி பெற்றுக்கொள்ளலாம்.

5. மதுரை காமராஜ் பல்கலைக் கழகம் புகுமுக வகுப்பு, பி.ஏ., பி. காம்., பி.ஜி.எல்., எம். ஏ. வகுப்புகளுக்கு அஞ்சல் வழிப்பாட முறை மூலம் பாடம் நடத்தி வருகிறது. இந்த அஞ் சல் முறை வகுப்புகளைப் பலரும் விரும்பிப் படிக்கின்றனர். 1978–79-ல் 43,000 க்கு மேற்பட்டவர்கள் இவற்றில் படித்து வந்தனர்.

6. கடந்த ஆண்டு மதுரை காமராஜ் பல்கலைக் கழகம் ''அனைவரும் படிக்கத் தக்க பல்கலைக் கழக வகுப்புகளை'' தொடங்கியது. இந்தியக் குடிமக்களுள் தமிழ்நாட்டிலும் பாண்டிச்சேரியிலும் வசிப்பவர்களுள் 21 வயதுக்கு மேற்பட்டவர் எவர் வேண்டுமானாலும் இந்த வகுப்பில் சேரலாம். இவ்வகுப்பில் தொடக்க நிலைக்கு முற்பட்ட பிரிவில் 1,190 பேரும், தொடக்க நிலைப் பிரிவில் 520 பேரும் பயின்றுவந்தனர்.

7. இம்மாநிலத்தில் கலை, அறிவியல் கல்லூரிகளின் தேவைக்கு இப்பொழுது உள்ள 188 கல்லூரிகள் போதுமானவையாகும். சில குறிப்பிட்ட நகர்ப் புற கல்லூரிகளில் சேருவதற்கே மாணவர்கள் நெருக்கி முன்வருகின்றனர். ஆனால், கிராமப் புறப் பகுதி களிலுள்ள கல்லூரிகளில் இப்பொழுது பல இடங்கள் காலியாக இருந்து வருகின்றன. 1978–79-ம் ஆண்டில் இம்மாநிலத்தில் உள்ள கல்லூரிகளில் புகுமுக வகுப்பில் 16,773 இடங்களும் (ஆங்கிலப் பாட மொழி 11,857, தமிழ்ப்பாட மொழி 4,916) பட்ட வகுப்புகளில் 9,491 இடங்களும் (ஆங்கிலப் பாட மொழி—6,432; தமிழ்ப் பாட மொழி—3,059) காலியாக இருந்தன. எனவே, மிகச் சிறப்பான காரணங்கள் இருந்தாலொழிய புதிய கல்லூரிகளைத் தொடங்க அனுமதிப்பதைவிட தற்போதுள்ள கல்லூரிகளில் உள்ள இடங்கள் அனைத்தையும் பயன்படுத்த வகை செய்வதே விரும்பத்தக்கதாகும்.

கல்வித் தர மேம்பாடு.

8. கடந்த சில ஆண்டுகளாக அரசுக் கல்லூரிகளில் கல்வித் தர மேம்பாட்டுக்கே முதன்மை அளிக்கப்படுகிறது. அரசுக் கல்லூரி களில் கூடுதலாக எட்டு புதிய படிப்புகளைத் தொடங்க 1977–78-லும், 18 படிப்புகளைத் தொடங்க 1978–79-லும் ஏற்பளிக்கப்

1979 மார்ச் 26]

பட்டது. 1979-80-ல் புதிய பட்ட வகுப்புகளைத் துவக்க ரூ. 3 லட்சமும், புதிய பட்ட மேற்படிப்பு வகுப்புகளைத் துவக்க ரூ. 3 லட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளன. சென்னையில் உள்ள மாநிலக்கல்லூரியை ஒரு பட்ட மேற்படிப்பு ஆராய்ச்சி நிலைய மாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

9. அறிவியல் கல்வியை வளர்த்திட அரசுக்கல்லூரிகளில் ஆய்வகக் கூட வசதிகள் பெருக்கப்படுகின்றன. இதற்காக 1977-78-ம் ஆண்டில் ரூ. 5 லட்சமும் 1978-79-ல் ரூ. 6 லட்ச மும் ஒதுக்கப்பட்டன. அரசுக் கல்லூரிகளில் மாணவர்கள் பயன் படுத்திட பாட புத்தகங்களைக் கொண்ட புத்தக நூலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

10. கல்லூரி மாணவர்கள் வசதிக்காக உணவருந்தும் இடம், சிற்றுண்டிச்சாலை, மிதி வண்டி நிறுத்துமிடம் ஆகியவை படிப் படியாக அமைக்கப்படுகின்றன. கடந்த இரண்டு ஆண்டுகளில் இவ்வகையில் அரசுக்கல்லூரிகளுக்கு ரூ.10 லட்சமும், தனியார் கல்லூரிகளுக்கு ரூ. 5 லட்சமும் செலவிட ஏற்பளிக்கப்பட்டது. அரசுக்கல்லூரிகளில் இவ்வசதிகளுக்காக 1979-80-ல் ரூ. 5 லட் சம் ஒதுக்கப்பட்டுள்ளது. அரசுக் கல்லூரிகளில் விளையாட்டுத் திடல்களை மேம்படுத்தவும் விளையாட்டுக்கருவிகள் வாங்கவும் 1979-80-ல் ரூ. 2 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

11. அரசுக்கல்லூரிக் கட்டடங்கள், மாணவர் விடுதிக் கட்டடங் கள் ஆகியவற்றுக்காக 1978-79-ல் ரூ. 18 லட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது (புதிய வேலைகளுக்காக ரூ. 8 லட்சமும், முன் ஆண்டுகளில் ஏற்பளிக்கப்பட்டு முடிவு பெறாமல் உள்ள கட்டட வேலைகளுக்கு 1979-80-ல் ஆகும் செலவுக்காக ரூ. 10 லட் சமும்). தனியார் கல்லூரிகளுக்குக் கட்டட மானியம் தர ரூ.12 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. அரசுக்கல்லூரிகளில் ஆசிரியைகளுக்கு குடியிருப்புகள் கட்டித்தர ரூ. 2 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

12. கல்லூரிகளில் வசதிகளைப் பெருக்கிட ஆகும் செலவில் ஒரு பகுதியை கல்லூரி நிருவாகம் ஏற்குமானால் மற்றப்பகுதியை ஈடுகட்ட நிதி உதவி செய்யப் பல்கலைக்கழக மானிய குழு முன்வந்துள்ளது. கட்டடச் செலவானால் 50 விழுக்காட்டை நிருவாகம் ஏற்க வேண்டும். புத்தகம், தளவாடம், விளை யாட்டுத்திடல் மேம்பாடு ஆகிய இனங்களானால் 25 விழுக் காட்டை நிருவாகம் ஏற்கவேண்டும். இத்திட்டத்தின் கீழ் கட்டடம், ஆய்வுக்கூட மேம்பாடு, நூலகம், விளையாட்டுத்திடல் ஆகியவற்றுக்கு பல்கலைக்கழக மானியக் குழுவிடமிருந்து 43 அரசுக்கல்லூரிகள் பண உதவிபெற வகை செய்து அதற்கான மாநில அரசுப்பங்குத் தொகைக்கு அரசு ஏற்பளித்துள்ளது.

13. கல்லூரி ஆசிரியர் கல்வித்தர உயர்வுக்கான பல்கலைக் கழக மானியக் குழுவின் திட்டத்திற்கு இவ்வரசு ஏற்பளித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் ஆராய்ச்சிப் படிப்புக்குச் செல்லும் ஆசிரியர்களின் சம்பளச் செலவை மாநில அரசும், அவர்களுக்குப் பதிலாக நியமிக்கப்படுபவர்களுடைய சம்பளச் செலவை பல்கலைக்கழக மானியக்குழுவும் ஏற்கின்றன.

14. பல்வேறு துறைகளில் ஆராய்ச்சி செய்து டாக்டர் (பி.எச்.டி.) பட்டம் பெறுவதற்காக அரசுக்கல்லூரிப் பேராசிரியர்கள் முகாமையில் அனுப்பப்பட்டு வருகின்றனர். 1973–74 முதல் இத்திட்டத்தின்கீழ் 22 பேர் டாக்டர் நிலை ஆராய்ச்சிக்காக அனுப்பப்பட்டுள்ளனர். 1979–80-ல் புதிதாக 6 பேராசிரியர்கள் டாக்டர் பயிற்சிக்கு அனுப்பப்படுவார்கள். கருத்தரங்குகளிலும் மறுபயிற்சி வகுப்புகளிலும் கலந்துகொள்ள ஆசிரியர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர்.

படிப்புதவித் தொகையும் பயிற்சி உதவிப் பணமும்.

15. புகுமுக வகுப்புகளில் கற்பிப்புக் கட்டணம் எதுவும் வசூலிக்கப்படுவதில்லை. இலவச புகுமுக வகுப்புக்கல்வித்திட்டத்தினால் ஆண்டொன்றுக்கு அரசுக்கு ஏற்படும் செலவு ரூ. 2 கோடியாகும். தமிழ்ப் பயிற்று மொழிக்குரிய பயிற்சி உதவிப் பணத்திற்கான விவரங்கள் பின்னர் அளிக்கப்பட்டுள்ளன. மேற்கண்டவற்றுடன் வேறு பல படிப்புதவித்தொகைத் திட்டங்களும் பயிற்சி உதவிப்பணத் திட்டங்களும் உள்ளன. அவற்றில் மிக முக்கியமானவை வருமாறு :

திட்டம். (1)	1978-79 ஆம் ஆண்டில் புதிதாகத் தந்த படிப்புதவித் தொகைகள் எண்ணிக்கை. (2)	1978-79 ஆம் ஆண்டில் (புதியவை மற்றும் புதுப்பிக்கப்பட்டவை) மொத்த எண்ணிக்கை. (3)	1979-80 ஆம் ஆண்டு வரவு-செலவு மதிப்பீட்டில் ஒதுக்கியுள்ள பணம். (4) (ரூபாய் லட்சங்களில்.)
தேசிய படிப்புதவித் தொகைத் திட்டம்.	990	5,352	32
பள்ளி ஆசிரியர்களது பிள்ளைகளுக்குரிய தேசிய படிப்புதவித் தொகை.	70	284	3
தேசிய கடன் படிப்புதவித் தொகைத் திட்டம்	1,444	5,142	40

1979 மார்ச் 26]

16. 1974–75 ஆம் ஆண்டிலிருந்து தேசியப்படிப்புதவித் தொகை, பள்ளி ஆசிரியர்களுடைய குழந்தைகளுக்கு வழங்கப் படும் தேசிய படிப்புதவித்தொகை ஆகிய இரண்டுக்கும் ஆகும் செலவை மாநில அரசே ஏற்று வருகின்றது. உடல் ஊனமுற்ற வர்கள், பாதுகாப்புப் பணியாளரது குழந்தைகள், விடுதலைப் போர் வீரர்களின் குழந்தைகள், மற்றும் பர்மா, இலங்கை அகதி களின் குழந்தைகள் போன்றவர்களுக்கான படிப்புதவித்தொகை திட்டங்களும் உள்ளன. தாழ்த்தப்பட்ட இனங்கள், பழங் குடிகள் மற்றும் பின்தங்கிய வகுப்புகளைச் சார்ந்த மாணவர்கள் அரிசன நலத்துறை, பிற்பட்டோர் நலத்துறை ஆகிய துறை களிலிருந்து படிப்புதவித்தொகைகள் பெற்று வருகின்றனர்.

17. தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடிமாணவர்களுள் பள்ளி இறுதி வகுப்புத்தேர்வில் 60 சதவீதம் அல்லது அதற்கு மேலாக மதிப்பெண் பெறுபவர்களுக்கும் புகுமுக வகுப்பில் முதல் வகுப் பில் தேர்வு பெறுபவர்களுக்கும் ஆண்டுதோறும் உதவிப்பணம் வழங்கப்படுகிறது. அப்பிரிவினரைச்சார்ந்த கிறித்தவர்களுக் கும் இவ்வுதவிப் பணம் உண்டு. பெற்றோர் வருமானம் எவ்வளவாயிருப்பினும் இவ்வுதவிப் பணம் உண்டு. உதவிப் பணம் ஆளுக்கு ரூ. 300 வழங்கப்படுகின்றது. அவர்கள் தாம் விரும்பும் மேற்படிப்பை மேற்கொள்ள இது அவர்களுக்கு உத வும். தாழ்த்தப்பட்ட சாதியினர், பழங்குடிகள் என்ற வகை யில் அவர்களுக்குக் கிட்டும் மற்றெல்லாச் சலுகைகளுக்கும் பண உதவிகளுக்கும் மேலாக இந்த ரூ. 300 உதவி கிட்டும். இத் திட்டத்தினால் ஆண்டொன்றுக்கு அரசுக்கு ஏற்படும் செலவு ரூ. 5 லட்சமாகும்.

18. 1977–78 ஆம் ஆண்டிலிருந்து பட்ட வகுப்புகளில் பயிலும் ஷெட்யூல்டு வகுப்பினர் மலைச்சாதியினர் ஆகியோ ருக்கு (அவர்களுடைய பெற்றோர் ஆண்டு வருமானம் பற்றிக் கருதாமல்) முழுச்சம்பளச் சலுகை அளிக்கப்பட்டு வருகிறது. முன்னர் இருந்த வருமான வரம்பாகிய ஆண்டுக்கு ரூ 2,500 என்பது நீக்கப்பட்டு விட்டது.

19. கல்லூரிகளில் பட்டப் படிப்பு முதலாண்டு வகுப்பில் சேர்ந்துவிட்ட மாணவர்கள் பின் பொறியியல், மருத்துவம் முதலிய கல்லூரிகளில் சேருவதற்காகவோ அல்லது வேறு கார ணங்களுக்காகவோ கலைக் கல்லூரியை விட்டு முதல் பருவம்/ முதல் ஆறு மாதம் முடிவதற்குள் விலகிச் சென்றால் அவர்கள் கலைக் கல்லூரியில் கட்டிய கட்டணத்தில் முதல் பருவ/முதல் ஆறு மாதக் கட்டணம் தவிர மீதியை அவர்களுக்குத் திருப்பித் தந்துவிடவேண்டுமென கல்லூரிகளுக்கு ஆணையிடப்பட்டுள்ளது.

[1979 மார்ச் 26

கல்லூரிகளில் தமிழ்ப்பயிற்று மொழி.

20. 1966–67 ஆம் ஆண்டிலிருந்து புகுமுக வகுப்பில் கலைப் பாடங்களில் தமிழும் பயிற்று மொழியாக ஆனது. 1967–68 ஆம் ஆண்டிலிருந்து பி.ஏ. பட்ட வகுப்பிலும், 1968–69 ஆம் ஆண்டிலிருந்து புகுமுக வகுப்பில் அறிவியல் பாடங்களிலும், 1969–70 ஆம் ஆண்டிலிருந்து பி.எஸ்.சி. பாட வகுப்பிலும் தமிழ் பாட மொழியானது. தமிழ்ப் பயிற்று மொழியை ஊக்கு விக்கும் முறையில் பி.ஏ., பி.எஸ்.சி., வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் ஊக்க உதவிப்பணம் புத்தகப் படியாக ஆண்டுக்கு ரூ.180-ம் புகுமுக வகுப்பு மாணவர் களுக்கு ஆண்டுக்கு ரூ. 50-ம் வழங்கப்படுகின்றன. 1975–76 ஆம் ஆண்டு முதல் 1977–78 முடிய இந்த உதவிப்பணம் பாடப் புத்தகங்கள், குறிப்புப் புத்தகங்கள், எழுதுபொருட்கள் ஆகிய வைகளாகவே தரப்பட்டுவந்தது. 1978–79 முதல் இதை மாற்றி மீண்டும் பணமாகவே தரப்படுகிறது. 1978–79-ல் தமிழைப்பயிற்சி மொழியாகக் கொண்டு பயின்றுவந்தவர்கள் புகுமுக வகுப்பில் 18,218 பேரும், பட்ட வகுப்பில் 12,699 பேரும் ஆவார்கள்.

21. தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம் தமிழைப் பாட மொழியாகக் கொண்டுள்ள கல்லூரி மாணவர்களுக்காக இது வரை 861 பாடப் புத்தகங்களை வெளியிட்டுள்ளது. சிறப்புச் சொற்களுக்கான தமிழ்ச்சொற்களைக்கொண்ட 13 தொகுப்பு களையும் அது வெளியிட்டுள்ளது. 861 பாட நூல்களில், 172 மொழிபெயர்ப்பு நூல்களும், 689 மூல நூல்களும் ஆகும். கடந்த 10 ஆண்டுகளில் இத்திட்டத்திற்கு ரூ. ஒரு கோடி செலவாகி யுள்ளது, 1979–80-ம் ஆண்டில் இந்நிறுவனம் அரசியல், தத்து வம், பொருளியல் ஆகிய பாடங்களில் பட்டமேற்படிப்புக் கான தமிழ்நூல்களை வெளியிட இருக்கிறது. வரலாற்றில் பட்ட மேற்படிப்புக்கான தமிழ்பாட நூல்களை இந்நிறுவனம் ஏற்கெனவே வெளியிட்டுள்ளது.

கல்லூரி மாணவர் நலனுக்கான குழுக்கள்.

22. ஒவ்வொரு கல்லூரியிலும், மாணவர் நலனுக்கான குழு ஒன்றை அமைக்க வேண்டுமென அரசு ஏற்கனவே ஆணையிட்டு உள்ளது. ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், கல்லூரி நிருவாகம், ஆகியோரின் பிரதிநிதிகளையும் வருவாய்த்துறை, காவல்துறை அதிகாரிகளையும் கொண்டகுழு அடிக்கடிகூடி மாண வர் குறைகளையும் பிரச்னைகளையும் சுமுகமாக உடனுக்குடன் தீர்த்தும், மாணவர்கள் நலனைப் பேணியும் கல்லூரி செவ்வனே நடைபெற உதவவேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளது. பல கல்லூரிகளில் இக்குழுக்கள் அமைக்கப்படாமல் இருப்பது தெரிய வந்து அவற்றிலும் உடனடியாக இக்குழுக்களை அமைக்குமாறு அரசுமீண்டும் வலியுறுத்தியுள்ளது.

1979 மார்ச் 26]

கல்லூரி ஆசிரியர்கள் நலன்.

23. பல்கலைக் கழக மானியக் குழு சம்பள விகிதங்கள் பின் வரும் கல்லூரி ஆசிரியர்களுக்கு அதாவது :

அரசு மற்றும் தனியார் கலை, அறிவியல் கல்லூரிகள் ; சட்டக் கல்லூரிகள் ; பொறியியல் கல்லூரிகளும், பல்தொழில் பயிலகங்களும் ; மற்றும் சென்னை, மதுரை காமராஜ், அண்ணா மலைப் பல்கலைக் கழக ஆசிரியர்களுக்கும் 1—4—1974 முதல் அமுலாக்கப்பட்டது. பணப்பயன் 1—1—1977 முதல் தரப் பட்டது. சமுதாயப்பணிப் பள்ளிகள், கீழ்த்திசைப் படிப்புக் கல்லூரிகள், உடற்பயிற்சிக் கல்லூரிகள் ஆகியவற்றுக்கும் இச்சம்பள விகிதங்களை விரிவாக்கக் கருதப்பட்டுள்ளது. இச்சம்பள விகிதங்களை அமுல்படுத்தி 1—1—1977 முதல், சம்பள நிலுவைத் தொகைகளை ஆசிரியர்களுக்கு வழங்க எவ்வளவு தொகை தேவை என தனியார் கல்லூரிகள் தெரி வித்தனவோ அத்தொகைகள் அவற்றுக்கு மானியமாகத் தரப் பட்டுவிட்டன. தனியார் கல்லூரி ஆசிரியர்கள் பலருக்கு பணிப் புத்தகங்கள், சம்பளம் பெற்றதற்கான ரசீதுப் புத்தகங்கள் போன்றவை ஒழுங்காக இல்லை என்பதால் 1—1—1974 முதல் தனியார் கல்லூரி ஆசிரியர்கள் 8,000 பேருக்கு புதிய சம்பள விகிதத்தில் சேரவேண்டிய சம்பள நிலுவைத் தொகைகளைக் கணக்கிட்டுத் தருவது மிகக் கடினமாக இருந்தபோதிலும் பாராட் டத்தக்க விரைவுடன் இப்பணி செய்யப்பட்டுள்ளது. தேவையான விவரங்களைத் தந்த தனியார் கல்லூரிகள் அனைத்தின் ஆசிரியர் கள் அனைவருக்கும் பல்கலைக் கழக மானியக் குழு சம்பள விகிதத்தில் சம்பளம் நிர்ணயிக்கப்பட்டு விட்டது. நிலுவைச் சம்பளம் கொடுக்கவும் மானியம் வழங்கப்பட்டு விட்டது. மீதி இருக்கும் ஒரு சிலரைப் பொறுத்தவரையிலும் இவ்வேலையை விரைவில் செய்து முடிக்க தனி நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

24. இப்புதிய சம்பள விகிதத்தை அமுல்படுத்தியதுடன் கல்லூரி ஆசிரியர் நலனுக்கான வேறுபல நடவடிக்கைகளும் எடுக் கப்பட்டுள்ளன. 1—12—1977 அன்று மூன்றாண்டு அல்லது அதற்கு மேலும் பணி செய்திருந்த விளக்குநர்கள் (டெமான்ஸ் ரேட்டர்), பயிற்றுநர்கள் (டியூட்டர்) ஆகியோருள் அவரவர் துறையில் பட்ட மேற்படிப்பு (எம்.ஏ., எம்.காம். போன்றவை) தகுதி பெற்று இருந்தவர்களுக்கெல்லாம் 1—12—1977 முதல் துணைப் பேராசிரியர்கள் பதவி அளிக்கப்பட்டு அப்பதவிக்கான பல்கலைக் கழக மானியக் குழு சம்பள விகிதம் தரப்பட்டுள்ளது. இனிமேல் இந்த தகுதிகளை (3 அல்லது அதற்கும் அதிகமான ஆண்டுகள் பணியும், பட்ட மேற்படிப்பு தகுதியும்) பெறுபவர் களுக்கும் இந்த சலுகை அவரவர் அத்தகுதியை அடையும் நாள் முதல் கிடைத்துவரும்.

[1979 மார்ச் 26

தனியார் கல்லூரிகள்.

25. தனியார் கல்லூரி ஆசிரியர்கள் முழுமையாகவும் காலத் தாழ்வின்றியும் சம்பளம் பெற்றுவர வகை செய்யும் நோக்கத்துடன் தனியார் கல்லூரிகளுக்கு மானியம் வழங்குவதில் புதிய முறையை 1—6—1977 முதல் அரசு செயல்படுத்தி வருகிறது. சம்பளம் வழங்கும் வகையில் அக்கல்லூரிகளுக்கு ஏற்படும் செலவில் நிகரப் பற்றாக்குறை முழுவதையும் அரசே ஏற்று வருகிறது. இதற்கான அரசு மானியம் ஆண்டுக்கு 8-க்கு மேற்பட்ட தவணைகளில் தரப்பட்டுவருகிறது. தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்குவதில் கர்நாடக மாநிலத்தில் உள்ள முறையை பின்பற்றி ஒரு புதிய நடைமுறையை உருவாக்க கருதப் பட்டுள்ளது.

26. தமிழ்நாட்டிலுள்ள தனியார் கல்லூரி ஆசிரியர்கள் ஓய்வு காலப் பலன்களை (ஓய்வூதியம், போன்றவை) 1—4—1962 முதல் பெற்று வருகின்றனர். 1—4—1976 முதல் மேற்கண்ட பலன்கள் அக்கல்லூரிகளில் உள்ள ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கும் விரிவாக்கப்பட்டு உள்ளன. பணியிலிருக்கும் பொழுது ஒருவர் இறந்து விட்டால் அவர் குடும்பத்துக்கு ரூ. 10,000 தர வகை செய்யும் குழு ஈட்டுறுதி திட்டம் தனியார் கல்லூரிகளுக்கும் விரிவாக்கப்படும். தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கு விடுப்பு வசதிகளும் தாராளமாக்கப்பட்டுள்ளன. மருத்துவ விடுப்பு முன்னர் 12 மாதங்கள் எடுக்கலாம் என்று இருந்தது. இப்பொழுது அது 18 மாதங்களாக உயர்த்தப்பட்டுள்ளது.

27. 1976-ம் ஆண்டு இயற்றிய தனியார் கல்லூரிகள் முறைப் படுத்துதல் சட்டத்தில் என்னென்ன திருத்தங்கள் செய்ய வேண்டுமென்பதை விரிவாக ஆய்வு செய்ய ஒரு குழு அமைக்கப் பட்டுள்ளது. ஆசிரியர்கள், ஆசிரியரல்லாத பணியாளர், நிருவாகங்கள் ஆகிய முத்தரப்பினர் சங்கங்களின் பிரதிநிதிகளும் அக்குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

28. அந்தந்த வட்டாரத்திலுள்ள கல்லூரி நிருவாகத்தினரைச் சந்தித்து கல்லூரிக் கல்வித் தரத்தை உயர்த்துவதற்கான சரியான சூழ்நிலையை உருவாக்குவதன் தேவை அவர்களிடம் வலியுறுத்தப்படும்.

பணிப் பாதுகாப்பு.

29. கல்லூரிகளில் 31—3—1977 அன்று பணியிலிருந்த எந்த ஆசிரியராயினும் சரி, அல்லது ஆசிரியரல்லாத பணியாளராயினும் சரி, பின்வரும் காரணங்களினால் அதாவது :—

1. 1979–80-ம் ஆண்டு முதல் புகுமுக வகுப்பு நீங்கி விடுவதால் ; அல்லது

1979 மார்ச் 26]

2. கல்லூரிகளில் மாணவர் எண்ணிக்கை குறைந்து ஆசிரியர் வேலைப்பளு குறைவதால்.

பதவியிழக்க நேராதபடி பாதுகாப்பளிப்பதாக அரசு ஏற்கெனவே அறிவித்து இருந்தது. இதனை மேலும் விரிவாக்கி, பாட வகுப்புகள் மூடப்படுவதாலும் புதிய கல்வித் திட்டத்தை அமுல் படுத்துவதாலும் ஏற்படக்கூடிய வேலை நீக்கத்துக்கும் பாதுகாப்பு உண்டு என அறிவிக்கப்பட்டுள்ளது. 31–3–1977 முதல் 26–2–1979 வரையுள்ள காலத்தில், கல்லூரிகளில் நிரந்தரமான பணியிடங்களில் நியமிக்கப்பட்டவர்களுக்கும் இப்பாதுகாப்பு விரிவாக்கப் பட்டுள்ளது. இப்பாதுகாப்பைச் செயல்படுத்த பல்கலைக் கழகங்களுடன் கலந்து புதிய பாட வகுப்புகள் தொடங்குவது, சிறப்புப் பயிற்றுவிப்பு, வகுப்பில் மாணவர் எண்ணிக்கை குறைப்பு, கல்லூரி மையத் திட்டம், மேல் படிப்புக்கு கல்லூரி ஆசிரியர்களை அனுப்புதல் முதலிய பல வழி முறைகளிலும் அரசு நடவடிக்கை எடுக்கும். கல்லூரி ஆசிரியர்களைப் பள்ளிகளில் பயன்படுத்தும் நோக்கம் அறவே கிடையாது.

சட்டக் கல்வி.

30. சென்னை சட்டக் கல்லூரி மாணவர் தொகை 1968-69-ல் 1,045 ஆக இருந்தது. 1978—1979-ல் 2,395 ஆக (முழு வேளை பட்டப்படிப்பு வகுப்புகளில் 1,534, மாலை நேரப் பட்டப்படிப்பு வகுப்புகளில் 783 ; எம். எல். வகுப்புகளில் 78) உயர்ந்துள்ளது. குற்றவியல் சட்டம், ஒப்பந்தச் சட்டம், சொத்துரிமைச் சட்டம் ஆகிய பாடங்களில் எம்.எல். வகுப்புகள் நடைபெறுகின்றன. இக் கல்லூரியில் முழுநேரப் பட்டப்படிப்பின் மூன்றாண்டு வகுப்புகளிலும் ஒவ்வொரு பிரிவில் தமிழே பயிற்றுமொழியாக உள்ளது.

31. 1974–75-ம் ஆண்டில் மதுரையிலும் ஒரு சட்டக் கல்லூரி திறக்கப்பட்டது. அக்கல்லூரியில் 1978–79-ம் ஆண்டில் முழு நேர வகுப்புகளில் 842 மாணவர்கள் படித்து வந்தனர். 1977–78-ம் ஆண்டிலிருந்து அக்கல்லூரியிலும் மாலை வகுப்பு துவக்கப்பட்டது. 1978–79-ல் மாலை நேர வகுப்பில் முதலாண்டு மாணவர்கள் 60 பேரும், இரண்டாமாண்டு வகுப்பில் 75 பேரும் பயின்று வந்தனர். 1979–80-ல் இக் கல்லூரியில் சொத்துரிமைச் சட்டத்தில் எம்.எல். வகுப்பும் தொடங்கக் கருதப்பட்டுள்ளது.

32. சட்டக் கல்விக்கான வசதிகளை விரிவாக்கும் நோக்கத்துடன் 1979–80-ம் ஆண்டில் கோயம்புத்தூரிலும், திருச்சிராப்பள்ளியிலும் சட்டக் கல்லூரிகள் தொடங்கப்பட இருக்கின்றன.

VI. தொழில் நுட்பக் கல்வி.

தொழில் நுட்பக் கல்விக்காக 1979–80-ல் சுமார் ரூ. 7.66 கோடி (கட்டடச் செலவு போன்றவை உள்பட) ஒதுக்கப்பட்டு உள்ளது. இத்துறையின்கீழ் 6 பொறியியல் கல்லூரிகளும் 39 பல்தொழில் நுட்பப் பயிலகங்களும் [மகளிர் பயிலகங்கள் மூன்றும், தனித்தொழில் பட்டய (டிப்ளமா) கல்வியகங்கள் ஒன்பதும் உள்பட], 14 தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளிகளும் உள்ளன. இத்தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளிகளை தொழில் பாடங்களைப் பயிற்றுவிக்கும் மேல் நிலைப் பள்ளிகளாக மாற்றக் கருதப்பட்டுள்ளது. தற்போது ஆண்டு தோறும், பொறியியல் கல்லூரிகளில் பட்டப் படிப்பிற்காக 1,500 மாணவர்களும், பல்தொழில் நுட்பப் பயிலகங்களில் பட்டயப் படிப்பிற்காக 6,150 மாணவர்களும், தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளிகளில் 840 மாணவர்களும் சேர்க்கப்படுகின்றனர்.

2. மேற்சொன்ன ஆறு பொறியியல் கல்லூரிகள் தவிர கிண்டியிலுள்ள பொறியியல் கல்லூரி, அழகப்ப செட்டியார் தொழில் நுட்பவியல் கல்லூரி, இந்தியத் தொழில்நுட்பக்கல்வியகம், கிண்டி, கட்டடவியல், மற்றும் நகரமைப்புப் பள்ளி, குரோம்பேட்டையில் உள்ள சென்னை தொழில் நுட்பக் கல்வியகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பொறியியல் தொழில் நுட்பவியல் கல்லூரி, வட்டாரப் பொறியியல் கல்லூரி, திருச்சிராப்பள்ளி ஆகிய ஏழு பொறியியல் கல்லூரிகளும் இம்மாநிலத்தில் உள்ளன, அவை பல்கலைக் கழகங்களைச் சார்ந்தவை அல்லது தன்னாட்சி உரிமை பெற்றவை ஆகும்.

பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகம்.

3. பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகம் 4–9–1978 அன்று நிறுவப்பட்டது. அது ஒற்றை வகையைச் சார்ந்தது. கிண்டி பொறியியற் கல்லூரி இப்பல்கலைக் கழகத்தின் தலைமையிடமாகும். குரோம்பேட்டையிலுள்ள சென்னை தொழில் நுட்பக் கல்வியகமும், அழகப்ப செட்டியார் தொழில் நுட்பவியல் கல்லூரியிலுள்ள சென்னைப் பல்கலைக் கழகத்துறைகளான வேதியியல், தொழில் நுட்பவியல், தோல் தொழில் நுட்பவியல், நெசவுத் தொழில் நுட்பவியல், கட்டடவியலும் நகரமைப்பும் ஆகிய நான்கு துறைகளும் இப் பல்கலைக்கழகத்தின் அங்கங்களாகும்.

கல்வித் தர உயர்வு.

4. கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாகவே தொழில்நுட்பக் கல்விக்காக இருக்கின்ற வசதிகளைச் சீர்செய்து ஒருமுகப்படுத்துவதிலும் கல்வித் தரத்தை மேம்படுத்துவதிலுமே அதிகக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. மாணவர்களுக்கு அதிக வேலை

1979 மார்ச் 26]

வாய்ப்புகளை ஏற்படுத்தவும், தொழில் நிறுவனங்களில் புதிதாகத் தோன்றும் துறைகளிலும் பிரிவுகளிலும் எந்தெந்த பயிற்சிகளைப் பெற்றவர்கள் தேவைப்படுகிறார்களோ அந்தந்த பயிற்சிகளை அளிக்கவும், தொழில் சம்பந்தப்பட்ட பல புதிய பாடத் திட்டங்கள் துவக்கப்பட்டு இருக்கின்றன. தற்போது பொறியியல் கல்லூரிகளில் 15 பட்டப் படிப்பு முறைகளும், 39 பட்ட மேற்படிப்பு முறைகளும் பட்ட மேற்படிப்பு நிலைப் பட்டய முறைகளும் உள்ளன. பல்தொழில் நுட்ப பயிலகங்களில் 75 பட்டய முறைகளும், பட்டய மேற்படிப்பு முறைகளும் சான்றிதழ் படிப்பு முறைகளும் உள்ளன.

புதிய திட்டங்கள்.

5. 1979-80-ல், ஆவடியிலுள்ள எம்.சி.எம். பாலிடெக்னிக்கில், மின்னணுவியல் சாண்ட்விச் பட்டயப் படிப்பும், கோயம்புத்தூரிலுள்ள பி.எஸ்.சி. பாலிடெக்னிக்கில் வடிவமைப்பு-வரைப்பட தொழில் நுட்பவியல் பட்டயப் படிப்பும், சென்னையிலுள்ள சென்ட்ரல் பாலிடெக்னிக்கில் படகு கட்டுதல் விருப்பப் பாடமும் தொடங்கப்பட இருக்கின்றன.

6. கோயம்புத்தூர் அரசு தொழில் நுட்பக் கல்லூரியிலுள்ள ‘‘ கன்ட்ரோல் சிஸ்டம்ஸ் ’’ ஆய்வுக்கூடமும், சேலம் அரசுப் பொறியியல் கல்லூரியிலுள்ள இயந்திரப் பொறியியல் ஆய்வுக் கூடமும் மேம்படுத்தப்படும். பின்வரும் கட்டட வேலைகளும் மேற் கொள்ளப்பட இருக்கின்றன. சேலம் பொறியியல் கல்லூரிக்கும், மதுரை, தமிழ்நாடு பாலிடெக்னிக்குக்கும் மாணவர் இல்லக் கட்டடங்களும் நாகர்கோயிலிலுள்ள அரசு பாலிடெக்னிக்குக்கு வகுப்பு அறைகளும் கட்டப்படும். கோயம்புத்தூரிலும், திருச்சிராப்பள்ளியிலுமுள்ள அரசு பாலிடெக்னிக்குகளுக்கு மின்னணுவியல் ஆய்வுக் கூடங்கள் கட்டப்படும். சென்னை வேதியியல் தொழில்நுட்பவியல் நிலையத்தில் பிளாஸ்டிக் தொழில் நுட்பவியல் பாடத்துக்கான கட்டட வசதி செய்யபடும்.

7. தருமபுரி மாவட்டத்தில் தற்பொழுது பாலிடெக்னிக் ஏதும் இல்லை. அம்மாவட்டத்தில் 1979-80-ல் புதிதாக ஒரு பாலிடெக்னிக் நிறுவப்படும்.

தன்னுரிமை.

8. நன்கு வளர்ந்த பல் தொழில் நுட்பப் பயிலகங்களுக்கு தாமே புதுக்கல்வித் திட்டங்களை வகுக்கவும், இருக்கும் பாடத் திட்டத்தைச் சீர்திருத்தவும், தொழில் நிறுவனங்களுடன் இணைந்து செயல் புரியவும், தாங்கள் விரும்பியவாறு பயிற்சி

அளிக்கவும் கற்பிக்கவும் உரிமை வழங்கப்படுகிறது. இதுவரை தன்னுரிமை வழங்கப்பட்டுள்ள பாடமுறைகளின் விவரம் வருமாறு :—

1	பி. எஸ். ஜி. பாலிடெக்னிக், கோயமுத்தூர்.	அனைத்துப் பாடங்களும்.
2	தியாகராசர் பாலிடெக்னிக், சேலம்.	நெசவுத் தொழில் பட்டயப் படிப்பு.
	&	
	பி.ஏ.சி. ராமசாமி ராஜா பாலிடெக்னிக், இராஜபாளையம்.	ஷை
3	சென்ட்ரல் பாலிடெக்னிக், சென்னை.	நகரமைப்பு- ஊரமைப்பு பட்டய மேற்படிப்பு.
	நாச்சிமுத்து பாலிடெக்னிக், பொள்ளாச்சி. மற்றும் தமிழ்நாடு பாலிடெக்னிக், மதுரை.	உந்து வண்டிப் பொறியியல் பட்டய மேற்படிப்பு.

பயிற்று துறை வளர்ச்சி.

9. பொறியியல் கல்லூரி ஆசிரியர்கள் டாக்டர் பட்டம் பெற இந்தியத் தொழிலியல் கல்வியகங்கள், பெங்களூரில் உள்ள இந்திய அறிவியல் கல்வியகம் போன்றவற்றுக்கு அனுப்பப்படுகின்றனர். இதுவரை 56 ஆசிரியர்கள் இவ்வாறு டாக்டர் பட்டம் பெற்றுள்ளனர். மேலும் 38 ஆசிரியர்கள் தற்போது பயிற்சி பெற்று வருகின்றனர். 1979–80-ல் மேலும் ஐந்து பேர் பயிற்சிக்கு அனுப்பப்படுவர்.

10. பல்தொழில் நுட்பப் பயிலக ஆசிரியர்கள் சென்னையிலுள்ள "தொழில் நுட்ப ஆசிரியர் பயிற்சி நிலையத்திற்கு" உயர் பயிற்சிக்காக அனுப்பப்படுகின்றனர். இதுவரை 259 ஆசிரியர்கள் பயிற்சியளிக்கப்பட்டுள்ளனர். 37 ஆசிரியர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். 1979–80-ம் ஆண்டில் மேலும் 30 ஆசிரியர்கள் பயிற்சிக்கு அனுப்பப்படுவார்கள்.

11. ஆராய்ச்சி மற்றும் கலந்தாய்வுப் பணிகள் வளர வேண்டும் என்பது நன்கு உணரப்பட்டுள்ளது. பொறியியல் கல்லூரிகளில் டாக்டர் நிலை ஆராய்ச்சி எந்த அளவுக்கு நன்கு நடைபெறுகிறதோ அந்த அளவுக்கு இப்பணி சிறக்கும். பொறியியல் கல்லூரிகளில் டாக்டர் பட்டத்திற்கு ஆராய்ச்சி செய்ய மாணவர்கள் பதிவு செய்து கொள்வது கடந்த சில ஆண்டுகளாக ஊக்குவிக்கப்படுகிறது. பொறியியற் கல்லூரிகளில் ஆராய்ச்சியை ஊக்குவிக்க, அரசு ரூ. 1 லட்சம் ஏற்பளித்துள்ளது.

1979 மார்ச் 26]

தனியார் தொழில் நுட்பக் கல்வி நிலையங்கள்.

12. இம்மாநிலத்தில் தனியார் பொறியியல் கல்லூரிகளுக்கும் பல் தொழில் நுட்பப் பயிலகங்களுக்கும் வழங்கப்படும் மானியத் தொகை படிப்படியாக உயர்ந்து கொண்டே வருகிறது. 1979–80-ம் ஆண்டில் ரூ. 2 கோடி மானியத் தொகையாக அளிக்கப்படும்.

13. கோயம்புத்தூர் பி.எஸ்.ஜி. பொறியியற் கல்லூரி, மதுரை தியாகராசர் பொறியியற் கல்லூரி ஆகியவற்றில் மாணவியர் இல்லக் கட்டடங்கள் கட்டவும், நாகப்பட்டினம், வலிவலம் தேசிகர் பாலிடெக்னிக், விருதுநகர் வி.எஸ்.வி. நாடார் பாலிடெக்னிக் ஆகியவற்றில் மாணவர் இல்லம் கட்டவும் 1979–80-ல் கடன் உதவி அளிக்கப்படும்.

விரிவுப் பணிகள்.

14. தொழில் கல்வி நிலையங்களில் தொடர் கல்வி வசதிகள் அளிக்கப்படுகின்றன. பரிசோதனை மற்றும் அறிவுரை கூறும் பணிகள் நடைபெறுகின்றன. கிராமப்புறக் கைவினைஞர்கள் புதிய கருவிகளைக் கையாளவும், புதிய தொழில் நுட்பவியல் முன்னேற்றங்களின் பயனை அடையவும் உதவியளிக்கப்படுகிறது. பணியாற்றும் பொறியியலறிஞர்களுக்கு மறுபார்வை வகுப்புகள் நடத்தப்படுகின்றன. அவரவர் துறையில் அவ்வப்பொழுது நிகழும் வளர்ச்சிகளைப் பற்றி, அவர்கள் இவற்றின் மூலம் அறிந்து கொள்ள இயலுகிறது. பெரும்பாலும் இவ்வகுப்புகளை நடத்த ஆகும் செலவு வசூலிக்கும் கட்டணத் தொகைக்கு மேல் போவதில்லை. தொழில் நுட்பக் கல்வி நிலையங்களில் தனியார் தொழிற்சாலைகள் முதலியன விரும்பும் பரிசோதனைகள் செய்து தரப்படுவதுடன் அவர்கள் கோரும் பிரச்சினைகள் பற்றி அறிவுரை கூறும்பணியும் நடைபெறுகிறது. இவற்றுக்கு குறைந்த கட்டணமே வசூலிக்கப்படுகிறது.

வணிகவியல் பாடங்களில் தேர்வு.

15. தொழில் நுட்ப இயக்குநரே வணிகவியல் பாடங்களான தட்டச்சு, சுருக்கெழுத்து, வரவு செலவுக் கணக்கியல், வணிகவியல் பயிற்சி, வணிகப் புவியியல், வங்கியியல் போன்றவற்றிற்கு ஆண்டுதோறும் ஏறத்தாழ ஒரு இலட்சம் மாணவர்களுக்கு தேர்வு நடத்தும் அதிகாரியுமாவார்.

கணித அறிவியல் நிறுவனம்.

16. அடையாற்றில் உள்ள கணித அறிவியல் நிறுவனம் மாநில அரசு, மைய அரசு ஆகியவற்றின் உதவியோடு செயல்படுகிற தன்னுரிமை பெற்ற நிறுவனமாகும். இந்நிறுவனத்திற்கு மாநில

அரசு ஆண்டுக்கு ரூ. 3.5 இலட்சம் மானியமாக அளிக்கின்றது. தற்போது, அடிப்படைக் கணிதம் மற்றும் கணிதம் சார்ந்த இயல்பியல் துறைகளில் உயர்தர ஆராய்ச்சி நடத்திவரும் இந் நிறுவனம் அனைத்திந்தியப் பெருமையை அடைந்துள்ளது.

வட்டாரப் பொறியியல் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.

17. திருச்சிராப்பள்ளியிலுள்ள வட்டாரப் பொறியியல் கல்லூரி 1964–65 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அது தன்னுரிமையுள்ள நிறுவனமாகும். தமிழ்நாட்டுக் கல்வி அமைச்சரே அதன் ஆட்சிக் குழுவின் தலைவராவார். தற்போது அக்கல்லூரியில் ஆண்டுதோறும் 200 மாணவர்கள் பொறியியல் பட்டப் படிப்பிற்கு எடுத்துக் கொள்ளப் படுகிறார்கள். கல்லூரியிலுள்ள இடங்களில் பாதி இம்மாநில மாணவர்களைக் கொண்டும், பாதி பிற மாநில மாணவர்களைக் கொண்டும் நிரப்பப்படுகின்றன. அக்கல்லூரிக்கு ஆண்டு தோறும் ஆகும் செலவில் பாதியை மைய அரசும், பாதியை மாநில அரசும் ஏற்று வருகின்றன. செலவில் மாநில அரசு ஏற்கும் பங்கு ஆண்டுக்கு ஏறத்தாழ ரூபாய் 20 இலட்சம் ஆகும். அக்கல்லூரியில் நடக்கும் பட்ட மேற்படிப்பு வகுப்புகள் அனைத்துக்கும் சென்னைப் பல்கலைக் கழகம் தன்னுரிமை வழங்கியுள்ளது.

மாநில கூட்டுறவு முறைத் தொழில் கல்வி நிலையம், திருச்சிராப்பள்ளி.

18. "மாநிலக் கூட்டுறவு முறைத் தொழில் கல்வி நிறுவனம்" புகுமுக வகுப்பு தேறிய மாணவர்களுக்கு தொழில் கல்வி பயிற்றுவிப்பதற்காக 1975–76 ஆம் ஆண்டு முதல் திருச்சிராப்பள்ளியில் துவங்கப்பட்டது. அது தன்னுரிமை உள்ளது. கல்வி அமைச்சர் இந்நிறுவனத்தின் ஆளுகைக் குழுவிற்குத் தலைவராவார். திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அதன் துணைத் தலைவராவர். அது 42 மாதங்கள் கொண்ட (27 மாதங்கள் நிலையப் பயிற்சியும், 15 மாதங்கள் வேலை அனுபவமும் உடைய) கல்வித் திட்டங்களை நடத்தி வருகிறது. (1) கட்டடக் கலையும் உள் அமைப்பும், (2) மின் கருவிகளும் முறைகளும், (3) நெசவும் நவீன அழகு வேலைப்பாடும் என்ற மூன்று பாடத் திட்டங்கள் அங்கு உள்ளன. ஒவ்வொரு பாடத்திட்டத்திற்கும் 20 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். மாநில அரசு இந்நிறுவனத்திற்கு ஆண்டு தோறும் ரூ. 2½ இலட்சம் மானியம் அளிக்கின்றது.

1979 மார்ச் 26]

VII. விளையாட்டு, உடற்பயிற்சி மற்றும் இளைஞர் நலன்.

"277. கல்வி—ஜி. விளையாட்டும் இளைஞர் நலனும்" என்ற தலைப்பின்கீழ் 1979–80-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ரூ. 196 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் தேசிய மாணவர் படைக்கு ரூ. 123 இலட்சமும், தேசியப் பணிப்பிரிவுக்கு ரூ. 40 இலட்சமும், சாரண சாரணியருக்கு ரூ. 4 லட்சமும், விளையாட்டுக்கு ரூ. 29 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளன. இதில் கவனத்திற்கொள்ள வேண்டியது பின்வருவதாகும், அதாவது: (i) கல்வி நிலையங்களில் உடற்பயிற்சி ஆசிரியர்கள், உடற்பயிற்சி இயக்குநர்கள் ஆகியோர் சம்பள வகையிலும், (ii) கல்வி நிறுவனங்கள் தங்கள் பணத்திலிருந்தோ அல்லது மாணவர்களிடமிருந்து வசூலிக்கும் விளையாட்டுக் கட்டணத்திலிருந்தோ விளையாட்டு, உடற்பயிற்சிக்கு ஆகும் செலவு வகையிலும் கணிசமான தொகைகள் செலவு ஆகின்றன. அத்தொகைகள் பட்ஜெட்டில் தனியாகக் காட்டப்படாமல் "பணியாளர் சம்பளம்" முதலிய பொதுத் தலைப்புகளின் கீழ் சேர்க்கப்பட்டு விடுகின்றனவாகையால் அவை மேற்சொன்ன ரூ. 196 இலட்சத்தில் அடங்கியவை அல்ல.

2. அனைத்துப் பள்ளிகளிலும் உடற்பயிற்சிக் கல்வி கட்டாயமாகும். எந்தெந்த உயர் தொடக்கப் பள்ளிகளில் உடற்பயிற்சி ஆசிரியர்கள் உள்ளனரோ அந்தந்த உயர் தொடக்கப் பள்ளிகளில் 6–8 வகுப்புகளிலும், அனைத்து உயர்நிலைப் பள்ளிகளிலும் 6–9 வகுப்புகளிலும் உடற்பயிற்சிக் கல்வி தேர்வுக்கான பாடங்களில் ஒன்றாகும். இந்தப் பள்ளிகள் அனைத்திலும் 6–9 வகுப்புகளில் படிக்கும் மாணவர்கள் உடற்பயிற்சிக் கல்வியில் பெறும் மதிப்பெண்கள், அடுத்த உயர் வகுப்பிற்கு அனுப்புவதற்கான கொள்கைகளை வகுக்கும்போது கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

3. 1978–79-ம் ஆண்டிலிருந்து உயர்நிலைப்பள்ளி உடற்பயிற்சி ஆசிரியர் ஒவ்வொருவருக்கும் அந்தந்தப் பள்ளி விளையாட்டுக் கட்டண நிதியிலிருந்து ஆண்டுதோறும் சீருடைப்படியாக ரூ. 50 வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது.

4. தற்பொழுது பெண்கள் உயர்நிலைப் பள்ளிகளில் உடற்பயிற்சி வேலைகளை ஆய்வு செய்ய சென்னையில் ஒருவரும், மதுரையில் ஒருவருமாக வட்டார உடற்பயிற்சிக் கல்வி ஆய்வாளர் (பெண்) இருவரே உள்ளனர். 1979–80 முதல் கோயம்புத்தூரில் ஒருவரும், திருச்சிராப்பள்ளியில் ஒருவருமாக மேலும் இரண்டு வட்டார உடற்பயிற்சி ஆய்வாளர்கள் (பெண்) நியமிக்கப்படுவார்கள்.

மாநில விளையாட்டுக் குழு.

5. மாநில விளையாட்டுக் குழுவும், மாவட்ட விளையாட்டுக் குழுக்களும் மாணவர்களிடையே மட்டுமின்றி பொது மக்கள் இடையேயும் விளையாட்டுப் போட்டிகளையும், விளையாட்டு களையும் நன்கு பரப்பிடப் பணிசெய்து வருகின்றன. 1977–78 முதல் இக்குழுவுக்கான மானியத் தொகை உயர்த்தப்பட்டுள்ளது. கூடுதல் மானியத்தைக் கொண்டு கிராமங்களிலுள்ள மாணவர் களல்லாத இளைஞர்களிடையே விளையாட்டுப் போட்டி களையும் உடற்பயிற்சியையும் தீவிரமாகப் பரப்ப மாவட்ட விளையாட்டுக் குழுக்கள் நடவடிக்கை எடுக்கும்.

6. மாணவர்களுக்கு உடற் பயிற்சி அளிப்பதற்கு என உடற்பயிற்சிக் களரிகளை சுமார் 15 பள்ளிகளில் தொடங்க ஏற்பளிக்கப்பட்டுள்ளது.

விளையாட்டு வீரர்களுக்கு ஓய்வூதியம்.

7. தமிழ்நாட்டைச் சார்ந்த தலைசிறந்த விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் ஆகியோருள் முதுமைக் காலத்தில் வறுமையால் வாடுபவர்களுக்கும், அப்படிப்பட்டவர்கள் தங்கள் குடும்பங்களை வறுமையில் வாடவிட்டு மறைந்திருந்தால் அவர்கள் குடும்பங்களுக்கும் உதவிப்பணம் ஆக ஓய்வூதியம் தரும் திட்டம் ஒன்றுக்கு 1—4—1978 முதல் அரசு ஏற்பளித் துள்ளது. இந்த உதவிப் பணம் பெறத் தகுதிபெற வேண்டு மாயின் ஒருவர்—

(அ) விளையாட்டு வளர்ச்சிக்குச் செய்த பணி மிகச் சிறந்ததாக இருக்கவேண்டும்.

(ஆ) 60 வயதை அடைந்திருக்க வேண்டும்.

(இ) அவர் சொந்த வருமானம் மாதம் ரூ. 150-க்கு மேற்போகாமல் இருக்கவேண்டும். இந்த உதவிப்பணம் பெறத் தெரிந்தெடுக்கப்படுபவர்களுக்கு அவர்கள் ஆயுட்காலம் முடிய மாதம் ரூ. 75 ஓய்வூதியம் தரப்படும். முதலில் 3 ஆண்டு களுக்கு இவ்வுதவிப்பணம் வழங்கப்பட்டுப் பின்னர் அவ்வப் பொழுது புதுப்பிக்கப்படும்.

சாரண சாரணியர் இயக்கம்.

8. தமிழ்நாடு சாரணர் கழகம் 1978–79-ல் மொத்தம் 1,30,000 சாரணர்களையும், சாரணியர்களையும் கொண்டி ருந்தது.

9. பாரத் சாரண சாரணியர் அமைப்பின் எட்டாவது தேசீய சம்போரியை சென்னையை அடுத்த மறைமலை நகரில் 1979 சனவரியில் கொண்டாட தமிழக அரசு வசதிகள் செய்து தந்தது. அதனை இந்தியப் பிரதமர் தொடங்கி வைத்தார். நாட்டின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் அண்டை நாடுகள் சிலவற்றிலிருந்தும் சுமார் இருபதாயிரம் சாரண சாரணியர் அவ்விழாவில் கலந்து கொண்டனர். இந்தத் தேசீய விழா முதன் முதலாக தமிழ்நாட்டில் நடைபெற்றது. அது நல்லமுறையில் நடைபெற இவ்வரசு விரிவான நடவடிக் கைகள் எடுத்திருந்தது அனைவராலும் பாராட்டப் பெற்றது. இந்த எட்டாவது சம்போரியின் குறிக்கோள் ''சமுதாய வளர்ச்சிக்காக'' என்பதாகும். சாரண சாரணியர் சமுதாய வளர்ச்சிப் பணியில் பங்கேற்க வேண்டுவதை அது வலியுறுத்தியது.

தேசிய மாணவர் படை.

10. தமிழ்நாட்டில் தேசீய மாணவர் படையில் தற்பொழுது 14,000 மாணவர் மாணவியர்களைக் கொண்ட 48 முதுநிலைப் பிரிவுகளும், 67,000 மாணவ-மாணவியர்களைக் கொண்ட 702 இளநிலை பிரிவுகளும் உள்ளன. இவற்றில் 3,000 மாணவியரைக் கொண்ட முதுநிலைப் பிரிவுகள் 5-ம், 5,300 மாணவியரைக் கொண்ட இளநிலைப் பிரிவுகள் 54-ம் அடங்கும். தேசீய மாணவர் படைக்கு இவ்வரசு 1979–80-ம் ஆண்டில் செலவிடவிருக்கும் தொகை ரூ. 123 இலட்சமாகும். இத்துறையின் கீழ் பணியாற்றும் மாநில அரசுப்பணியாளர்கள், அமைச்சுப் டணியாளர்கள், ஓட்டுநர்கள், கடைநிலை ஊழியர்கள் முதலியோர் எண்ணிக்கை 1,100 ஆகும்.

11. ஆண்டுதோறும் டில்லியில் குடியரசு நாளில் வழங்கப் படும் தேசீய மாணவர் படை அனைத்திந்திய விருதை அது ஏற்படுத்தப்பட்ட 1962-ம் ஆண்டிலிருந்து இதுவரை எட்டுத்தடவை தமிழ்நாட்டு தேசீய மாணவர் படைப்பிரிவே பெற்று வந்துள்ளது. 1979-ல் குடியரசு தினவிழாவில் தமிழ்நாட்டு தேசீய மாணவர் படை முதுநிலையைச் சார்ந்த மாணவியே சிறந்த அனைத்திந்திய மாணவர் படை மாணவியாகத் தெரிந்தெடுக்கப்பட்டார்.

தேசீய பணித் திட்டம்.

12. தேசியப் டணிப் பிரிவானது கல்லூரி மாணவர்கள் தங்களுடைய ஓய்வு நேரத்தை நாட்டுப் டணியில், குறிப்பாக கல்விப் பணியில் ஈடுபடுத்துவதற்கு வாய்ப்பளிக்கும் நோக்குடன் துவக்கப்பட்டது. இத்திட்டத்தைச் செயல்படுத்த பல்கலைக்கழகங்கள் மாணவர் ஒருவருக்கு ரூ. 60 என்ற கணக்கில் `மானியம் பெறுகின்றன. மேற்கண்ட தொகையில்

ரூ. 35-ஐ இந்திய அரசும், ரூ. 25-ஐ மாநில அரசும் அளிக்கின்றன. இத்திட்டத்தில் கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோருள் விருப்பமுள்ளோர் பங்கு கொள்கின்றனர். இத்திட்டத்தில் பங்குகொண்ட மாணவர் எண்ணிக்கை 1976–77-ல் 20,000 ஆக இருந்தது. 1978–79-ல் 40,000 ஆக உயர்ந்தது. ஆண்டுதோறும் இத்திட்டத்தில் பங்கேற்கும் மாணவர்களில் பாதி பேர் விடுமுறைக் காலங்களில் சுமார் 10 நாள் அளவுக்கு கிராமங்களில் சிறப்பு முகாம் நடத்தி கிராமப்புற வளர்ச்சிப் பணிகளை (குறிப்பாக எழுத்தறிவிக்கும் பணியை) செய்கின்றனர். இத்திட்டத்திற்கு 1979–80-ம் ஆண்டில் ரூ. 40 லட்சம் **ஒதுக்கப்பட்டுள்ளது.**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

VIII. கலைப் பணிகள்.

(1) இசை, நடனம், நாடகம், ஓவியம் முதலியவை.

இயல் இசை நாடக மன்றம்—

தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் அரசின் முழு நிதி உதவியுடன் இயங்கி வரும் தன்னாட்சி உரிமையுள்ள ஒரு நிறுவனமாகும். இம்மன்றம் நடனம், நாடகம், இசை ஆகிய கலைகளை வளர்க்கும் அரும்பணியைச் செய்து வருகின்றது. இதுவெளி நாடுகளிலிருந்தும் பிற மாநிலங்களிலிருந்தும் வரும் கலைக் குழுக்களுக்கு வரவேற்பளிக்கிறது. தமிழ் நாட்டிலிருந்து பிற மாநிலங்களுக்கு கலைக் குழுக்கள் செல்ல ஆதரவளித்தும் வருகின்றது.

2. திறம் மிக்க சிறந்த கலைஞர்களை ஊக்குவிப்பது இம்மன்றத்தின் தலையாய பணியாகும். ஆண்டுதோறும் இம்மன்றம் வாய்ப்பாட்டு, வயலின் இசை, மிருதங்கம், நாதஸ்வரம், புல்லாங்குழல் ஹரிகதா காலட்சேபம் ஆகிய வற்றில் திறம்மிகு கலைஞர்களைத் தேர்வு செய்து அவர்களைப் பொதுமக்களுக்கு அறிமுகப்படுத்தும் நோக்குடன் அக்கலைஞர்கள் கலை நிகழ்ச்சிகள் நடத்தவும் மானியம் அளிக்கிறது. 1963 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை 600-க்கு மேற்பட்ட கலைஞர்கள் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளனர்.

3. 1960 ஆம் ஆண்டு முதல் இம்மன்றம் சிறந்த கலைஞர்களுக்கு "கலைமாமணி" என்ற பட்டமளித்து சிறப்பிக்கின்றது. கடந்த 18 ஆண்டுகளில் இம்மன்றம் இசை, நடனம், நாடகம், திரைப்படம், கிராமியக்கலைகள் ஆகிய வற்றில் ஏறத்தாழ 425 கலைஞர்களுக்கு பட்டமளித்து சிறப்பித்துள்ளது. 1975 ஆம் ஆண்டு முதல் "கலைமாமணி" பட்டம் பெற்றவர்கள் 10 கலைஞர்களுக்கு ஒவ்வோர் ஆண்டும் ரொக்கப்பரிசாக (பொற்கிழி) ரூ. 1,000 கொடுத்து வருகிறது. இதற்கென முதலமைச்சர் தனி நிதியிலிருந்து கொடுத்த ரூபாய் ஒரு லட்சத்தின் வட்டியிலிருந்து இப்பரிசு அளிக்கப்படுகிறது.

4. 1978–79-ம் ஆண்டில் தொடங்கிய ஒரு புதிய திட்டத்தின் கீழ், ஆண்டுதோறும் தொல் மரபுக் கேற்பத் தமிழில் புதிய இசைப்பாடல்களை எழுதும் கவிஞர் ஒருவருக்கு ரூ. 5,000 ரொக்கமாக வழங்கப்படும். தமிழ்ப்பண்பாட்டுக்கு இசைந்த வகையிலும் இசை நுணுக்கங்களுக்கேற்ற வகையிலும் புதிய மெட்டுகளைப் புகுத்தும் இசைவாணர் ஒருவருக்கும் இத்தகைய ரொக்கப்பரிசு ஒன்று வழங்கப்படும். 1979-ல் இம்மன்றம் தன் வெள்ளிவிழாவைக் கொண்டாடும். அச்சமயம் கலை வளர்ச்சிக்கான பல சிறப்புத் திட்டங்களைத் தொடங்க மன்றம கருதியுள்ளது.

நாடகப் பள்ளி—

5. இளம் மாணவர்களுக்கு நாடகக் கலையில் தனிப்பயிற்சி அளிக்கவும் அதனுடன், பொதுக்கல்வி கற்பிக்கவும் வழிவகை செய்து நாடகத்தில் ஆர்வமுள்ள மாணவர்களை ஊக்குவிக்க நாடகப்பள்ளி ஒன்று தொடங்கப்பட இருக்கிறது. இது பற்றி அரசுக்கு ஆலோசனை கூற குழு ஒன்று அமைக்கப்படும். வல்லுநர்களைக் கலந்து தக்க பாடதிட்டம் உருவாக்கப்படும்.

''அரசுக் கலைஞர்கள்''

6. 1979-ம் ஆண்டு திருவள்ளுவர் நாளன்று சிறந்த கலைஞர்கள் எட்டு பேருக்கு '' அரசுக் கலைஞர் '' என்ற விருது வழங்கப்பட்டது. அவர்கள் ஒவ்வொருவருக்கும் மாதம் ரூ. 1,000 வீதம் ஐந்து ஆண்டுகளுக்கு மதிப்பூதியம் வழங்கப்பெறும்.

வறுமையால் வாடும் கலைஞர்களுக்கு ஓய்வூதியம்—

7. வறுமையால் வாடும் ஏறத்தாழ 700 கலைஞர்கள் மாதந்தோறும் இத்திட்டத்தின்கீழ் ரூ. 75 ஓய்வூதியம் பெற்று வருகின்றனர். ஓய்வூதியம் முதற்கண் 3 ஆண்டு காலத்திற்கு வழங்கப்படுகின்றது. ஓய்வூதியம் பெறும் கலைஞர்கள் வறுமை நிலையிலேயே தொடர்ந்தால், மீண்டும் மூன்று ஆண்டு, மூன்று ஆண்டாக புதுப்பிக்கப்படுகிறது. அவ்வாறு ஓய்வூதியம் பெறும் கலைஞர் இறந்துவிட்டால் அவரது மனைவிக்கும் அவர் நிதி நிலையை பொறுத்து இறக்கும் வரை மூன்றாண்டுகளுக்கொருமுறை புதுப்பித்து இந்த ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இப்பணிக்கு ஆண்டுதோறும் ரூ. 7 லட்சம் செலவாகிறது. 1979–80-ல் மேலும் 175கலைஞர்களுக்கு ஓய்வூதியம் அளிக்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

ஓவியம் நுண்கலைக் குழு—

8. ஓவியம் முதலிய நுண்கலைகளைப் பேணி வளர்க்கும் தமிழ்நாடு ஓவியம் நுண்கலைக்குழு தன்னாட்சியுரிமையுள்ள மற்றொரு நிறுவனமாகும். அது கல்வி அமைச்சரின் தலைமையின் கீழ் இயங்குகிறது. அது ஆண்டுதோறும் ரூ. $1\frac{1}{2}$ லட்சம் மானியம் பெறுகிறது. இக்குழு ஆண்டுதோறும் கலைக் கண்காட்சிகள் நடத்தி சிறந்த ஓவியங்களுக்கும் சிற்பங்களுக்கும் ரொக்கப் பரிசு அளிக்கிறது. ஆண்டுதோறும் ஓவியர் முகாம்களையும் அது நடத்துகிறது. திறம் மிக்க இளம் கலைஞர்களுக்கு 10 மாதங்களுக்கு மாதம் ரூ. 150 வீதம் உதவித்தொகை அளித்து அவர்கள் ஓவியக் கலையில் பயிற்சி பெற உதவுகிறது. சிறந்த ஓவியக் கலைஞர்களுக்கு ரொக்கப் பரிசுகள் தந்து பாராட்டவும் அது கருதியுள்ளது.

9. திருச்சிராப்பள்ளி, வேலூர், காஞ்சிபுரம் ஆகிய மாவட்டத் தலைநகரங்களில் உள்ளூர் மக்களுக்கு ஓவியப்பயிற்சி அளிப்பதற்கான மையங்கள் தொடங்க நுண்கலைக்குழு பண உதவி

1979 மார்ச் 26]

செய்துள்ளது. பள்ளிகளில் ஓவிய ஆசிரியர்களாகப் பணி செய்பவர்களுக்கு ஓவியத்தில் மறுபயிற்சி வகுப்புகள் நடத்தவும் இக்குழு கருதியுள்ளது.

10. நீலகிரி மாவட்டத்தில் உதகமண்டலத்தருகே நஞ்சநாடு அருகே ''ஓவியர் சிற்றூர்'' ஒன்றை நிறுவுவது ஆலோசனையிலுள்ளது.

11. டெல்லியிலுள்ள லலித கலை அகாடெமியும் இவ்வரசும் சேர்ந்து, அந்த அகாடெமியின் வட்டாரமையம் ஒன்றை 1978 அக்டோபரில் சென்னையில் தொடங்கியுள்ளன. அந்த மையத்துடன் இணைந்து நுண்கலைக்குழு கண்காட்சிகளையும் வேறு திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது.

ஜவகர்லால் நேரு பால பவன்—

12. ஜவகர்லால் நேரு பால பவன் ஒன்று சென்னையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. கலை, இசை, நடனம் முதலியவற்றின் இளஞ்சிறார்களிடம் மறைந்துள்ள திறமைகளை வளர்த்துக் கொள்ள வசதி அளிக்கும்படி, கல்வி மற்றும் மனமகிழ் மன்றமாக அது இருக்கும். 1978 டிசம்பரில் இதற்கு ஒரு தனி இயக்குநர் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த பவனத்தின் பணிகளை தொடங்குவதற்கான நடவடிக்கைகளில் அவர் ஈடுபட்டுள்ளார்.

தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரிகள்—

13. சென்னையிலுள்ள தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரியில் 1978–79-ல் 287 பேர் பயின்றனர். அதில் முழுநேர ஆசிரியர்கள் 23 பேரும் பகுதிநேர ஆசிரியர்கள் 13 பேரும் உள்ளனர். இக்கல்லூரியில் வாய்ப்பாட்டு, கருவி இசை, பரதநாட்டியம் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படுகின்றது. வேறு வேலை செய்பவர்களுள் இசையார்வமுள்ளோரை ஊக்குவிக்கும் வகையில் சென்னை நகரில் நான்கு மையங்களில் மாலை நேரங்களில் இசை வகுப்புகள் (வாய்ப்பாட்டு, வயலின், வீணை) நடத்தப்படுகின்றன.

14. 1979 ஜனவரியில் மதுரையில் ஒரு இசைக் கல்லூரி தொடங்கப்பட்டுள்ளது.

(2) ஆவணக்காப்பகமும் அருங்காட்சியகங்களும்.

1. தென் ஆசியாவில் வளமான அரசு ஆவணத் தொகுப்பைப் பெற்றுள்ளது, தமிழ்நாடு அரசு ஆவணக்காப்பகமாகும். அது ஒரு வரலாற்று ஆராய்ச்சி மையமாகத் திகழ்வதுடன், அரசு ஆவணக்காப்பகமாகவும் செயல்படுகிறது. 300 ஆண்டுகளுக்கு முற்பட்ட பல ஆவணங்கள் அதில் உள்ளன. கடந்த 30 ஆண்டுகளுக்கு முந்திய ஆவணங்கள் ஆராய்ச்சியாளர்களுக்கு ஆய்வுக்குத் தரப்படுகின்றன. ஆராய்ச்சியாளர் கூடத்தில் ஆராய்ச்சியாளர்களுக்கு சிறந்த வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

2. ஆவணங்களை அறிவியல் முறையில் பாதுகாத்துப்பேணி வைக்க நவீன கருவிகள் வாங்கித்தரப் பெற்றுள்ளன. 1978–79-ல் நுண்நிழற்படக்கருவி ஒன்று வாங்க ஏற்பளிக்கப்பட்டது. 1979–80-ல் புகைப்பட முறையில் படிபெருக்கும் கருவி ஒன்று வாங்கப்படும்.

3. 1973-ஆம் ஆண்டு அமைக்கப்பெற்ற தமிழ்நாடு வரலாற்று ஆராய்ச்சிக்குழு தென்னிந்தியாவில் பல்வேறு வாழ்க்கை அம்சங்கள் குறித்து தரமான ஆராய்ச்சியுரைகளை எழுதும் திறனும் ஆற்றலுமுடையவர்களை ஊக்குவிக்கின்றது. அவர்களுக்கு ஆராய்ச்சிக்குத் தேவையான வசதிகளையும் சூழலையும் அளிப்பதுடன் ஆண்டுதோறும் நான்கு ஆராய்ச்சி மாணவப் பணியிடங்களும் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு ஆராய்ச்சி மாணவருக்கும் ரூ. 5,000 சில்லரைச் செலவினங்களுக்காக ஆண்டுதோறும் அளிக்கப்படுகின்றது.

4. ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி காலத்தைச் சேர்ந்தவையான (17-18வது நூற்றாண்டுகளைச் சார்ந்த) முக்கியமான ஆவணங்களின் படிகள் அல்லது சுருக்கங்கள் அச்சிடப்பட்டு வரலாற்றாராய்ச்சியாளருக்குப் பெரிதும் பயன்படும் புத்தகங்களாக வெளியிடப்பட்டுள்ளன. ஆர்வமுள்ளோர் அவற்றை விலைக்கு வாங்கிப் பயன்படுத்தும் வகையில் மிகக் குறைந்த விலையில் ஆவணக்காப்பகத்தில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

5. மாவட்ட விவரச் சுவடிகளை திருத்தியமைத்து மீண்டும் எழுதுவதற்கான மாவட்ட விவரச் சுவடிகள் பிரிவும் ஆவணக் காப்பக மற்றும் வரலாற்று ஆராய்ச்சி ஆணையரின் கட்டுப்பாட்டின் கீழ் தான் செயல்படுகின்றது.

அருங்காட்சியகங்கள்—

6. சென்னையிலும், புதுக்கோட்டையிலும் அரசு அருங்காட்சியகங்கள் உள்ளன. இவ்வருங்காட்சியகங்கள் சிறந்த சிற்பங்கள், மரச் செதுக்கு வேலைகள், வண்ண ஓவியங்கள் ஆகியவற்றைக் கொண்டுள்ளன. இவை தவிர, தொல் பொருளியல், மானிடவியல், இயற்கை அறிவியல் ஆகிய துறைகளைச் சார்ந்த பொருட்களும் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. பொதுமக்களும் ஆராய்ச்சி அறிஞர்களும் இவற்றால் பெரும் பயனடைந்து வருகின்றனர். இவ்வருங்காட்சியகங்கள் பொது மக்களுக்கான அறிவியல் விரிவுரைகளையும் கண்காட்சிகளையும் நடத்தி வருகின்றன.

7. மாவட்டத் தலைமையிடங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு அருங்காட்சியகம் நிறுவிட அரசு முடிவு செய்துள்ளது. இவ்வாண்டு சேலத்தில் அருங்காட்சியகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. சென்னை அருங்காட்சியகத்தில் உள்ள வசதிகளும் மேம்படுத்தப்

1979 மார்ச் 26]

படும். அனைத்துநாட்டுக் குழந்தைகள் ஆண்டாகிய 1979 அய் ஒட்டி சென்னையில் குழந்தைகள் அருங்காட்சியகம் ஒன்றை அமைக்க 1979-80-ல் ரூ. 6 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(3) பொது நூலகங்கள்.

1. கன்னிமரா பொது நூலகம் மாநிலத்தின் மைய நூலக மாகும். அதில் 3 லட்சம் புத்தகங்கள் உள்ளன. உறுப்பினர் கள் 12,000 பேராவர். புதுக்கோட்டை, கன்னியாகுமரி மாவட்டங்கள் தவிர பிற மாவட்டங்களில் மாவட்டத்திற்கு ஒரு நூலகம் வீதம் தற்போது 13 மாவட்ட மைய நூலகங்கள் உள்ளன. 1,446 கிளை நூலகங்களும் உள்ளன. ஏறக்குறைய 3,000 பேர் இந்நூலகங்களில் பணி புரிகின்றனர். இந்நூல் நிலையங்கள் அனைத்திலும் உள்ள புத்தகங்களின் மொத்த எண்ணிக்கை 65 லட்சம். இவையனைத்தின் உறுப்பினர்களும் மொத்தம் 7 லட்சம் பேர்கள். உறுப்பினர்களல்லாதவர்களும் நூல் நிலை யங்களுக்குச் சென்று அங்குள்ள புத்தகங்களைப் பயன்படுத்த லாம்.

2. நூலக நிதியில் பெரும் பகுதி, ரூபாய்க்கு 5 பைசா வீதம் வீட்டுவரி, சொத்துவரி ஆகியவற்றின் மீது வசூலிக்கப்படும் நூலக மேல் வரியைக்கொண்டதாகும். 1977-78-ல் மாவட்ட நூலக ஆணைக்குழுக்கள் நூலக மேல்வரியாக ரூ. 127 லட்சம் பெற்றன (சென்னை மாவட்டக்குழு பெற்ற ரூ. 57 லட்சம் உள்பட), சென்னை தவிர பிற மாவட்டங்களில் உள்ள நூலக ஆணைக் குழுக்கள் நூலக மேல்வரி மூலம் வசூலிக்கப்படும் தொகைக்குச் சமமாக இணை மானியத்தையும் அரசிடமிருந்து பெறுகின்றன. 1973—74 ஆம் ஆண்டிலிருந்து அத்தகைய இணை மானியத்தில் 25 விழுக்காடு புத்தகங்களாகக் கொடுக்கப்படுகின்றது. இவ் வாறு 1978—79-ம் ஆண்டின் முதல் 9 மாதங்களில் கொடுத்த புத்தகங்கள் 1,300; மொத்தம் கொடுத்த படிகள் 3,40,000; செலவு ரூ. 21 லட்சம் 1979—80-ம் ஆண்டு பொது நூலகங் களுக்காக ஆகும் மொத்தச் செலவு சுமார் ரூ. 135 லட்சமாக இருக்கும்.

3. 1972 ஆம் ஆண்டு ஆகஸ்டு முதல் நாளிலிருந்து பொதுநூல கங்களுக்காக தனி இயக்குநர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். 1977 ஜனவரியிலிருந்து மாவட்ட நுலக ஆணைக் குழு ஒவ் வொன்றுக்கும் முழுநேர மாவட்ட நூலக அதிகாரி நியமிக்கப் பட்டுள்ளார். மாநில அரசு அலுவலர்கள் பெற்றுவரும் ஓய் வூதியம் மற்றும் ஓய்வுக்கால சலுகைகள் போன்றவற்றை மாவட்ட நூலகக்குழுக்களின் கீழ் பணி செய்பவர்களுக்கும் விரிவாக்குவது பற்றி ஆய்வு செய்து அரசுக்கு ஆலோசனை கூற சிறப்புக்குழு ஒன்று அமைக்கப்பட்டது. அக்குழுவின் அறிக்கை வந்து ஆய்வு செய்த பின் இது குறித்து அரசாணைகள் விரைவில் வெள்ளி யாகும்.

[1979 மார்ச் 26

4. தஞ்சாவூர் மகாராஜா சரபோஜி சரஸ்வதிமகால் நூல்நிலையம் மதிப்பு மிக்க கையெழுத்துப் பிரதிகளைக் கொண்ட முதன்மையான நூல் நிலையம். அதில் 30,377 சமஸ்கிருத கையெழுத்துப் பிரதிகளும், 2,081 தமிழ்க்கையெழுத்துப் பிரதிகளும், 2,910 மராத்தி கையெழுத்துப் பிரதிகளும், 778 தெலுங்கு கையெழுத்துப் பிரதிகளும் உள்ளன. இவை தவிர இம் மொழிகளில் புத்தகங்களும் அந்நூல் நிலையத்தில் உள்ளன. அதன் முக்கிய அலுவல், அருங்கையெழுத்துப் பிரதிகளையும் புத்தகங்களையும் பாதுகாப்பதும், அவற்றை அட்டவணையிடுவதும், நன்முறையில் கையெழுத்துப் பிரதிகளை அச்சிட்டு வெளியிடுவதும் ஆகும். அந்நூல் நிலையத்தின் வளர்ச்சிப் பணிக்காக நிதித் தேவைகளை மதிப்பிட்டபின் அந்நூலகத்திற்கு மைய அரசு ரூ. 2 லட்சம் மானியம் தந்துள்ளது.

(4) தொல் பொருளியல்.

1. தொல் பொருள் ஆராய்ச்சித்துறை தன் பிற பணிகளுடன் இம்மாநிலத்தின் முக்கியமான வரலாற்று நினைவுச் சின்னங்களைப் பேணி பாதுகாத்துவருகிறது. அவற்றுள் முக்கியமானவை மதுரையில் உள்ள திருமலை நாயக்கர் அரண்மனை, தஞ்சையிலுள்ள நாயக்கர் அரண்மனை, பாஞ்சாலங்குறிச்சியிலுள்ள வீரபாண்டிய கட்டபொம்மனின் கோட்டைச் சின்னங்கள், இராமநாதபுரத்தில் உள்ள இராமலிங்க விலாஸ் கட்டிடம் தரங்கம்பாடியிலுள்ள டேனிஸ்கோட்டை ஆகியவை ஆகும். இவ்விடங்களில் சிலவற்றில் நிலையான அருங் காட்சியகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

2. ஆங்காங்கு பல ஊர்களிலும் சிதறிக் கிடக்கும் சிற்பங்களையும், மதிப்பு மிக்க பழைய ஓலைச் சுவடிகளையும் சேகரித்துப் பாதுகாப்பதற்கான திட்டம் ஒன்றை நான்கு மாவட்டங்களில் மேற் கொள்ள ஏற்பளிக்கப்பட்டுள்ளது. 1979-80-ம் ஆண்டில் தருமபுரி மாவட்டத்தில் உள்ள அத்தகைய சிற்பங்கள் முதலியவற்றைச் சேகரித்து தருமபுரியில் ஒரு நிலையான அருங்காட்சியகத்தில் வைத்துப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

3. இத்துறை ஊர் ஊராகச் சென்று கல்வெட்டுக்களைப் பார்வையிட்டு அக் கல்வெட்டுகளுக்குப் படியெடுத்து அவற்றின் பொருளைத் தெளிவுபடுத்தி இன்றைய எழுத்துக்களில் அவற்றை வெளியிடுகின்றது. இத்துறை கன்னியாகுமரி, வட ஆர்க்காடு, தருமபுரி மாவட்டங்களில் இப்பணியை முடித்துள்ளது. கி. பி. 500 ஆம் ஆண்டு முதல் இன்றுவரையுள்ள காலப்பகுதியைச் சார்ந்தவையும் நடுகற்களில் உள்ளவையுமான 500 கல்வெட்டுக்களை இத்துறை அச்சிட்டு வெளியிட்டுள்ளது.

1979 மார்ச் 26]

4. இத்துறை தொன்மை வாய்ந்த இடங்களில் அகழ்ந்துபார்க்கும் பணியையும் செய்து வருகிறது. பாண்டியர்களின் பழந்துறைமுகமான கொற்கை, சேரர்களின் தொன்மையான தலைநகரமான கரூர், பாலாற்று முகப்புப் பகுதியில் ரோமானியர்கள் குடியேறி வாழ்ந்த வாசவ சமுத்திரம் போன்ற இடங்களில் இத்துறை அகழ்வாராய்ச்சி செய்து உள்ளது. 1979—80 ஆம் ஆண்டில் அகழ்வாராய்ச்சிப் பிரிவுக்குக் கூடுதல் பணியாளர்கள் நியமிக்கப்படுவர்.

5. இத்துறைக்குச் சொந்தமான அச்சகம் ஒன்றும் உள்ளது. அதனுடைய வெளியீடுகள் யாவையும் அந்த அச்சகத்திலேயே அச்சிடப்படுகின்றன. இதுவரை ஆங்கிலத்திலும், தமிழிலும் 50-க்கும் மேற்பட்ட நூல்கள் வெளிவந்துள்ளன.

6. இத்துறை தமிழ், சமஸ்கிருதம், வரலாறு, தொல் பொருளியல், இந்தியக் கலைகள், யாதேனுமொன்றில் எம். ஏ. பட்டம் பெற்ற மாணவர்களுக்கு கலை, மற்றும் கட்டிடக் கலை வரலாற்றைப் போதிப்பதுடன் கல்வெட்டுக்களைப் படி எடுத்தல், அவற்றை ஆராய்தல் முதலிய தொழில் நுட்பப் பயிற்சியும் அளிக்கின்றது. இதற்கு ஆண்டுதோறும் 8 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். ஆளுக்கு மாதம் ரூ. 125 உதவிப் பணம் தரப்படுகிறது.

7. தொல் பொருள்களையும் விலை மதிப்பற்ற கலைக் கருவூலங்களையும் சட்ட விரோதமாக விற்று விடுவதைத் தடுக்க ''தொல் பொருள்கள் மற்றும் கலைக் கருவூலங்கள் சட்டம்'' என்ற சட்டம் ஒன்றினை மைய அரசு 1972-ல் இயற்றியது. 1976ஆம் ஆண்டு ஏப்ரலிலிருந்து இச் சட்டம் இந்தியா முழுவதும் அமுலுக்கு வந்தது. இத்திட்டத்தின் கீழ் பதிவு அலுவலர்கள் எழுவர் பல்வேறு மாவட்டத் தலைமையிடங்களில் பணிபுரிகின்றனர். அவர்கள் ஒவ்வொருவரிடமும் ஒன்று அல்லது இரண்டு மாவட்டங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இப்பதிவுத் திட்டத்தின் செலவை 1—4—1976 முதல் மூன்றாண்டுகளுக்கு மைய அரசு ஏற்கும்.

IX. தமிழ் வளர்ச்சி.

1979-80 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில் தமிழ் வளர்ச்சிக்காக ஒதுக்கியுள்ள தொகை ரூ. 70 இலட்சமாகும். இத்தொகையில் கல்லூரிகளில் தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு பயிலும் மாணவர்களுக்கான புத்தகப்படி வழங்கிட ரூ. 28 இலட்சம் செலவிடப்படும். கல்லூரிப் பாடப் புத்தகங் களைத் தமிழில் கொணர்வதற்காக ரூ. 23 இலட்சம் செலவிடப் படும். தமிழ் வளர்ச்சித்துறைக்கும் அதன் பணிகளுக்கும் ரூ. 9 இலட்சம் செலவிடப்படும். வேறு தமிழ் வளர்ச்சிப் பணி களுக்காக ரூ. 10 இலட்சம் செலவிடப்படும்.

தமிழ் வளர்ச்சி இயக்கம்.

2. அனைத்து நிலைகளிலும் தமிழை ஆட்சி மொழியாகக் கொள்ளும் திட்டத்தினை முழு முனைப்புடன் செயல்படுத்தப் பட வேண்டும் மென்பதில் அரசு ஆர்வம் கொண்டுள்ளது. சட்டங் கள், விதித் தொகுப்புகள், நடைமுறை நூல்கள் ஆகியவற்றுள் பல, தமிழில் மொழி பெயர்த்து வெளியிடப்பட்டுள்ளன. அரசுத் துறைகள் பயன்படுத்திட ஆட்சிச் சொல்லகராதிகளும் சிறப்புச் சொல்லகராதிகளும் தொகுக்கப்பட்டு அவ்வப்போது வெளியிடப் பட்டு வருகின்றன. மாவட்ட மட்டத்தில் தமிழை ஆட்சி மொழியாகக்கொள்ளும் பணியில் ஏற்படும் வளர்ச்சி தனி ஆய்வுப் பணியாளர்களைக் கொண்டு ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. தலைமைச் செயலகத் துறை ஒவ்வொன்றிலும் ஒரு அதிகாரியும், துறைத் தலைவர்கள் அலுவலங்கங்கள் ஒவ்வொன்றிலும ஒரு அதிகாரியும், மாவட்ட ஆட்சித் தலவர் அலுவலகங்கள் ஒவ் வொன்றிலும் ஒரு அதிகாரியும் தமிழ் வளர்ச்சி இயக்குநருடன் நெருங்கிய தொடர்பு கொண்டு தமிழை ஆட்சி மொழியாக்கும் திட்டம் முழு வெற்றி அடையப் பணியாற்ற வேண்டுமென ஆணையிடப்பட்டுள்ளது.

3. 1867-ம் ஆண்டு முதல் வெளியிடப் பெற்றுள்ள தமிழ் நூல்களின் விவர அட்டவணை ஒன்று தொகுக்கப்பட்டு வருகிறது. 1867 முதல் 1925 ஆம் ஆண்டு வரையிலான காலத்திற்கு 13 தொகுதிகள் ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளன. எஞ்சிய தொகுதிகளுக்கான பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின் றன. தமிழில் மூல நூல்களை ஆக்கி வெளியிடும் ஆசிரியர்களுக்கு நிதி உதவி அளிப்பதற்கான திட்டம் ஒன்றையும் தமிழ் வளர்ச்சித் துறை செயல்படுத்தி வருகிறது. தமிழ்க் கலைக் களஞ்சியத்தின் இரண்டாம் பதிப்பு வெளிவருவதற்கு வேண்டிய உதவிகளையும் அரசு செய்யும்.

தமிழ் நாட்டு வரலாறு.

4. தமிழ்நாட்டு வரலாற்றை ஆதாரபூர்வமாக எழுதுவதற் காக வல்லுநர் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. ஆறு தொகுதி களுடைய இவ்வரலாற்றில் இரண்டு தொகுதிகள் எழுதி முடிக்கப்

1979 மார்ச் 26]

பெற்றுள்ளன. தொல்பழங்காலத்தைப் பற்றிய முதல்தொகுதி ஏற்கெனவே வெளியிடப்பட்டுவிட்டது. சங்க காலம் பற்றிய இரண்டாவது தொகுதி விரைவில் வெளியிடப்படும்.

பிற மாநிலங்களில் தமிழ்க் கல்வியையும் தமிழாராய்ச்சியையும் ஊக்குவித்தல்.

5. மற்ற மாநிலங்களிலுள்ள பல்கலைக் கழகங்களும், பிற நிறுவனங்களும் தமிழ்ப் பேராசிரியர் பதவிகளை ஏற்படுத்தவும், தமிழில் ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ளவும், தமிழில் பகுதி நேரப் பட்டயப்படிப்பு வகுப்புகளை நடத்தவும் இவ்வரசு தாராளமாக நிதி உதவி செய்து வருகிறது. தமிழில் பகுதி நேரப் பட்டயப் படிப்பு வகுப்புகளைத் தொடங்குவதற்காக 1978-79-ல் பிற மாநிலப் பல்கலைக் கழகங்கள், நிறுவனங்கள் ஆகியவைகள் 15-க்கு ஒவ்வொன்றுக்கும் ரூ. 15 ஆயிரம் வீதம் இவ்வரசு மானியம் வழங்கியுள்ளது.

6. திருவனந்தபுரத்திலுள்ள ''திராவிட மொழிகளின் மொழியியல் ஆராய்ச்சிக்கான பன்னாட்டுப் பள்ளி'' பின்வரும் பணிகளை மேற்கொள்ள இருக்கிறது:—

1. தாய்லாந்து, கம்போடியா ஆகிய நாடுகளில் தமிழ் பெற்றிருந்த செல்வாக்குபற்றிய ஆராய்ச்சி.

2. தமிழை அடிப்படையாகக் கொண்டு மின் கணிப்புப் பொறியின் உதவியுடன் மொழி பெயர்ப்புக் கொள்கை பற்றிய ஆராய்ச்சி.

3. தூர கிழக்கு நாடுகளில் தென்னிந்திய மொழி, கலை வரலாறு ஆகியவற்றைப் பற்றிய படிப்பு வசதிகளைப் பற்றிய ஆய்வு.

4. அப்பள்ளிக்கான அலுவலகக் கட்டிடம் ஒன்று கட்டுதலும், தமிழ இலக்கண நூலாசிரியரான தொல்காப்பியர் பெயரில் ஒரு அரங்கம் கட்டுதலும்.

இப்பள்ளிக்கு ஆண்டுக்கு ரூ. 1,36,000 வீதம் 1978—79 முதல் 5 ஆண்டுகளுக்கு இவ்வரசு மானியம் தர ஏற்பளித்துள்ளது. கட்டிட வேலைக்காக ரூ. 4,51,000 மானியம் தர இசைந்து, முதல் தவணையாக ரூ. 1 இலட்சம் ஏற்கெனவே தரப்பட்டுவிட்டது.

மொழி பெயர்ப்புப் பணி.

7. பிற மொழி நூல்களில் சிறந்தவற்றை தமிழில் வெளியிடுவதற்கும், அரிய தமிழ் இலக்கியங்களைப் பிற மொழிகளில் வெளியிடுவதற்கு ஒரு திட்டம் தொடங்கப்பட்டுள்ளது

இப்பணிக்காக நடுவர் திரு. எஸ். மகராசன் தலைமையில் வல்லுநர் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. முதல் நடவடிக்கையாக அக்குழு, இதுவரை பிறமொழிகளில் வெளியிடப்பட்டுள்ள தமிழ் நூல்களின் விவரப்பட்டியல் ஒன்றையும், தமிழ் மொழியில் வெளியிடப்பட்டுள்ள பிற மொழி நூல்களின் விவரப்பட்டியல் ஒன்றையும் தொகுத்துள்ளது. ஆங்கிலம், பிரெஞ்சு, பெர்சியன், ரஷிய மொழி, சீன மொழி ஆகிய மொழிகளில் உள்ள சிறந்த நூல்களுள் தமிழில் மொழி பெயர்க்கத்தக்க நூல்களின் பட்டியலையும் ஆங்கிலம் மற்றும் பிற மொழிகளில் மொழி பெயர்க்கத்தக்க தமிழ் இலக்கியங்களின் பட்டியலையும் இக்குழு தயாரித்துள்ளது. மேலும் நோபல் பரிசு பெற்றுள்ள இலக்கியங்களை தமிழாக்கம் செய்து வெளியிடவும் இக்குழு கருதியுள்ளது. தற்பொழுது டாக்டர் ஆனந்த குமாரசாமி எழுதியுள்ள ''சிவன் நடனம்'' என்னும் நூல், பிரான்சிஸ் தாம்சன் உடைய கவிதைகள் ஆகியவற்றை தமிழாக்கம் செய்து வெளியிடும் பணி நடைபெற்று வருகிறது.

தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்.

8. பெரியார் ஈ. வே. ராமசாமி அவர்கள் நூற்றாண்டு விழாவை ஒட்டி தமிழ் எழுத்துக்களில் சீர்திருத்தங்கள் சிலவற்றை செயல்படுத்த அரசு ஆணையிட்டுள்ளது. உயிர் எழுத்துக்கள். 2-க்கும் உயிர்மெய் எழுத்துக்கள் 13-க்கும் புதிய வடிவங்கள். ஏற்கப்பட்டுள்ளன. இதன் மூலம் அச்சு வேலையிலும், தட்டச்சுப் பணியிலும் சிக்கனமும் எளிமையும் ஏற்படும். மாநில அரசு அலுவலகங்கள் அனைத்தும் மற்றும் உள்ளாட்சி மன்றங்களும் அரசு நிறுவனங்களும், கல்வி நிலையங்களும, இவ்வெழுத்துச் சீர்திருத்தத்தைக் கடைபிடிக்க ஆணையிடப்பட்டுள்ளது. பொதுவாக அனைவரும் இச்சீர்திருத் தத்தை கடைப்பிடிக்க வேண்டுமென்றும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இச்சீர்திருத்தந்தைப் பற்றி பல்வேறு இடங்களிலிருந்தும் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்களை ஆராய்ந்து இது குறித்து மேலும் அரசுக்கு அறிவுரை வழங்க தமிழறிஞர்களைக் கொண்ட வல்லுநர் குழு ஒன்று அமைக்கப்படவிருக்கிறது.

தமிழ்க் கவிஞர்களுக்கும் அறிஞர்களுக்கும் பாராட்டு.

9. இசுலாமியத் தமிழ் இலக்கியத்தில் ஆராய்ச்சி செய்வதற்காக மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் உமறுப் புலவர் பெயரில் ஆராய்ச்சிப் பணியிடம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. இதற்காக அரசு அறக்கட்டளைத் தொகையாக ரூ. 2 இலட்சம் வழங்கியுள்ளது.

10. பாவேந்தர் பாரதிதாசன் நினைவாக சென்னைப் பல்கலைக் கழகத்தில் ரூ. 25 ஆயிரம் அறக்கட்டளை ஒன்றை அரசு நிறுவியுள்ளது. அத்தொகையின் வட்டியைக் கொண்டு ஆண்டுதோறும் அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப் பெறும்.

1979 மார்ச் 26]

11. பாவேந்தர் பாரதிதாசன் 'விருது' ஒன்று அரசு ஏற்படுத்தியுள்ளது. ஆண்டுதோறும் தமிழ்க் கவிஞர் ஒருவருக்கு இவ்விருது வழங்கப்பட்டு, அவருக்கு பதக்கம் ஒன்றும் ரூ. 10 ஆயிரம் ரொக்கப் பரிசும் அளிக்கப்படும். 1978-க்கான விருது கவிஞர் சுரதாவுக்கு அளிக்கப்பட்டது.

12. தமிழறிஞர்களையும் தமிழ்ச் சான்றோர்களையும் போற்றும் அரசுக் கொள்கையின் அடிப்படையில் திருவாளர்கள் கா. அப்பாத்துரை, தி. சு. அவினாசிலிங்கம், ஞா. தேவநேயப் பாவாணர், மு. ப. பெரியசாமித் தூரன், வ. சுப்பையா ஆகியோருக்கு 1979 திருவள்ளுவர் நாளன்று ''செந்தமிழ்ச் செல்வர்'' என்னும் விருது வழங்கப்பட்டது.

வறுமையில் வாடும் தமிழறிஞர்களுக்கு ஓய்வூதியம்.

13. வறுமையில் வாடும் தமிழறிஞர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கான திட்டம் ஒன்று 1978 சனவரியில் தொடங்கப் பட்டது. மாத வருமானம் ரூ. 150-க்கு மேல் இல்லாமல் இருக்கிற தமிழறிஞர்களுக்கு இந்த ஓய்வூதியம் கிட்டும். இதுவரை 33 அறிஞர்களுக்கு ஓய்வூதியம் தரப்பட்டுள்ளது. ஓய்வூதியத் தொகையை மாதம் ரூ. 100-லிருந்து ரூ. 200 ஆக உயர்த்தக் கருதப்பட்டுள்ளது. தமிழ் மொழிக்கும் இலக்கியத்துக்கும் அரும் பணியாற்றியுள்ள அறிஞர்களுக்கும், அத்தகையோர் தங்கள் குடும்பங்களை வறுமை நிலையில்விட்டு விட்டு மாண்டு போய் இருந்தால் அவர்கள் குடும்பங்களுக்கும் இந்த ஓய்வூதியம் தரப்படும். ஓய்வூதியம் பெறத்தகுதி வாய்ந்தவர்களை வல்லுநர்க் குழு ஒன்று தேர்ந்தெடுக்கிறது. ஓய்வூதியம் முதலில் மூன்று ஆண்டுகளுக்குத் தரப்படுகிறது. மூன்றாண்டு, மூன்றாண்டாகப் புதுப்பித்துக்கொள்ளவும் வகை செய்யப்பட்டுள்ளது.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி

14. தமிழிலும், திராவிட மொழிகளிலும் சிறந்த அறிஞரான திரு. ஞா. தேவநேயப் பாவாணர் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநராவார். இந்த அகரமுதலியைத் தொகுக்கும் பணியில் அவர் முனைப்புடன் ஈடுபட்டுள்ளார். அவ்வகரமுதலி முழு விரிவு வாய்ந்ததாகவும் திட்டவட்டமானதாகவும் அமையும். அது 13 தொகுதிகளாக வெளிவரும். முதல் தொகுதியின் முதல்பகுதி விரைவில் வெளியிடப்படும். இரண்டாவது பகுதியின் மீது இப்போது வேலை நடைபெற்று வருகிறது.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்..

15. உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் 1970 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் நிறுவப்பட்டது. தமிழ் ஆராய்ச்சியில் பற்றுள்ள உலக அறிஞர்களின் ஒத்துழைப்புடன் தமிழ்த் துறையிலும்,

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

தொடர்புள்ள பிற துறைகளிலும் ஆராய்ச்சியை வளர்ப்பதே இதன் நோக்கமாகும். 1972-ம் ஆண்டிலிருந்து இந்நிலையம் தமிழ் ஆராய்ச்சி பற்றிய அரையாண்டு ஆராய்ச்சி இதழ் ஒன்றை வெளியிட்டு வருகின்றது. உலக நாடுகளில் உள்ள அறிஞர்கள் பலர் எழுதும் கட்டுரைகள் அவ்விதழில் இடம் பெறுகின்றன. ஆராய்ச்சிக்குப் பயன்படும் வகையில் சிறந்த நூலகம் ஒன்று இந்நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ளது. யுனெஸ்கோ கொடையாக அளித்துள்ள காட்சி கேள்விச் சாதனத்தின் உதவியுடன், மொழிப் பயிற்சிக் கூடத்தின் உதவியைக் கொண்டும் வெளிநாட்டு மாணவர்களுக்கு இந்நிலையம் சிறப்பான முறையில் தமிழ் கற்றுத் தருகிறது. இதுவரை இந்நிறுவனம் 12 நூல்களை வெளியிட்டுள்ளது. அது "பண்டைத் தமிழரின் சமுதாய வரலாறு", "தமிழ் இலக்கியத் துணை நூல்", "தமிழ் எழுத்தாளர் விவர நூல்" ஆகிய நூல்களை வெளியிட கருதியுள்ளது. தமிழ் இலக்கியத்தில் இலக்கியக் கொள்கைகள் பற்றிய விரிவுரைகளை இந்நிறுவனம் மாதந்தோறும் நடத்தி வருகிறது. அது 'நாட்டுப் புற இயல்' 'தமிழரின் பண்பாட்டு மரபுச் செல்வம்' மற்றும் 'தமிழரின் இலக்கிய மரபுச் செல்வம்' பற்றிய கருத்தரங்குகளை நடத்தியுள்ளது. இந்நிறுவனம் ஆண்டுதோறும் இவ்வரசிடமிருந்து ரூ. 3 லட்சம் மானியம் பெறுகிறது. தற்போது இந்நிறுவனம் அடையாறு மத்தியப் பல்தொழிற் பயிற்சி நிலையக் கட்டிடத்தில் அமைந்துள்ளது. இந்நிறுவனத்திற்கு நிலையான கட்டடம் ஒன்றைக் கட்டுவதற்காக தற்போது இந்நிறுவனம் இருக்கும் இடத்திற்கு அருகில் ஆறு ஏக்கர் நிலத்தை அரசு ஒதுக்கியுள்ளது.

தமிழ் பண்பாட்டு மைய இயக்குநரகம்.

16. உலக நாகரிகத்திற்கு தமிழர் நாகரிகம் முன்னோடியாய் இருந்தது என்பதை மொழியியல், அகழ்வாராய்ச்சியியல், மானிட இயல், தொல்பொருளியல் போன்ற அறிவியல் துறைகள் சான்றுகள் காட்டி உறுதிப்படுத்தியுள்ளன. மேற்கண்ட துறைகளில் ஆராய்ச்சி செய்ய பல அமைப்புகளும் நிறுவனங்களும் இருந்தபோதிலும் தமிழரின் பண்பாட்டுக்கூறுகளை நல்லமுறையில் தமிழர்களுக்கும் உலக மாந்தருக்கும் எடுத்துக்காட்ட தனி அமைப்பு ஒன்று இல்லை. இக்குறையை ஈடு செய்ய. 1978-79 நிதி நிலை அறிக்கை உரையில் கம்பர் வள்ளலார் போன்ற தமிழினச் சான்றோர்களுக்கு நினைவுச் சின்னமாய் விளங்குமென அறிவிக்கப்பட்ட தமிழ்ப் பண்பாட்டு மைய நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு ஒரு தனி இயக்குநர் நியமிக்கப் பட்டுள்ளார். இம்மையத்தின் தொடக்க விழா விரைவில் நடைபெறும்.

17. முதலில் இந்த மையம் பல்லாண்டுகளாக தமிழர்களோடு இணைந்துள்ள கலைகளையும் பண்பாட்டையும் வளர்க்கும் நோக்கத்துடன் நல்ல நூலக, படிப்பக வசதிகள் செய்வதி

REPORTING SECTION

லும் பட அரங்கம், காட்சிப் பொருளுக்கான இடம், ஆகியவற்றை அமைப்பதிலும் ஈடுபடும். தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகள் பற்றிய ஒரே சிந்தனையை மையமாகக் கொண்டு செய்திகளையும், பொருட்களையும் ஒருங்கே ஓரிடத்தில் திரட்டிக் காத்து உலக னைத்தும் அதனை அறியும்படி பணி செய்வதே இம்மையத்தின் குறிக்கோளாகும்.

ஐந்தாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு—கருத்தரங்கு.

18. ஐந்தாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு—கருத்தரங்கு 1980 சனவரியில் மதுரை மாநகரில் நடைபெறும். 1968-ல், இரண்டாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டுக்கு அறிஞர் அண்ணா அவர்களுடைய அரசு செய்தது போல, இந்த 5-வது மாநாட்டுக்கும் இவ்வரசு அனைத்து உதவிகளையும் செய்யும்; மாநாட்டின் தொடக்க நிலை வேலைகளுக்காக முதல் தவணையாக இவ்வரசு ரூ. 50 ஆயிரம் மானியமாக அளித்துள்ளது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு I.

பள்ளிக் கல்வி பற்றிய விவரங்கள்.

	1965–66 (மூன்றாவது திட்ட முடிவு).	1973–74 (நான்காவது திட்ட முடிவு).	1976–77	1977-78	1978–79
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
	(சிறுவர், சிறுமியர் எண்ணிக்கை இலட்சத்தில்.)				
அ. வெவ்வேறு வயதுத் தொகுதிச் சிறார் மொத்த எண்ணிக்கை—					
வயதுத் தொகுதி 6—11—					
சிறுவர்	25.85	30.45	31.93	32.39	32,84
சிறுமியர்	25.64	29.79	31.23	31.68	32.11
மொத்தம் ..	51.49	60.24	63.16	64.07	64.95

வயதுத் தொகுதி 11—14—

சிறுவர்	11.31	13.71	14.37	14.58	14.78
சிறுமியர்	11.23	13.40	14.05	14.25	14.45
மொத்தம் ..	22 54	27.11	28.42	28.83	29.23

வயதுத் தொகுதி 14—17—

சிறுவர்	9.33	11.31	11.86	12.03	12.19
சிறுமியர்	9.26	11.07	11.60	11.77	11.93
மொத்தம் ..	18.59	22.38	23.46	23.80	24.12

ஆ. பள்ளிகளில் சேர்க்கப்பட்டோர் எண்ணிக்கை—

வயதுத் தொகுதி 6—11—

சிறுவர்	26.37	30.64	32.02	33.11	33.83
சிறுமியர்	18.74	23.74	25.50	26.74	27.38
மொத்தம் ..	45.11	54.38	57.52	59.85	61.21

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு I.

பள்ளிக் கல்வி பற்றிய விவரங்கள்.

	1965-66 (மூன்றாவது திட்ட முடிவு).	1973–74 (நான்காவது திட்ட முடிவு).	1976–77	1977-78	1978-79
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
வயதுத் தொகுதி 11—14—					
சிறுவர்	7.21	9.10	9.74	10.26	10.68
சிறுமியர்	3.45	5.09	5.76	6.12	6.27
மொத்தம் ..	10.66	14.19	15.50	16.38	16.95
வயதுத் தொகுதி 14—17—					
சிறுவர்	3.86	4.97	5.34	5.24	4.85
சிறுமியர்	1.65	2.42	2.68	2.69	2.42
மொத்தம் ..	5.51	7.39	8.02	7.93	7.27*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இ. பள்ளியில் சேர்க்கப்பட்டோர்

சதவீதம்—

6—11 தொகுதி—					
சிறுவர்	102.03	100.06	100.3	102.2	103.21
சிறுமியர்	73.08	79.6	81.7	84.4	85.27
மொத்தம்	87.61	90.2	91.7	93.4	94.24
11—14 தொகுதி—					
சிறுவர்	63.78	66.3	67.7	70.3	72.26
சிறுமியர்	30.72	37.9	41.0	42.9	43.39
மொத்தம்	47.31	52.3	54.4	56.8	57.99
14 முதல் 17 தொகுதி—					
சிறுவர்	41.38	43.0	44.9	43.7	39·8
சிறுமியர்	17.83	21.8	23.1	22.9	20.1
மொத்தம்	29.65	33.0	34.1	33.4	30.1

*மேல் நிலைப் பள்ளி முதலாண்டு வகுப்பு உட்பட.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு I—தொடர்ச்சி.

பள்ளிக் கல்வி பற்றிய விவரங்கள்—தொடர்ச்சி.

	1965-66 (மூன்றாவது திட்ட முடிவு).	1973-74 (நான்காவது திட்ட முடிவு).	1976-77	1977-78	1978-79
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
ஈ. பள்ளிகளின் எண்ணிக்கை—					
தொடக்கப் பள்ளிகள் ..	24.641	26,726	27,306	27,395	27,425
உயர்தொடக்கப் பள்ளிகள்.	6,065	5,773	5,730	5,709	5,705
உயர் நிலைப் பள்ளிகள் (மெட்ரிகுலேஷன் பள்ளிகள், மைய அரசுப் பள்ளிகள் உட்பட) ..	2,234	2,823	3,030	3,058	3,108 *
	32,940	35,322	36,066	36,162	36,238
உ. ஆசிரியர்களின் எண்ணிக்கை—					
தொடக்கப்பள்ளிகள் ..	88,173	1,06,332	1,11,033	1,11,184	1,11,808
உயர் தொடக்கப் பள்ளிகள்	59,943	66,843	67,846	68,794	69,279
உயர் நிலைப் பள்ளிகள்	48,574	65,959	72,838	73,039	65,379**
மொத்தம்	1,96,690	2,39,134	2,51,717	2,53,017	2,46,466

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

உ௲. ஆசிரியர்—மாணவர் வீகிதம்—(ஆகஸ்டு முதல் நாள் உள்ளபடி)—

(1) பள்ளி வாரியாக (சிறப்பு ஆசிரியர்களையும் ஆசிரியர் தொகையில் சேர்த்து)—					
தொடக்கப்பள்ளிகள்	27	35	36	37	38
உயர் தொடக்கப்பள்ளிகள்	35	33	33	33	36
உயர் நிலைப் பள்ளிகள்	31	24	24	24	24
(2) வகுப்புத் தொகுதி வாரியாக (சிறப்பு ஆசிரியர்களை, ஆசிரியர் தொகுதியில் சேர்த்து)—					
தொடக்கப்பள்ளி வகுப்புத் தொகுதி ..	37	37	36	37	39
உயர் தொடக்கப் பள்ளி வகுப்புத் தொகுதி ..	32	33	33	31	31
உயர் நிலைப் பள்ளி வகுப்புத் தொகுதி ..	32	29	30	27	26

* அவற்றுள் 912-ல் மேல் நிலைப்பள்ளி வகுப்பு இருந்தது.

** மேல் நிலைப் பள்ளி ஆசிரியர்கள் நீங்கலாக.

இணைப்பு 1—தொடர்ச்சி.

1978–79-ல் (1—8—1978-ல் இருந்தவாறு) பள்ளிக்கூடங்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகிய புள்ளி விவரங்கள்.

பள்ளிக்கூடங்கள்.	எண்ணிக்கை.	மாணவர்கள்.	ஆசிரியர்கள்.
(1)	(2)	(3)	(4)
தொடக்கப்பள்ளிகள்—			
அரசு	1,444		
நகராட்சி	1,058		
ஊராட்சி ஒன்றியம்	19,916		
தனியார்	5,007		
	27,425	42,53 லட்சம்	1,11,808
உயர் தொடக்கப்பள்ளிகள்—			
அரசு	218		
நகராட்சி	389		
ஊராட்சி ஒன்றியம்	3,134		
தனியார்	1,964		
	5,705	24.93 லட்சம்	69,279
உயர்நிலைப்பள்ளிகள்—			
சாதாரணப்பள்ளிகள்—			
அரசு	1,978		
நகராட்சி	106		
தனியார்	868		

		2,952	15.65 லட்சம்	60,879
ஆங்கிலோ-இந்தியப் பள்ளிகள்—மெட்ரிகுலேஷன் பள்ளிகள்—CBSE பள்ளிகள் முதலியவை—				
ரயில்வே மைய அரசு	17			
தனியார்	139			
		156	1.18 லட்சம்	4,500
உயர்நிலைப் பள்ளிகள்		3,108	16.83 லட்சம்	65,379
பள்ளிகள் மொத்தம்		36,238	84.29 லட்சம்	2,46,466

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பள்ளிக்கூடங்கள்.	எண்ணிக்கை.	மாணவர்கள்.	ஆசிரியர்கள்.
(1)	(2)	(3)	(4)
மாணவர் ..		48.65 லட்சம்	
மாணவியர் ..		35.64 லட்சம்	

3,108 உயர்நிலைப் பள்ளிகளில் 912 பள்ளிகளில் முதலாண்டு மேல் நிலைப் பள்ளி வகுப்பும் இருந்தது. அவ்வகுப்புக்கான விவரங்கள் வருமாறு :—

		1.14 லட்சம்	
கலைப் பாட ஆசிரியர்			7,941
தொழில் பாட ஆசிரியர்			1,816
			9,757
பள்ளிகளும், மேல்நிலைப்பள்ளிகளும் சேர்த்து ..	36,238	85.43 லட்சம்	2,56,223

ஏனைய நிறுவனங்கள்—

இளஞ்சிறார் பள்ளிகள்	40	4,800	131
கீழ்த்திசைப்பள்ளிகள்	18	3,900	167

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

ஊனமுற்றவருக்கான பள்ளிகள்	..	45 (பார்வையற்றவருக்கு 17, காது கேளாதவருக்கு 18 மற்றவருக்கு 10.)	4,000	422
ஆசிரியர் பயிற்சிப்பள்ளிகள்	..	80	2,450	317
கைத்தொழில் பயிற்சி மையங்கள்	..	7	500	49

பள்ளிகளில் 1978–79-ல் பணி செய்து வரும் ஆசிரியர்கள் நிருவாக வாரியான விவரம்.

பள்ளிகள்.	அரசு.	ஊராட்சி. ஒன்றியம்	நகராட்சி.	தனியார்.	மொத்தம்.	ஆண்கள், பெண்கள் விவரம் தனித் தனியே. ஆண்.	பெண்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
தொடக்கப் பள்ளி ..	7,814	67,150	8,918	27,926	1,11,808	70,274	41,534
உயர் தொடக்கப் பள்ளி.	4,297	29,805	6,699	28,478	69,279	37,058	32,221
உயர்நிலைப் பள்ளி ..	35,147	..	3,518	26,714	65,379	43,937	21,442
மொத்தம் ..	47,258	96,955	19,135	83,118	2,46,466	1,51,269	95,197

இணைப்பு II.

கல்லூரிக் கல்வி பற்றிய புள்ளி விவரங்கள்.

விவரங்கள்.	1965–66 மூன்றாவது திட்ட முடிவு.	1973–74 நான்காவது திட்ட முடிவு.	1976–77	1977–78	1978–79
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1. மொத்த மாணவர் எண்ணிக்கை—					
(1) புகுமுக வகுப்பு ..	39,507	72,646	84,257	89,423	77,802
(2) பி.ஏ.	11,349	51,698	44,697	43,077	42,871
(3) பி.எஸ்.சி.	22,381	49,057	48,110	48,948	51,622
(4) பி.காம்.	3,050	14,859	19,195	20,451	20,725
(5) பட்ட மேற்படிப்பு ..	2,607	6,993	7,043	7,012	7,509
மொத்தம் ..	78,894	1,95,253	2,03,302	2,08,911	2,00,529

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2. ஆசிரியர்களின் எண்ணிக்கை—

(1) அரசுக் கல்லூரிகள்		2,969	3,733	3,812	3,813
(2) தனியார் கல்லூரிகள். ..		7,090	7,883	8,394	8,329
	4,932	10,059	11,616	12,206	12,142

3. கல்லூரிகள் எண்ணிக்கை—

(1) அரசு	21	51	51	51	51
(2) தனியார்	71	127	138	137	137
	92	178	189	188	188

இணைப்பு III.

1978–79-ல் தொழில் நுட்பக் கல்வி பற்றிய விவரங்கள்.

(1)		கல்வி நிலையங்கள் எண்ணிக்கை. (2)	ஆசிரியர் எண்ணிக்கை. (3)	மொத்த மாணவர் எண்ணிக்கை. (4)
1 பொறியியற் கல்லூரிகள்—				
(1) அரசு	3			
(2) தனியார்	3	13	950	9,252
(3) தன்னுரிமையுள்ளவை ..	7			
2 பாலிடெக்னிக்குகளும் சிறப்பு பட்டயப்படிப்பு நிலையங்களும்—				
(1) அரசு	19			
(2) தனியார்	19	39	1,353	16,982
(3) தன்னுரிமையுள்ளவை ..	1			
3 தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளிகள்—				
(1) அரசு	11			
(2) தனியார்	3	14	103	2,011
மொத்தம் ..		66	2,406	28,245

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS